
அடமானக்
என் பணி கடன் செய்து கொடுப்பதே!
CENTUM Optima Mortgages Inc.
Das Narayanasamy AMP
Lic# M08007147 Mortgage Agent
Cell: 416-543-6614
Tel: 905-470 2845 Fax: 905 470 2219
E-mail: das@centumoptima.com
Website: centumoptima.com


# தாய் வீடு

THAIVEEDU டிசம்பர் 2009 HOME & LIVING


FREE REAL ESTATE CLASSES
வீடு வாங்க, விற்க மற்றும் வருமான வரி, அடமானக் கடன் சம்பந்தமான சகல ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்
SELVA VETTYVEL
Broker of Record
Cell: 416.568.4301
Bus: 905.201.9977
HomeLife Future Realty Inc. Brokerage
205-7 Eastvale Drive, Markham, ON L3S 4N8
*Independently Owned and Operated, REALTOR®





## சுப்பிரமணிய பாரதிக்குச் சிறிலங்காவில் தடா

## நத்தார் விடுமுறைகால விளக்குகள் மின்சாரச் செலவைக் கூட்டுமா?

# வாழ்க்கையைப் புரட்டிப்போடும் Facebook

படம்: டிஜி கருணா


RAMAN APPLIANCES
Air Conditioning & Heating
எமக்கூடாக Furnace வாங்கும்போது ஒன்ராரியோ அரசு வழங்கும் Rebateஜப் பெற்றுக்கொள்ளலாம்
General Contractors For:
• Air Conditioning • Gas Furnaces • Central Vacuum
• Air Cleaners • Gas Fireplaces • Garage Door Openers
• Security Alarm
Tel: 416.332.1989
Cell: 647.893.4414
Raman Chelliah
President
3021 Markham Rd., Unit 51,
Scarborough, ON - M1X 1L8


THE LAW OFFICE OF
Gary Anandasangaree
Tel: 416 321 1100 Fax: 416 321 1107
gary@galaw.ca

BUYING, SELLING,
INVESTING & MORTGAGE NEEDS CALL
SUN SANMUGATHAS
Broker & Manager
One stop shopping for all your mortgage & realestate needs.
Buying - Selling - Investing
PROPERTY MAX Realty Inc. Brokerage
Dir: 416.948.0693
Bus: 416.291.3000
PMCI MORTGAGE


MORTGAGE AND FINANCIAL SERVICE
Guaranteed Lowest rate
Considered as your mortgage is done
Please call @ 416-939-8789
Theven Kankesu
Mortgage intelligence



PMCI MORTGAGE CANADA INC.
Buying - Selling - Investing
PROPERTY MAX Realty Inc. Brokerage
One Source For Many Type of Properties & Mortgages
Mohan Subramaniyam
Broker of Record
416.321.2300

MARGOSA CREDIT UNION
Nurturing the Community
Tax Free Savings Account (TFSA) 2.00%
Premium Savings @ 2.00%
Opening Hours: Mon-Fri: 10.00 a.m. to 5.00 p.m.
Suite 100A, 2100 Ellesmere Road, Toronto, ON. M1H 3B7
Tel: 416-915-8989


இனிய இல்லம் ஒளிமயமான எதிர்காலத்திற்கு அடித்தளம்
மகேன் சிங்கராஜா
Sales Representative
Direct: 416.302.7283 (SAVE)
E-mail: msingarajah@trebnet.com
web: www.mahenonline.com
RE/MAX
RE/MAX Vision Realty Inc., Realtor
2210 Markham Road, Unit-1, Toronto, ON M1B 5V6
Tel: 416.321.2228, Fax: 416.321.0002

# For all your Real Estate needs...




Buy or sell any properties with us and WIN this new BMW car and More prizes**



**Sasi Chelvaratnam**
Sales Representative
Direct: 416.858.4828

• Buy • Sell • Lease

▪ Residential ▪ Commercial
▪ Business ▪ Investment
▪ Recreational ▪ Vacant Land



**Justin William**
Real Estate Broker
Direct: 416.803.7344

## WISH YOU A HAPPY CHRISTMAS



$ 269,000
Warden/Finch
• Spacious Town House
• 3 Bedrooms, 2 Washrooms
• Finished Walk-Out Basement
• Steps To TTC, Mall, Schools..
• High Demanded Area ...



$ 320,000
Sullivan & Westney
• Beautiful House In A Prime Location
• All Brick 4 Bedroom House
• Hardwood Floors In Principal Rooms
• Close To Schools, Shopping & All Amenities
• Power Of Sale. ...



$ 599,000
Brimley/Steeles
• Spotless 4+3 Bedroom House
• Super Location
• Double Door Entrance
• Short Walk To Ttc (Steeles)
• Fin Basement With 3 Bedrooms



$ 545,000
Markham/Bur Oak
• Absolutely Gorgeous House
• 6 Months New Fieldgate Built
• Over $25K Upgrades
• 2700Sf Great Floor Plan
• Steps To Schools,Shopping,Go-Station



$ 429,900
Meadowvale/Ellesmere
• Well-Maintained 4 Bedroom Home
• Original Owners
• Updated Kitchen With Walkout To Deck
• Stainless Steel Kitchen Appliances
• Walk To School, Park & Ttc.



$ 1400
Ellesmere/Neilson
• Condo Townhome for Lease
• In A Good Neighborhood
• Close To T.T.C, Hospital And More
• Master Bedroom With 3 Pc Ensuite
• Fin Basement W/ Separate Laundry Room



$ 389,900
Salem/ Tauton
• 4 Bedroom Detached House
• 1 Year New. Tribute Built
• Premium Lot
• 9Ft Ceilings On Main Floor
• Close To Parks, Shopping & Transit



$ 329,900
Markham/Lawrence
• House In Demanding Location
• 3 Bedroom Detached Bungalow
• Finished Basement Apartment
• Upgraded With Many Newer Features
• Attached Car Garage..



$ 329,000
Meadowvale/Sheppard
• Immaculate House
• 4 Bedrooms & 4 Washrooms
• Best For Large Families
• Laminated Flooring On Main Floor
• Close To Highway, School...




$ 149,900
Middlefield/Finch
• Excellent Opportunity To Own A Business
• Well Established Business
• One And Only Restaurant In This Mall
• Good Weekly Sale
• Inside The GTA Square Mall



$ 379,900
Williams Pk/Chinguacousy
• Gorgeous. Detached House
• Over 200 Sq Ft
• Loaded With Quality Features
• Basement With Separate Entrance.
• Don't Miss This..



$ 365,000
Westney/Taunton
• Only 3 Yrs Old
• Great Gulf Home 2280 Sq. Ft
• 4 Big Bdrms, 3 Baths
• Family Rm W Gas Fp
• Close To Schools, Park, 401 & 407.



$ 539,900
Markham/Steeles
• 4 Bedroom Detached House
• Less Than 5 years Old
• More than 3000 Sq. Ft
• Back Onto Ravine
• Walk-Out Basement...



$ 629,900
Riverwalk/9th Line
• Beautiful 4 Bdrm Family Home
• The High Demand Box/Grove Community
• Approx 3000 Sq Ft.
• Over 60K In Upgrades
• Close To Shopping Malls And Amenities.



$ 309,900
Airport/Castlemore
• Beautiful 3 Year Old Semi Detached
• Built By Mattamy
• Priced For Quick Sale
• Finished Bsmt W/Kitchen And Washroom.
• Close To New Civic Hospital & Malls



$ 159,900
Dixie/Bloor
• 3 Bedroom Condominium
• Prime Location,
• One Bus To Subway,
• Bright And Spacious Unit,
• Walk To Public Transit, Schools And Shopping.

HOMELIFE Higher Standards

# HomeLife GTA Realty Inc., Brokerage*

1711 McCowan Rd, Suite 206, Scarborough, On.
Office: 416.321.6969

This is not intend to solicit properties currently listed for sale
*Independently owned and operated
** conditions apply

# உணவுத் தொற்றும் உயிர் ஆபத்தும்

கனடாவை வதிவிடமாக ஏற்றுக்கொண்ட நாம், கனடிய அரசின் நீதியான, மக்கள் நலனையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துகின்ற சட்டங்களை ஏற்று நடந்து கொள்கின்றோமா? அவற்றைப் புரிந்துகொள்ள முற்படுகின்றோமா?

இது இன்று ஒரு பெரும் கேள்விக்குறியாக உள்ளது.

குறிப்பாக அண்மையில் McCowan & Fince சந்திப்பிலுள்ள ரூபி உணவகம் அரச சுகாதாரப் பிரிவால் மூடப்பட்டது. அந்த உணவகத்தில் உணவருந்திவர்களில் ஒருவர் இறந்துள்ளார் எனவும் முப்பதிற்கும் அதிகமானவர்களுக்கு வாந்தி, தலைச்சுற்று, வயிற்றுப்போக்கு ஏற்பட்டதாகவும் சந்தேகிக்கப்பட்டது. இதையடுத்து அந்த உணவகம் சுகாதாரப்பிரிவால் பரிசோதனைக்குள்ளாக்கப்பட்டது. சல்மனல்லா தொற்றினாலேயே இந்த விபரீதம் நிகழ்ந்துள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

எந்த உணவகத்திலும், உணவுவகைகள் தொற்றடையாமல் இருப்பதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படவேண்டும். உணவகங்களை நடத்துகின்றவர்கள் சுகாதாரத்துறையின் விதிமுறைகளைக் கடைப்பிடிக்கவேண்டும்.

கனடிய அரசின் உணவகங்களுக்கான சட்டங்களும் விதிமுறைகளும் அங்கு உணவருந்தும் மக்களின் உயிரையும் உடல் நலனையும் பாதுகாக்கவேண்டும் என்பதற்காகவே உருவாக்கப்பட்டவை. ஆனால் சில உணவகங்களில் அவை பின்பற்றப்படுவதில்லை. மக்கள் நலன்குறித்த அக்கறையும் அவர்களுக்கு இருப்பதில்லை.

இவர்கள் தொற்றுஏற்படாத முறையில் உணவைப் பாதுகாப்பதில்லை.

உணவு தயாரிக்கும் இடம், கத்தி, கரண்டி போன்ற உபகரணங்கள் துப்பரவாக இருப்பதில்லை. சமைக்காத இறைச்சிவகைகளும் ஏனைய உணவுவகைகளும் அதற்குரிய வெப்பநிலையில் இருப்பதில்லை. இவை மட்டுமின்றி கரப்பான் பூச்சிகளும் எலிகளும் அங்கு குடியேறிவிடுகின்றன.

இந்த உணவகங்களுக்குள்ளே ஒருதடவை சென்றீர்களானால் வாழ்நாளில் உணவகங்களில் உணவருந்தமாட்டீர்கள்.

அண்மையில் தமிழ் உணவகம் ஒன்று சுகாதாரப்பிரிவால் பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்டுப் தண்டம் விதிக்கப்பட்டதும் பரபரப்பான செய்திகளாக வெளிவந்தமை நாம் அறிந்ததே.

கடந்த ஆண்டு உணவுத்தொற்று காரணமாக இருபதுக்கும் மேற்பட்டவர்கள் கனடாவில் இறந்துள்ளனர். இறந்தவர்களுக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் ஏறத்தாழ முப்பத்து நான்கு மில்லியன் டொலர் நட்டஈடாக வழங்கப்பட்டுள்ளது.

உணவுத் பாதுகாப்புச் சட்டங்கள் பற்றிய பிரக்ஞையை ஏற்படுத்திக்கொள்வதுடன் பின்பற்றவும் நாம் முயலவேண்டும்.

III

பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு. கனடியத் தமிழ் வானொலியில் ஒலிபரப்பாகி பின்னர் எமக்குத் தரப்பட்ட விளம்பரங்கள் இலவசமாகப் பிரசுரமாகின்றன. அவற்றின் சரிபிழைகளுக்கு தாய்வீடு பொறுப்பல்ல. ஏனைய விளம்பரங்கள் இலவசமல்ல. ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.

**Publisher & Editor** : **P.J. Dilipkumar**
பதிப்பாளர், ஆசிரியர் : பி.ஜே. டிலிப்குமார்

ஆலோசகர் குழு : ஞானம் லம்பேட், கருணா, சுந்தர் சின்னத்தம்பி, பொன்னையா விவேகானந்தன்

ஓவியங்கள் : ரமணி (இலங்கை), K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து), கருணா (கனடா), மு.சு. சிவகுமாரன் (ஜேர்மனி)

தட்டச்சு : கௌரி, கௌசலா, ஜீவா, பிரியதர்சினி, மஞ்சுளா ராஜலிங்கம்.

ஒப்புநோக்கல் : சாவையம்பதி சுப்ரமணியம், கௌரி. மஞ்சுளா ராஜலிங்கம்.

வரைகலை ஆலோசனை : கருணா (டிஜி வரைகலை அமையம்)

தொடர்புகள் - **For More Info** : **Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Toronto** விநியோகம் : கிளி (சிவராஜா)
**Montréal** விநியோகம் : சுகுமாரன் சின்னையா **1-514-299-3186**
**Ottawa** விநியோகம் : அலெக்ஸ் சிவசம்பு **1-613 -276-7253**

**Tel** : **416-646-3422, 416-400-6406**
**Fax** : **416.849.0594**
**Web** : **www.thaiveedu.com**
**E-mail** : **info@thaiveedu.com**

வாழ்க்கையைப் புரட்டிப்போடும்

# Facebook வலையமைப்பு




- ஜிப்றி உதுமாலெப்பை-

Facebook போன்ற சமூகவலையமைப்பு இணையத்தளங்கள் இன்று தொடர்பாடலில் புதிய பரிணாமத்தை உருவாக்கி வருகின்றைன. போதிய அறிவும், எச்சரிக்கையுமின்றி இந்தத் தளங்களைப் பாவிக்கும்போது எதிர்விளைவுகளை ஏற்படுத்தக்கூடும்.


நாம் அவதானிக்கவேண்டியவை பற்றி அலசுகிறது இந்தப்பகுதி.



## Powder Room

- சிவாஜினி பாலராஜன்

சிறுநீர்ப்பையில் சிறுநீர் நிரம்பாத நிலையிலும் சிறுநீர் கழிக்கவேண்டும் போன்ற உணர்வினை ஏற்படுத்தும் வினோத நோய். 13



## நத்தார் விடுமுறை கால விளக்குகள் மின்சாரச் செலவைக் கூட்டுமா?

- வேலா சுப்ரமணியம்


LED மின் விளக்குகள் மின்சாரக்கட்டணத்தைக் குறைக்கும். 19



## ஒப்பனை (Make up)

- சசி நரேன்

சூரியனின் தாக்கத்திலிருந்து நம்முடைய சருமத்தைப் பாதுகாக்க ஒப்பனை உதவுகிறது. 21



## அல்ககோலிசம்

- முகிலன்

குடிபோதைக்கு அடிமையாகி அதிலிருந்து விடுபட நினைப்போருக்கான சில வழிமுறைகள். 31

**இலங்கையில் ஜனநாயகம் தோற்றுப் போய்விட்டது?** 04
அ. கணபதிப்பிள்ளை

**உறுதிப்படுத்த அரியதான ஒரு குற்றம்** 06
ராகுலன்

**றேடோன் (Radon) வாயு ஏற்படுத்தும் விளைவுகள்** 07
மகேன் சிங்கராஜா

**ஆரோக்கியமான மகப்பேறு** 09
கந்தையா செந்தில்நாதன்

**விடுமுறை கால அலங்காரமும் தீ விபத்தும்** 24
சிறிநாதன்

**நகரங்களும் சட்டங்களும் (City and by laws)** 27
சொக்கலிங்கம் பிரபாகரன்

**கனடாவில் தனிநபரின் வங்குரோத்து நிலை (Personal Bankruptcy in Canada)** 37
வி. சிறி

**வீடுகளின் திருத்த வேலைகளுக்கு அரச கூட்டுத்தாபனம் வழங்கும் உதவி** 41
றஞ்சன் பிரான்சிஸ்

**அடமானக் கடனும் வங்கித் தெரிவும்** 42
ராகவன் ராமநாதன்

**கரப்பான்களின் உணவகங்களும் நாமும்** 53
மயூரன் தேவதாசன்

**எச்சரிக்கை - தொட்டிலிலும் ஆபத்து** 56
கந்தசாமி கங்காதரன்

**அமைதியைக் கலாச்சாரம் ஆக்குங்கள்** 58
சத்குரு வாசுதேவ்

**நீங்கள் முகவருக்கு (ஏஜென்சி) ஊடாக தொழில் புரிபவரா?** 60
மிலன் நடராஜா

**'சிறப்புத் தேவையுள்ள பிள்ளைகள்' இனங்காணுதல்...** 70
ஜீவா திசைராஜா

**இப்பவே உயிர்க் கடன் செய்யுங்கள்!** 71
குமார் புனிதவேல்

மேலும் ஆக்க விபரங்கள் 5ம் பக்கம்

அட்டைப்படத்தில் (மாதிரிக்காக)
விதுஷனா சங்கரலிங்கம், கிரிஜா கண்ணதாசன், கிரிதரன் கண்ணதாசன்,

# இலங்கையில் ஜனநாயகம் தோற்றுப் போய்விட்டது?

- அ. கணபதிப்பிள்ளை -

இலங்கையில் அரசியற்திட்டத்தில் எழுத்தளவில் இருக்கும் ஜனநாயகம் நடைமுறையில் இல்லையே என்ற ஆதங்கம் எல்லாப் பிரிவினரிடையும் காணப்படுவது ஆச்சரியப்படத்தக்க நிகழ்வாகும். சிறுபான்மை மக்களைப் பொறுத்த வரை ஜனநாயகம் பொய்ப்பித்துவிட்டது என்பது கடந்த அறுபது வருடங்களில் நிகழ்ந்த நிகழ்வுகளின் மூலம் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. பெரும்பான்மைச் சமூகத்தினர் காலத்துக்குக் காலம் ஜனநாயகம் தோற்றுப் போய்விட்டதனை உணரத் தொடங்கியிருக்கிறார்கள். பொதுத் தேர்தல்கள் தான் ஜனநாயகத்தை வெளியே தெரியச் செய்யும் குறிகாட்டியாகும். வழக்கமாகப் பொதுக் தேர்தலின் முன்பும் பின்பும் ஜனநாயகத்தின் சிறகொடிக்கப்படுதல் இலங்கையின் அரசியற் பின்னணியில் இன ஐக்கியமின்மையும் இனக் கலவரங்ககளும் வெளிக் கொண்டுவந்த நிகழ்வாகும்.

இலங்கை மீண்டும் ஒரு பொதுக் தேர்தலுக்குத் தன்னை ஆயத்தப்படுத்தத் தொடங்கி விட்டது. வெற்றி பெறுபவர்கள் வெற்றியைத் தீர்மானிப்பவர்கள் என்ற இருதரப்பினர் தேர்தல்களில் முக்கியத்துவம் பெறுவது வழக்கம். இலங்கையின் அரசியல் யாப்பின் பின்னணியில் பெரும்பான்மை அங்கத்தவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் சிங்களப் பெரும்பான்மையினர் ஒருவர் தலைமைப் பொறுப்பை எடுப்பதும் சிறுபான்மையினர் தலைமைப் பொறுப்பை எடுப்பவரது தலைவிதியை நிர்ணயிப்பதும் நடைமுறையிலிருக்கும் விநோத ஜனநாயகம் இலங்கைக்குச் சொந்தமானது.

இதன் பின்னணியில் தான் ஜனநாயகம் தோற்றுப் போவது என்ற நிகழ்வு இடம் பெறுவது வழக்கம். பெரும்பான்மையினர் நடுவே போட்டியும் கோபதாபங்களும் அடிதடியும் அதன் விளைவாக அயலவர்களாக வாழும் சிங்களவர்களும் உறவினர்களும் எதிராளியாக மாறுவதும் அதன் விளைவாக ஜனநாயகம் சிறைக்கம்பிகளின் பின்னே ஒழிந்துவிடுவதும் ஒருபுறத்தில் முக்கியம் பெறுகிறது. மறுபுறமாக தமது வேட்பாளரின் தோல்விக்குச் சிறுபான்மையினர் தான் காரணம் என்ற முடிந்த முடிவை முடிவாக ஏற்றுக்கொள்ளுபவர்களும், வெற்றிக்குக் காரணம் சிறுபான்மையினரே என உணர்ந்து கொண்டவர்களும் இணைந்து கொண்டு சிறுபான்மையினருக்குப் பாடம் கற்பிக்கும் செயலில் இறங்குவது போன்ற இனக்கலவரச் செயற்பாடு அரங்கேறுவதும் நிகழ்ச்சி நிரலில் இடம் பெறுகிறது.

"பெரும்பான்மை ஜனநாயகத்தில் ஒவ்வொரு வெற்றிக்கும் பின்னே சிறுபான்மையினரின் ஒரு தோல்வி இருப்பது தான் ஜனநாயகம். அது தேர்தல் காலங்களில் தோற்றுப் போய்விடுகிறது என்ற எடுகோளுக்கு இலங்கையின் தேர்தல்கள் கோட்பாடுகளாக மாற்றம் பெற்றுவிடுகிறன்றன."

2009ஆம் ஆண்டு ஜனதிபதித் தேர்தல், விடுதலைப்புலிகளின் தோல்வி என்ற சிறுபான்மையினரின் இழப்புக்கும் விடுதலைப் புலிகளுக் கெதிரான போரில் வெற்றி என்ற பெரும்பான்மையினரின் வெற்றிக்கும் இடையே இடம் பெற்ற ஜனநாயக வெற்றி தோல்வியின் வெளிப்பாடு.

ஜனதிபதி தேர்தலில் வேட்பு மனுக்களத்தில் குதிப்பவர்கள் போரில் வெற்றி பெற்றவர்களான சரத் பொன்சேகாவும், மகிந்த ராஜபக்ஷவும் தான். இவர்களின் பின்ணணியில் வெற்றிக்குக் காரணமாக இருந்து வியூகம் அமைத்துக் கொடுத்த ரணில் விக்கிரம சிங்காவும் அவருக்கு ஒத்துழைப்புக் கொடுத்த விமல் வீரவன்சவும் பெரும்பான்மை சமூகம் வடிந்தெடுத்து வைத்திருக்கும் சிங்களப் பேரினவாத சக்திகளின் வெளியே தெரியும் உருவங்களாகும்.

தேர்தல் காலங்களில் தமிழர்களையும் சிறுபான்மையினரையும் கவர்ந்திழுக்கச் செய்யும் வாக்கியம் அதிகாரப் பகிர்வு பற்றிய பிரச்சார வெளியீடு. அதில் சுகந்திரம் சமத்துவம் என்பன உள்ளடக்கப் படுவது தவிர்க்கமுடியாதது. அதிகாரப் பகிர்வு எவ்விதமாக இருக்கும் என்று சிந்தித்து முடிவெடுக்காத வகையில் அதிகாரப் பகிர்வு சூனியத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் வழிவந்த 13வது அரசியற் திட்டத் திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று அழுத்திக் கேட்பதற்குக்கூட எவருக்கும் திராணியிருப்பதாகத் தெரியவில்லை கொடுப்பதை வாங்கிக் கொண்டு பேசாமலிருங்கள் என்று பலகாலமாகக் கூறி வந்த பெரும்பான்மை அரசியல் வாதிகளின் வாய் பொய்துவிடக் கூடாது என்பதற்கான நிலைமைகள் இடம் பெறத் தொடங்கியிருக்கின்றன.

"அதிகாரப்பகிர்வு இனப்பிரச்சினைக்கான விடையாக இருக்க முடியாது இந்த இலங்கைத் தீவு சிங்கள பௌத்தர்களுக்குச் சொந்தமானது" என்று கூறிய சரத் பொன்சேகாவும் இந்த ஜனதிபதித் தேர்தலில் ஒரு வேட்பாளராக இருக்கிறார் என்பது அதிகாரப் பகிர்வு பற்றிய கேள்வி விடையினைத் தேடிக்கொண்டிருக்கிறது.

முப்படைகளுக்கும் அதிகாரியாகவிருந்த சரத் பொன்சேகா நாங்கள் இழந்த ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டும் என்று படையினருக்கு தனது பதவி ராஜினமாவின் பொழுது தெரிவித்திருந்தமையினை கருத்துக்குள் எடுத்துக் கொள்ள வேண்டும். படையினர் எத்தகைய ஜனநாயகத்தை இழந்திருக்கிறார்கள் ஜனநாயகத்தின் பாதுகாவலர்கள் தான் படையினர். அவர்களுக்கே ஜனநாயகம் கிடைக்கவில்லை என்றால் ஜனநாயகம் எங்ஙனம் சாமனிய மக்களிடையே சென்றடைதல் சாத்தியம் என்று எண்ணுவதில் வியப்பில்லையல்லவா.

ஜனதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்பாக சிங்களப் பெரும்பான்மையிடையே பலப் பரீட்சை ஆரம்பமாகிறது. இலங்கையின் நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்ட ஜனதிபதி முறையினை ஒழிப்பதுடன் விகிதாகாரப் பிரதி நிதித்துவமுறை கொண்ட அரசியலிலிருந்து விடுபட வேண்டிய தேவையும், இன்றைய அரசியற் திட்டத்தினை மாற்றியமைப்பதற்குத் தேவையான தொன்று என்பது, மூன்றில் இரண்டுக்கு மேற்பட்ட பெரும்பான்மையின் அங்கிகாரத்தினைப் பெறுவதிலும் தங்கியிருக்கிறது. பலமான இருகட்சி ஆட்சி முறை கொண்ட பெரும்பான்மை அரசியலில் விகிதாசாரப்பிரதிநிதித்துவம் சிறுபான்மையினரின் கை ஓங்குவதற்குக் காரணமாக மாறிவிடுகிறது.

ஜனநாயக சோசலிசக்குடியரசு, ஜனநாயகத்தையும் சோசலிசத்தையும் எந்தளவு தூரம் காப்பாற்றப் பாடுபடுகிறது என்பதிலே தான் தேர்தல் வெற்றி தங்கியிருக்கிறது. மகிந்த சிந்தனை தெளித்துவிடப்பட்டு நான்கு ஆண்டுகள் மாத்திரம் முடிந்தநிலையில் அவசரப்பட்டு ஏன் தேர்தல் நடாத்தப்பட வேண்டும் என்ற ஐயப்பாடும் அறியும் ஆவலும் எல்லோரிடையேயும் எழுவது வியப்பானதல்ல. மகிந்த சிந்தனை தொடர்ந்தால் பெரும்பான்மை மக்களின் அரசு மீதான நம்பிக்கை கூடும் என்று இன்றைய ஆட்சியாளர்கள் எண்ணுவதில் தவறொன்றுமில்லை. போர் வெற்றியிற் திளைத்த சிங்கள மக்கள் பொருளாதாரம் நோக்கி மனம்மாறுவதற்கு முன்பாக தேர்தல் வெற்றியைப் பெற்றுவிடவேண்டும் என்று எண்ணுவதில் எந்த ஆச்சரியமுமில்லை. மகிந்தவின் வெற்றிதான் இந்தியாவின் கோரிக்கையான 13வது திருத்தத்தை அமல் நடாத்த உதவியாகவிருக்கும் என்பதில் இந்தியாவுக்கே சந்தேகமேற்பட்டுவிட்டது. சரத் பொன்சேகாவைப் பிடிக்கலாம் என்பதில் இராணுவ ஆட்சிப்புரளியைக் கிளறிவிட்டிருக்கிறது.

ஐக்கிய மக்கள் விடுதலை முன்னணி கொடுத்த அங்கீகாரத்தின் அடிப்படையில் மகிந்த சிந்தனை பெரும்பான்மை மக்களின் வாக்குகளைப் பறிக்கும் சாதனமாகப் பயன்படுத்தப்படும் நிலையே தென்படுகிறது.

அரசியற் திட்டம் மாற்றம் செய்யும் பலப்பரீட்சையில் தென்மாகாணம் 67.9 சதவீத அங்கீகாரத்தினை வழங்கியிருந்தது. ஐக்கிய தேசியக் கட்சி 25 சதவீதத்தையும் மக்கள் ஐக்கிய முன்னணி (ஜேவிபி) 6 சதவீதத்தையுமே கொண்டிருந்தன. வடமாகாணத்தில் நடந்த தேர்தல் மகிந்த சிந்தனைக்குத் தக்கதொரு பிரதி உபகாரத்தைக் காட்டி நிற்காததனால் கட்டிவைத்த காவலர்களையெல்லாம் பலப் படுத்தி வைக்கவேண்டிய தேவை ஏற்பட்டு விட்டது.

ஜனதிபதி தேர்தலில் அரசியல் சாணக்கியன் என்று வர்ணிக்கப்படும் மகிந்த ராஜபக்ச தனது வெற்றியினை உறுதிப்படுத்த 20 கட்சிகளின் ஆதரவினை பெற்றிருக்கிறார் என்ற செய்தி அவருக்கு இணையான ஒரு போட்டியாளரை ஏகமனதாக எதிர்க் கட்சிகள் முன்வைக்க வேண்டிய தேவையினை உணர்ந்திருந்தன. லக்ஷ்மன் செனிவரத்தினாவும், திஸ்ஸ அத்தனாயக்காவும் பொதுவானதொரு எதிராளியான சரத் பொன்சேகா தான் இதற்குப் பொருத்தமானவர் என்பதனை வெளிப்படையாகத் தெரிவித்திருந்தனர்.

விடுதலைப்புலிகளின் வெற்றியினை முன்னிலைப் படுத்தும் பொழுது கட்டளை இட்டவரா? நிறைவேற்றியவரா? பெரியவர் என்ற வாதப் பிரதிவாதத்தின் முக்கியம் தேவையற்றது. எவ்வாறு வெற்றியடையப் பாடுபட்டோம் என்பதனை சாமானிய சிங்கள மக்களுக்குத் தெரிவிப்பதில் சரத்பொன் சேகாவின் கதை எடுபடத்தான் போகிறது.

இராணுவ வெற்றியை ஏற்படுத்திக் கொடுத்த இராஜதந்திர வெற்றிக்குப் பொறுப்பானவர் மகிந்தாவும் அவரது திட்டமிடுதலுக்குப் பயன்பட்ட சர்வதேச அரசியல் தொடர்பாளர்களான பேசவல்ல அதிகாரிகளுமாகும். இது அடிப்படையில் பெரிய செயலாக இருந்தலும் அவை யாவும் களத்தின் வெற்றியுடன் எதிர்த்து நிற்கப்போவதில்லை.

மகிந்தாவின் வெற்றி ஏனைய முன்னைய ஜனாதிபதிகளின் செயல்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கக் கூடிய மக்களில் எத்தனைபேர் இராஜதந்திரச் சூழலின் முக்கியத்துவத்தினை உணர்ந்திருக்கிறார்கள் என்பதிலேயே தங்கியுள்ளது. இது பெரும்பான்மைச் சமூகத்தின் கணிசமான அளவு வாக்கினைத் தக்க வைத்துக் கொள்ளப் போதுமானதாக இருக்குமா இதனைவிட வேறும் பல உத்திகள் தேவைப்படுமா என்பது பிரச்சாரத்திலும், சிங்கள பௌத்தப் பாதுகாவலர் யார் என்ற உத்தியினை எவ்வளவு தூரம் பௌத்த பீடங்கள் ஏற்றுக் கொள்ளுகின்றன என்பதிலேயும் தங்கியுள்ளது.

சிறுபான்மையின் வாக்குக்கள் தீர்மானிக்கும் வாக்காக இருக்கும் நிலை தொடரும் என்ற எடுகோளின் மத்தியில் போராயுதத்தை இழந்த தமிழ் முஸ்லிம் மக்களுக்குக் கொடுக்கப்பட்ட பேரம்பேசக் கூடிய ஆயுதமாக இந்தத்தேர்தல் இருக்கப்போவது உறுதி என சிறுபான்மை நம்புகிறது. இந்த ஜனநாயகப்பேரம் என்பதனை தமிழ் முஸ்லிம் கட்சிகள் ஒன்றுபட்டு உணர்ந்துள்ளது போன்ற ஒரு தோற்றப்பாடு தென்படுகின்றது.

பலப்படுத்தப்பட்ட இராணுவ அரண்களின் பின்னணியில் இந்தப் பேரம் பேசும்முறை எடுபடுமா என்ற வினா எழாமலில்லை. சர்வ தேசத்தின் ஆதரவினைப் பெறவும் தங்களது குற்றங்களிலிருந்து தப்பிக்கவும் வடபகுதி மக்களுக்குக் கொடுக்கப்படும் உடனடி நிவாரணம் சுதந்திரமாக நடமாடும் உரிமையினைத் தேர்தல் முடியும் வரையாவது உறுதி செய்யும் ஏற்பாட்டினைக் செய்து கொடுப்பதாகும். முள்கம்பிவேலிகள் அகற்றப்பட்டு காவலரண்களுக்குள் கண்ணியத்துடன் திரியக்கூடிய ஜனநாயக உரிமையினைத் தமிழ் மக்கள் பெறுகின்றமை அவர்களின் வாக்குக்களைப் பெறப்போதுமானதாக இருக்குமா என்ற வினாவும் எழுப்பப் படுதல் தேவையான தொன்றாகும்.

சர்வதேச நடுவர் குழுக்களின் அவதானமும், இணைத்தலைமை நாடுகளின் முன்னெடுப்புக்களும் மீண்டும் இலங்கை அரசியலிலும், இனப்பிரச்சினையிலும் முன்னணிவகிக்கத் தொடங்கிவிட்டன. தேர்தலைமையமாக வைத்து அதற்கு தமிழர்களைத் தயார்படுத்துகின்றதொரு செயற்பாட்டில் இந்நாடுகள் தமிழ் முஸ்லிம் தலைமைகளுடன் தம்மை இணைத்துக் கொண்டுள்ளன. தேர்தல் வெற்றிக்கு விலை கையூடாகவா அல்லது கைங்கரியமாகவா பெறப்படவேண்டும் என்பதனைத் திர்மானிப்பதில் இணக்கப்பாடு தேவை என்பதனை சர்வதேச நாடுகள் அழுத்திக் கூறுவதில் சந்தர்ப்பத்தை எதிர் நோக்கியிருக்கின்றன.

விடுதலைப்புலிகள் ஒழிக்கப்பட்டதன் பிண்பாகத் தீர்வுத்திட்ட அறிவிப்பு என்ற உறுதி மொழி காலாவதியாகப் போய்விடாது. பாதுகாப்பதிலேதான் சிறுபான்மையினர் பிரச்சினைத் தீர்வுக்கான உபாயங்கள் தங்கியுள்ளன.

பெரும்பான்மையின் தேர்தல் சிக்கலுக்குள் அகப்பட்ட மகிந்த சிந்தனை போன்றதொரு பச்சைப் புத்தகம் சரத் சிந்தனையாக மலர்ந்து விடுமோ என்ற பயம் ஜனநாயகத்தை நோக்கிக் கொண்டிருப்பவர்களிடத்தில் எழத்தான் செய்கிறது. அத்தகைய நிலை தோன்றுமாயிருந்தால் சரத்பொன்சாவுக்குப் பதிலாக யுத்த வீரன் ஒருவன் சிங்களக் களமாடிகளிடையேயிருந்து நாடுகாத்த வீரனாக உருவாக்கப்படக்கூடிய சாத்தியங்கள் உள்ளன.

எல்லாவற்றுக்கும் மேலாக எந்த விலை கொடுத்தாவது ஜனதிபதிப் பதவினையப் பெற நினைப்பவர்கள், சர்வதேச அரங்கில் எதனையும் விட்டுக்கொடுக்கத் தயாராக இருப்பார்கள் என்பதும் அதன் பின்னர் இராணுவ ஆட்சியோ, இனக்கலவரங்களோ ஏற்படுத்தப்படுவதன் மூலம் கொடுத்தவைகளைத் திரும்பப் பொறுவதற்கு திட்டங்களை ஜனநாயகவாதிகள் வைத்திருக்க மாட்டார்கள் என்பதற்கு யார்தான் உறுதி மொழி கொடுக்கமுடியும்.

kanapathipillai.a@thaiveedu.com

■ ■ ■

**Tutoring**

**Grade 1-7: English, Math, Science & Social science Grade 8- 11: English & Math**

**ஜீவா**

**B.A (Hons), M.Sc, Ph.D**

**(Kennedy & Ellesmere அருகாமையில்)**

**(647) 291 1357**

# வாழ்க்கையைப் புரட்டிப்போடும் Facebook வலையமைப்பு



ஜிப்றி
உதுமாலெப்பை
- கணினி வல்லுனர் -

முன்னைய காலத்தில் ஒரு தனிப்பட்ட நபரைப் பற்றி அறிய விரும்பினால் அவர் வாழும் கிராமத்தில் அல்லது அவருடைய வீதியில் வாழும் ஒருவரிடமோ அல்லது அவரது அயல-வரிடமோ அல்லது அந்த நபரின் நெருகிய உறவினரிடமோ தொடர்புகொண்டால் தவிர அவரை பற்றிய தகவல்களை அறிவது மிகவும் கடினம்.

தபால் தொலைத்தொடர்பு முறை அறிமுக-மானபோது காகிதப் போக்குவரத்தை பாவித்து ஒரு நபர் பற்றிய தகவல்களை பெற்ற பின்பு அந்த நபர் தொடர்பான தகவல்களை உறுதி செய்து கொண்டார்கள்.

### Facebook எவ்வாறு தோன்றியது?

Mark Zuckerberg என்ற ஹவார்ட் பல்க-லைக்கழக மாணவரால் பொழுதுபோக்காக 2004ம் ஆண்டு ஆரம்பத்தில் Thefacebook.com என்ற பெயரில், இந்த இணையத்தளம் ஆரம்பிக்கப்பட்டது. தனது பல்கலைக்கழக நண்பர்களுடன் இணையத்தளம் வாயிலாக தொடர்பை வைத்துக்கொள்ளவே இந்த இணையத்தளத்தை மார்க் துவங்கினார். பின்னர் இந்த இணையத்தளத்தில் ஹவார்ட் பல்கலைக்கழகம் மட்டுமின்றி வேறுபல பல்கலைக்கழக மாணவர்களும் பங்கு-பற்றும் வசதி செய்யப்பட்டு, பெரும் வர-வேற்பை பெற்றது. அதுவரை Thefacebook.com என்றிருந்த இணையத்தளம் ஓகஸ்ட் 2005இல், Facebook.com என்ற இணையப் பெயரை(Domain) $200,000 வாங்கியதன் பின் பொதுவாக Facebook என்று அழைக்-கப்படத் தொடங்கியது. 2006ம் ஆண்டு செப்ரெம்பர் முதல் 13வயதுக்கு மேற்பட்ட அனைவரும் பங்குபற்றும் ஒரு இணையத்-தளமாக மாறியது.

2007 ஆண்டில் Facebook Inc. நிறுவனத்தின் 1.6% பங்குகளை மைக்ரோசொப்ட் நிறு-வனம் $246 மில்லியன் கொடுத்து வாங்கிக் கொண்டது. தொடர்ந்து Facebook Incஐ முழுவதுமாக வாங்கிக் கொள்ள பல பெரும் நிறுவனங்கள் போட்டி போட்டன. google, Yahoo போன்ற நிறுவனங்கள் பெரும் தொகையை தருவதாக கூறினாலும் Mark Zuckerberg, facebook.com விற்பனைக்-கில்லை என்று கூறிவிட்டார்.

### எவ்வாறு Facebook பணம் சம்பாதிக்கிறது?

முக்கியமாக facebookஇல் வரும் விளம்-பரங்கள் மூலமாகவே வருமானம் பெறப்-படுகிறது.

### என்ன வசதிகள் இருக்கின்றன?

செய்திகள், புகைப் படங்கள், வீடியோக்கள், மற்றைய நண்பர்கள் அளித்த தகவல்க-ளுக்கான உங்கள் கருத்துக்கள், Instant Chat என்று வசதிகள் வளர்ந்துகொண்டே போகின்றன. (இவற்றை உங்கள் கைத் தொலை பேசியில் இருந்தே இணயத்தில் பதிவு செய்தும் கொள்ளலாம்)

### எத்தனை அங்கத்தவர்கள்?

இன்றைய கணக்குப்படி Facebook இணை-யத்தளத்தில் 321 மில்லியன் அங்கத்தவர் கள் இருக்கிறார்களாம். (கனடாவின் சனத் தொகை 33 மில்லியன், இலங்கையின் சனத்தொகை 20 மில்லியன் - ஒப்பிட்டுக் கொள்ளுங்கள்) குறைந்தது 10 மில்லியன் பேர் ஒரு நாளைக்கு Login செய்து கொள்-கிறார்கள்.

### தமிழிலும் Facebook...

Facebook இணையத்தின் சேவையை முழுவதுமாக தமிழிலேயே நீங்கள் பெற்றுக் கொள்ளலாம். பாவனை மொழி என்ற பகுதியல் தமிழைத் தேர்வுசெய்வதன் மூலம் தமிழில் இந்த சேவையைப் பெறலாம்.

பின்னர் தொலைபேசி மற்றும் தொலைநகல் தொழில்நுட்பம் அறிமுகமானபோது, விரை-வாக தவல்களை சேகரித்தவரிடம் இருந்து அறிந்துகொள்ளமுடிந்தது.

ஆனால் இன்று இணைய பாவனை அறிமுக-மானபின்னர், எங்கள் கதாநாயகன் சுப்பனைப் பற்றி தவல்களை அறிவதற்கு சுப்பனுடைய ஊரவரிடமோ, தெருவாசிகளிடமோ அல்லது பக்கது வீட்டு பரமசிவத்திடமோ காத்து நிற்க வேண்டிய அவசியமில்லை.

இன்று Social Network என்ற கூறப்படும் சமூக வலையமைப்புக்கள் மூலம் ஒருவரைப்பற்றி அறிவதும், தொடர்பாடலும் புதியதொரு பரி-ணாமத்துக்கு நகர்ந்துகொண்டிருக்கின்றன. இந்தத் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு facebook.com, linkedin.com, twitter.com, Tegged.com என்று பல இணையப் பகுதிகள் அறிமுகமாகிக்கொண்டே இருக்கின்றன. இந்த சமூகவலையமைப்புமுறை தொடர்பாடலை இலகுவாக்கியிருந்தாலும், பல கோணங்களில் நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டியதும் அவசியமாகிறது.

நமது ஹீரோவுக்கு (நான் ஹீரோ என்பது உங்கள் மகனை என்று வைத்துக்கொள்ளுங்-களேன்) இணையத்தளத்தில் ஆர்வம் இருது விடாலே போதும்; அவரே அவரைப்பற்றி விலா-வாரியாக தான் வாழும் இடம், தொலைபேசி இலக்கம் (இதுவெல்லாம் ஜுஜுபி... இப்ப வாசியுங்க) தன்னுடைய புகைப்படம் என்று எல்லாவற்றையுமே இணையத்தில் யாரையும் கேட்காமலேயே பதிவு செய்திருப்பார். இவை யெல்லாம் அவர் அவரை அறியாமலேயே அவரிடமிருந்து வெளிவரும் வகையிலேயே இந்தத்தளங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவர் தனைப்பற்றிய புகைப்பட ஆதாரங்களை மட்டுமின்றி தன்னுடன் கூடித்திரிந்த நண்பர், நண்பிகளையும் இணையத்தில் இலவசமாக வலம்வர விட்டிருப்பார்.

என்னுடைய 13 வயதுடைய மகன் Facebook வலைப்பக்கத்தில் ஒரு அங்கத்துவம் வைத்-திருக்கிறார். (தூர இடங்களின் வாழும் எங்கள் உறவுகளுடன் குறைந்தது இந்த வழியிலாவது தொடர்புகளை வைத்திருக்க லேசான வழி).

கடந்த வருடம் தாயகத்திலிருந்து என்னுடைய உறவுப் பையனொருவர் புலமைப்பரிசில் கிடைத்து மேற்படிப்புக்காக இங்கிலாந்து சென்-றிருந்தார். அவரைப்பற்றி நாங்கள் பெருமை-யாக நினைத்ததுடன், எங்கள் பிள்ளைக-ளுக்கும் அவரைப்பார்த்துப் படிக்கவேண்டும் என்று அறிவுரை கூறி வந்தோம். அந்த உறவுக்காரப் பையன், என்னுடைய மகனு-டைய Facebook accountக்கு ஒரு invitation அனுப்பி இருந்தார். அவருடைய Facebook இணையப் பக்கத்திற்கு போனபின்புதான், லண்டனின் உல்லாச வாழ்க்கை அவரில் ஏற்படுத்தி இருந்த தாக்கம் தெரிந்தது. (அதன் பிறகு வீட்டு தொலை பேசி மிகவும் சூடாக இருந்தது வேறு கதை).

அன்மையில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பு ஒன்றின் படி சமூக இணையவலையத்தில் (Solicla Network) இணைந்து கொள்பவர்களில் சிறுவர்களின்(Under 13 Years) பங்குகொள்ளு-தல் அதிகரித்திருப்பதாகக் கூறப்படுகிறது. Facebook, Myspace போன்ற இணைய அமைப்-புக்களில் இணைவதற்கு ஆகக்குறைந்தது 13 வயது என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும், இணையத்தில் இணைந்து கொள்பவர்களின் உண்மையான வயதை உறுதிப் படுத்திக்-கொள்வது கடினமாக உள்ளது. இவ்வாறு குழந்தைகள் இந்த வகையான சமூக இணை-யத்தளங்களில் இணைவதால் அவர்களின் குடும்பத்துடனான உறவுமுறை, மூளைவளர்ச்சி ஆகியன பாதிக்கப்படுவதாக ஆராய்ச்சியா-ளர்கள் கண்டறிந்துள்ளார்கள்.
இன்று கைத்தொலைபேசிகளில் இருந்து நேரடியாகவே facebook போன்ற இனைய தளங்களுக்கு, புகைப்படங்களை பதிவேற்றம் செய்யக்கூடிய வசதிகள் வந்துவிட்டன. குளியல் அறைக்குள் இருந்தவாறே, தாம் செய்வதன் பாரதூரம் புரியாத இளம்வயதினர் தமது அந்தரங்க படங்களையும் கண் இமைக்கும் நேரத்தில் இணையத்தில் பதிவு செய்து விடு-கிறார்கள். இந்த படங்களை வைத்துக்கொண்டு அந்த நிமிடத்தில் நண்பர்களாக இருந்தவர்கள் எதிர்காலத்தில் எப்படிப்பட்ட பாதிப்பை ஏற்ப டுத்தலாம் என்பதை இந்த சிறுவர்கள் அறிந்-திராதிருப்பது மட்டுமில்லாமல் சிந்திப்பது கூட இல்லை. இணையதளத்தில் ஒரு செய்தி-யோ, புகைப்படமோ பதியப்பட்டவுடன் வேறு ஆயிரக்கணக்கான பக்கங்களில் ‘உடனடியாக’ பிரதி செயப்பட்டுவிடும். பின்னர் நீங்கள் உங்கள் இணையப்பக்கத்தில் இருந்து அவற்-றை அழித்தாலும், பிரதி செயப்பட்ட பக்கங் களில் இருந்து அழிக்கவே முடியாது.

அண்மையில் இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட இளம் பெண்ணின் தந்தை இந்த இணையவலையமைப்பில் சிக்கிக்கொண்ட தன் மகளுக்கு உதவமுடியாமல், தற்கொலை செய்து விடலாமா என்ற நிலைக்கு தலைப்-பட்டார். அந்த இளம் பெண் தான் செய்த தவறை உணர்ந்தாலும், அது காலம் பிந்தி-யதாக இருந்தது. கதை இது தான், பாடசா-லையில் ஏற்பட்ட நட்பு காரணமாக ஒரு நண்பனுடன் Facebook Accountஐ அந்தப்பெண் பகிர்ந்துகொண்டார். தங்கள் உறுதியான நட்பின் அடையாளமாக இருவரும் பல புகைப்படங்-களை Facebookஇல் வெளியிட்டுக்கொண்-டார்கள். ஒரு சிறிய காரணத்தினால் இவர்-களுடைய நட்பில் பிளவேற்பட்டது. நண்பியைப் பழிவாங்க முடிவுசெய்த அந்த நண்பன், தன்னுடைய நண்பியின் Facebook account இன் passwordஐ மாற்றிவிட்டான். மேலும் அந்த பெண் தன்னைப்பற்றி தானே எழுதுவது போன்று பலவிடயங்களை கீழ்த்தரமாக எழுதி-யதுடன், வெளிவிடக் கூடாத பல அந்தரங்க படங்களயும் அந்த பெண்ணின் இணையப் பக்கத்தில் வெளியிட்டு தன் பழி உணர்வைத் தீர்க்கத் தொடங்கினான். அந்தப் பெண்ணோ, தன்னுடைய Facebook accountஇன் புதிய Password இல்லாததால் ஒன்றுமே செயமுடி யாமல் நிர்க்கதியானாள்.

பொதுவாக இந்த இணைய சேவைகள் இலவ-

32ம் பக்கம் பார்க்க...

## வீட்டினுள்ளே இன்னும் வருபவை...

“வீடு” வினாவும் விடையும் 11
கருணா கோபாலபிள்ளை

சமாதான லில்லி 14
செல்லையா சந்திரசேகரி

வீடு விற்பதற்கான காரணங்கள் 22
S.K. பாலேஸ்

மருத்துவக் கேள்வி பதில் 28
இராஜசேகர் ஆத்தியப்பன்

உடுக்கை இழந்தவன் கைபோல் 38
சிவவதனி பிரபாகரன்

வர்த்தகத்தை குவியப்படுத்தும் La Senza 45
மாறன் செல்லையா

காப்புறுதியில் குழப்பமா? 46
சக்திவேல்

ஓய்வூதிய சேமிப்பு 48
கல்யாணி நாதன்

ஆயுள் காப்புறுதி கம்பனி ஒன்று கனடாவில் காணாது போனால்? 54
சிவ பஞ்சலிங்கம்

சேமமான சாரதி 62
செந்தூரன் புனிதவேல்

ஒன்ராறியோவின் பசுமை சக்தியும் பசுமைப் பொருளாதாரச் சட்டமும் 64
K. கண்ணன்

நற்காற்றும் நம்வாழ்வும் 69
அலன் சிவசம்பு

பாரதிக்குத் தடா 27
சோக்கல்லோ’ சண்முகநாதன்

திருமணமும் பழமொழிகளும் 74
பொன் குலேந்திரன்

படுவான்கரைப் பயணம் 76
குமார் புனிதவேல்

ஆள் மாறாட்டமும் ஓட்டமும் 78
கே.எஸ். பாலச்சந்திரன்

என்னைக் கடிப்பாயா? கலாபன் கதை 80
தேவகாந்தன்

அந்தக் கிணற்றடி கமுகு மரம் 82
பொ.கனகசபாபதி

தமிழ் எழுத்து வரிவடித் தோற்றம் 87
முருகேசு பாக்கியநாதன்

அண்ணனின் புகைப்படம் 88
அ. முத்துலிங்கம்

நூற்றாண்டு காணும் மகாஜனக் கல்லூரி 90
குரு அரவிந்தன்

மனைவியை விட்டுப் பிரியாத கணவன் 92
வி. கந்தவனம்

இலங்கைத் தமிழ்த்திரைப் பட முதல் கதாநாயகி ஜெயகௌரி 94
தமிழ்விசை (இணையம்), தினகரன் வாரமஞ்சரி.

இசை நாடகக் கலைஞன் அரியாலையூர் செல்வம் 94
ப.ஸ்ரீஸ்கந்தன்

உங்கள் அடுத்த தலைமுறையை செல்வந்தராக்குவதற்கு... 98
சிறீதரன் துரைராஜா

# உறுதிப் படுத்த அரியதான ஒரு குற்றம்



ராகுலன்

- Accountant -

கடந்த மாதம் ராஜ் ராஜரட்ணத்தின் மீதான குற்றச்சாட்டைப் பார்த்தோம். ஆனால் இதை உறுதிப் படுத்த முடியுமா என்று பார்த்தால் கடந்த காலங்களில் இது கடினமாகவே இருந்துள்ளது.

Martha Stewart ஒரு $50,000 இழப்பை தவிர்ப்பதற்காக தனது Im Clone பங்குகளை விற்றார். இவர் விற்றவுடன் இந்த பங்குகளின் விலை முதலீட்டாளர்களுக்கு விருப்பம் தராத செய்தியைத் தொடர்ந்து பாரிய சரிவைச் சந்தித்தது.

இதற்காக இவர் 2004ல் சிறை சென்றார். இவரது குற்றம் அந்தப் பங்குகளை விற்ற சமய சந்தர்ப்பம் பற்றியும், அந்த நிறுவன முதல்வர் Sam Waksalலுடனான தனது உறவை மறைத்ததுமேயாகும்.

முறிகளின் (Bonds) மன்னன் Michael Milken 1990ல் சிறை சென்றார். அவர் தெரியப்படுத்தப் படாத தகவல்களின் அடிப்படையில் பங்கு வர்த்தகம் செய்தார் என குற்றம் சாட்டப் பட்டாலும், சிறை சென்றது ஊழல் குற்றத்திற்காகவே.

இது போன்ற பிரச்சனைகளுக்கு வழக்கு தொடுனர்கள் முகம் கொடுக்கிறார்கள். தற்போது இதுவரையில் நடந்த இது போன்ற குற்றங்களுள் பாரிய குற்றச் சாட்டாகக் கருதப்படும் ராஜ் ராஜரட்னம் அவர்களினதும் அவரது கூட்டாளிகளினதும் குற்றத்தை நீதி மன்றில் அய்யத்திற்கு இடமின்றி உறுதி செய்வது மிகக் கடினமாகவே இருக்கப் போகிறது.

பொது மக்களுக்கு தரப்படாத தகவல்களின் (inside information) அடிப்படையில் பங்கு வர்த்தகத்தை அடையாளம் காண்பது மிக எளிது. ஆனால் நீதி மன்றின் முன் அய்யத்திற்கு இடமின்றி உறுதி செய்வது சொல்வதை-விடக் கடினமாகும்.

அமெரிக்க சட்டத்தின் படி இந்தத் தகவல்களை, இந்தத் தகவல்கள் இன்னும் பொது மக்களுக்கு தரப் படவில்லை என்பது குற்றம் சாட்டப் பட்டவருக்கு தெரிந்து இருக்க வேண்டும். பொது மக்களுக்கு தரப்படாத



தகவல்களின் அடிப்படையில் பங்கு வர்த்தகம் எப்போதும் நடப்பது உண்டு. ஆனால் அங்கு விரல் அடையாளங்கள் விடப்படுவதில்லை.

எந்த ஒரு முக்கிய அறிவிப்புக்கு முன்னாலும் விலைகளில் அவதானிக்கத்தக்க மாற்றமும், பரிமாற்றமடையும் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க வித்தியாசமும் இருப்பது உண்டு.

உண்மையில் நடப்பதில் ஒரு சிறிய எண்ணிக்கையான வழக்குகளே நீதி மன்றின் முன் நிறுத்தப் படுவது என்பது புள்ளிவிபரங்களைப் பாரக்கும் போது தெரிகின்றது. 2008ல் New Your Stock Excahang 146 குற்றச்சாட்டுக்களை பாரப்படுத்திய போதும் 61 வழக்குக்களை மட்டுமே வழக்கு தொடுனர்கள் முன்னெடுத்தார்கள். இது எப்போதையும் விட கூடிய எண்ணிக்கையாகும். 1929 மட்டும் இது அமெரிக்காவில் சட்டவிரோதமானது அல்ல. இப்போதும் பல நாடுகளில் சட்ட விரோதமானது அல்ல. 1960 களில் இருந்து இந்தக் குற்றங்கள் பாரிய அளவில் அதிகரித்ததால் அமெரிக்க சட்டங்களை அமுல் படுத்தும் அமைப்புக்கள் மிகவும் சிரமப்பட்டார்கள்.

நவீன சுயாதீன கொள்கையாளர்கள் பலர் பொது மக்களுக்கு தரப்படாத தகவல்களின் அடிப்படையில் பங்கு வர்த்தகம் செய்வது உண்மையில் ஆரோக்கியமானது என்று வாதிடுகிறார்கள். George Mason University Chairman Donald Boudreaus அண்மையில் எழுதிய கட்டுரை ஒன்றில் இது சொத்துக்களின் விலைகளை நேர்மையாக வைத்துக் கொள்ள உதவும் எனக் குறிப்பிடுகிறார்.

2006ல் சில விதிகள் மாற்றமடையும் மட்டிலும் தேர்ந்து எடுக்கப் பட்ட சில ஆய்வாளர்கள் மத்தியில் உள் இரகசியங்களைப் பரிமாறிக் கொள்வது மிகவும் சாதாரணமாகும். ஆனால் தற்போதய விதிகளின் படி இந்த சந்திப்புக்களின் விபரங்களை எல்லாருக்கும் தெரியப் படுத்த வேண்டும்.

இதில் இன்னொரு பிரச்சினை என்னவென்றால் தற்செயலாக ஒரு கொண்டாட்டத்திலோ தரையடி ரயிலிலோ தற்செயலாக கேள்விப்பட்ட ஒரு தகவல் அடிப்படையில் பங்குகளை பரிமாறிக் கொள்வது குற்றமல்ல. இவருக்கு அந்தத் தகவல் இரகசியமானது என்றும் தெரிந்திருக்க வேண்டும்.

ஆனால் திரு. ராஜ் ராஜரட்ணத்தின் வழக்கில் குற்றம் தொடுனர்கள் மிகவும் சிக்கலான வழக்கறிஞர்கள் வர்த்தகர்கள் மற்றும் பல பெரிய Wall Street புள்ளிகளுடனான தொடர்புகள் என இதை தொழிலாகவே செய்துள்ளார்கள். வழமை போல சந்தர்ப்ப சாட்சியங்களில் மட்டும் தங்கியிராது தொலைபேசிகளை ஒட்டுக் கேட்டல் சாட்சியங்களை ஒழுங்கு செய்தல் மூலமாக குற்றம் சாட்டப் பட்டவர்களது உரையாடல்களைப் பதிவு செய்தல் என மிகவும் ஆழமாக இறங்கி புலனாய்வு செய்துள்ளார்கள்.

வழக்கு தொடுனர்கள், குற்றம் சாட்டப்பட்டவர்கள் தெரிந்து கொண்டே இதைச் செய் தார்கள் என உறுதி செய்யலாம் எனக் கூறுகிறார்கள்.

அத்துடன் சட்டத்தை அமுலாக்கும் அமைப்புக்கள் இந்த குற்றங்களை முற்றாக ஒழிக்க முடியாது எனத் தெர்ந்திருந்தும் ஒரு பெரிய மீனைப் பிடித்தன் மூலம் மற்றயவர்களுக்கு நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்ற செய்தியை சொல்லியிருக்கிறார்கள்.

ragulan@thaiveedu.com

■ ■ ■


# RBC RESIDENTIAL MORTGAGES

- 1st Time Home Buyers
- Pre–Approvals
- Builder Rate Hold Programs
- Refinance, Renewals & Switch for Free
- Debt Consolidation
- Home Equity Line of Credit
- New Immigrant & Self Employed Programs



| RATE SPECIAL | |
|---|---|
| 4 Yrs Fixed | CALL |
| 5 Yrs Fixed | CALL |
| Variable Closed | CALL |
| Variable Open | CALL |

**Three Locations to Serve you**

**Royal Bank**
Eglinton & Sinnott
2043 Eglinton Ave E
Scarborough, ON
M1L 2M9

**Main Office**
4544 Sheppard Ave E
Suite #208
Scarborough, ON
M1S 1V2

**Royal Bank**
Kingston & Steeple Hill
670 Kingston Road
Pickering, ON
L1V 1A6

- digi Media -

RBC



**Ram Krish**
RBC Mortgage Specialist
Direct 416-526-4996
Email: ram.krish@rbc.com

# றேடோன் (Radon) வாயு ஏற்படுத்தும் விளைவுகள்

மகேன் சிங்கராஜா
- வீடு விற்பனைப் பிரதிநிதி -



நாம் அன்றாடம் சுவாசிக்கும் போது எமது சுற்றத்தில் உள்ள காற்றை சுவாசிக்கின்றோம். அப்படி சுவாசிக்கும் போது, காற்றில் என்னவெல்லாம் இருக்கின்றது என்று தெரிந்து சுவாசிபதில்லை. அதேபோல் நாம் எமது வீட்டினுள் இருந்து சுவாசிக்கும் போது, அதாவது பூட்டப்பட்ட நான்கு சுவர்களுக்குள் இருக்கும் காற்றை தான் சுவாசிக்கின்றோம். இப்படி சுவாசிக்கும் பொழுது வீட்டினுள் றேடோன் (Radon) வாயு இருக்கலாம். அது எப்படி வீட்டினுள் வரலாம், வந்தால் எப்படி தடுப்பது, மற்றும் இதனால் ஏற்படும் தீமைகளை தெரியப்படுத்துவதே எனது நோக்கம்.

## றேடோன் என்றால் என்ன?

இது மண், பாறை, தரைகீழ் நீர் ஆகியவற்றில் காணப்படும், யூரேனியம் சிதைவடைவதால் உருவாகுகின்ற கதிர் இயக்க தன்மையே (Radio Active). இது நிறம், மணம், சுவை ஏதுவுமற்ற ஒரு வாயு.

தரையில் இருந்து வெளியேறும் இவ் வாயு மூடப்பட்ட வீடுக்குள் உட்செல்லும்போது அது செறிவாக பதிந்து மேலதிக கதிரியக்க தன்மையான Radio Active துணிக்கைளாக உருவாகிறது. இதனால் நீங்கள் சுவாசிக்கும் வாயு அசுத்தமடைகிறது.

## றேடோன் வாயுவினால் பாதிப்புக்கு உட்படும் போது ஏற்படும் அபாயம் என்ன?

சுவாசப்பையில் புற்றுநோய் ஏற்படும் அபாயம் அதிகரிக்கிறது. ஏனெனில் றேடோன் வாயு, சுவாசப்பையினுள் உள்ளே இழுக்கப்படும் போது சுவாசப்பையில் உள்ள கலங்கள் (CELLS) பாதிக்கப்படுகிறது. இதன் விளைவாக அவை பன்மடங்காக பெருக்கமடைந்து புற்று நோய் ஏற்படக்கூடிய வாய்ப்பு உருவாகிறது.

## உங்களது வீட்டில் றேடோன் வாயுவின் அளவைக் கட்டுப்படுத்துவதினால் ஏற்படுத்தும் நன்மைகள்.

ஈரலிப்பு, மண்ணில் உள்ள வாயு என்பவை உங்களது வீட்டினுள் புகுவதனால் ஏற்படும் விளைவுகளான பூஞ்சணம் படிதல் போன்ற விளைவுகள் குறைக்கப்படுகிறது.

வீட்டின் அடித்தளத்தில் உள்ள பாரிய வெடிப்புக்கள் துவாரங்கள், இடைவெளிகள் என்பவற்றை மூடுவதன் (Seal) மூலம் குளிர் காற்று உட்புகதல் குறைக்கப்பட்டு உங்கள் Gas billஇன் அளவை குறைப்பதோடு றேடோன் வாயு உட்புகுதலையும் தடுக்கலாம்.

## எந்த வகையான வீடுகளில் றேடன் வாயு உள்ளது?

ஏறக்குறைய எல்லா வீடுகளிலும் இந்த வாயு உண்டு. ஆனால், அதன் அளவு பெருமளவு மாறுபடக்கூடியது. ஒரு வீட்டில் உள்ள றேடன் வாயுவின் அளவை தீர்மானிக்கும் காரணிகள் பின்வருமாறு.

- மண்ணின் தன்மை (Soil Characteristics)
- வீட்டின் கட்டிட அமைப்பு (Construction Type)
- அத்திவாரத்தின் தன்மை (Foundation Condition)
- கால நிலை மாற்றம் (Weather)

## றேடன் வாயுவை அளப்பதற்கு பயன் படுத்தப்படும் கருவி

ஒரு வீட்டில் உள்ள றேடன் வாயுவை அளப்பதற்கு பயன் படுத்தப்படும் கருவிகள்; இவை பல்வேறு வகைப்பட்டன. அவற்றுள் சில பின்வருமாறு

- நிலக்கரியை உள்ளடக்கிய உணர் கருவிகள் (Charcoal Detector)
- அல்பா உணர் கருவிகள் (Alpha Track Detectors)
- Electret Ion Chamber
- தொடர்ச்சியாக அளவிடும் கருவிகள் (Continuous Monitors)

> “ தரையில் இருந்து வெளியேறும் இவ் வாயு மூடப்பட்ட வீடுக்குள் உட்செல்லும்போது அது செறிவாகப் பதிந்து மேலதிக கதிரியக்க தன்மையான *Radio Active* துணிக்கைளாக உருவாகிறது. இதனால் நீங்கள் சுவாசிக்கும் வாயு அசுத்தமடைகிறது. ”

## வீட்டினுள் றேடன் வாயு உட்புகுவதை தடைசெய்யும் வழிகள்

றேடன் வாயு உட்புகக் கூடிய பெரிய துவாரங்களான Open Sumps, தரையில் உள்ள வடிகால்கள் (Floor Drains) மூடுதல்

மூடப்படாத மண்ணை (Exposed Soils) மூடுதல். குறிப்பாக நிலக்கீழ் வதிவிடப் பகுதியில் பெரிய இடைவெளி இருந்தால் சீமெந்து கலவையை (Concrete) ஊற்றி, அப்பகுதியில் உள்ள மண்ணை மூட வேண்டும்.

வீட்டின் அடித்தளத்தை சுற்றியுள்ள மண்ணின் அழுத்தத்தை குறைக்க ஓர் காற்றோட்ட குழாயை (Vent Pipe) அமைக்கலாம், மற்றும் Sump வழியாக, அடித்தளத்தின் நீர் வடிதல் ஓடுகளுடன் (Drain tiles) இணைத்தல்.

செயற்கை முறையில் வீட்டின் காற்றோட்டத்தை அதிகரிப்பதற்கு வெப்பத்தை மீளப்பெறும் காற்றோட்டக் கருவி (Heat Recovery Ventilator) ஒன்றை இணைப்பதன் மூலம் செயற்கையான காற்றோட்டத்தை ஏற்படுத்தலாம். இதன் மூலம் ஏற்கனவே வீட்டில் தேக்கமடைந்துள்ள றேடன் வாயுவை வெளியேற்றலாம்.

## புதிய வீடுகளை அமைக்கும் போது செயற்படுத்தப்படக்கூடிய பாதுகாப்பு நடவடிக்கைகள்.

இவ்வாறான பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான செலவு மிகவும் குறைவு என்பதுடன் அவை பல்வேறு நன்மைகளையும் ஏற்படுத்தும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

- றேடன் வாயு உட்புகும் வழிகளைக் குறைத்தல்.
- றேடன் வாயுவை வீட்டினுள் உள்ளே இழுக்கும் விசைகளை குறைத்தல்.
- மண்ணில் அழுத்தத்தைக் குறைக்கும் அமைப்பை ஏற்படுத்துவதற்கு இடம் ஏற்படுத்துதல்.

## வீட்டினுள் றேடோன் வாயு உட்புகுவதை குறைத்தல்

உங்களது புதிய வீட்டை நிர்மானிப்பவர், றேடன் வாயு உட்புகுவதை தடுப்பதற்கு பின்வரும் வழிமுறைகளை பயன்படுத்த முடியும்.

- சீமெந்தினால் அமைக்கப்படும் Slab on grade அமைப்புக்களை தரையில் பதிப்பதற்கு முன்பு, உறுதியற்ற மண்ணை பலப்படுத்துதல், பெரிய கற்களை அகற்றுதல் போன்ற செயற்பாடுகளை செய்தல்.
- அதிக பலம் வாய்ந்த கொங்கிறீற்றை பயன் படுத்துதல்.
- கொங்கிறீற்றை சிறந்த முறையில் பயன் படுத்துவதற்கு ஏற்ற வகையில் Plasticizers என்ற செயற்கை பொருளை அதனுடன் சேர்த்தல்.

## வீட்டினுள் றேடோன் வாயுவை இழுக்கும் விசைகளை கட்டுப் படுத்துதல்.

வீட்டிற்கும், மண்ணுக்கும் இடையில் உள்ள அழுத்த வித்தியாசத்தை குறைப்பது பயன் தரக்கூடிய செயற்பாடு இதனை நடைமுறைப் படுத்துவதற்கு பல வழிகள் உண்டு.

- எண்ணையில் இயங்கும் Furnace, கொதி கலன் (Boiler) அல்லது நீரை சூடாக்கும் கருவியை பயன்படுத்துதல்.
- ஒரு Fire Placeஐ. நிர்மாணிப்பதாயின், இறுக்கமாக மூடப்படக்கூடிய கண்ணாடிக் கதவைக் கொண்ட Wood அல்லது Gas Fire Place தெரிவு செய்யவும்.
- வெப்பத்தை மீளப் பெறக்கூடிய காற்றோட்ட கருவியை (Heat Recovery Ventilator) வீட்டில் பொருத்துதல்.

## மண்ணில் அழுத்தக் குறைவை ஏற்படுத்துவதற்கான வழிமுறைகளை கையாளுதல்.

- ஓர் சீமெந்து பாளத்தை (SLAB) ஊற்றுவதற்கு முன்பு அதன் கீழே உள்ள பகுதியை சிறிய கற்களால் நிரபபுதல்.
- பொலித்தீனை உபயோகித்து காற்று உட்புகுவதை தடை செய்தல்.
- குறைந்த 4 அங்குல விட்டமுடைய குறுகிய நீளமான PVC குழாயை தரையில் உள்ள பாளத்தினுள் புகுத்துதல்.

இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் உங்களது இல்லத்தினுள் உட்புகும் றேடன் வாயுவின் அளவை மட்டுப்படுத்தி ஆரோக்கியமான வாழ்வுக்கான சூழலை நீங்கள் ஏற்படுத்தலாம். இது பற்றிய மேலதிக விபரங்களை அறிய www.cmhc-schl.gc.ca/odpub/pdf/61945.pdf என்ற இணையத்தளத்திற்கு சென்று அறிந்து கொள்ளலாம்.

நத்தார் விடுமுறை வாழ்த்துக்களுடன், வரும் புதிய 2010ஆம் ஆண்டு ‘தாய்வீடு’ நேயர்களுக்கு ஓர் புத்துணர்வானதும், நன்மைகள் கொடுக்கக்கூடிய ஆண்டாக மலர எனது மனதார்ந்த வாழ்த்துக்கள்.

mahensingaraja@thaiveedu.com

■ ■ ■

ROYAL SHUTTERS & BLINDS INC.
DIRECT FROM MANUFACTURER
Everything Factory Direct Prices

உங்கள் இல்லத்தின் உட்புறத்திற்கு ஏற்றவகையில் யன்னல்களை மறைப்புச் செய்திடவும் அழகு படுத்திடவும் நாடுங்கள்
Sales - Service - Installations
Custom Made
Wood & Vinyl Shutters: California Style Shutters, Plantation Style Shutters, Traditional Style Shutters, Arches, (We Do Any Colour Of Paint & Stain)
Blinds: Vertical Blinds, Venetian Blinds, Wood Blinds, Bamboo Shades, Roller Shades, And More
Draperies: Swags, Sheers, Valance, Curtains, And More

Workmanship Guaranteed
Free Shop At Home
CALL FOR A FREE ESTIMATE:
தாஸ் Thaas Sivathason
13 Years of Experience in Shutter Business
Tel: (416) 562-0340
Full Satisfaction Guaranteed

# TRIDEL METROGATE



## OPEN HOUSE "VENTUS" PHASE 1 @ KENNEDY & 401

### SATURDAY DEC. 5th, 2009 FROM 11:00 am TO 4:00 pm

## FOR ALL YOUR REAL ESTATE NEEDS

வீடு வியாபார நிலையங்கள் வாங்க விற்க!

To Buy or Sell Home, Business & Investment properties



**Homelife GTA Realty Inc,** Brokerage*
1711 Mccowan Rd, Suit # 206, Toronto, ON M1S 3Y3
**416-321-6969**



**Gnani Narasingham**
Sales Representative
**416-937-8090**

**Judy Gnanendran**
Sales Representative
**416-321-6969**

*Independently Owned and Operated, Realtor®

# ஆரோக்கியமான மகப்பேற்றுக்கு

### மகப்பேறு ஆரோக்கியமாக அமைந்திட வழிவகைகள்

சென்ற மாத இதழில் மகப்பேறு பற்றி பொதுப்படக் குறிப்பிட்டிருந்தேன். பொதுவாக பார்க்கும் பொழுது, எமது மக்களிடையே ஆரோக்கியமான குழந்தைகளைப் பெறுவதற்குரிய அறிவு, அதற்கான ஆயத்தங்கள் இருப்பதைக் காணலாம். பெற்றோர்கள், வைத்தியர்கள், மருந்தாளர்கள், தாதிமார்கள், நோய்கூற்று வைத்திய நிபுணர்கள் ஆகியோரின் ஆலோசனைகள் தேவைப்படுமிடத்துப் பெறக்கூடிய தாக இருப்பதனால் நல்ல முறையில் வழிவகைகளைத் தெரிந்து அதன்படி ஒழுகி ஆரோக்கியமான மகவைப் பெற்றெடுக்க முடியும்.

குழந்தையானது வயிற்றில் தங்குவதற்கு முன்கூட்டியே தாயானவள் தனது உடலை, சூழலை அதற்கேற்ப ஏற்படுத்திக்கொள்வது சாலவும் நன்று. வேலை பார்க்கும் கணவன், மனைவி இருவரும் தமக்குரிய மகப்பேற்றுக்குரிய விடுதலைக் காலத்தைத் திட்டமிட்டுப் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

வைத்திய ஆலோசனைப்படி இரத்தச் சோகை (Anaemia) உள்ளவர்கள் இரும்புச்சத்து, B12, போலிக்கமிலம், புரதம் மற்றும் தேவையான உணவு வகைகளை உட்கொண்டு தமது உடலை வலுப்படுத்திக்கொள்ளலாம். சிலருக்கு வயிற்றில் உள்ள குடற் புழுக்களும் இரத்தச்சோகைக்கு காரணமாகலாம். உடல் நோய்கள் ஏதாவது இருந்தால் அவற்றிற்குரிய சிகிச்சைகள், ஆலோசனைகள் என்பன குடும்ப வைத்தியரிடமோ மகப்பேற்று வைத்திய நிபுணரிடமிருந்தோ பெறப்படுதல் வேண்டும். உதாரணமாக இருதயச் சுவரில் துவாரம் உள்ள தாய்மார்கள், பாலியல் நோய்களினால் பாதிக்கப்பட்டவர்கள், மற்றும் சில வகையான குருதி நோய் உள்ளவர்கள் கட்டாயம் வைத்திய நிபுணரின் ஆலோசனைப்படி நடத்தல் வேண்டும். இது தவிர சற்று இடம்மாறியிருக்கும் கர்ப்பப்பை, சாதுவாகப் புறந்தள்ளப் பட்டிருக்கும் கர்ப்பப்பை, மற்றும் கர்ப்பப்பையில் உள்ள குறைபாடுகளாகிய கர்ப்பப்பைக் கட்டிகள், உட்படை விகாரங்கள் போன்றவையும் கர்ப்பம் தங்குவதைப் பாதிக்கலாம். இவற்றிற்குரிய சிகிச்சைகளைச் செய்வதன் மூலம் நலமான மகப்பேற்றுக்குரிய சூழலை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

உணவை கருத்தில் கொண்டால்; நல்ல கடும் பச்சை நிறமான கீரைவகைகள், பருப்பு, கடலை போன்ற தானிய வகைகள், மீன், பால், முட்டை, பாற்கட்டி, பழங்கள், தக்காளி, வெள்ளைப்பூண்டு, பயற்றங்காய் போன்ற பலவகையான உணவு வகைகளைத் தேவையான அளவுகளில் உணவாகக் கொள்வதன் மூலம் போதியளவு சத்துக்கள் உடலைச் சென்றடைகின்றன. இவை தாய்க்கும், சூலில் வளர்ந்து வரும் குழந்தைக்கும் தேவையான சத்துக்களைக் கொடுத்து ஆரோக்கியமான மகப்பேறையும், மகவையும் தந்துதவுகின்றன.

### பாரம்பரிய நோய்கள் பற்றிய மருத்துவ ஆலோசனைகள்

பாரம்பரிய நோய்கள் உடையவர்கள் அல்லது காலம் தாழ்த்தி மகவைப் பெற்றெடுக்க விரும்புபவர்கள் வைத்திய ஆலோசனைப்படி பல பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படுவார்கள்.

**இதயம் மலர்கிறது - 17**

ஆண்களின் விந்துகளில் உள்ள DNA என்ற கருப் பொருளில் சிதைவுகள் (DNA Fragmentation) உள்ளனவா என்பதை பரிசோதனை மூலம் கண்டறியலாம். அசாதாரண விந்துக் கலங்கள் குழந்தைகளை உருவாக்க மாட்டாது. இச்சிதைவுகள் உடலில் ஏற்படும் கிருமித்தொற்று, போதைமருந்துகள், கூடிய வயது மற்றும் சில காரணிகளாலும் ஏற்படலாம். இச் சிதைவுகளைத் தவிர்ப்பதற்காக நல்லெ பல 'ஒட்சியேற்ற வெதிரிகள்" (Anti oxidants) கொண்ட உணவு வகைகள் விற்றமின் மருந்துகள் என்பனவற்றை வைத்திய ஆலோசனைப்படி பாவித்து நிவாரணம் பெறலாம். சில சமயங்களில் விந்துகளின் எண்ணிக்கை போதிய அளவு இருந்தும் கருத்தரியாமல் இருப்பதற்கு இச் சிதைவுகள் காரணமாக இருக்கலாம்.

> "சில பெண்களுக்கு
> ஒவ்வொரு மாதவிடாய்ச்சுற்றின் போழுதும்
> வயிற்றுநோவு ஏற்படுகின்றது.
> இது, மணம்முடித்து ஒரு குழந்தைக்குத்
> தாயாகியபின்பு பெரும்பாலும் நின்றுவிடுகிறது."

### கர்ப்பம் தரித்தலும் கர்ப்பச் சிதைவுகளும்

மகப்பேற்றுக் காலமாகிய ஒன்பது மாதங்களை மூன்று கூறுகளாகப் பிரித்து முதல் மூன்று மாதங்களையும் முதலாவது திரிமாதம் என்றும் நடுவில் வரும் மூன்று மாதங்களையும் இரண்டாவது திரிமாதம் என்றும் இறுதியில் வரும் மூன்று மாதங்களையும் மூன்றாவது திரிமாதம் (Third Trimester) என்றும் கூறுவார்கள். ஒவ்வொரு மாதத்திலும் 4 கிழமைகள் உண்டு. மூன்று மாதங்களிலும் 12 கிழமைகள், அதாவது ஒரு திரிமாத காலத்தில் 12 கிழமைகள் உண்டு.

கர்ப்பம் வேண்டி நிற்கும் தாய்மார்களில் சிலருக்கு அநேகமாக முதல் 12 கிழமைகளில் கர்ப்பம் சிதைந்து போவதைக் காணக்கூடிய தாக இருக்கின்றது. அதேநேரத்தில் அநேக குழந்தைகளைப் பெற விரும்பாத தாய்மார்கள் வைத்திய சேவையை நாடிக் கர்ப்பச் சிதைவைச் செய்து கொள்கிறார்கள். இத்தகைய இருவிதமான பெற்றோர்களிடையேயும் பலவிதமான மனப்போராட்டங்கள் இருப்பதைக் கவனிக்கலாம். குழந்தையை வேண்டி நிற்ப வர்களிற்குக் கருச்சிதைவு நிகழ்வது ஒரு வித கவலையும், தவிப்பும், அதுபோல் பொருளாதார நெருக்கடியாலோ அல்லது வேலைப் பழுவினாலோ அல்லது குழந்தைகள் எண்ணிக்கை கூடிவிடும் என்ற எண்ணத்தினாலோ தமக்கு ஏற்பட்ட குழந்தையை சிதைப்பது என்பதும் கடினமான விடயமாகும்.

குழந்தையை வேண்டித்தவமிருக்கும் தாய்மார்கள் தமக்கு ஏற்பட்டுள்ள கர்ப்பம் சிதையாது இருப்பதற்கு மகப்பேற்று நிபுணரின் ஆலோசனைப்படி Ultrasound பரிசோதனை செய்து பார்க்கலாம். ஏற்கனவே கருச்சிதைவு ஒன்று அல்லது இரண்டு நடந்திருந்தால் அதற்குரிய காரணங்களைக் கண்டு கொள்ளலாம். சில சமயங்களில் பரம்பரை அலகுகளில் ஏற்பட்டுள்ள பிழைகளை; ஏற்படும் உடலியல் மாற்றங்களால் உடலானது உணர்ந்து கொள்ளும் பொழுது தரித்துள்ள கர்ப்பமானது மேலும் வளரவிடாமல் உடலானது அதைப் புறக்கணித்து கர்ப்பச்சிதைவை ஏற்படுத்திவிடும். இத்தகைய கர்ப்பச்சிதைவுகள் இயற்கையாகவே நன்மையயப்பதாக இருந்து விடும். தாய்மார்கள் சில சமயங்களில் தான் செய்த கடினவேலை காரணமாகவோ நீண்ட பிரயாணங்களாலோ நடைபெற்று இருக்கலாம் என்று கவலைப்படுவது உண்டு. ஆனால் இவை எப்படியும் தவிர்க்கமுடியாத கர்ப்பச் சிதைவுகள் என வைத்திய பரிசோதனைகளின் பின்பு கண்டறியப்படும் பொழுது ஓரளவு மன ஆறுதல் கொள்வார்கள். எனினும் அப்பெற்றோர்களின் சிந்தனை தமக்கு எப்படியாவது ஒரு குழந்தைப்பாக்கியம் அமைய வேண்டும் என்பதேயாகும்.

இவர்கள் மகப்பேற்று வைத்தியரை அனுகி தமது கர்ப்பப்பையில் ஏதாவது குறைபாடுகள் இருக்கின்றனவா, மற்றும் குருதிப் பரிசோதனை மூலம் பரம்பரை அலகுகளில் பிரச்சினைகள் இருக்கின்றனவா என்று கண்டுகொள்ளலாம். உடலினால் சுரக்கப்படும் ஹோமோன்களின் அளவுகள் சரிவரப் பேணப்படுகின்றனவா என்பது கண்டறியப்படுதல் வேண்டும்.

பலோப்பியன் குழாய்களில் ஏதாவது அடைப்புகள் ஏற்பட்டுள்ளனவா, கருப்பைப் பாதையில் கிருமித்தொற்றுகளினால் பாதிப்பு ஏற்பட்டுள்ளனவா என்பனவற்றைக் கண்டறிந்தபின்பு அதற்குரிய சிகிச்சைகளைச் செய்வதன் மூலம் அக்குறைபாடுகளைத் தீர்த்துக் கொள்ளலாம்.

கர்ப்பம் தங்கி 7வது கிழமையளவிலும் பின்பு 11வது கிழமையளவிலும் Ultra Sound பரிசோதனை செய்வதன் மூலம் சிசுவில் உள்ள சில குறைபாடுகளைக் கண்டறிந்து கொள்ளலாம். கர்ப்பப்பைக் கழுத்தினது தசைகள் பலவீனமடைந்து இருந்தாலும் சிசுவளர்ந்து வரும் காலத்தில் கர்ப்பச் சிதைவு ஏற்படலாம். வைத்திய நிபுணர்கள் இத்தகைய கர்ப்பச் சிதைவுகளைத் தடுக்கக்கூடிய முறையில் சிகிச்சைகளைச் செய்து பல ஆலோசனைகளையும் கூறுவார்கள்.

ஒன்பது மாதங்களும் சிசுவைக் கர்ப்பத்தில் தாங்கி வரும் தாய்க்குப் போதியளவு உறுதுணைகள் தேவை. பெற்றோர், மாமா, மாமி, கணவன், சகோதரர்கள், நண்பர்கள் ஆகியோர் உதவுவதன் மூலம் தாயை மகிழ்வாகவும், ஆரோக்கியமாகவும் வைத்திருக்கலாம். அப்போதுதான் பிறக்கப்போகும் குழந்தையும் ஆரோக்கியமாகப் பிறக்கும்.



கந்தையா செந்தில்நாதன்
- Echo - Cardiographer -

### பிரசவம்

கர்ப்பத்தில் வளர்ந்து வரும் குழந்தை ஒன்பது மாத முடிவில் நன்கு வளர்ந்து பூமியில் அவதரிப்பதற்கு ஏற்ப உடல்வாகைப் பெற்று இருக்கும். கர்ப்பப்பையினுள் உள்ள கர்ப்பப்பைத் திராவகத்தில் சிசுவானது தோய்ந்த வண்ணம் இருக்கும். பிரசவம் ஆரம்பமாகும் பொழுது கர்ப்பப்பை விட்டு, விட்டு இடையிடையே சுருங்கும். அப்படிச் சுருங்கும் பொழுது பிரசவ வேதனை ஏற்படும். முதலாவது குழந்தையாயின் இப்பிரசவ வேதனை சராசரியாக 12 மணித்தியாலங்கள் தொட்டு 20 மணித்தியாலங்கள் வரை நீடிக்கலாம். ஒவ்வொரு கர்ப்பப்பைச் சுருக்கத்தின் இடையே உள்ள காலஅளவு குறுகிவந்து பின்பு அரை மணித்தியாலத்திற்கு ஒரு தடவையாகி அச்சுருக்கம் மேலும் குறுகிச் சென்று ஒவ்வொரு 5 நிமிடங்களுக்கொருதடவை வந்து, அது மேலும் குறுகி நிமிடமொருமுறையாக வரும்பொழுது கருப்பைக் கழுத்து அகன்று, பன்னீர்க்குடம் வெடித்து கர்ப்பப்பைத் திராவகம் வெளியேறும் அதேநேரம் குழந்தையின் தலையும் வெளியே தெரியக் கூடியதாக வெளியில் வரும்.

ஒவ்வொரு சுருக்கத்தின் பொழுதும் பிரசவ வேதனை இருக்கும். தலைப்பிள்ளைக்கு பிரசவகாலம் நீண்டதாகவும், அடுத்துவரும் மகப்பேறுகளின் போது பிரசவ காலம் குறுகியதாகவும் இருக்கும். அதாவது முதற்பிள்ளைக்கு பிரசவ வேதனை ஆரம்பமாகிச் சராசரியாகப் 18 மணித்தியாலங்கள் பிடித்தால் அடுத்து வரும் பிரசவங்களிற்கு பிரசவ வேதனை ஆரம்பமாகி 2 அல்லது 4 மணிநேரங்களில் குழந்தை கிடைத்துவிடும்.

### பிரசவ காலச் சிக்கல்கள்

- கால்மாறிப் பிறத்தல் (Breech Delivery)
- இரட்டைக் குழந்தைகள் (Twins) பலகுழந்தைகள் (Multiple Pregnancies)
- கொடிசுற்றிப் பிறத்தல் (Placenta around the neck)
- பிரசவ வழி போதாமை (Pelvic Inadequacy)
- கர்ப்பப்பை வாசலில் தொப்புள் கொடி (Placenta Praevia)
- குருதியமுக்க, உடல் வீக்க, அல்புமின் வெளியேறல் நோய் (Pre Eclamptic Toxemia)
- தொப்புள் கொடி சுருங்குதல்
- கர்ப்பப்பைக் கட்டிகள்
- குருதி Rh negative
- நீரிழிவு நோய் (Gestational Diabetes

24ம் பக்கம் பார்க்க...


## TO LEARN FIRST AID & CPR IN ENGLISH AND TAMIL

- Standard First Aid & CPR Level "C" - 2 Days Program
- Emergency First Aid & CPR Level "A" - 1 Day Program
- CPR Level "A" - 4 Hours Program (Adult)
- CPR Level "C" - 8 Hours Program (Adult, Child, Infant)
- CPR Level "C" - 4 Hours Program - Renewal (Adult, Child, Infant)

பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

தமிழிலும் ஆங்கிலத்திலும் முதலுதவி பயிற்சி

**Dr. Kandiah Senthilathan**

Registered Medical Officer (SLMC), Acupuncturist (MAcF), First Aid & CPR Instructor (Certified in Canada)

**647-801-9252, 416-502-9252**

ஆறு மாணவர்களுக்கு மேல் சேருமிடத்தில், உங்கள் இடத்திற்கு வந்து கற்பிக்கப்படும்.

# Buy & Sell Residential and Commercial Properties



**Raj. A. Rasaratnam** B.Com.

*Sales Representative*

**416-726-8055**

argaccountax@rogers.com

**HomeLife/ GTA Realty Inc.**
Real Estate Brokerage*

1711 McCowan Rd., Suite #206,
Scarborough, ON. M1S 3Y3

Bus: (416) 321-6969
Fax: (416) 321-6963

*Independently own and operated

**$284,900**



Markham & Sheppard
Bedrooms: 3. Type: Condo Townhouse.
Details: Corner unit. Close to TTC, school, library & shopping. Upgraded kitchen, hardwood flooring, underground parking.

**$289,900**



Brimley & Ellesmere
Bedrooms: 2+1. Type: Condo Appartment.
Details: Close to TTC, Town Centre & dining. Granite countertops, Ceramic back splash & Laminate Flooring.

**$429,000**




Highglen & Markham
Bedrooms: 4. Type: Link
Details: Close to YRT/TTC, Elementary & High Schools, Plaza & Park. Hardwood flooring in Living/Dining & Family rooms.

**$524,900**



Markham & 14th Ave.
Bedrooms: 4. Type: Detached.
Details: Close to Schools, Parks, Golf, Hwy 48 and 407. Water sprinkler system, Backyard fenced w/ Cedar Trees & Interlock Driveway.

**$629,900**



Meadowvale & Ellesmere
Bedrooms: 4. Type: Detached.
Details: Close to TTC, Schools, & 401. Bright sunroof, Hwd & Ceramic flooring, Finished basement & Interlock Driveway.

**$449,900**



Morningside & Finch
Bedrooms: 4. Type: Detached.
Details: Close to School, TTC & Shopping Centre. Freshly painted & Ready to move in.

Mortgage arrangement, Business incorporation
and corporate tax preparation

**(416) 726-8055**



# எமக்கென்று ஒரு தனிக்குடில்

சொந்த இல்லத்திற்கு தேவையான அடமானத்தை சுலபமாகப் பெறுவதற்கு பலவருட அனுபவம் பெற்ற முகாமையாளர்களை நாடுங்கள்



**TWO PROFESSIONAL MORTGAGE SPECIALISTS
UNDER ONE ROOF WITH RATES YOU CAN'T BEAT**

**MAILVAGANAM (MIKE) AHILAN**
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
**416-220-1184**

**VINCE SINNADURAI**
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
**416-917-9462**

**416.438.1688**

Fax: 416 438 1612

RBC Financial Group

1421 Kennedy Rd,
Scarborough, ON. M1P 2L6

# “வீடு” வினாவும் விடையும்

தாய் மண்ணில் சிந்திய குருதி உறைவதற்குள், இங்கு பண்டிகை காலம் ஆரம்பித்துவிட்டது. கனடிய சமுதாய ஓட்டத்தில் பங்கேற்றுக்கொண்ட நாமும், மனதுக்குள் துக்கத்தை மூட்டைக்கட்டி வைப்போம் என ஒரு சாரார் தமது நாளாந்த கடப்பாடுகளில் மூழ்கியிருக்க, மறுசாரார் முண்டியடித்துக் கொண்டு பண்டிகை களியாட்டங்களில் மும்முரமாக காணப்படுகின்ற இருவேறு கலாச்சார இனமாக நாம் காணப்படுகின்றறோம். தமிழர்கள் திறைமைசாலிகள் என்பது உண்மை. அத்திறமையினை வெளிக்கொணர்வதற்கு சந்தர்ப்பங்கள் எளிதில் கிடைப்பதில்லை. இது ஓர் குற்றச்சாட்டு அண்மையில் நான் சந்தித்த சாதனைத் தமிழன் கூற்றுப்படி, நாம் நம்மை தனிமைப்படுத்தி நினைப்பதனாலும், உணருவதனாலும் மட்டுமே சந்தர்ப்பங்களை குறைகூறுகிறோம். உலகம் பரந்தது. உழைப்பவனுக்கு உணவும், முயற்சிக்கு பயனும் என்றும் உண்டு. மனித/விலங்கு வாழ்க்கையே இயற்கையுடன் போராடியபடி முயற்சியுடன் கூடிய எதிர் நீச்சல் நினைத்ததை சாதிக்க வைக்கும் என்பதை அன்பான வாசகர்களுக்கு இனிய நத்தார்/புதுவருட வாழ்த்துகளாக சமர்ப்பித்து மார்கழி மாத இதழுக்காகப் பெற்ற வினாக்களை ஆராய்வோம்.

**வீட்டுத் தளபாடம் வாங்குவது ஓர் கலை என்பது யதார்த்த உண்மை. இருக்க, சாப்பாட்டு அறை தளபாடங்களைத் தெரிவு செய்வதற்கு நான் கவனத்தில் கொள்ளவேண்டியவை யாது? ஒரு வீட்டின் அழகிற்கு சாப்பாட்டு அறை தளபாடங்கள் முக்கிய பங்கெடுப்பதாக கூறப்படுவதால், உங்கள் அபிப்பிராயங்களை கூற முடியுமா?**

சந்திரா.பா - Richmondhil

இது ஓர் கொள்வனவுக் காலம். அனேக கடைகளில் ஆங்காங்கே மலிவு விற்பனை பட்டியல்கள் காணக்கூடியதாகவிருக்கும். பண்டைக் காலங்களில் கலைநயம் மற்றும் கைத்திறன் யுகம் என்கின்ற காலம் உண்மையில் இருந்திருக்கின்றது. அக்காலத்தில் கலை அழகு மிளிரும் கைவினைத்திறன் பொருட்கள் சம்பந்தமான பத்திரிகை இதழ்களை படிப்பது ஒரு நாகரிகமாகவும் மற்றும் சிறந்த மனப்போக்காகவும் இருந்து வந்திருக்கின்றது. சாப்பாட்டு நேரம் மற்றும் கைவினைத்திறன் ஆகிய இரண்டையும் மிக முக்கியமான அம்சங்களாக அந்த யுகத்தில் வாழ்ந்த மக்கள் உண்மையில் கருதி வந்தார்கள்.

வெளிப்புறம் வளைந்து கால்களுடன் கூடிய கலை அழகு மற்றும் கைவினைத்திறன் மேசை ஒரு புராதன கலையுடன் மிளிர்கிறது. அதன் அடிப்பகுதியில் tile அல்லது Granite காணப்படும். அது மாத்திரமின்றி தனித்தனியே நான்கு கால்களைக்கொண்ட ARIINGTON மர மேசையும் அதன் மேற்பகுதி ஒரு படகு வடிவில் இருக்கும். திடமான அடிப்பகுதி கொண்டிருக்கும் கைவேலைத்திறன் மிகுந்த Mission மேசைகள் இன்னொரு புராதனகலை வடிவமைப்பு உங்கள் உணவு அறையானது மிதமுள்ள அழகு எழிலுடன் இருக்கவேண்டும் என்று விரும்பினால் பார்ப்பதற்கு எளிமையான இதுபோன்ற மரமேசைகளை வாங்கலாம்.

தளபாடங்கள் வாங்கும் வேளைகளில் அவற்றின் உற்பத்தியாளர், தரம், விலை மற்றும் தூக்கிச் செல்லும் வசதி ஆகியவற்றின் பண்புக்கூறுகளை ஆராய்வது நன்று பலர் விரும்பி வாங்கிய தளபாடங்கள் பின்னர் வீட்டுக்குள் எடுத்துச்செல்ல இயலாமல் போன சந்தர்ப்பங்கள் நிறையவேயுண்டு.

வீட்டுத் தளபாடங்களில், சாப்பாட்டு அறைத் தளபாடங்கள் சற்று விலை உயர்ந்து காணப்படுவதால் அதன் தரத்திற்காக கொடுக்கப்படும் உத்தரவாதம் மிகவும் அவசியம். ஆகவே நம்பிக்கைக்குரிய வியாபார நிறுவனங்களை தெரிவுசெய்வதும் நன்று. சரியான அளவுள்ள மற்றும் பொருத்தமான வடிவுள்ள தளபாடத்தை தேர்ந்தெடுத்து மறுபரிசீலனை செய்யுங்கள். உங்கள் வீட்டிற்கு பொருத்தமில்லாத தளபாடங்களை வாங்கி விடாதீர்கள்.

**எனது வீட்டில் காணப்படும் Furnace சுமார் 25-30 வருடம் பழமை வாய்ந்தது. அண்மையில் அதனை பரிசோதனை செய்தவர், அதனை மாற்றுவதிலும் அதனால் பல நன்மைகள் உண்டு என்றும் கூறுகிறார். அதுமட்டுமன்று அதன் எரிபகுதியில் வெடிப்பு காணப்படுவதாகவும் கூறுகிறார். இக்கூற்றுக்கள் உண்மையா? அல்லது அவரது வியாபார நோக்கமா?**

ரவி.கி. - Ajax

எனது அனுமானத்தில் அவரது கூற்றில் உண்மை இருக்கின்றது. பொதுவாக Furance-களின் வாழ்நாளை 25-30 வருடம் மதிப்பது வழக்கம் அதே வேளை அதன் எரிபகுதியில் வெடிப்பு ஏற்படுவதும் புதுமையான விடயமல்ல. ஓர் சூடேற்றியானது குறைந்த எரிசக்தியினை உபயோகித்து கூடிய பலனை தரவல்லனவாக இருக்கவேண்டும். இதனையே High Efficiancy Furnance என்கிறார்கள். அன்றைய காலங்களில் அவ்வாறான தொழில்நுட்பம் பழக்கத்தில் இல்லை, இருப்பினும் அதனை எவ்வாறு கிரமமாக பராமரிக்கவேண்டும் என்பதனை இலகுவாக அறிந்துகொள்ள முடியும். உதாரணமாக காற்று வடிகட்டிகள் மாற்றுதல், வடி-நீர் அகற்றிகளின் செயன்முறைகள் மற்றும் A/Cஇலிருந்து வடியும் நீர் போன்றவற்றாலும் Furnaceஇன் தொழிற்பாடுகள் பாதிப்படைய சந்தர்ப்பம் உண்டு.

இவ்வாறு உங்கள் நிலையில் எரி உலையை மாற்றுவது நல்லது. நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய அதிக வினைத்திறன் உள்ள, மலிவான, புதிய பல Furnaceகள் இன்று சந்தையிலுள்ளன. வினைத்திறனுக்கேற்ப விலைகளில் வேறுபாடு இருப்பினும், அதிக வினைத்திறன் உள்ள கருவிகள் நாளடைவில், எரிவாயு சேமிப்பில் பயன் தரும் என்பதால் அதனை மாற்றுவது நன்று. அவ்வாறு பணம் செலவிட முடியாதவர்கள் ஒரு மத்திம வினைத்திறனுடைய கருவிகளை மாற்றுவதன் மூலம் பணம் சேமிக்கலாம். எவ்வகை கருவியாயினும் பராமரிப்பு மிக மிக அத்தியாவசியமாகும். கிரமமாக காற்று வடிகட்டிகளை (Air Fiter) மாற்றிக்கொள்வது பொருட்களை அருகே வைக்காது காற்றுப்புக விடுவது மற்றும் காற்று உட்செல்லும் பாதைகளை (Air Intake) திறந்து வைத்தல் மட்டுமன்றி வருடம் ஒரு முறை அங்கீகரிக்கப்பட்டவர்களின் உதவியுடன் Tune-up செய்தலும் நல்ல பலனை தரும். தூர்ந்த காற்று வடிகட்டிகளினால் மாதமொன்றிற்கு 30 டொலர் வரை செலவு அதிகமாக ஏற்படுகின்றது என்பது நிபுணர்களின் கணிப்பு



**கருணா கோபாலபிள்ளை**

- வீடு விற்பனை முகவர் -

கழுவிப் பாவிக்கும் வடிகளை விட சுருக்கு முறையில் அமைக்கப்பட்ட வடிகள் அதிக சேமிப்பை தருவதாக சொல்லப்படுகின்றது.

**நான் வசிக்கும் கொண்டோ தொடர் மாடி கட்டடத்தில் எனது வீட்டில் சுவர்கள் பொருமிக் காணப்படுகின்றது. பல தடவைகள் புதிய பூச்சுக்களினால் திருத்திக்கொண்டாலும், மீண்டும் மீண்டும் அதேமாதிரியாக ஏற்படுகின்றது. அண்மையில் நான் அறிந்ததன் பிரகாரம் பலரின் வீடுகளில் இவ்வாறு காணப்படுகின்றது. இதற்கான காரணம் என்ன? எவ்வாறு நிவர்த்தி செய்யலாம்.**

மோகன்.கே. - Scarborough

சுமார் 1950களின் பிற்பகுதியில் ரொறன்ரோவில் நிர்மானிக்கப்பட்ட பல கட்டடங்களில் இவ்வகை இடையூறுகள் காணப்படுவதாக கூறப்படுவது உண்மை. இப்பிரச்சினை அக் கட்டடத்தின் கட்டுமானத்தின் போது பாவிக்கப்பட்ட முறையற்ற பிளாஸ்ரர் கலவையினாலேயே ஏற்பட்டு வருகின்றது. வீட்டின் உட்புறப் பகுதிகள் அதிகளவு ஈரப்பதனுடன் காணப்படுவதும் இதற்கு ஓர் காரணம். ஈரப்பதன் அதிகரிக்கும் போது இந்நடைமுறை ஊக்கப்படுத்தப்படுகின்றது.

மீண்டும் மீண்டும் ஏற்படாமல் இதனை திருத்தம் செய்வதற்கு ஒரே வழிமுறை, பொருமும் பகுதியை முற்றிலுமாக அகற்றி Durabond 90 அல்லது Sheetrock 90 என்ற கலவையை நீரில் குழைத்து பூசிக் கொள்ளலாம் இப்பசையில் ஏற்படும் இரசாயன மாற்றம் இப் பூச்சை உறுதியாக பிடித்துக்கொள்ள உதவுகின்றது. இதுபற்றிய மேலதிக விபரங்கள், இணையத்தளத்திலோ அன்றி அருகிலுள்ள வீடு சார் வியாபார நிறுவனங்களிலோ பெற்றுக் கொள்ளமுடியும்.

**வீட்டினை விற்பதற்காக தயார்படுத்தும் வேளைகளில், நாமாக செய்யக் கூடிய எளிய முறைகள் எவை?**

யாழினி.க. Scarboroush

Cleanliness... A Great first impression என்று கூறுவார்கள். உங்கள் வீட்டினை வாங்குவதற்காக பார்வையிட வருபவர்களின் கண்ணை கவரும்வகையில் சுத்தப்படுத்துதல் நீங்களாக மேற்கொள்ளக்கூடிய இலகுவான காரியம் அதற்கான சில தரவுகள்.

- ஜன்னல் கண்ணாடிகளை உள்ளும் புறமும் நன்றாக கழுவுங்கள் அதிக வெளிச்சம் வீட்டுக்குள் வர ஏதுவாகும்
- சிலந்தி வலைகள் மற்றும் முலைகளில் காணப்படும் தூசுப் படிமானங்களை அகற்றுங்கள்.
- தண்ணீர் வழங்கிகள் (taps), கண்ணாடிகள் மற்றும்Sinks பளபளப்பாக காணுமாறு சுத்தம்

33ம் பக்கம் பார்க்க...

> **“ நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய அதிக வினைத்திறன் உள்ள, மலிவான, புதிய பல Furnaceகள் இன்று சந்தையிலுள்ளன. வினைத்திறனுக்கேற்ப விலைகளில் வேறுபாடு இருப்பினும், அதிக வினைத்திறன் உள்ள கருவிகள் நாளடைவில், எரிவாயு சேமிப்பில் பயன் தரும் என்பதால் அதனை மாற்றுவது நன்று. ”**


**தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.**

***E-mail:thaiveedu@gmail.com***
***Fax: 416-849-0594***
***Tel: 416-646-3422***







# வீடு வாங்க, விற்க அழையுங்கள்...

## Vasanthy Niranjan

*Real Estate Broker*

**416-845-8272**

**Staines & Finch**



**$425,000**
4+2 Bedroom, 4 Washroom

**Warden & Hwy 7**



**$238,000**
1+21 Bedroom, 1 Washroom

**Markham & 14th**



**$399,000**
3+2 Bedroom, 4 Washroom

**Markham & Steeles**



**$349,900**
3 Bedroom, 3 Washroom

**Hwy 7 & 9th Line**



**$329,900**
3 Bedroom,3 Washroom

**Bur Oak & McCowan**



**$359,000**
3+1 Bedroom, 4 Washroom

**Markham & Denison**



**$279,000**
3 Bedroom, 2 Washroom

**Mccowan & Hwy 7**



**$389,000**
3 Bedroom, 2 Washroom

**Markham & Sheppard**



**$289,000**
3+2 Bedroom, 2 Washroom

**Neilson & Finch**



**$279,900**
3+1 Bedroom, 4 Washroom

HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife Today Realty Ltd.**
Brokerage*
31 Progress Ave. Suite 210
Toronto, ON M1P 4S6

*Independently Owned and Operated, REALTOR



# Buying or Selling Homes

## Selling Commission , As Low As 1%

HOMELIFE
HIGHER STANDARDS

HomeLife Landmark
Realty Inc. Brokerage

**Nada.G.Nadarajah B.V.Sc**
**Sales Representative**

## Call Nada

**Cell: 416 – 616 – 8751**
**Bus: 416 – 293 – 5093**

**Award Winner Since 1996**
**Over 14 Years of Experience**

# Wish you all Merry Christmas And A Happy New Year!




## Keele/Grandravine

Condo Townhouse
3+1 Bedrooms - 3 Washrooms
Finished Basement




## Markham/Nashdene

Multi-Level Industrial Unit
Lower Maintenance
Approx. 1440 Sq. Ft




## Markham/Tapscott

Industrial Condo. Unit
Approx. 800 Sq. Ft
Well-Maintained Complex

# Powder Room


எமது வீடுகளில் சாதாரணமாக முதன்மைத் தளத்தில் (first floor) ஒரு Powder room அமைக்கப்பட்டு இருக்கும். இது பொதுவாக அரை குளியலறை என்று அனைவராலும் அழைக்கப்படும். இதில் ஒரு sinkம் toiletம் மட்டும் காணப்படும். இதைப்பற்றி இப்போ நாம் ஆராய்வதற்குரிய தேவை எங்கிருந்து வந்தது? இது தான் பொதுவான, அனைவருக்கும் தெரிந்த மிகவும் பரிச்சயப்பட்ட Powder room ஆகும். இதை விட இன்னும் ஒரு வித்தியாசமான Powder room ஒன்று உண்டு.


மக்களின் தேவை கருதியும் அனைவரிடையே ஒரு விழிப்புணர்வையும் OAB ( overactive bladder) பற்றிய விளக்கத்தினையும் ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாக உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பு இந்த Powder room ஆகும். பன்னிரண்டு தொடக்கம் பதினெட்டு வீதம் வரையிலான கனடியர்கள் OAB (overactive bladder) பிரச்சனைகளினால் அவதியுறுவதாக ஆய்வுகள் கூறுகின்றன. OAB என்பது கிட்டத்தட்ட ஒரு நோய் போன்றது தான். அதாவது chronic medical condition எனப்படும். இது சிறுநீர்ப்பை நிறைந்து விடாத நிலைமையில் கூட திடீரென சிறுநீர் கழிக்க வேண்டும் போன்ற உணர்வினை (sudden urge to urinate) ஏற்படுத்தக் கூடியது.

இந் நிலமையானது பொதுவாக மனிதர்களிடையே ஒரு தாழ்வு மனப்பான்மை அல்லது வெட்க உணர்வினையும் எதற்கும் பின்னிற்கும் மனப்போக்கையும் உருவாக்கி விடுவதாக ஆய்வுகள் கூறுகின்றன. எனக்குத்தான் இப்படி இருக்கின்றது என்று நினைத்து நாம் வெட்கி அல்லது பின்நின்று விடுகின்றோம். ஆனால் இது ஒரு சாதாரணமான நிகழ்வுதான். கூடுதலாக குழந்தைகள் பெற்ற பெண்களுக்கும் வயது முதிர்ந்தோருக்கும் காணப்பட்ட போதிலும் ஆண்கள், இளம் பெண்கள், உடல் எடை கூடியோர் போன்றோருக்கும் இருப்பதாக மருத்துவ அறிக்கைகள் கூறுகின்றன.

## எவ்வாறு அல்லது எதனால் ஏற்படுகின்றது?

Bladder அதாவது சிறுநீர்ப்பை என்பது எங்கள் சிறுநீரகத் தொகுதியின் ஒரு பகுதியாகும். ஒவ்வொரு தடவையும் நாங்கள் உண்ணும் போதும் நீர் ஆகாரங்களை அருந்தும் போதும் இவை உறிஞ்சப்பட்டு சிறுநீரகத்தினால் வடிகட்டப்பட்டு கழிவுத் திரவங்கள் சிறுநீர்ப்பையில் சேகரிக்கப்படும். இச் சிறுநீர்ப்பையானது நிரம்பும் போது இதனைச் சுற்றியுள்ள தசைகள் சுருங்கி இந் நீரை வெளியேற்றும். இதனை கீழ் வரும் படம் அழகாகக் காட்டுகின்றது.




எங்கள் மூளையும் இந்த தசைகளும் ஒன்றாக இணைந்து தொழிலாற்றுவதாலேயே நாம் சிறுநீர் கழிப்பது முறையாக நடைபெறுகின்றது. சிறுநீர் நிரம்பிவிட்டது உடனே கழிவறைக்குச் செல் என்னும் உணர்வு பிறப்பிக்கப் பட்டு நாம் கழிவறை செல்கின்றோம். கழிவறைக்குச் சென்றபின்னர் எங்கள் மூளையானது சிறுநீர்ப்பையின் தசையான detrusor muscleஇனைச் சுருங்கும்படி செய்தியினை அனுப்பும். அதே நேரத்தில் சிறுநீர்க்குழாயினைச் சுற்றியுள்ள sphincter musclesஇற்கு சிறுநீரை வெளியேற அனுமதிக்குமாறு செய்தி அனுப்பப்படும்.

இச் சாதாரண படிமுறை ஏற்படாது சிலருக்கு சிறுநீர்ப்பை நிரம்பாமலேயே இத் தசைகள் சுருங்குவதுண்டு. இது involuntary contraction எனப்படும். இதுவே overactive bladder என அழைக்கப்படும்.

## overactive bladderஇனை எவ்வாறு இனம் காண்பது?

- மிகவும் வலுவான முறையில் சிறுநீர்கழிக்க வேண்டும் என்னும் உணர்வு ஏற்படல்.
- அடிக்கடி கழிவறை போகவேண்டும் என்னும் உணர்வினை ஏற்படுத்தல்.

இவ்வாறான overactive bladder எதனால் ஏற்படுகின்றது என இதுவரையில் ஆராய்வு அடிப்படையில் முடிவாகக் கூறப்படவில்லை. இருப்பினும் அடிக்கடி ஏற்படும் சிறுநீர் சம்பந்தப்பட்ட தொற்றுக்கள் (Urinary tract infections), சில மருந்துப் பொருட்களின் பக்கவிளைவு (Side effects of medications), அளவுக்கதிகமான உடற்பருமன் (Obesity), பெண்களுக்கு கர்ப்பம் (Pregnancy), Menopause, முள்ளந்தண்டில் ஏற்பட்ட காயத்தினால் நரம்பில் ஏற்பட்ட பாதிப்பு, ஆண்களில் புறொஸ்ரேற் வளர்ச்சி, போன்றவை காரணிகளாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. இப் பிரச்சினையினால் பெரும்பான்மையாக வலி நோவு என்பன இல்லாத போதிலும் அரிதாக மிகச் சிலருக்கு வலி, நோவு இருப்பதுண்டு. Bladder என அழைக்கப்படும் சிறுநீர்ப்பையின் detrusor muscle என்பவை தேவைக்கதிகமாகவே சுருங்குதல் தான் இதற்குக் காரணமாகும். மேற்கூறப்பட்ட காரணங்களினால் இந்த தசைகள் வலுவிழந்து போவதே காரணமாகும்.

பொதுவாக வயது போகும் போது தான் இவ்வாறு ஏற்படும் என எங்களில் பலர் நினைப்பதுண்டு. இதற்கு வயது காரணமல்ல. 13 மில்லியன் வட அமெரிக்கர்களுக்கு இப் பிரச்சினை உண்டு என ஆய்வுகள் கூறுகின்றன. அதிலும் ஆண்களைவிட இரண்டு மடங்கு அதிகமாக பெண்களுக்கு ஏற்படுவதாக சுகாதார பராமரிப்பு ஆய்வு நிறுவனங்கள் கூறுகின்றன. வயது தான் காரணம் என்றில்லாத போதிலும் இப் பிரச்சனை உள்ளவர்களுக்கு வயது கூடிச் செல்லும் போது தாக்கம் அதிகரிப்பதாகக் கூறப்படுகின்றது. 20 -30% வீதமாக இளவயது பெண்களிலும் 30-40% வீதமாக மத்தியதர வயதுப் பெண்களிலும் 50% வயது வந்த பெண்களிலும் இது இருப்பதாக கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இடுப்பறை வளைவினுள் உள்ள தசைகள் (பெல்விக் தசைகள்) வலுவிழந்திருக்கும் பட்சத்தில் அவற்றின் சுருக்க விரிவினால் சிறுநீர்ப்பையிலிருந்து சிறுநீரை வெளியேற்றும் குழாயினைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியாது.


Kegel பயிற்சி இப் பெல்விக் தசைகளை வலுப்படுத்த உதவும். இவ்வாறு இப்பயிற்சியின் மூலம் தசைகள் வலுப்படுமாயின் பின்னர் சிறுநீர் வெளியேற்றத்தினைக் கட்டுப்படுத்துவதில் சிறுநீர்ப்பையிற்கு சிரமம் கிடையாது.


## இந்த OABயினால் ஏற்படும் தீமைகள் அல்லது பாதிப்புகள்

ஒருவருடைய வாழ்க்கைத் தரம், நாளாந்த குறையும். அத்துடன் caffeine உள்ள உணவு அல்லது பான வகைகளினை தவிர்த்துக் கொள்வது மிகவும் உதவி செய்யும். ஆனால் Kegel exercise எனப்படும் ஒருவகை உடற்பயிற்சி உண்டு. இந்த Kegel exercise (இந்த உடற்பயிற்சியினைக் கண்டுபிடித்தவரது பெயர் கொண்டே வழங்கப் படுகின்றது.) Pelvic musclesஇனையும் சிறுநீர்ப் பையினையும் வலுப்படுத்துவதற்கு செய்யப்படும் ஒரு வித உடற்பயிற்சி. இவ்வாறு இவை வலுப்பெறுவதால் தசைகள் சுருங்கி சிறுநீர்ப்பையிலிருந்து தன்னிச்சைப்படி வெளியேறுவது அல்லது சிறுநீர் கழிக்க அவசரமாகப் போகவேண்டும் செயற்பாடுகள், சமுதாயதில் மற்றவர்களுடன் பழகுதல் அல்லது பொது இடங்களுக்கு போதல் என்பவற்றினைக் கட்டுப்படுத்தல், மன அழுத்த அதிகரிப்பு, பயம், நித்திரைக் குழப்பம், சிறுநீரகத் தொற்று, தோலில் அரிப்பு போன்றவை இதன்காரணமாக ஏற்படும். மேலும் இது வேறு பல நோய்களுக்கு வித்தாக அமைந்துவிடுவதோடு மட்டுமல்லாது தூர இடங்களுக்குச் செல்லும் போதும் அடிக்கடி வாகனத்தை நிற்பாட்டி மலசல கூடம் தேட-


சிவாஜினி பாலராஜன்

| Weak pelvic muscles | Pelvic muscles strengthened with Kegel exercises |
|---|---|
| Pelvic muscle contractions are unable to completely constrict the urethra, which may allow urine to leak from the bladder | Pelvic muscle contractions are strong enough to completely close the urethra, thus urine is successfully held in the bladder |




வைத்தல் போன்ற பலவிதமான அசௌகரியங்களினைத் தோற்றுவித்து விடுகின்றது.

## எவ்வாறு நிவர்த்தி செய்யலாம்

வாழ்க்கை முறை அல்லது பழக்க வழக்கங்களில் மாற்றங்கள் ஏற்படுத்த வேண்டும். அதில் முக்கியமானது Bladder retraining. இந்த Bladder retraining பெண்களுக்கு மிகவும் பரிச்சியமானது. எங்கள் பிள்ளைகள் மிகவும் சிறிதாக இருக்கும் போது நாங்கள் பிள்ளைகளுக்கு நேரம் கணித்து Potty training கொடுப்பது போல் நாங்களும் சிறுநீர் கழிப்பதற்கு ஒரு அட்டவணை போட்டு குறிப்பிட்ட நேரத்திற்குப் போகப் பழக்கிக்கொண்டால் மிகவும் சுலபமாக இருக்கும். Bladder retraining இனால் முழுவதுமாக மாற்றிவிடலாம் என நினைத்துவிடக் கூடாது மாறாக கட்டுப்படுத்தி விடலாம். இதன் மூலம் பல அசௌகரியங்கள் போல் இருக்கும் உணர்வு குறைந்து விடும். இந்த உடற்பயிற்சி எவ்வாறு செய்வது என அறிய விரும்புபவர்கள் இவ் இணையத்தளத்தில் பார்த்து அறிந்து கொள்ளலாம். http://www.powderroom.ca.

மேற்கூறப்பட்ட இரண்டு வகையான முயற்சிகளும் கைகூடாத வகையில் வைத்தியர்கள் சில மாத்திரைகளை வழங்குவார்கள். இம் மாத்திரைகள் அசாதாரணமான சிறுநீர்ப்பைச் சுருக்கத்தைக் கட்டுப்படுத்தும். இருந்த போதிலும் அவற்றிற்கு சிறு சிறு பக்க விளைவுகளும் உண்டு.

PrDetrol™ (tolterodine L-tartrate immediate release tablets), PrDetrol™ LA (tolterodine L-tartrate extended release capsules), PrDitropan® XL (oxybutynin chloride extended release tablets) போன்ற மாத்திரைகள் வழங்கப்படும். பொதுவாக இவற்றின் dosage வித்தியாசப்படும். மேலும் முக்கியமாகச் சொன்னால் இவற்றிற்குரிய பக்கவிளைவு வாய் வரண்டு போதல். மிகச் சிலருக்கு வயிற்றுவலி, நெஞ்செரிதல் என்பன உண்டாகும்.

இவை சிறுநீர்ப்பையின் தசைகளைக் கட்டுப்பாட்டில் வைக்கக் கூடியவை. இதற்கும் சரிப்பட்டு வராத நோயாளிகளுக்கு sacral nerve stimulation என்னும் ஒருவகை அணுகுமுறை கையாளப்படும். இதில் ஒரு neurostimulator deviceஆனது detrusor muscleஇற்கு அருகாமையிலுள்ள தோலினுட் செலுத்தப்படும். இந்த உபகரணம் கிட்டத்தட்ட 10 வருடங்களுக்கு தொழிற்படக் கூடியதாகும்.

Powder room என்பது இணையவழிச் சமுகம். இதில் நீங்கள் உங்கள் overactive bladder பிரச்சினைகள் பற்றிய கேள்விகள் கேட்கலாம், கலந்துரையாடலாம், உங்கள் சந்தேகங்களை தீர்த்துக் கொள்ளலாம். மேலும் overactive bladder பிரச்சினையினால் பாதிக்கப்பட்டு தாழ்வு மனப்பான்மை, அல்லது வெட்கப்பட்டு மனம் வருந்திக் கொண்டிருப்பவர்களுக்கு இது ஒரு நல்ல இடமாக அமைவதாகக் கொள்ளலாம். இதற்கு தனியாக ஒரு இணைய முகவரி உண்டு, www.powderroom.ca. இதில் சென்று பார்த்தால் எத்தனைபேர் overactive bladder பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பது மட்டுமன்றி எவ்வாறு இந்தப் பிரச்சினையினைக் கையாளலாம் என்பது பற்றிய விபரங்களையும் அறிந்துகொள்ளலாம்.

sivagini.bala@thaiveedu.com


■ ■ ■

## அழகிய பூஞ்செடிகள்

# சமாதான லில்லி

# (Peace Lily Spathiphyllum)

வீட்டுத் தோட்டம் - 22



செல்லையா சந்திரசேகரி

### தாவரங்கள் மூலம் காற்றோட்டத்தைச் சுத்தமாக்குவோம்.

மனிதன் பல நூற்றுக்கும் மேலான ஆண்டுகள் பரிணாம விருத்தியினூடாக வந்தவேளை எத்தனை எத்தனை தாவரங்கள் அவனைச் சூழ்ந்திருந்தன. எமது வாழும் சூழலினதும் வாழ்க்கை முறைகளினதும் அண்மைக் காலங்களின் திடீர் திடீரான மாற்றங்கள் எம்மை ஆபத்தான பாதைக்குத் தள்ளப்படுவதை அவதானித்து வருகின்றோம். இருந்த போதிலும் எமது உடலின் மரபுப் பண்புகள் சார்பான இதுபோன்ற மாற்றங்களில் விகிதாசார வீதமாக விளைவுகள் ஏற்பட்டனவா? இல்லையென்றே கூறவேண்டும். நாம் வாழுகின்ற உட்புற வீட்டுச் சூழல் வெளிப்புறத்திலும் பார்க்க, ஐந்திலிருந்து பத்துமுறை கூடுதலாக மாசுபடுத்தப்பட்டிருத்தல் உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டிருக்கிறது (1994 CSIROவின் மீள்பார்வை). இக்கருத்தினை நீண்டநாட்களாக என்னுள்ளே சிந்தித்துப் உணரும்போது, நான் சில உண்மைகளைத் தெரிந்துகொண்டேன். சிலசமயம், ஜன்னலை நாம் திறக்க சூரிய ஒளி உள்ளே வரும்போது தூசின் துகள்கள் எப்படிக் காணப்படுகிறது என்பது புலனாகிறது. அதனாலே, தொடராக யான் எழுதும் பூச்செடிகளின் புதிர்களோடு எனது கருத்துக்களை இம்முறை இணைக்கலாமென்பதை நினைத்தேன். அது பொருத்தமாக இருக்கின்றது.

எல்லோரும் முகர்ந்து, ஊர்ந்து, நகர்ந்து அறிந்து, இன்று எடுத்துக் காட்டப்படும் சமாதான லில்லியினை, நீங்கள் வளர்ப்பதிலும் கவனம் செலுத்தி பயன்பெற வேண்டுமென்பதுதான் எனது குறிக்கோள்.

"வீட்டினுள்ளே சாடிகளில் வளர்க்கும் சில செடிகள் உட்புறமுள்ள காற்றின் தன்மையை வெகுவாக சுத்தப்படுத்துகின்றன. அதேவேளை வாழுகின்ற எம்மையும் தூய்மைப்படுத்துகின்றன". "Brings a breath of fresh air, clean & purifies our indoor air by removing toxins in the natural way"

### அறிமுகம்:

சமாதானலில்லி (Spathiphyllum), அதிமுக்கியம் வாய்ந்த ஒரு வீட்டுச் செடியாக வளர்க்கப்படுகின்றது. இதன் குடும்பம் ஆரசியேயைச் (Family Araceae) சேர்ந்தது; இதன் வர்க்கம் (genus) ஸ்பதிபில்லம்; இனம் (species) கிளெவெலாண்டி ஆகும்.

முதலில் நன்கு செடியினைப் பாருங்கள். வளர்க்குமிடத்திலிருந்து நாற்றை வாங்கி, தகுந்த சட்டிகளில் எப்படி மாற்ற வேண்டும் என்பதையும் கவனித்துச் செய்யுங்கள். பலன் உங்களை விரைவில் சேரும்.





### விற்பனை நிலையங்களில் தாவரங்களைத் தெரிவு செய்வது சுலபமா?

நல்ல ஆரோக்கியமான தாவரங்களைத் தெரிவு செய்து, வீடுகளினுள் சாடியில் நட்டு வளர்ப்பதால் ஓர் ஆரோக்கியமான சூழலை எல்லோரும் உங்கள் வீட்டில் ஏற்படுத்த முடியும். நன்கு பராமரிக்கப்பட்ட செடிகளைத் தெரிவுசெய்வது ஓரளவு கஷ்டமாக இருக்கும். விற்பனை நிலையங்களில் ஓரினமான தாவரங்கள் வைத்திருக்கும் பகுதியில் சில தாவரங்கள் குளிர்ச்சியற்றதாகக் காணப்படின், அங்கு நீங்கள் தெரிவு மேற்கொள்வதைத் தவிர்க்கவேண்டும். நாற்று நிலையத்தில் நல்ல தாவரங்களை முன்னதாகவே சென்று வாங்கிக் கொள்வது நல்லது.

வேர்களை அவதானித்து மேலதிக சுருள்களை நீக்கியும் பழுதான இலைகளை அகற்றியும் செடியினை நடவேண்டும். சாடிகளில் திரும்ப மாற்றும்போது முன்னர் செடியிருந்த அதே நிலையில் அப்போது செடியினை வைத்து சாதாரண ஸ்கொற் உரத்தைச் சேர்க்கலாம். தாவரம் மங்கிய நிறத்தில் இருந்தால் நடும் போது போசாக்கு சிறிது சேர்த்து, பின்னர் இதன் வளர்ச்சியை நன்கு அவதானிக்கவும். ஆரம்பத்தில் சிறிது நீர் விடவும். அப்போது உள்ளேயுள்ள காற்றுக் குமிழ்கள் நீங்கிவிடும். சில வாரங்களுக்குப் பின்னர் திரும்பவும் பசளை போடலாம். செடியை மாற்றும்போது பிரித்தும் தனித்தனியே வெவ்வேறு சாடிகளில் வளர்க்க முடியும். கூரான கத்தியினால் வேரடியிலிருந்து தண்டுவரை வெட்டி வேறாக்க வேண்டும். ஒரு வருடத்தில் பெருமிடத்தையே பச்சை இலைகள் நிரப்பிவிடும்.

### செடிக்குத் தேவையானவை:

அதிசயப்படக்கூடிய சமாதான லில்லி இன்றைய நாட்களில் ஓர் விருப்பமான வீட்டுச் செடியாக அமைகின்றது. இதில் என்ன சந்தேகம். இது உண்மையில், சாடிகளில் வைத்து வீட்டினுள்ளே வளர்க்கும் செடிகளில், குறைந்தளவில் பராமரிக்கப்பட்டு மிகையான அழகினைக் கொடுக்கும் ஒன்றாக அமைகின்றது. வேண்டிய காலம் குறைந்த அளவு ஒளியோடு அதிகூடிய மினுக்கமுள்ள பச்சை இலைகளையும் அழகிய வெண்மையான பூக்களையும் தந்து, நிலை கொள்ளும் செடியாகும். சமாதான லில்லி பிரகாசமான தூய இயற்கையான ஒளியினை நன்கு நாடுகின்றது. இருந்தும், பொதுவான எல்லா வெப்ப நிலைகளிலும் தன்னைத் தயார்கொண்டு வளர்வதும் இதனது இன்னொரு சிறந்த இயல்பு. வீடுகளிலோ, காரியாலயங்களிலோ காணப்படும் மின்சார ஒளிகளிலும் நன்கு செழிப்பாக வளரக்கூடியது. 20-20-20 எனப்படும் கலவைப் பசளை செறிவு குறைந்ததாக அளிக்கவேண்டும். சீரான ஈரத்தன்மையை விரும்பும். சாடிகளில் வளர்க்கும் செடிகளுக்கு நீர் வடிந்து செல்வதற்கு அடிப்பக்கம் துவாரங்கள் இருக்க வேண்டும். ஒரு கிழமையில் ஒருமுறை நீர் விட்டால் போதும். ஆனால், குறைந்த அளவு ஒளியுள்ள அல்லது குளிரான வெப்பமுள்ள காலங்களில் குறைந்த அளவு நீர் போதுமானது. கூடிய வளர்ச்சியின்போது கூடிய நீர் தேவை. உங்கள் விரலினை மண்ணில் வைத்து ஈரத்தன்மையை அறிந்து நீரை விடவும். குளோறினால் இச்செடி சுலபமாகப் பாதிக்கக்கூடியது. எனவே. நீரினை பரிசோதித்து உபயோகிக்கவும். கூடுதலான நீர் கிடைக்கும்போது, இலைகளின் ஓரங்கள் சுருளும், இலைகள் வாடும்.

### புதுமையான அழகிய பூக்கள்:

வர்க்கத்தின்பெயர் "leaf spathe" (Spathiphyllum), பூவின் பகுதியாக ஒரு பெரிய அல்லது சோடியான பாளை போன்ற மடல்(spade), கொத்தாக நீண்ட தண்டு (spadix) தொலிப்பான

24ம் பக்கம் பார்க்க...




Family: Anacardiaceae

## கசுக்கொட்டை / முந்திரிமரம்

(Botanical name: Anacardium occidentale: Eng.name: Cashew)

முந்திரிமரம் பயனுள்ள ஒரு மரமாகும். பழத்தின் முந்திரிக்கொட்டை எல்லோராலும் விரும்பி உண்ணப்படுவது. பூர்வீகமாக பிரேசிலின் வடகிழக்குப் பகுதியில் காணப்பட்டபோதிலும் இன்று வெப்ப மண்டலங்களான நாடுகள் பலதிலும் வளர்க்கப்படுகின்றன. வியற்னாம், இந்தோனேசியா, நைஜீரியா, இந்தியா, இலங்கை, தென் அமெரிக்கா, போன்ற நாடுகளிலும் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. இந்தியாவில் புதுக்கொட்டை, விழிப்புரம், கடலூர் போன்ற பிரதேசங்களில் பரந்த வெளிகளில் பயிரிடப்படுகின்றன. இலங்கையில் கிழக்கு மாகாணத்தில் கூடுதலாக வளர்க்கின்றனர். மருத்துவ குணம் படைத்த தாவரங்களில் இம் முந்திரிகையும் ஒன்றாகும்.

இது மணற்பாங்கான தரையில் நன்கு வளரும். இலைகள் பெரிதாக இருப்பதாலும் அழகான இளமஞ்சள் நிறமுடைய பூக்கள் காணப்படுவதாலும் முந்திரிமரம் பலரது கவற்சியையும் ஈர்க்கின்றது. முந்திரிக் கொட்டைதான் முழுமையென்பதல்ல. இது பழத்தின் தூங்கும் ஒரு பகுதி. மேலே காணப்படும் பழமான பகுதி முந்திரி அப்பிள் எனப்படும். இது தண்டின் வீங்கிய சதையுள்ள பகுதியாகும். முந்திரிக்கொட்டை அதி சுவையுள்ள பகுதியாகும். மணம், குணம் ஏற்றதாயின் வறுத்தோ, உப்பிட்டோ, இனிப்புச்சேர்த்தோ பசியூட்டிகளாக, பிரதான உண்ணும் கறியாக, பாயாசங்களின் சேர்க்கையாக பொதுவாக ஆசிய முறை உணவுகளில் சேர்க்கப்படும். இதனை ஒரு விற்றமின் குளிசையாகவும் கருதுவார்கள். இதன் கொட்டை உலகின் முதல்தரமான கொட்டை வகைகளில் சேர்க்கப்பட்டுள்ளது. கூடிய சக்தியினைக் கொடுக்கும். உடக்குத் தேவையான நார்ச்சத்து நிறைய உண்டு. கல்லீரலில் கற்கள் தோன்றுவது கட்டுப்படுத்தப்படும். இதில் காணப்படும் இரசாயனப் பொருட்கள் பற்கள் சிதைவதை தடுக்கும்.



# R&S AUTO SALES

HONDA - TOYOTA - GM MINI VANS ON THE SPOT FINANCING

சிறந்த சேவைக்கான பல விருதுகளைப் பெற்ற வாகன விற்பனை முகவர்

Tel: **416.412.3838**
Fax: 416.412.1174
5310 Finch Ave, Unite 23, Scarborough
between Markham and middlefield

**Radha**





**Ahilan Thanabalasingham**
Sales Representative
**416.617.1767**
Office: 905.471.0002
RE/MAX
Dynasty Realty Inc., Brokerage
Independently owned and operated



**416.200.5470**

ELECTRICAL - PLUMBING & DRAINAGE SERVICES
SANTHA
www.santha.ca
416-200-5470

**சொர்க்கமே என்றாலும் அது சொந்த வீடு போல வருமா...**

**Uthayan Alex Sivasambu** B.Sc. (Hons), M.B.A
Broker

**Ottawa: 613.276.SALE (7253)**
**Toronto: 416.659.SELL (7355)**
alex-sivasambu@coldwellbanker.ca, www.sivasamburealty.com

COLDWELL BANKER



# இலகுவாக மோட்கேஜ்

கடினமான இலக்குகளையும் நாம் இலகுவாக்குவோம்

## Mortgages

- First Time Buyers
- Refinaning
- Renewal
- Self Employed
- Pre-Aproval
- Bankruptcies
- Bad Credit
- Debt Consultant
- Non-verifiable Income
- New immigrant



**We Will**

- Simplify the entire process of mortgage financing
- Save you money and time
- Get you the most competitive rates
- Offer you the widest selection of mortgage options including variable rate, fixed rate, capped variable rate, step, secured lines etc. for all situations including self-employed, no down payment ....
- Counsel you on credit and mortgage qualifications
- Provide maximum flexibility in financing choices
- Assist you every step of the way

**Best Rates**

We can get you a mortgage in most situations regardless of your circumstances. Where traditional financial institutions have given the answer "No", We routinely says "Yes" and gets you a product that suits your needs at an extremely competitive rate.

VERICO TMP

**Siva Ratnasingam**
*Lic: M08002133*
*Brokerage # 11156*
SENIOR MORTGAGE CONSULTANT
*2005,2006,2007,2008 Diamond Award Winner*
**416.520.1214**




புத்தாண்டு வாழ்த்துக்கள்
Happy new year 2010
To all my Friends, Relatives, Clients and Well Wishers,
Over the past 20 years, you all have substantially contributed to my success and growth. You have helped me by several means to develop in my profession. Although I may not have contacted you all personally more frequently than I wanted to, I have always consistently maintained the relationship and served you with utmost care and professionalism.
As always my service to the community wouldn't have been possible without your contribution to my business.
Many of you are my clients and have referred various other clients and I have always helped them with care and concern.
Currently, if you or any of your acquaintances are in need of my services, please contact me at the number or by e-mail. I will only be too glad to help you.
As we approach the end of 2009, we look forward positively for a bright start of another year and I join with my family and wish all of you clients, relatives, friends and well wishers for a "Happy Seasons Greetings and a Prosperous New Year"
Logan Velumailum
416-410-1620
vlogan599@yahoo.com


வீடு வாங்கவும், விற்கவும்.......
$244,900
Birchmount/Ellesmere
2 Bedrooms, 2 Washrooms
Luxury Tridel Building
$299,900
Warden /Finch
3 Bedrooms, 3 Washrooms
Low Maintenance Fee Condo
$444,900
Ajax
4 Bedrooms, 3 Washrooms
2400 Sq Feet As Per Builder's Plan
$329,900
Heartlake/Bovaird
3 Bedrooms, 3 Washrooms
3 Yr New Luxury Freehold home
$197,900
Neilson / Ellesmere
4+2 Bedrooms, 4 Washrooms
Close To Ttc, School, U Of T
$419,900
Markham / Bur Oak
3 Bedrooms, 3 Washrooms
Close To Schools, Go Train
சகல விதமான படிவங்களும் நிரப்பிக் கொடுக்கப்படும்
இரஞ்சன் or செல்வா
416.816.1220
RED CARPET
Royal Realty Ltd., Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED
Real Estate Services
*INDEPENDENTLY OWNED AND OPERATED
RANJAN FRANCIS XAVIER
Sales Representative
Cell: 416.816.1220
Office: 416.284.5555
880 Ellesmere Road. Suite 204, Scarborough, ON.
வளமான வாழ்விற்கு வதிவிடம் வாங்கிட......

# Residential, Commercial & Investments...

**SALE/LEASE OPPORTUNITY**



*Newly Built Plaza. Ready For Occupation*

**Bovaird/Chinguacoucy**

Higher Growth/High Traffic Location.
Signalized Intersection.
Units Available For Sale Or Lease
Call for exclusive uses!

*Looking for a New Real Estate Career...* For Phase I, Phase II & Phase III Residential, Commercial Students

**Free Real Estate Tutoring in Mississauga**

CITYSCAPE
REAL ESTATE LTD, BROKERAGE
25 Watline Avenue, Suite 402, Mississauga, ON


A MEMBER OF
Commercial Division
Toronto Real Estate Board
www.trebcommercial.com
CCIM

**Neel Surendran** CCIM
Broker of record.
**Cell: 416.560.4728**
**Bus: 905-241-2222**
ici@rogers.com



**Kitchen FOOD FAIR**

*Looking for a Convenience Store Franchise Opportunity?*




*New locations coming to Aurora, Ajax, Brampton*

Call now for more info!
**Dir: 416.560.4728**

KEN KIRUPA
KEN KIRUPA
KEN KIRUPA
KEN KIRUPA
KEN KIRUPA
KEN KIRUPA

**Peace on Earth.**

**Happy Holidays!**



Ken Kirupa 416-294-9322

# Buy / Sell Properties

**Eglinton & Cofederation Pkwy**



3 Bedrooms, 3 Washroom
**$329,900**

**Eglinton & Central Pkwy**



3 Bedrooms, 2 Washroom
**$361,900**

**Markham & Brimorton**




3 Bedrooms, 2 Washroom
**$299,800**

**Markham & Lawrence**



3+2 Bedrooms, 2 Washroom
**$299,900**

**McCowan & Denison**



3+2 Bedrooms, 4 Washroom
**$388,888**

**Bur Oak & 9th Line**



3 Bedrooms, 4 Washroom
**$369,000**

HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife Today Realty Ltd.**
**Brokerage***
**Phone : 416-298-3200**
**Cell : 416-903-4663**
31 Progress Ave. Suite 210, Toronto, ON M1P 4S6
*Independently Owned and Operated, REALTOR



**Kirew Kanagasabai**
Broker of Record
Kirewk@yahoo.com

# INSURANCE SERVICE

## Life Insurance



உங்களுக்கு உகந்த காப்புறுதி
சகல காப்புறுதி நிறுவனங்களுடனும்
ஒப்பீடு செய்து தரப்படும்

**Thana Manickavasagar**
*Broker*
**Cell: 416-728-5772**

**மருத்துவப் பரிசோதனையற்ற காப்புறுதி**

**New Low Rates**
**Approved within 48 Hours**

**85 வயத்துக்கு உட்பட்ட யாரும் நிராகரிக்கப்பட மாட்டார்கள்**



Business: 416-290-1200
thana7@gmail.com
www.thana.ca

# நத்தார் விடுமுறைகால விளக்குகள் மின்சாரச் செலவைக் கூட்டுமா?

## வீடும் விடியலும் - 46

வேலா சுப்ரமணியம்
- Certified Home Inspector -



கடந்த மாதத்திற்கு முந்தியமாதக் கட்டுரையில் Smart Meterக்கு எம்மைத் தயார் செய்வது பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். TOU பாவனை தற்போது துரிதப்படுத்தப்படுவதை ஊடகங்கள் வாயிலாக அறியக்கூடியதாக இருக்கின்றனது. உங்கள் பகுதிக்கும் எந்நேரமும் இத்திட்டம் அமுல்படுத்த ஆரம்பிக்கப் படலாம். விழிப்பாயிருந்து உரிய வழிமுறைகளைக் கையாளுங்கள்.

மின்சாரச் செலவைக் கட்டுப்படுத்துவதற்கான மேலும் பல ஆலோசனைகளைக் கூறமுடியும். பின்பற்றுவதும் பலன் பெறுவதும் உங்களைப் பொறுத்தது.

கிறிஸ்மஸ் காலம் அண்மிக்கின்றது. இரவானதும் தெருவெங்கும் அலங்கார விளக்குகள் கண்களைப் பறிக்கின்றன. கடைகளில் வண்ண மின்சார விளக்குகளையும் அலங்கார விளக்குகளையும் வாங்குவதில் மக்கள் அதிக கவனம் செலுத்துவதையும் பார்க்க கூடியதாக உள்ளது. பக்கத்து வீட்டுக்காரர் பல வண்ண நிறங்களில் தமது வெளிப்புற வீட்டை அலங்கார விளக்குகளால் அலங்கரித்து விட்டார். நாமும் கொஞ்சமாவது செய்யவேண்டுமே என்ற ஆதங்கம் ஒருபுறம் இதற்கான மின்சாரச் செலவு அதிகமாக இருக்கப்போகிறதே என்ற ஏக்கம் மறுபுறம் பலருக்கும். எனவே அது பற்றி சிறிது நோக்குவது பொருத்தமானது.

தற்போது வீட்டுக்கு உட்புறத்திலும் வெளிப் புறத்திலும் பாவிக்கக் கூடிய LED Lightகள் பல விதமான வடிவங்களில் பாவனைக்கு வந்துள்ளன. அவற்றைக் கொள்வனவு செய்யும்போது விலை சற்று அதிகமாக இருந்தாலும் காலப் போக்கில் அடையப் போகும் பலன் கணிசமான அளவாக இருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை. சாதாரண விளக்குகளோடு ஒப்பிடுகையில் LED விளக்குகள் 95% குறைந்தளவு மின்சாரத்தை நுகரக் கூடியவை மட்டுமன்று, பல மடங்குகாலம் நின்று நீடிக்கக் கூடியவை என்பதையும் மனதிற்கொள்ளவேண்டும். எனவே இவற்றை வாங்குகின்றபோது பெட்டிகளில் LED என்ற அடையாளம் இருக்கின்றதா? என்று பார்த்து கொள்வனவு செய்தல் மிக அவசியமானது. வீட்டில் இருக்கும் பழைய கிறிஸ்மஸ் விளக்குகள், வெளிப்புற விளக்குகள் என்பவற்றை பாவிப்பதை நிறுத்தி புதிய LED விளக்குகள் வாங்குவதில் கூடதப்பு இல்லை. காலப்போக்கில் அது இலாபகர மாகவே இருக்கும்.

பொதுவாக கிறிஸ்மஸ் புதுவருட காலங்களில் மின்சாரப் பாவனை அதிகமாக இருப்பது பொதுவானது - தவிர்க்க முடியாதது. ஆனால் அவற்றுக்கான செலவைக் கட்டுப்படுத்த மேலும் பல வழிகள் உள்ளன. இவற்றுள் Timers முக்கிய இடத்தை வகிக்கின்றன.

வெளிப்புற விளக்குகளைப் போடுவதும் நிறுத்துவதும் என்பது சிலருக்குப் பலத்த சுமையாக இருக்கின்றது. பலர் இவற்றை நிறுத்த மறந்து விடுவதால் விடிய விடிய வீட்டைச்சுற்றி வண்ண விளக்குகள் எரிந்து கொண்டே இருக்கும். காலையில் வேலைக்குப் போகும் போதே அவற்றைக் கண்டு நிறுத்துவதும் உண்டு. இந்த இடர்ப்பாடுகளில் இருந்து விடுபட வெளிப்புறத்திற்குரிய Timersஐ பாவிப்பது மிகச் சிறந்த வழி. அவை தானாகவே குறிப்பிடப் பட்ட நேரத்திற்கு On ஆகிப் பின்னர் குறிப்பிட்ட நேரத்திற்கு Off ஆகி விடுவது எமது சுமையை நீக்க உதவுகின்றன அல்லவா? இரவு 6 மணியில் இருந்து அடுத்த நாள் காலை நாம் கண்டு நிறுத்தும் வரை விளக்குகள் எரிவதை விட மாலை 6 மணி தொடக்கம் இரவு 10-11 மணிவரை எரிவது எவ்வளவு இலாபகரமானது என்பதை நான் மேலும் விளக்கமாகச் சொல்லவேண்டியதில்லை.



Out door Timers


Out door Timers




Indoor Timers


Led Lights






வெளிப்புறத்திற்கு மட்டுமன்றி வீட்டின் உட்புறப் பாவனைக்கும் பல வித வடிவங்களில் Timersகள் விற்பனை செய்யப்படுகின்றன.

பொதுவாக Timers 24 மணித்தியாலச் சுழற்சி முறையைக் கொண்டவை தினமும் குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு On ஆகி குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு Off ஆகும் விதத்தில் இவை தொழிற்படுவதால் வீட்டின் உட்பகுதியில் உள்ள அலங்கார விளக்குகள் மட்டுமன்றி மேசை விளக்குகள், இதர மின்சார உபகரணங்களுக்கும் இவற்றைப் பாவிக்க முடியும்.

### மின்குமிழ்கள்

வீட்டு உரிமையாளர் தமது வீட்டில் பொருத்தப்பட்டிருக்கும் மின்விளக்குகளை சற்று கூர்ந்து கவனித்து எடுக்கும் சில நடவடிக்கைகள் மூலம் அதிகளவு மின்சாரத்தைச் சேமிக்க வாய்ப்பு இருக்கிறது. ஒரு சராசரி வீட்டில் ஏறத்தாழ 40 மின்விளக்குகள் பொருத்தப்பட்டிருக்கும். அவற்றுள் பலவற்றை சாதாரண மின் குமிழ்களுக்குப் பதிலாக, COMPACT FLUORESCENT LAMP (CFL)க்கு மாற்றுவதன் மூலம் 85% மின்சாரத்தைச் சேமிக்க முடியும். அதாவது 15 watt சக்தியுள்ள CFL குமிழ்கள் 100 watts சக்தியுள்ள வெளிச்சத்தைத் தர வல்லன. வீட்டில் அதிகளவு பாவனையிலுள்ள மின் குமிழ்கள் யாவற்றையும் CFL குமிழ்களுக்கு மாற்றுவது மிக இலாபகரமானது. CFL குமிழ்கள் பல்வேறு வடிவங்களிலும், பல்வேறு அளவுகளிலும், மலிவான விலையிலும் பாவனைக்கு வந்துள்ளன. சிறிதளவு முதலீடு செய்தாலும் காலப் போக்கில் அதிகளவு பணத்தைச் சேமிக்க வாய்ப்பு உள்ளது.

சில மாதிரி CFL படங்கள் தகவ லுக்காக இங்கு தரப்படுகின்றன.

**பின்வரும் வகையான CFL மின் குமிழ்கள் சந்தைப்படுத்தப் படுகின்றன**

- Pot lights.
- Three way lights.
- Ceiling lights and lamps.
- Dimmable lights.
- Out door lights and flood lights.

வீடு நிறைய Pot Loghtகளைப் போட்டுவிட்டு அதற்கு CFL குமிழ்களை வாங்க முடியவில்லையே என்று ஏங்கிக் கொண்டிருக்கும் புதிய வீட்டு உரிமையாளருக்கும் விமோசனம் வந்து விட்டது. அவற்றுக்குரிய CFL குமிழ்களும் விற்பனைக்குப் பல்வேறு தரத்தில் வந்தவிட்டன. விலை சற்று அதிகமானாலும் காலப்போக்கில் இலாபகரமாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

**குறிப்பு:** ஏற்கனவே Dimmer போடப்பட்டிருந்தால் அத்தகைய பொருத்துக்களுக்கு CFL குமிழ்கள்களை மாற்றக்கூடாது. அவ்வாறு மாற்றினாலும் Dimmerன் தொழில் நுட்பத்தைப் பாவிக்காது அவற்றை முழு அளவுக்கும் (Full) விடுதல் வேண்டும். தவறும் பட்சத்தில் அத்தகைய Dimmer Switchகள் அல்லது CFL குமிழ்கள் அல்லது பொருத்துக்கள் எரிந்துவிடும் சந்தர்ப்பம் இருக்கின்றது என்பதைக் கவனித்திற் கொள்ளவும்.

velasubramaniam@thaiveedu.com

■ ■ ■



Want To Buy A Home In Your Budget?

உங்கள் நன்மைக்காக செயற்படுபவரை நாடுங்கள்





Finch/Don Mills



McCowan/Buroak

**Manga Arunasalam**
Real Estate Broker
Commercial & Residential

**HomeLife Landmark Realty Inc. Brokerage**
Independently Owned & Operated
5200 Finch Avenue East, Suite 206
Scarborough, ON M1S 4Z4



Near University of Toronto and Ryerson
Available Immediately Starting
From 231,000

NEW PROJECT
In Scarborough Near 401 For More Information CALL The Number Below

**CELL: 416-816-8775 ◊ TEL: 416-293-5093**
**RES: 905-944-9604 ◊ FAX: 416-293-5237**

மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்...

வீடு வாங்கவும் விற்க்கவும்
குறைந்த வட்டி விகிதத்தில்
மோட்கேஜ் ஒழுங்கு செய்வதற்கும்
அழையுங்கள்

**Ravi. Paramu**
Broker
**Direct: 416-262-4176**

"The best compliment you can give me is the referral of your family and friends"
Thank you for your trust

CONVENIENCE/VARIETY
$95,000
Plus Stock
IN OSHAWA

$306.900



Middlefield/Steeles
3+1 Bedrooms
2 WashroomFinished
W/o Basement

$619,300



**Mccowan/16th**
4+2 Bedrooms 4 Washroom



HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210,
Toronto, ON, M1P 4S6

Bus: 416-298-3200

*Independently Owned and Operated, Realtor

## நாம் அழகாய் இருக்க

# ஒப்பனை - Makeup

**தொடர் 04**



**சசி நரேன்**
Cosmetologist & Aestheticia

மேக்கப் (Makeup) என்பது ஒரு கலை. இது அழகு என்ற வார்த்தையில் மிகவும் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. நம்மைப் பார்ப்பவர்கள் முதலில் நம் முகத்தைத்தான் பார்க்கிறார்கள். மேக்கப் என்பது முகத்திற்கு மிகவும் அவசியம். முக்கியமாக மேக்கப் தோலுக்கு பாதுகாப்பு அளிக்கிறது. இதைச் செய்யும்போது கூடுதலாக போடக்கூடாது. நம்மை அழகுபடுத்திக்கொண்டிருப்பது தெரியக் கூடாது. தோலின் நிறத்திற்கேற்ப மேக்கப் வேறுபடும். மிகவும் கறுப்பு நிறம்கொண்டவர்கள் லேசான முறையில் அழகுபடுத்திக்கொள்ள வேண்டும். மேக்கப் செய்துகொள்வது சூரிய வெப்பத்திலிருந்து நம்முடைய சருமத்தைப் பாதுகாக்கும். எனவே, எல்லோரும் லேசாக மேக்கப் போட்டுக்கொள்வதில் தவறே இல்லை.

அழகு செய்யும் முன் நாம் கவனிக்கவேண்டிய சில விதிமுறைகள்:

- மிக அழகாக உள்ளவர்கள் முகஅலங்காரம் செய்துகொள்வதால் இன்னும் அவர்களுடைய அழகு அதிகரிக்கிறது.
- சருமத்திற்கு ஒத்துப்போகக்கூடிய முக அலங்காரம் செய்துகொள்ள வேண்டும்.
- எங்களது நிறத்திற்கு ஏற்றவாறு foundationஐத் தெரிவுசெய்ய வேண்டும்.
- அநேகமாக பெண்கள் முகஅலங்காரம் செய்துகொள்ளும்போது காது, பின்கழுத்து, முன் கழுத்து இவைகளைக் கவனித்துச் செய்வதில்லை. அப்படியில்லாமல் கவனமாக இப்பகுதிகளுக்கும் மேக்கப் செய்ய வேண்டும்.
- மேக்கப் பொருட்கள் விலை குறைந்தது, Name brand இல்லாத பொருட்களை வாங்கக்கூடாது. விலை கூடினாலும் மூலப் பொருட்கள் உள்ளவற்றைப் பார்த்து வாங்க வேண்டும்.
- மேக்கப் போடும்போது நெற்றியில் ஆரம்பித்து புருவங்களின் கீழும் கன்னங்களின் கீழும் மூக்கின் ஓரங்களிலும், காது, பின் கழுத்து, முன்கழுத்து என்று கீழ் நோக்கிப் போடவேண்டும். ஏனென்றால் முகத்திலுள்ள முடியின் அமைப்பு கீழ் நோக்கி அமைந்திருக்கும்.
- மேக்கப் பொருட்கள் வாங்கும்போது தயாரித்த திகதியைப் பார்த்து வாங்க வேண்டும். ஏனென்றால பழையதாக இருந்தால் சருமம் பாதிக்கப்படலாம்.
- மேக்கப் பொருட்கள் வாங்கும்போது சிறிய அளவுகளாகவே வாங்க வேண்டும்.
- மேக்கப் பொருட்கள் சூரியவெளிச்சம், மற்றும் தூசி படாமலும், காற்றுள்ள இடத்தில் வைக்கவேண்டும். உதட்டுச் சாயம், கண் மை போன்றவற்றை கவனமாக வைக்க வேண்டும்.
- முடிந்தவரை ஒரே வகை தயாரிப்புகளையே உபயோகிக்க வேண்டும். அடிக்கடி மாற்றக் கூடாது.
- மேக்கப் போடுவதற்கு முன்னர் கைகளைச் சுத்தமாக கழுவ வேண்டும். கண்களுக்கு மை போடும்போது கவனமாக இருக்க வேண்டும்.
- எந்த மேக்கப்பாக இருந்தாலும் இரவு படுக்கப் போகுமுன் கழுவிவிட்டு சருமத்தை துப்புரவாக விடவேண்டும்.
- முக்கியமாக கண் மேக்கப் அதற்கேற்ற லோஷன் போட்டு கவனமாக எடுக்க வேண்டும்.
- மேக்கப்பிற்கு பாவிக்கும் பிரசையும் நல்லதாக வாங்கவேண்டும். பாவித்தவுடன் சவர்க்காரம், 60% அல்கஹோல் போட்டு கழுவி துப்பரவு செய்யவேண்டும்.
- வாசனைத் திரவியங்கள்கூட அழகுச் சாதனங்களின் அடிப்படையில் வருவதால் இதைப் போட்டுக்கொள்வதற்கும் முறைகள் உண்டு. இதை அதிகமாகப் போட்டுக் கொள்ளக் கூடாது. காதின் பின்புறத்தின் கீழ்பாகத்திலும் கைகள் சேருமிடத்திலும் மணிக்கட்டிலும் போட வேண்டும். இந்த இடங்களில் நாடித்துடிப்பு இருப்பதால் அதிகநேரம் வாசனை இருக்கும்.



மேக்கப்பிலும் பல வகை உண்டு. சினிமா மேக்கப், நாடக மேக்கப், ரீவீ மேக்கப், டான்ஸ் மேக்கப், திருமணத்திற்குரிய மேக்கப், காலை மாலை சாதாரண மேக்கப் என்று பல வகை உண்டு. ஒவ்வொரு மேக்கப் செய்வதற்கும் மேக்கப்பிற்கு ஏற்ப நேர வித்தியாசங்கள் உண்டு. எல்லா மேக்கபும் பழகப் பழக விரைவில் செய்துகொள்ளலாம்.

மேக்கப் என்பது ஒரு கலை. ரசித்துச்செய்தால் நன்றாக அமையும்.

sasi.naren@thaiveedu.com

■ ■ ■


# Arajen Beauty Centre



- Make Up
- Hair Style & Hair Care
  - Dying & Highlighting
- Bridal Make Up & Arangetram
- Skin Care (All Kind of Facial)
  - Threading & Waxing
- Skin Treatment
- Nail Art
- Dress Making (Saree & Blouse)
- Permanent Hair Removal
- Pedicure, Manicure
- Mehindi
- Bouquet, Sadainagam
- Cryotherapy
- Micro Dermabrasion

**Beauty Classes**
அழகியல் கலையை கற்க விரும்புகிறீர்களா? எங்களது கலை வகுப்புகளில் இணைந்து கொள்ளுங்கள்

Certificate Courses & Seminars



இப்போது ஆண்களுக்கான சேவைகளும்

## அரஜன் அழகு நிலையம்

2605-A Eglinton Ave. E.,Scarborough, ON M1K 2S2
(இரா சுப்பர் மார்க்கட் மேல் மாடியில்)

**Tel: 416.509.7978**

Web: www.arajenbeauty.ca, E-mail: sasi@arajenbeauty.ca

# வீடு விற்பதற்கான காரணங்கள்

(ஒன்ராரியோ மாகாண வீடு விற்பனைச் சங்கத்தின் வெளியீடான 'How to sell your homes' என்னும் ஆங்கில நூலினை அடிப்படையாக வைத்துத் தொகுத்துத் தரப்படுகிறது.)

## நீங்கள் எப்படி வீட்டை வாங்குபவரை அணுகுவீர்கள்?

'நீங்களே செய்யலாம்' என்பவர்களும் தங்கள் வீட்டை எப்படி சிறப்பாகச் சந்தைப்படுத்துவது என்ற பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளனர். மற்றவர்களிடம் போட்டி போட்டு அவர்களது விளம்பரத்தை விட கவர்ச்சியாக விளம்பரம் செய்ய உங்களால் முடியுமா? எங்கே? எப்போது? எத்தனை தடவை விளம்பரம் செய்வீர்கள்? தொலைபேசியில் விசாரிப்பவர்களுடன் உங்களால் பேசுவதற்குப் பொறுமையும் நேரமும் இருக்கின்றதா? விளம்பரச் செலவை ஏற்றுக்கொள்ள உங்களால் முடியுமா? தொழில் ரீதியான 'விற்பனைக்கு' விளம்பரம் போன்று உங்களால் செய்ய முடியுமா? முகவர்கள் சிறப்பாக விளம்பரம் செய்வதில் வல்லவர்கள். மேலும் 'சேவை' என்ற பெயரில் வீட்டை விற்பவரிடமிருந்து அதற்குரிய செலவைப் பெற்றுக் கொள்கிறார்கள்.

மேலும் ஒரு முகவருடன் இணைந்து செயற்படும் போது, உங்கள் வீட்டு விற்பனை விளம்பரம், அவர்களது பன்முகப்படுத்தப்பட்ட விற்பனை முறையால் பெரிய அளவில் விளம்பரப்படுத்தப்படுகின்றது. Multiple Listing Service என்ற முறையை முகவர்கள் கையாளுகின்றார்கள். MLS முறையில் விற்பனை செய்யும் முகவருடன் இணைவதால் உங்களுடைய வீடு பெரியதொரு விற்பனைச் சந்தையில் நுழைகின்றது. நீங்கள் குறிப்பிட்ட விலையில் உங்கள் வீட்டை வாங்க விரும்புபவரைக் காண்பதும் சுலபம்.

வீடு வாங்குபவரைப் பற்றி இன்னொரு முக்கிய விடயம்: அவர்கள் தனிப்பட்ட ஒரு விற்பனையாளரிடம் பேசத்தயங்குவதுடன் கூச்சப்படவும் செய்வார்கள். அநேகமான வீடு வாங்குவோர் முகவர்களின் MLS முறை விற்பனைப்பற்றி நன்கு அறிவார்கள். அவர்களுடைய அலுவலகத்தில் விற்பனை பற்றிய சகல விபரங்களும் இருக்கும். எனவே இந்த வசதிகளை வீடு வாங்குவோர் தவறவிடமாட்டார்கள்.

**பாகம் - 04**

## உங்கள் வீட்டின் உண்மையான பெறுமதி உங்களுக்குத் தெரியுமா?

உங்கள் வீடு விற்கும் விலையை நிர்ணயிப்பது மிகவும் கடினமான முக்கியமான விடயமாகும். இதற்கு வீட்டுத் சந்தை பற்றிய அறிவும், பயிற்சியும், நவீன விற்பனை பற்றிய செயல் திட்டங்களும் ஒருவருக்கு கைகொடுக்கின்றது.

> “ வீடு விற்பனை வித்தியாசமானது.
> சரியான கேள்விகளும் பதில்களும் அவசியம்.
> வீடு வாங்க விரும்புவோரின் விரும்பம்
> எது என்பதை சரியாக தெரிந்துகொண்டு
> அவர்களுடன் பேசவேண்டும்.
> இல்லையேனில்,
> உங்கள் பேரம் வெற்றி பெறாது. ”

நீங்களே செய்யலாம் என்னும் முறை இங்கு சரியாக வராது.

உங்கள் வீட்டின் விலையை நீங்கள் அதிகரித்தால் வீட்டைப் பார்க்காமலே சென்று விடுவார்கள். முகவருடைய முக்கிய கடமைகளில் ஒன்று, வீடு விற்பவருடனும் வாங்குபவருடனும் பேசி, ஒரு நியாயமான விலையை நிர்ணயிப்பதாகும்.

## வீட்டைப்பற்றிய சகல விபரங்களையும் முன்கூட்டியே அறிந்து கொள்ள விரும்புகின்றீர்களா?

உங்கள் வீட்டை வாங்க விரும்பவர் அதற்கும் தகுதியுடையவரா? அதற்குரிய வசதி அவரிடம் உண்டா? உங்கள் விலை அவருக்கு கட்டும்படியாகுமா? என்ற விபரங்களை அவர் மனம் நோகாது உங்களால் தெரிந்து கொள்ள முடியுமா? இதற்கு எல்லாம் உங்களுக்கு நேரம் உண்டா? முகவர்களின் pre–screening முறையில் வீட்டைச் சும்மா பார்க்க வருபவர்களையும் உண்மையில் வாங்க வருபவர்களையும் நீங்கள் இனங்கண்டு கொள்வது அவசியம். உங்களுடைய முகவர் எப்படிச் செய்ய வேண்டுமென்பதில் வல்லவர். இதனால் பல மணிநேரம் மிகுதிப்படுத்தப்படுவதுடன் தலைவலியும் இராது.

## விற்பதிலும் பேரம் பேசுவதிலும் உங்கள் திறமை எப்படி?

பிற பொருட்களை விற்பதைப்போலன்றி, வீடு விற்பனை வித்தியாசமானது. இதை நீங்கள் செய்யவது மிகக் கடினம். சரியான கேள்விகளும் பதில்களும் அவசியம். வீடு வாங்க விரும்புவோரின் விரும்பம் எது என்பதை சரியாக தெரிந்துகொண்டு அவர்களுடன் பேசவேண்டும். இல்லையேனில், உங்கள் பேரம் வெற்றி பெறாது.



**S.K. பாலேஸ்**
- வீடு விற்பனை முகவர் -

ஒரு அனுபவமிக்க முகவர் உங்கள் பக்கத்தில் இருக்கும்போது உங்களுக்கு எந்தவிதமான சிக்கலான பிரச்சினையும் வராது. சகல வேள்விகளுக்கும் அவர் விளக்கம் கொடுப்பார். உங்களுக்கு எந்தவிதமான பாரமும் இராது.

## உங்களுக்கு தடித்த தோல் உண்டா?

வீட்டை விற்பது என்பது எங்களுடைய பழைய நினைவுகள், கனவுகளையும் விற்பதுபோன்றதாகும். நாம் வசித்தவீட்டை விற்பது எமது வாழ்வில் ஒரு பிரதான மாற்றத்தை ஏற்படுத்தும் அதற்கு நாங்கள் உணர்வுபூர்வமாக தயாராக இருக்கவேண்டும். நீங்கள் வசித்த வீட்டை பற்றி வீடு வாங்குபவர் கூறும் யாவற்றையும் நீங்கள் பொறுத்துக் கொள்ளவேண்டும். அவற்றில் சில உங்களுக்குப் பிடிக்காமலும் இருக்கலாம். அதைப்போல் உங்களுக்கு தனிப்பட்ட முறையில் பிடிக்காதவர்களும் வீடு வங்க வரலாம். இதனால் உங்கள் உணர்வு கொந்தளித்து இருக்கும். மனம் வேதனையில் இருக்கும். ஆகவே உங்களால் சரியாகப் பேரம் பேசமுடியாமல் போகலாம்.

## வீட்டுச் சந்தைச் சட்டத்தைப் பற்றிய அறிவு உங்களுக்கு உண்டா?

பல பத்திரங்களில் நீங்கள் கையொப்பமிட வேண்டி இருக்கும். வாங்குபவர் விரும்பும் மொழியில் மொழிபெயர்க்க வேண்டியிருக்கும். சட்டத்தில் உள்ள நெழிவுசுழிவுகளை உங்கள் முகவர் அறிந்தவர் என்ற முறையில் இந்தப் பிரச்சினைகளை அவர் இலகுவாக சமாளிப்பார். மேலும் அவர் சட்ட வல்லுனருடன் சேர்ந்து உங்கள் உடைமையை பாதுகாக்க சகல நடவடிக்கையையும் எடுப்பார்

(தொடரும்...)

skbales@thaiveedu.com

■ ■ ■

**House for Sale**




**Birchmount & Lawrence**
3+1 Bedrooms, 2 Washrooms

**Canadian Home Appraisals Inc.**
Residential & Commercial Appraisals
CHAI CANADIAN HOME APPRAISALS INC.
**S_K_Bales**
CRA, CAR, MVA, FRI, CRES
Managing Director
Tel: 905-201-0929
Fax: 905-201-8482
www:chainc.ca
email:.chai@chainc.ca



**Why should you choose Ice condos?**

1) Cadillac Fairview and lanterra developments ( reputation builders )
2) The neighborhood ICE is midway between the Air Canada Centre and the Rogers Centre Between them is the Metro Toronto Convention Centre just a short stroll up York Street are the city's finest performing arts venues, including the Four Seasons Centre, Roy Thomson Hall, the St. Lawrence Centre, the Sony Centre for the per forming arts and those two regal ladies of the theatre the Royal Alex and the Princess of Wales
3) Very close to the Union subway with direct connection to Toronto's PATH system.
4) Positive monthly cash flow project
5) 100% rental guarantee program
6) Assignment clause

Please call right away, first come first serve basis

**S .K .Bales,**
CRA, FRI, MVA, CAR, CREA.
VIP REAL ESTATE BROKER IN DOWNTOWN
**416- 801 -3219**

**www.inayam.net**

# HOMELIFE FUTURE REALTY

7 Eastvale Dr #205
Markham, Ontario
L3S 4N8

Office: 905-201-9977
Fax: 905-201-9229

*Wishing you and your family a Wonderful Christmas and a Prosperous New Year!*

*Call me for all your real estate needs.*




**LOKAN SUNDARAM**
*Broker*

*416-450-3984*
*lokan.homelife@gmail.com*

HOMELIFE HIGHER STANDARDS

# முழு நேர வீடு விற்பனை முகவர்




Morningside & Ellesmere
2+1 Bedroom
2 Washrooms




Old Harwood & Kingston
Ajax
3 Bedrooms
3 Washrooms




Mclevin & Neilson
3+1 Bedroom
4 Washrooms




Morningside & Staines
4 Bedrooms
Semi House




McCowan & Denison
4+2 Bedrooms
4 Washrooms
Basement Apt.

Café
FOR SALE
$40,000
647-868-8230

Donmills & Sheppard

## பல வீடுகள் விற்பனைக்கு அழையுங்கள்
## வாரத்தில் ஏழு நாட்களும்

# 416.786.2463

**Punch Sockalingam**
Broker

Century 21
Affiliate Realty Inc. Brokerage *
Tel : 416-290-1200



# THIS SPACE FOR YOUR HOUSE
# I NEED MORE LISTING

# விடுமுறைகால அலங்காரமும் தீ விபத்தும்




இலகுப்பிள்ளை சிறிநாதன்

- வீடு விற்பனை பிரதிநிதி -


### விடுமுறைகால அலங்காரங்கள் மெழுகுவர்த்திகள்

வீடுகளில் ஏற்படும் தீ விபத்துகள் பொதுவாக மிகவும் குறைந்து வருகிறது என்ற போதிலும் கடந்த பத்தாண்டுகளில் மெழுகுவர்த்திகளால் ஏற்பட்ட தீ விபத்துகள் மும்மடங்காகி விட்டது. விடுமுறைகளின் போது அதிலும் முக்கியமாக கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு தினத்தில் தீ விபத்துகள் உச்ச எண்ணிக்கையில் நடைபெறுகின்றன.

### மெழுகுவர்த்தியை கவனமாக கையாளுதல்

- ஒரு நொடிபொழுது கூட, எரிந்து கொண்டிருக்கும் ஒரு மெழுகுவர்த்தியை கவனிப்பாரற்ற நிலையில் விட்டுவிடாதீர்கள்.
- ஒரு மெழுகுவர்த்தியை கொழுத்துவதற்கு முன் அந்த இடத்தில் உள்ள அலங்கார பொருள்கள், திரைச்சீலைகள், காகிதங்கள், செடிகள் மற்றும் fabric துணிகள் உள்ளிட்ட எளிதில் தீப்பிடித்து எரியக்கூடிய அனைத்து பொருள்களையும் மாற்றிவிடுங்கள்.
- மெழுகுவர்த்தி தாங்கிகள் பெரிதாகவும், கனம் உள்ளதாகவும் மற்றும் எளிதில் வீழ்ந்து விடாததாகவும் இருக்க வேண்டும்.
- மொழுகுவர்த்திகளை ஒரு தட்டையான, திடமான, குப்பை கூளங்கள் இல்லாத மேற்பரப்பில் வையுங்கள்.
- மெழுகுவர்த்திகளை ஜன்னல்களில் அல்லது நிலைப்படிகள் போன்ற இடங்களில் வைக்காதீர்கள்.
- எரிந்து கொண்டிருக்கும் மெழுகுவர்த்தியின் அருகில் எளிதில் தீப்பிடித்து எரியக் கூடிய திரவங்களை ஒருபோதும் வைக்கக் கூடாது.
- நீங்கள் படுக்கைக்குச் செல்வதற்கு முன், எரிந்து கொண்டிருக்கும் அனைத்து மெழுகுவர்த்திகளையும் அணைத்து விட்டுச் செல்லுங்கள்.
- வீட்டில் பெரியவர்கள் இல்லாத நேரத்தில் மெழுகுவர்த்திகள், தீப்பெட்டிகள் மற்றும் lighterகள் போன்ற பொருள்களை பாதுகாப்பான இடத்தில் வைத்து பூட்டிவிட்டுச் சொல்ல வேண்டும்.
- உலோகத்திலான மரங்களில் மின்சார lightகளை வைக்ககூடாது.

### கிறிஸ்துமஸ் மரங்கள்.

கிறிஸ்துமஸ் மரங்களால் ஒரு வருடத்திற்கு 400க்கும் மேற்பட்ட வீடுகளில் தீ விபத்துகள் ஏற்படுகின்றன என்று National Safety Council தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. அனேகமான தீ விபத்துகள் lightகள் cord wireகள் மற்றும் plugகள் முதலியவை தீப்பற்றி எரிந்து விடுவதால் தான் ஏற்படுகின்றன என்று National Fire Protection Association குறிப்பிடுகிறது. ஒரு உயிருள்ள மரத்தை விட செயற்கையான மரம் தான் பாதுகாப்பானது. ஏனென்றால் பல புதிய மாடல்கள் தீப்பிடிக்காத வகையை சேர்ந்தவை. நீங்கள் ஒரு உயிருள்ள மரத்தை அலங்கரிக்க விரும்பினால் கீழ்வரும் உபயோகக் குறிப்புகளை கடைப்பிடியுங்கள்.



- ஒரு புத்தம் புதிய பசுமையான செடியை வாங்குங்கள் ஊசிகள் வளையும் தன்மையுடன் இருக்க வேண்டும் கிளைகளிலிருந்து எளிதாக கீழே விழுந்து விடகூடாது.
- ஒரு வலிமையான Stand (தாங்கி)ல் மரத்தை வையுங்கள்.
- Fire Place, Space heater, baseboard heat or electronic appliance போன்ற வெப்பத்தை உற்பத்தி செய்யும் உபகரணங்களிலிருந்து மரத்தை தள்ளி வையுங்கள்.
- அங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பான முத்திரை இடப்பட்ட மின்சார lightகளை மட்டும் பயன்படுத்துங்கள்.
- மரத்திலுள்ள lightகள், socketகள், மற்றும் bulbகள் ஆகியன நல்ல நிலையில் உள்ளதா மற்றும் சரியாக insulation செய்யப்பட்டுள்ளதா என்பதை கவனியுங்கள். தேய்ந்து போன அல்லது உடைந்து போன lightகளை மாற்றி விடுங்கள்.
- ஒவ்வொரு extension cordக்கும் மூன்று set lightகள் பயன்படுத்தப்பட வேண்டும்.
- மரத்தை அலங்காரம் செய்வதற்கு மெழுகுவர்த்திகளை ஒருபோதும் பயன்படுத்த கூடாது.
- விளக்குகள் எரிந்து கொண்டிருக்கும் ஒரு மரத்தை கவனிப்பாரற்ற நிலையில் விட்டு விடாதீர்கள். நீங்கள் வீட்டை விட்டு வெளியே செல்லும் போது அல்லது படுக்கைக்கு செல்வதற்கு முன் மரத்தின் விளக்குகளை அனைத்து விட்டுச் செல்லுங்கள்.
- ஒரு உலர்ந்த மரம் எளிதில் தீப்பிடித்து எரியும் ஆபத்து உள்ளது. இலைகள் கீழே விழத் தொடங்கமுன் மரத்தை எடுத்து சென்று எறிந்துவிடுங்கள். அதை வீட்டிலோ அல்லது வண்டிக் கொட்டகையிலோ வைக்காதீர்கள்.

srinathan.e@thaiveedu.com

■ ■ ■

# ஆரோக்கியமான...

9ம் பக்கத் தொடர்ச்சி...

Mellitus)

மேற்கூறியவற்றை வாசிக்கும் பொழுது வைத்திய உதவி மூலம் அவற்றை எப்படி நீக்கிக் கொள்ளலாம் போன்ற எண்ணங்கள் மனதில் உதயமாகும். இதன் மூலம் ஒவ்வொரு தாயும் தங்கள் கர்ப்ப காலங்களில் வைத்தியரை அணுகி தமது கர்ப்ப நிலைமைகளை ஆராய்ந்து அதன்படி நடந்து நல்ல பிள்ளைகளைப் பெற்றெடுப்பீர்கள் என்பது எனது துணிவாகும்.

சில பெண்களுக்கு ஒவ்வொரு மாதவிடாய்ச் சுற்றின் பொழுதும் வயிற்று நோவு ஏற்படு கின்றது. இது அநேகமாக மணம்முடித்து ஒரு குழந்தைக்குத் தாயாகிய பின்பு நின்று விடுகிறது. அப்படி ஏற்படும் வயிற்று வேதனையை எப்படிக் குறைக்கலாம் என்று கீழே விபரித்துள்ளேன்.

### கர்ப்பப்பைப் பிடிப்பு (Cramps)

கர்ப்பப்பையில் பிடிப்பு அநேகமாக மாதவிடாய் காலங்களில் ஏற்படுவது வழக்கம். மாதவிடாயின் பொழுது கர்ப்பப்பையின் மேம்படுத்தப்பட்ட உட்படையானது சிதைந்து வெளியேறுகின்றது. அவற்றை வெளியேற்று முகமாக கர்ப்பப்பையானது சுருங்கி அதன் உள்ளடக்கத்தை வெளியே தள்ளும். அப்பொழுது மாதவிடாய் ஏற்படும். அநேகமான பெண்களுக்கு வேதனை இருப்பது இல்லை. சில பெண்கள் வேதனையால் மிகவும் அவதிப்படுவார்கள். உடலினால் சுரக்கப்படும் ‘Prostaglandin’ என்ற ஹோமோனின் அளவைப் பொறுத்து வேதனையும் அதிகரிக்கும். கர்ப்பப்பையை அண்டிய பகுதிகளாகிய அடிவயிறு, கீழ்ப்பக்கம் முதுகுப்பகுதி என்பனவற்றில் வேதனை தென்படும். மேலே கூறியது போல் கர்ப்பப்பையின் உட்படை சிதைந்து வெளியேறுவதற்கு ஓரிரு நாட்களுக்கு முன் பாகவே வேதனை ஆரம்பமாகிவிடும். சில சமயங்களில் வாந்தி, தலைவலி, வயிறு ஊதல் என்பனவும் காணப்படலாம்.

உடலின் தேவையான சத்துக்கள் பிரதானமாக விற்றமின் A,B,Cயுடன் தசைச் சுருக்கங்களையும், தசைத்தளர்ச்சிகளையும் ஏற்படுத்தும் கனியுப்புக்களும் பிரதானமாக உணவில் சேர்க்கப்படுதல் வேண்டும். சமபல உணவு உட்கொள்வதன் மூலம் ஓரளவு இவ்வேதனையைக் குறைக்கலாம். எனினும் பின்வரும் கைச்சிகிச்சைகளும் ஓரளவு உதவி செய்யும்.

- அடி வயிற்றுப் பகுதியை சாதுவாக அழுத்தித் தேய்த்து மசாஜ் பண்ணுவதன் மூலம் வேதனையைக் குறைக்கலாம்.
- ஒரு நாற்காலியில் அமர்ந்து இருக்கும் பொழுது இருகால்களின் பாதங்களும் நிலத்தைத் தொடும்படி அமர்ந்து இருக்கவும். முழங்காற் சிரட்டையின் கீழ் விழிம்பில் இருந்து மூன்று விரல்கள் அளவு பாதத்தை நோக்கி அளக்கவும். அதே மட்டத்தில் சரியாகவுள்ள எலும்பின் வெளிப்பக்கமாக உள்ள புள்ளியை விரலினால் நன்கு அழுத்தித் திருகிவிடவும். அதேபோல் இரு கைகளிலும் பெருவிரலிற்கும், சுட்டு விரலிற்கும் இடையே உள்ள தசைப்பகுதியின் நடுவில் மற்ற கையின் சுட்டுவிரலாலும், பெருவிரலாலும் நசுக்கி மசாஜ் செய்து விடவும்.
- ஒத்தனம் கூட இதற்கு உதவி செய்யும்.
- நோய் நீக்க வில்லைகள்.

senthilnathan.kandiah@thaiveedu.com

■ ■ ■

# சமாதான லில்லி...

14ம் பக்கத் தொடர்ச்சி...

வெண்நிறத்தோற்றம், சமாதான லில்லிதானே! ஐயமில்லை. அதிசயப்படக்கூடிய வகையில் பெருமளவு கொள்ளக்கூடிய இடமானது குறைந்த அளவு ஒளியினைப் பெற்று, காற்றுச் சுத்திகரிக்கும் அருமையான தொழிலினையும் செய்கின்றது.

### அற்புதமான செடியின் அபூர்வம் தான் என்ன


- அநேகமானோர் கூடிய நேரத்தினை வீட்டில் கழிக்கின்றனர். இங்கு, குளிரூட்டும் முறைகள், கூடியசக்தியைக் கொடுக்கும் சாதனங்கள், வீட்டின் உட்புற அடைப்புக்களின் பொருள்கள் எல்லாமே காற்றோட்டத்தினைக் கட்டுப்படுத்துகின்றன. எனவே நாம் திரும்பவும் திரும்பவும் அதே காற்றினைச் சுவாசிக்கின்றோம் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.
- சமையலறையில் புகை, எம் உடலில் இருந்து இறந்த தோல் கலன்கள், வளர்ப்பு விலங்குகளின் மயிர்கள், பஞ்சணையின் உதிர்வுகள் மேலும் தூசுகளைத் தூவுகின்றன. எல்லாம் உடல் கேடுகளை விளைவிக்கின்றன.
- இன்றைய கட்டிடப்பொருள்களில் பெரும்பாலானவை செயற்கையானவை. தளபாடங்கள், கணினிகள், மின்சார உபகரணங்கள், கழுவுகின்ற பொருள்கள், அபாயகரமான பதார்த்தங்களை உற்பத்தியாக்கின்றன. மேற்கூறியவை எல்லாம் ஆய்வின் விளைவாகக் சுட்டிக் காட்டப்பட்டுள்ள Sick building syndrome என்ற நோயின் நிலைக்குத் தள்ளப்படுகின்றது.
- பென்சீன் (Benzine) எனப்படும் அதிமுக்கிய பதார்த்தம், எண்ணெய், மை, வர்ணம் தீட்டும் பொருள், பிளாஸ்ரிக், றப்பர் போன்றவற்றில் காணப்படும். இவற்றின் தாக்கம் மனிதனில் மயக்கம், தலைச்சுற்று, மங்கிய பார்வை, தலையிடி போன்றவற்றை ஏற்படுத்தும்.
- நாசா(Nasa) வினால் ஆராயப்பட்டு (clean air study conduction) தெரிவுசெய்யப்பட்ட 10 செடிகளில் சமாதானலில்லியும் ஒன்றாகும். ஆராய்ச்சியின் விளைவாகக் கிடைத்த தகவலின்படி, formaldehyde, benzene, carbon monoxide போன்றவற்றை இச் செடியானது அதிபூரணமாக நீக்கி, Sick building syndrome எனப்படும் நிலையை கட்டுப்படுத்துமென்பதுதான்.

இத்தகைய விளைவுகளைக் குறைப்பதற்கு சுருக்கமான வழியும் பதிலும் இது ஒன்றுதான்! நான் முன்வைக்கும் இயற்கையான வழி இது ஒன்றுதான்! எல்லாவிதக் கறைகளையும் வெற்றிகரமாக நீக்குவதும் இது ஒன்றுதான்! “சமாதான லில்லிகளை” வீடுகளில் வளருங்கள். இவை காற்றைச் சுத்திகரித்து, வாழும் இடங்களை சுபீட்சமாக்கும்.

sekari.s@thaiveedu.com

■ ■ ■


வாழ்க்கை சுவர்க்கமானது இனிய இல்லமொன்றில்...
Elaguppllai (Mike) Srinathan B.Sc
Sales Representative
Dir: 416-276-1225 Off: 905-470-9800
Email: esrinathan@trebnet.com
SOLD
Markham/Ellesmere
$299,900
Detached Bungalow. Bed rooms 3+1, Washroom 2 A Demand Location.Hardwood Floors On The Main Level Separate Entrance To Basement
Markham / Passmore
$319,900
Semi Detached 2 Story, Bed rooms 3, Washrooms 2 Quality Upgrades, Bright Main Floor, Gleaming Hardwood Floor In Living And Din-
Markham & Steeles
$384,900
Semi Detached 2 Story Bed rooms 3+1, Washroom 4 Close To All Amenities, Public School, Grocery, 24 Hr Ttc. Finished Basement
Boxgrove Bypass/14th Ave
$399,900
Link 2 story, Bed rooms 3, Washrooms 3 Marble In Master Bath, Walk-In Closet. Marble In 2nd Washroom
Markham Rd/ Buroak
$399,000
Detached 2 Story Bedrooms 3, Washrooms 3, Gleaming Solid Oak Hardwood Flrs, Stairs And 2nd Flr Hall
Markham Rd. / Highglen Ave.
$429,000
Detached 2 Story, Bedrooms 3+1, Wasroom 4 Finished Basemnet With Separate Entrance, Close To School,Mall & Other Amen-
Highglen/Markham
$429,000
Link 2 Story, Bed rooms 4 Washromss 3 Gorgeous Home In High Demand Area Of Markham, Fully Fenced Backyard.
9th Line & Reeves Way
$429,000
Detached 2 Story, Bed rooms 4 Washrooms 3. Only 2 Years New, Gleaming Dark-Stained Hardwood Floors Thru-Out Main Floor
Morningside/ Stains
$449,900
Detached 2 Story, Bed rooms 4+2, Washrooms 4 High Demand Area Of Scarborough, Freshly Painted, Ready To Move In,
Sheppard/Meadowvale
$449,900
Detached 2 story, Bed rooms 4 Washrooms 4, 4 Yrs New, Approx 2000 Sq Ft, Mattamy Home With Quality Upgrades
9th Line/14th
$459,000
Detached 2 Story, Bedrooms 3, Washrooms 3, Close To 407, Schools, Transit & Shoppping Ctr! Newly Renovated**Hardwood On Main
9th Line & Hoover Park Dr.
$459, 900
Detached 2 Story, Bed rooms 4, Washrooms 3 2 Years New All Brick Detached House, Very Well Maintained Like Brand New.
14th/9th Line
$485,000
Detached 2 Story, Bedrooms 4, Washrooms 4, About 3 Years New, Quality Oak Hardwood, Staircase And Tall Kitchen Cabinets, 9'Ceiling
E.9th/S.14th
$499,900
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 3, Approx 2500 Sq Ft*No Side Walk,Park 4 Cars, Close To Public Transit/Hwy
Mccowan/ 16 Ave
$ 526,000
Detached 2 Story, Bedrooms 3, Washroom 3 Open Concept Kit Breakfast & Family Rm ,Sep Good Size Liv Rm. Balcony In Master Br Face Ravine,
9th Line/14th Avenue
$529,000
Detached 2 story, Bedrooms 4, Washrooms 3,Few Yrs Extra Windows And Stone Work On This Home! Upgrades Include
Markham /14th St.
$569,900
Detached 2 Story, Bedrooms 5+3 Washrooms 4, 4-Car Driveway, No Sidewalk, 2-Car Garage Direct Access, 9' Ceiling
14th/9th
$639,800
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 4, 3060 Sq Ft- Lots Of Upgrades, Direct Access To Garage. Luxury Master Bedroom
Markham/Steeles
$669,000
Detached 2 Story Bed rooms 4+2, Washrooms 4 Many Upgrades Approx3900Sq.Ft 9Ft Ceiling. Dble Door Entry.
Taunton & Salemzie
$349,000
Detached 2 Story Bed rooms 4, Washrooms 3, 2089 Sqft. Clean Open Concept, Close To Schools, Amenities,
Tobram/P.Robertson
$357,000
Detached 2 story. Bed rooms 4, Washrooms 3, Hardwood Floors Close To410,407, Shopping,
Elm Grove & Queen
$799,000
Solid Brick Building With 3 Bedroom Apartment Upstairs And Store.Outstanding Business,Great Opportunity For Investors
Sales of Business
$349,000 For Sale
Sale Of Business Without Property Gas Stations. Branded Gas Station,C-Store Car Wash Available For Lease
RE/MAX
Realtron Realty Inc. Brokerage
Independently Owned and Operated
7800 Woodbine Ave. Penthouse, Markham,ON. L3R 2N7
'I can also assist you with: Mortgage Financing Home Inspection, Real Estate Lawyer'


நலம் நாடுவதும் அதுவே
உங்கள் மாற்றத்தின் மாற்றத்திற்கு என்னை அழையுங்கள்
$ 95,000
Markham & Eglinton
$ 104,900
Markham & Sheppard
$107,900
Eglinton & Rosemount
$119,908
Midland & Lawrence
$120,000
Neilson & Sheppard
$132,000
Tapscott & Mclevin
$137,900
Lawrence & Midland
$154,900
Ellesmere & Morningside
$159,900
Kennedy & Eglinton
$163,800
Meadowale & 401
$165,000
Kingston south & Eglinton
$169,900
Neilson & Sheppard
$203,000
Galloway & Lawrence
$209,000
Manse S & Lawrence
$213,900
Lawrence & Galloway
$229,000
Meadowale & Sheppard
$239,900
Markham & Eglinton
$255,000
Sheppard & Neilson
$310,000
Orton Park & Ellesmere
$325,000
Bellamy & Lawrence
$365,000
Carlton & Mccowan
$415,000
Markham & Buroak
$424,900
9th Line & Buroak
$429,000
Buroak E of Markham
$429,000
9th Line & 407
$432,000
9th Line & 14th Ave
$435,000
9th Line & Hwy 7
$459,000
16th & Markham By Pass
RE/MAX
Call me for a change
RE/MAX
$518,000
16th Ave & Markham
$495,000
Mccowan & Bur Oak
FOR RENT
1 BED ROOM BEASEMENT
2 BED ROOMS BEASEMENT
3 BED ROOMS BEASEMENT
APPARTMENT
Kathir S Kathirgamanathan P. Eng.
Sale Representative
www. kathirsubramaniam.com
Email: kathirhomes@gmail.com
24 Hrs 416 856 6900
Tel: 905 470-9800
Fax: 905 470-7770
www.realtronhomes.com
Realtron Realty Inc., Brokerage
Independently owned and operated
7800 woodbine Ave. PH
Markham ON L3R 2N7

# நகரங்களும் சட்டங்களும்
# (City and by laws)

சொக்கலிங்கம் பிரபாகரன்
- வீடு விற்பனைப் பிரதிநிதி -



உங்கள் தலை விதியை நிர்ணயிப்பது உங்கள் வீடு. அதேபோல் உங்கள் வீட்டின் தலை விதியை நிர்ணயிப்பது அதன் சூழல் ஆகும். ஒவ்வொரு நகரச் சூழலுக்குமான தனியான நகரச் சட்டதிட்டங்கள் தனித்துவமாக உள்ளன. இச்சட்டங்கள் பலதரப்பட்ட காரணங்களுக்காக உருவாக்கப்படுகின்றன. மாநகர அரசால் வகுக்கப்பட்டு நிர்வகிக்கப்படும் இச்சட்டதிட்டங்களுக்கமையவே ஒவ்வொரு நகரத்தினதும் கட்டமைப்புகளும் செயற்பாடுகளும் அமைகின்றன.

Municipal Governmentஇன் திட்டமிடல்களுக்கமைய Councilகள் நகரங்களின் வளர்ச்சி, போக்குவரத்து நெரிசல்களைக் கையாளல், நிலப்பகுதிகளைப் பயனுள்ளதாக்குதல் போன்ற நிர்வாகங்களைக் கையாளுகின்றது. Municipal Planning departmentஇன் திட்டங்களுக்கமைய Councilகள் சட்டதிட்டங்களை வடிவமைக்கின்றன.

எடுத்துக்காட்டாக, Zoning by Law என்னும் சட்டத்தைப் பார்ப்போம். இச்சட்டமானது நகரின் நிலப்பரப்பினை ஆரோக்கியமாக சரியாக மாநகர எல்லைகளுக்குள் (Municipal Boundaries) பயன்படுத்த வலியுறுத்துகின்றது.

புதிதாக வீடு கட்டுபவர்கள் முதலில் நகரத்திடம் அனுமதி கோரி விண்ணப்பிப்பர். அவ்வாறான விண்ணப்பங்களை ஆராய்ந்து City சில நிலங்களில் மட்டும் வீடுகட்ட அனுமதிக்கும். இதே போல் சில இடங்களில் மட்டுமே வர்த்தக நிறுவனங்கள், தொழிற்சாலைகளை கட்ட அனுமதிக்கும். உயர் மாடிக் கட்டிடங்களை கட்டுவதற்கென வேறு சில நிலங்களினை அனுமதிக்கும். அது மட்டுமன்றி, ஒரு கட்டத்தில் நீள, உயர, அகல எல்லைகளைக் கூட City வரையறுக்கின்றது. Cityயானது zoning by law சட்டத்தின் மூலம் தனது நகர நிலத்திட்டமிடலிற்கமைய அனுமதிகளை வழங்கியும் மறுத்தும் சட்டங்களை வரையறுக்கின்றது.

மீள விற்கும் வீடுகளை நீங்கள் வாங்குவதாக இருந்தால் Zoning by law போன்ற இதர சட்டங்களுக்கமைய நீங்கள் வாங்கும் வீடுகள் இருக்கின்றனவா இல்லை, ஏதேனும் சட்டச் சிக்கல்கள் அவற்றுக்கு உள்ளனவா என ஆராய வேண்டும்.

சிலர் தங்கள் வீடுகளை தாம் நினைத்தபடி மாற்றியமைக்கலாம் என எண்ணுவர். குறிப்பாக பலர் வீட்டிற்கு பின்னால் தமது நிலத்தில் தானே என எண்ணி Cityயிடம் Building Permit எடுக்காமல் புனரமைத்துக் கட்டியிருப்பர். நீங்கள் மாற்றங்களைச் செய்தது உங்கள் நிலமேயானாலும் நகரின் சட்ட விதிகளுக்கமைய அனுமதி பெற்றே எத்தகைய மாற்றங்களையும் நீங்கள் செய்யலாம் என்பதை எவரும் மறந்துவிடக்கூடாது. அங்ஙனம் விதிமுறைகளை மீறி மாற்றங்களைச் செய்வோமேயாயின் அவை சட்ட வரம்பு மீறிய தண்டனைக்குரிய அல்லது அபராதம் செலுத்த வேண்டிய குற்றங்களாகக் கருதப்பட்டு தண்டிக்ப்படுவோம் என்பதனை மனதில் நிறுத்த வேண்டும். எடுத்துக் காட்டாக வீட்டிற்கு பின்னால் Deck கட்டுவது அல்லது வீட்டையே நீட்டிக் கட்டுதல் போன்ற அனைத்து வகையான புனரமைப்புக்கும் சட்டப்படியாக Building Permit எடுத்தேயாக வேண்டும் என்பதனை மறந்துவிடக்கூடாது.

வீடுகளை வீட்டு உரிமையாளர்கள் மீள் விற்பனை செய்யும் போது அவர்களிடமிருந்து அதனை வாங்குபவர்கள் இங்ஙனம் சட்டமீறல் மாற்றங்கள் வீட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளனவா என்பதை தமது வழக்கறிஞர் மூலம் கண்டறிய வேண்டும். City நீங்கள் செய்யக்கூடியவற்றிற்கு Permit தந்துவிடும்.

வீடுகளை வாங்கும் போது செய்கின்ற Surveyயில் இத்தகைய விடயங்கள் ஆராயப் படுகின்றன.

நீங்கள் வீடு வாங்கும் பொழுது குறிப்பாக Offer கையளிக்கும் போது அதில் current Survey, or Servey showing all structures on the property to be provided by vendor என offer பத்திரத்தில் உள்ளதா என சரி பார்த்து கையொப்பமிடவும்.

சிலர் "இவை யாவும் title insuranceஇல் Covered" எனக் கூறி சமாளிக்கக் கூடும். அங்ஙனம் முற்று முழுதாக title insuranceஐ நம்பி இருந்துவிடாதீர்கள். ஏனெனில் அது அனைத்து பிரச்சினைகளையும் தீர்க்க மாட்டாது. Title Insurance பொருளாதார ரீதியாக சில பிரச்சினைகளுக்கு காப்புறுதி உத்தரவாதம் அளிக்கின்றது என்பது உண்மை. எனினும் அதனை உங்கள் வீட்டுப்பிரச்சினைகள் யாவற்றிற்கும் பாதுகாப்பாக இருக்கும் என நினைத்தால் அது தவறு. உதாரணமாக வீட்டின் பின் அனுமதியின்றி கட்டப்பட்ட Deck அல்லது additionக்கு காப்புறுதியாக பாவிக்க நினைத்தால் அது சட்ட ரீதியாக அனுமதிக்கப்பட மாட்டாது. சரியான Permits எடுக்காமல் கட்டிய கட்டடங்களுக்கு title insuranceஇல் காப்புறுதி உத்தரவாதம் பெற முடியாது. அங்ஙனம் கட்டப்பட்ட கட்டடத்தை உடைத்தகற்ற சட்டரீதியாக வலியுறுத்தப்படும் இக்கட்டான சட்டச்சிக்கலுள்ள சூழலுக்கு இதனால் முகம் கொடுக்க நேரிடும்.

பதிலாக Surveyஐ ஆராய்ந்து கட்டட வடிவமைப்பானது முழுமையாக Surveyயில் பதியப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்வது அவசியமாகும். அங்ஙனம் Surveyயில் இல்லாத சட்ட மாற்றங்கள் தென்படுமாயின் அவை சட்டரீதியாகத்தான் கட்டப்பட்டுள்ளனவா என ஆராய வேண்டும்.

அங்ஙனம் சிக்கல்கள் தென்பட்டால் அதன் பின் உங்கள் வழக்கறிஞர் உங்களோடு பேசி முடிவெடுத்து உங்களுக்காக வீடு விற்பவரின் வழக்கறிஞரோடு என்ன செய்யவேண்டும் என்பதை பேசி, வீடு விற்பவரை அதற்கேற்றாற் போல் மாற்றங்களைச் செய்ய வைப்பார். இவ்வண்ணம் வீட்டை வாங்கு முன்பாக இவ்வாறான சட்டப்பிரச்சினைகள் எதிலும் மாட்டாதவாறு தெளிவுபடுத்திய பின்னர் Offerஇனை Finalize பண்ணுவார்கள்.

இதேபோன்றே வீடுகளில் சிறு தொழில் செய்பவர்கள் தமது தொழில்களை சட்டரீதியாக அனுமதி பெற்றுச் செய்யாவிடில் அவை வீட்டிற்கே பின் ஆபத்தானதாக மாறிவிடும்.

வீடு வாங்குபவர்கள் ஒரு வீட்டை வாங்கு முன்பாக Municipal zoning departmentக்குச் சென்று zoning by law சட்ட விளக்க விபரக் கோரிக்கையை பெறுவதன் மூலம் நீங்கள் வாழப்போகும் இடத்தின் சூழலில் எத்தகைய Zoning requirements நிலவுகின்றன என அறிய முடியும். குறிப்பாக நீங்கள் வாங்கப்போகவுள்ள வீட்டிற்கான Zoning requirmentsஐ உங்கள் வீடு நிறைவேற்றியுள்ளதா என அறிய முடியும். அது மட்டுமன்றி உங்கள் வீட்டைச் சுற்றிய சூழலில் எவற்றை செய்யலாம் எவற்றை செய்யக்கூடாது போன்றவற்றையும் அறியலாம். உங்கள் வரைபடத்தைப் (Mapஐப்) பார்த்து உங்கள் நகரத்தின் எதிர்காலத்திட்டமிடல்களை ஆராய்ந்து அதற்கமையவும் நகரச் சட்டதிட்டங்களுக்கமையவும் உங்கள் திட்டத்தினை சரியாக பயனுள்ளதாக ஆக்க முடியுமா என்று ஆராய்ந்து திட்டமிடலாம். அத்தோடு Official Plan என்று கேட்டுப் பெறுவதன் மூலம் உங்கள் municipalityயில் உள்ள வீடுகள் கட்டடங்களின் Master Blueprintஐப் பெற முடியும்.

தனியே மாநகரச் சட்டதிட்டங்களை மட்டும் அறிந்திருந்தால் போதாது மாகாண பிரதேச சட்டதிட்டங்களையும் அறிந்திருப்பது அவசியம். ஏனெனில் ஒன்றையொன்று மேவி மாற்றி அமைக்கக்கூடியவையாக சிலசமயங்களில் அவை இருக்கும். உதாரணமாக Clarington பகுதிக்கென தனியான சட்டதிட்டங்கள் உள்ளன. ஆனால், அது Region of Durhamஇன் ஒரு பகுதியாதலால் regionஇன் சட்ட அமலாக்க முடிவுகள் Clarington பகுதியில் உள்ள ஒரு வீட்டு உரிமையாளரைப் பாதிக்கும். எனவே மொத்தத்தில் உங்கள் திட்டங்கள் சார்ந்த வட்டார சட்டதிட்டங்களை அறிந்திருப்பதும் அவசியமாகும்.

**ஒருவேளை Zoning issuesஇல் நீங்கள் மாட்டுப்பட்டு என்ன செய்யலாம் என தடுமாறி தவிக்கின்றவராக இருப்பின் அந்த சிக்கல்களில் இருந்து வெளிவர இதோ சில ஆலோசனைகள்**

பொதுவாக இத்தகைய சிக்கல்கள் சிறிதாக இருப்பின் சிறிய மாற்றங்களோடு தீர்க்கப்படலாம். Variation Minor in Nature என்னும் வகைக்கமைய இப்பிரச்சினை தீர்க்கப்பட முடியும். Local Committee of Adjustmentக்கு ஒரு விண்ணப்பப்படிவத்தை நிரப்பி சிறிய மாற்றங்களை அனுமதிக்குமாறு கோர முடியும். இவ்வாறாக Local Committee of Adjustmentக்கு இத்தகைய மாற்றங்களை அனுமதிக்கும்படி சட்ட அமுலாக்கம் செய்யும் சக்தியுண்டு. எனினும் அவர்களும் மறுத்தால், அதாவது அந்த விண்ணப்பக் கோரிக்கை தோற்றால் அதன்பின் நீங்கள் Ontario Municipal Boardக்கு விண்ணப்பிக்க வேண்டும். குறிப்பாக Local Committeeயிடம் தோற்றால் அல்லது அயலவர்களின் அதிருப்தியுடனான அனுமதி மறுப்பு குற்றச்சாட்டுக்களில் சட்டரீதியான நியாயம் வலுப்பெற்றிருந்தால் Ontario Municipal Boardக்கு apeal பண்ணி வழக்கில் போராட முயல முடியும்.


எது எவ்வாறாயினும் கண் கெட்டபின் சூரிய வெளிச்சம் என்பது போல் வந்தபின் வருந்தாமல் வருமுன்பே சரியாக சட்டதிட்டத்திற்கமைய செயற்பட்டு நடப்பதே நேர்த்தியான நிம்மதியான வழியாகும்.

prabaharan.s@thaiveedu.com

■ ■ ■

**தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.**

*E-mail:thaiveedu@gmail.com*
*Fax: 416-849-0594*
*Tel: 416-646-3422*



# மருத்துவக் கேள்வி பதில்

**இரத்த மூல நோயினால் நான் நீண்ட நாட்களாக அவதியுற்றுக் கொண்டிருக்கின்றேன். இதற்கு மருந்தே இல்லையா டாக்டர்?**

அறிவுடை நம்பி.

நம்பி, நீங்கள் நம்பிக்கை இழக்கவேண்டாம். இதற்கொரு மூலிகை வைத்தியம் சொல்கின்றேன். முயற்சி செய்யுங்கள் அல்லது மூலிகை வைத்தியர் ஒருவரை சென்று சந்தியுங்கள்.

இளம் பிரண்டையை ஒன்றிரண்டாக நறுக்கி, அதனை நெய்விட்டு வதக்கி நன்கு அரைக்கவும். இந்த விழுதை சிறு நெல்லிக்காய் அளவிற்கு உருண்டைகளாகப் பிடித்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும். இதனை காலை மாலை என்று இரு வேளைகளும் சாப்பிட்டு வர ரத்த மூலம் குணமாகும். இந்த உருண்டைகளை அதிக நாட்கள் வைத்திருக்க வேண்டாம். அவ்வப்போது இதனை செய்து சாப்பிடுவதும் நல்லது. ரத்த மூலம் உடனடியாக தீர்வு பெறும்.

**இள வயதில் ஏற்படும் நரைமுடி நிறம் மாற என்ன செய்ய வேண்டும்?**

மணிமேகலை.

தற்போது பெரும்பாலான இளைய தலைமுறைக்கு தலையாய பிரச்சினையே தலை முடிதான். தலை முடி உதிர்வது, இள நரை பொடுகு போன்றவைதான். இவை பெரும்பாலும், சுற்றுச் சூழல் கெட்டிருப்பது மற்றும் பணிச் சுமை காரணமாக ஏற்படுகிறது. இளநரையைப் போக்கும் தன்மை இலந்தை இலைக்கு உண்டு. இதை நன்கு அரைத்து தலையில் தடவி 10 நிமிடங்கள் வரை ஊறவிட்டு தலையை அலசிவர இளநரை மாறும். இள நரை ஏற்பட்டதும் மனம் கலங்கிவிடாமல், உணவில் அதிகமான அளவு கறிவேப்பிலையை சாப்பிட்டு வர வெள்ளை முடிகள் மீண்டும் கருப்பாக மாறும். இலந்தை இலையை நன்கு அரைத்து கட்டிகள், கொப் புளங்களின் மீது வைத்துக் கட்ட அவை சீக்கிரம் பழுத்து உடையும்.

**டாக்டர் எனது மனைவிக்கு கர்ப்பப்பையில் உள்ள சில பிரச்சினைகளால் கருத்தரிக்கவில்லை. இயற்கை மருத்துவத்தில் மூலமாக நல்ல தீர்வு ஒன்று வேண்டுகின்றேன்.**

வி. கே. பிரசாத்.

பல பெண்களுக்கு கருப்பையில் இருக்கும் கோளாறு காரணமாக கரு உருவாவதில் சிக்கல் ஏற்படும். இப்படிப்பட்ட பெண்களுக்கு விஷ்ணு கிரந்தி அதிக பலனளிக்கும். விஷ்ணு கிரந்தியுடன் ஓரிதழ் தாமரை சேர்த்து பால் விட்டு அரைத்துக் கொள்ள வேண்டும். இதனை மாதவிடாய் ஏற்பட்ட முதல் நாள் விடியற்காலையில் பெண்களுக்கு உட்கொள்ள கொடுக்க வேண்டும். இவ்வாறு செய்து வந்தால் கருப்பை பிரச்சினைகள் குணமாகி, குழந்தைப் பேறு அடைவதற்கான வாய்ப்புகள் உண்டாகும். மேலும், விஷ்ணு கிரந்தி செடியை நிழலில் உலர்த்திப் பொடி செய்து வெந்நீருடன் கலந்து உட்கொண்டு வர பெண்களின் மலட்டுத் தன்மை நீங்கும். குழந்தைப் பேறு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கும்.

**டாக்டர் எனது பதினாறு வயது மகளுக்கு முகமெல்லாம் பருக்கள். கிரீம்கள் பல பூசி மனம் தளர்ந்து வெறுத்து இப்பொழுது உங்களிடம் ஆலோசனை கேட்கின்றோம்.**

சுகுணா.

தாய் வீட்டின் வாசகியான தாங்கள் கேட்ட கேள்விக்கு கீழ்கண்ட பதில் நிச்சயம் உதவி செய்யும். முகப்பருவிற்கு பெண்கள் எத்தனையோ வைத்தியம் செய்தும் பலனில்லாமல், வடுக்கள் முகம் முழுவதும் இருந்து கொண்டே இருக்கும். இதனைப் போக்க மிளகை வைத்து கை வைத்தியம் செய்யலாம். அதாவது, மிளகு, சந்தனம், ஜாதிக்காய் ஆகியவற்றை நன்கு அரைத்து முகப்பருவின் மீது பூசி வரவேண்டும். முகப்பரு மீது பூசி அப்படியே காய விட்டு, அது உலர்ந்ததும் குளிர்ந்த நீரில் முகம் கழுவி வர வேண்டும். இப்படியே செய்து வந்தால் பெண்களுக்கு வரும் முகப்பரு மறையும். மேலும், ஏற்கனவே இருக்கும் முகப்பரு வடுக்கள் நாளடைவில் மறைந்து காணமாமல் போகும். இதனை கண்களில் படாமல் வைக்க வேண்டியது மிகவும் அவசியம்.

**டாக்டர், கபம் பித்தம் இரண்டும் அதிகமாகி என்னை பாடாய் படுத்துகின்றது. தீர்வு சொல்லுங்கள். இந்த குளிர் காலத்திற்கு பேருதவியாக இருக்கும்.**

அந்தோணி.

இரண்டு தேக்கரண்டி தேனில் ஒரு தேக்கரண்டி கடுகை அரைத்து தினம் இரண்டு வேளை தொடர்ந்து மூன்று நாட்கள் உட்கொள்ளக் கொடுக்க இருமல், கபம், ஆஸ்துமா குணமாகும்.

**டாக்டர், எனது கால் சுளுக்கிக் கொண்டதால் இரண்டு வாரங்களாக சிரமப்படுகின்றேன். என்ன செய்தால் நான் பழைய படி நன்கு நடக்க முடியும்?**

பத்மினி.

திடீரென்று சுளுக்கு ஏற்பட்டு, அதனால் வீக்கம் மற்றும் வலி ஏற்பட்டால் பிரண்டை நிச்சயமாக உதவும். பிரண்டையை இடித்து, சாறெடுத்து, அதனுடன் சிறிது புளியும், உப்பும் சேர்த்து குழம்பு பதமாக காய்ச்சி, பொறுக்கக் கூடிய சூட்டில் பற்றுப் போட்டு வர இரண்டொரு நாட்களில் குணமாகும். சுளுக்கு மற்றும் அடி பட்ட வீக்கம் குணமாக, பிரண்டை வேரை நிழலில் நன்கு உலர்த்தி பொடியாக்கி, நெய் விட்டு லேசாக வறுத்து 1-2 கிராம் அளவு காலை மாலை ஆகிய இருவேளை உட்கொண்டு வரலாம். பிரண்டை துவையல், பிரண்டை வற்றல் செய்து சாப்பிடலாம். நல்ல பலன் கிட்டும்.

**டாக்டர், நீங்கள் சொன்ன பல குறிப்புகளை நான் பின்பற்றி பலனை அனுபவித்து இருக்கின்றேன். உடல் மெலிய புதிய முறை ஒன்றை சொல்லிக் கொடுக்கிறீர்களாமே?**

அனுஷியா.

இஞ்சி சாற்றை பாலில் கலந்து சாப்பிட வயிறு நோய்கள் தீரும். உடம்பு இளைக்கும்.

**எனக்கு 25 வருடங்களாக கால் ஆணி பிரச்சினை இருக்கின்றது. எனது அப்பாவுக்கும் இந்த சிரமம் இருந்தது. இந்த நோய் எப்படி உருவாகின்றது? தீர்வு என்ன?**

வால்டன் குலரத்தினம்.

கால் ஆணி என்பது அதிகமான உடல் அழுத்தம் காரணமாக உருவாகிறது. அளவு குறைந்த காலணிகளை அணிவது உட்பட பல்வேறு அழுத்தங்களால் கால்களில் ஆணி ஏற்பட்டு, பெரும் துன்பத்தை தருகிறது. இந்த கால் ஆணிகளுக்கு முறையான சிகிச்சை அளிக்கப்படாவிட்டால் அவை பின்னர் காலில் அல்சராக மாறுவதற்கும் வாய்ப்பு உண்டு. பாதத்தில் சிறு கொப்புளங்கள் போல உண்டாவதைத்தான் கால் ஆணி என்று கூறுகிறார்கள். கால் ஆணி உடையவர்களின் செருப்புகளைப் பயன்படுத்தினால் அதைப் பயன்படுத்துபவர்களுக்கும் கால் ஆணி வர வாய்ப்புள்ளது. காலுக்கு பொருந்தாத சிறிய அளவு செருப்புகளைப் பயன்படுத்தவதாலும், வெறும் காலில் நடப்பதாலும் கூட கால் ஆணி ஏற்படும். கால் ஆணி ஏற்பட்டுவிட்டால் அதனை உடனடியாக சரிபடுத்தி விட வேண்டும். இல்லாவிட்டால் கால் முழுவதும் பரவி நடக்க முடியாத நிலைக்குத் தள்ளிவிடும். இதற்கு உரிய மருத்துவம் உள்ளது. கால் ஆணி ஏற்பட்ட உடனேயே பூண்டை நசுக்கி அதன் சாறை காலில் ஆணி இருக்கும் இடங்களில் தடவி வரவும். இரவுப் பொழுதில் பூண்டை நசுக்கி காலில் வைத்து துணியால் கட்டுப்போட்டு விட்டு காலையில் எடுத்துவிடலாம். இது போல ஒரு வாரம் செய்து வந்தால் கால் ஆணி நிவாரணம் கிடைக்கும். மேலும், மல்லிகைச் செடியின் இலையை இடித்து அதன் சாறை எடுத்து பாதத்தில் பத்து போடுங்கள். பாதத்தில் கால் ஆணி மேலும் பரவாமலும், இருந்த இடம் தெரியாமலும் போகும். மஞ்சள் ஒரு துண்டு, வசம்பு ஒரு துண்டு, மருதாணி ஒரு கைப்பிடி அளவு எடுத்து விழுதாய் அரைத்து, கால் ஆணிகள் மீது தொடர்ந்து 21 நாட்கள் வரை பூசிவர, கால் ஆணிகள் அனைத்தும் மறையும்.

**டாக்டர், எனது மகன் கணினி இளங்கலை படிப்பு படிக்கின்றான். அவன் அடிக்கடி கழுத்து வலியால் துன்பப்படும் காரணம் என்னவாக இருக்கும். நீங்கள் சொல்லும் தீர்வு என்ன?**

விஜய நாராயணி.

நீண்ட நேரம் கணினி முன் அமர்ந்திருப்பதால் தீவிர கழுத்து வலியை உருவாக்கும் என்று கண்டறியப்பட்டுள்ளது. அதிலும் பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளும், பதினம வயதினரும் அதுபோன்று அதிக நேரம் கணினி முன் அமர்ந்திருப்பதால், கழுத்து வலிக்கு ஆளாகிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆஸ்திரேலியாவிலும், அதனைத் தொடர்ந்து தென் ஆப்பிரிக்காவிலும் சுமார் 1,073 உயர் நிலைப்பள்ளி மாணவர்களிடம் நடத்தப்பட்ட ஆய்வின்படி அதிக நேரம் கணினியை பயன்படுத்துவதால் இந்த பாதிப்புகள் ஏற்படுவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தொடர்ந்து கணினி முன் உட்காராமல் இடைவெளி கொடுப்பது உகந்தது. மசாஜ் மற்றும் பிசியோதெரபி செய்துகொள்வது மிக நல்லது.

**மூட்டுவலி நீங்க அறுவை சிகிச்சைக்கு எனது குடும்ப வைத்தியர் போக சொல்லுகின்றார். எனது வயது அதிகமாகி மன பலம் குறைந்து இருக்கும் இந்த நிலையில் நான் தயாராக இல்லை. மாற்று வழி ஏதாவது உண்டா?**

சிவ பாக்கியம்.

இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் உங்கள் குடும்ப வைத்தியரிடம் நீங்கள் இது பற்றி மனம் விட்டு பேச வேண்டும். மூட்டு வலியைத் தாங்க முடியாதவர்கள், அறுவை சிகிச்சையை விரும்பாதவர்களுக்கு சென்னை ஆக்ஸிமெட் மருத்துவமனையில் "எமிட்ரான்" என்ற நவீன காந்தமின் அலை சிகிச்சை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த சிகிச்சை மூலம் சிதைந்த திசுக்கள் மீண்டும் உயிர்ப்பிக்கப்படுகின்றன. இதனால் மூட்டுவலிக்கு நிவாரணம் கிடைக்கிறது. மேலும் மென்எலும்புகள் பழுது செய்யப்பட்டு புதுப்பிக்கப்படுகின்றன. இந்த சிகிச்சை செல்களில் புரதத்தின் உற்பத்தியை அதிகரிக்க உதவுகிறது. இந்த சிகிச்சையானது ரத்த ஓட்டத்தை சீர் செய்து, உடம்பில் கை-கால் வீக்கத்தைக் குறைக்கிறது. ஆக்ஸிஜனை செல்கள் எளிதாக உறிஞ்சவும் உதவுகிறது. எனவே அறுசை சிகிச்சையை விரும்பாதவர்கள், நவீன மருத்துவ சிகிச்சை மூலம் மூட்டு வலிக்கு நிவாரணம் பெறலாம்.



இராஜசேகர் ஆத்தியப்பன்

**ஆண்களின் (prostate) விந்து சுரப்பி பாதிக்கபட்டால் என்ன மாதிரி வைத்யம் எடுத்துக்கொள்ள வேண்டும்?**

ஆண்களின் சிறுநீர்ப் பைக்கு அருகில் அமைந்துள்ள 'ப்ரோஸ்டேட்' சுரப்பி தான் விந்து சுரப்பி என்று கூறப்படுகிறது. 40 வயதை எட்டும்போது பெரும்பாலானோருக்கு இந்த சுரப்பி விரிவடையத் தொடங்குகிறது. இதனால் சிறுநீர்ப் பை சுருங்குதல், சிறுநீர் வெளியேறும் வழி சிறியதாகுதல் போன்ற இன்னல்களைச் சந்திக்க நேரிடலாம். சுமார் 60 வயது எட்டிய ஆண்களில் 70 சதவீதம் பேர் இத்தகைய பாதிப்புகளைச் சந்திப்பதாக, ஆய்வு முடிவு கூறுகிறது. தொடக்கத்திலேயே விந்து சுரப்பி பாதிப்பை கண்டறிந்து, உரிய மருத்துவரிடம் சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டும். இல்லையெனில் சிறுநீர் தங்குதல், சிறுநீர் செல்லும் வழியில் தொற்று நோய் ஏற்பட்டு வலி உண்டாகுதல், சிறுநீர்ப் பையில் கற்கள், சிறுநீரில் ரத்தம் போன்ற மேலும் பல பிரச்சினைகள் ஏற்படலாம். மஞ்சள் 1/4 தேக்கரண்டி அத்துடன் நான்கு நெல்லிக்கனிகளை சிதைத்து நான்கு கோப்பை தண்ணீரில் கொதிக்க வைத்து இரண்டு கோப்பையாக வற்றியவுடன் காலை ஒன்றும் பின் நேரம் ஒன்றும் குடித்து வந்தால் மூன்று வாரங்களில் முன்னேற்றம் காணலாம்.

**கருத்தடை மாத்திரைகளை எடுப்பது நல்லதா - இயற்கையாக உடலுறவு கொள்ள பாதுகாப்பான நாட்கள் எவை?**

இளஞ்செழியன்.

கருத்தடை மாத்திரைகளை எடுப்பது நல்லதல்ல. பெண்ணுக்கு 28 நாட்களுக்கு ஒரு முறை மாதவிலக்கு சுழற்சி என்றால், மேலும், மாதவிலக்கு ஆகும் நாளுக்கு முந்தைய 7 நாட்களும், மாதவிலக்கு ஆன பிறகு வரும் 7 நாட்களும் பாதுகாப்பான நாட்கள் என்று கூறப்படுகிறது. ஆனால், மாதவிலக்கு சுழற்சி சரியாக இல்லாதவர்களுக்கோ, மாதவிலக்கு சரியாக ஏற்படாதவர்களுக்கோ இந்த பாதுகாப்பான நாட்கள் ஒத்து வராது.

**ஆண்மை பெருகவும், உடலுறவில் ஆர்வம் கூடவும் இயற்கை மூலிகை சக்தி மூலம் எப்படி பெறலாம்?**

அருணோதயம்.

உயர் ரக பேரீச்சம்பழம் ஒரு கிலோவும், தேன் (நல்ல தேன்) ஒரு கிலோவும் வாங்கிக் கொள்ளுங்கள். பேரீச்சம்பழங்களை ஒரு அகன்ற தட்டில் பரப்பி 3 மணி நேரம் வெயிலில் வைத்து, ஒரு சுத்தமான பீங்கான் போத்தலில் பத்திரப்படுத்துங்கள். அதனுடன், தேனை ஊற்றி மீண்டும் 3 மணி நேரம் வெயிலில் வைத்து எடுத்துவிடுங்கள். தினமும் காலை உணவு சாப்பிட்ட அரை மணி நேரத்திற்குப் பறிகு 3 பேரீச்சம்பழங்களை சாப்பிட்டு விட்டு, சிறிது வெந்நீர் அருந்துங்கள். இதேபோல், இரவிலும் உணவு சாப்பிட்ட பின்னர் அரை மணி நேரத்திற்குப் பிறகு 3 பேரீச்சம்பழங்களை உட்கொண்டுவிட்டு, வெந்நீருக்கு பதிலாக பசும்பாலை அருந்துங்கள். இப்படி 60 நாட்கள் தொடர்ந்து தேன் கலந்து பேரீச்சம்பழங்களை சாப்பிட்டு வந்தால் போதும். ஆண்மை சக்தி பெருகி ஆர்வம் கூடும்.

நலம் பெறுக! வளம் பெறுக!

rajasekar.a@thaiveedu.com


■ ■ ■

## தோல் & புற்று நோய் ஆராய்ச்சி மையம்

நாகர்கோவில்,
தமிழ்நாடு
91-93627 28808



- முகப்பரு
- சொடுகு
- சொரியாசிஸ்
- எக்சிமா
- பாலுண்ணி
- உலர் சருமமம்
- தேமல்
- கருவளையம்
- கட்டிகள்
- கால் ஆணிகள்
- நரம்பு சுருளுதல் (Varicose Vein)
- உடலி எரிவு (Hot Flash)
- தோல் புற்று நோய்




- நீரிழிவு & இல்லற இனிமை (Sex Performance)
- இரத்த அழுத்தம்
- தைராய்டு
- இருதய பலவீனம்
- ஆஸ்துமா

போன்றவைகளுக்கு எளிய ஆயுர்வேத மூலிகைகள் பக்க விளைவுகள் அற்ற இயற்கை வழித் தீர்வு

போன்றவைகளுக்கு சித்த மருத்துவம்

**கேரளா ஆயுர்வேதா**

டாக்டர் ராஜசேகர் ஆத்தியப்பன்
416 995 0416
ayurvetha@gmail.com



## பாரம்பரிய சித்தா இரகசியங்கள்



- ஒல்லியானவர்கள் உடல் தேற.
- குண்டானவர்கள் ஒல்லியாக.
- குள்ளமானவர்கள் உயரமாக.
- முகம் கவர்ச்சி பெற.
- தோல் நோய் குணமாக.
- மூல நோயிலிருந்து விடுபட.
- அல்சர், குடல் புற்று, அசிடிட்டி, வாய்வு தொல்லை தீர.
- மாதவிடாய், வெள்ளை படுத்தல் பிரச்சினைகளுக்கு.
- முதுகுவலி, தோள் வலி, முழங்கால் வலி குணமாக.
- சொடுகு, முடி உதிர்தல் குறைய.
- வலிப்பு, திக்குவாய், ஞாபக சக்தி குறைவு.
- தாம்பத்ய சுகம் நீடிக்க, ஆர்வம், எழுச்சி கூட.

சிறப்பு ஆலோசனை மற்றும் சிகிட்சை
டாக்டர் இராஜசேகர் ஆத்தியப்பன
416-995-0416

**கேரளா ஆயுர்வேதா**



## உலகம் சுற்ற ஆசையா?

உள்ளூரில் வேலை வேண்டாம்!
தங்கும் இடம், உணவு, கை நிறைய சம்பளம்



என்ன வேலை என்று கேட்கிறீர்களா?
ஆங்கிலம் கற்பித்தல்.

யாருக்கு?
குழந்தைகள், தொழில் செய்வோர், மாணவாகள
என்று பலதரப்பட்ட மக்களுக்கு!

எந்த நாட்டில்?
துபாய், பிஜி, ஜப்பான், சீனா, ஹாங்காங்
என்று ஒரு பெரிய பட்டியல் உண்டு.

என்ன தகுதி வேண்டும்?
வேலை எடுத்து தர ஏஜென்சிகள் உண்டா?
எவ்வளவு காலம் ஆகும்?
நூறு சதம் வேலை கிடைக்குமா?

இன்னும் உங்கள்
கேள்விகள் அனைத்திற்கும் பதில் இங்கே!

நேரில் வந்து ஆலோசனை பெறுங்கள்.
416 995 0416
vaathu88@gmail.com

Century 21

For All Your Real Estate Needs

**HomeExpertTeam.com**

**416-496-2625**

King's Quay Real Estate Inc. Brokerage

Bus: 905-940-3428 Fax: 905-940-0293 7300 Warden Ave., Suite 401 Markham, On L3R 9Z6

***Committed to Providing Real Estate Service to attain results beyond your expectations.***

*Knowledge + Experience + Team work = Result*



*Flexible & competitive commission!*



**AMIR RAMALINGAM ***
Masters Hall of Fame
CENTURION Honor Society

**PRATHEEP BALASUBRAMANIAM ****
Masters Ruby (2003-2007)
Masters Diamond (2008)







**THAYA SUBRAMANIAM ***
Masters Silver (2007)
Masters Diamond (2008)

**JUGA SUREES ***

**ATHAVAN KULARAJASINGHAM ***

* Sales Representative ** Broker


உங்கள் வாடகைப்பணத்தில் சொந்தமாக வீட்டை அமைத்திட இன்றே அழையுங்கள்

**416-496-2625**

Top Producers Award Winning Team

முழுநேர வீடு விற்பனை முகவர்கள் உங்களுக்கு உதவக்காத்திருக்கின்றோம்

நம்பிக்கை நேர்மை நட்பான சேவை !




**Open House Sat Nov 7th between 2 - 5 PM**

Well Kept 3 Bedroom Detached Home, Granite Floor In Kitchen, Laminated Floor Through-Out Main Floors, Child Safe Neighborhood




Brand New Luxury 2 Bedroom Condo, Bright & Stunning High Quality Finishes, Granite/Marble Counter, Hardwood Floors. Close to Hwy 407,Hwy 7 and Go Station




Brand New Luxury 2 Bdrm South West Corner Unit Condo next to Scarborough Town Centre, Aprox 800 Sq.Ft. Marble Foyer, Marble Counters, Close To All Amenities




Bright & Spacious 1 Br + Den, South Exp. Enclosed Balcony, Very Well Maintained Bldg, Close To Go Station, Ttc, School And Shopping.





Two Storey Indoor Shopping Mall. 2nd Floor Corner Unit With North And West Exposure, Total Area of 889 Sq. Ft. Lots Of Potential For Walk In Clients.

**Earn AIR MILES reward miles when you buy or sell your home with us**





# வீடு வாங்க விற்க








Semi-Detached
3 + 1 Bedrooms 2 Washroom
Finished W/O Basement



**Kuga Raveendrarajah**
Broker
Direct: **416-843-8585**


**Mathan Selvendarakumaran**
Sales Representative
Direct: **416-625-2870**




3 Bedrooms 2 Washroom
Finished Basement




4 Bedrooms 3 Washroom
Finished Basement




HomeLife Higher Standards

**HomeLife Today Realty Ltd., Brokerage***

31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6

**Bus: 416-298-3200**

*Independently Owned and Operated, Realtor

# அற்ககோலிசம் (Alcoholism)

- முகிலன் -

கனடாவில் வருடாந்தம் 2,200 பேர் அளவுக்கு மீறி மதுபானம் (Alcohol) பாவிப்பதால் உயிர் இழக்கின்றனர். குறிப்பாக ஈரல் நோய் (Cirrhosis) ஏற்பட்டு இவர்கள் மரணிக்கின்றனர். இதை விட நூற்றுக்கு மேற்பட்டவர்கள் அதிக மதுபானம் அருந்திய பின்னர் வாகனங்களை ஓட்டி விபத்தில் சிக்கியும், உடல் நஞ்சாகியும் உயிர் இழக்கின்றனர்.

அமெரிக்காவில் இதயநோய்க்கும், புற்று நோய்கும் அடுத்ததாக மனித உயிர்களை கொல்லும் மரணக்கருவியாக இந்த மது பானம் உள்ளது. (The Third Great Killer)

ஒருவர் மூன்று Drinks மதுபானம் எடுத்தால் அவருடைய குருதியில் .06% அற்ககோல் செறிவு ஏற்படும். குருதியில் .1% அற்ககோல் இருக்குமாயின் அது மூளையின் நரம்பு மண்டலங்களை பாதிக்கும். ஒருவருடைய பேச்சு, சமநிலை போன்றவற்றில் இது பாதிப்பை ஏற்படுத்தும். குருதியில் மதுபானத்தின் செறிவு 2% ஆகினால் அது பெரும்பான்மையான மூளையின் நரம்பு மண்டலங்களை பாதிக்கும். இதே அற்ககோல் ஒருவரின் உடலில் .45%ஆக உயர்ந்தால் அவருக்கு கோமா நிலைமை ஏற்படும். இதயத்துடிப்பும், சுவாசமும் மூளையினால் கட்டுப்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டு மரணமும் ஏற்படும்.

கனடாவில் பதினைந்து வயத்துக்கு மேற்பட்டவர்களில் 4%மானவர்கள் மதுபான அடிமைகளாக (அற்ககோலிக்காக) உள்ளனர்.

மதுபானம் உடலின் இரைப்பைக்குள் சென்றதுமே இரைப்பை சுவர்களின் மூலம் உடன் இரத்த குழாய்களுக்குள் உறிஞ்சி எடுக்கப் படுகின்றது. அதுபோல் சிறுகுடலில் இருந்தும் உடனடியாக குருதித் தொகுதிக்குள் உள்வாங்கப்படுகின்றது. அற்ககோல் உணவுத் தொகுதியில் சமிபாடு அடைவதில்லை. இரைப்பையில் ஏதாவது உணவு இருந்தால் அது அற்ககோல் உறிஞ்சப்படுவதை கட்டுப் படுத்தும். குறிப்பாக கொழுப்பு உணவுகள் இரைப்பையில் இருந்தால் அது அற்ககோல் உறிஞ்சப்புடுவதை தாமதப்படுத்தும். உறிஞ்சப்படும் அற்ககோல் உடலின் எல்லாப் பகுதிக்கும் சமாகக் கடத்தப்படும்.

நாம் அருந்துகின்ற மதுபானத்தில் பெரும் பகுதி ஈரலினால் துப்பரவு செய்யப்பட்டு உடலில் இருந்து நீர், காபனீர் ஒட்சைட்டு என்றும் நச்சாகவும் வெளியேற்றப்படுகின்றது. சுமார் பத்து வீதமான அற்ககோல் நாம் சுவாசிக்கும் போதும், சிறுநீர் கழிக்கும் போதும் வெளியேற்றப்படுகின்றது.

அற்ககோலிசத்தால் மூளை, ஈரல், ஆண்குறி உட்பட பல உடல் அவயங்கள் பாதிக்கப்படுகின்றது. மரணம் ஏற்படுகின்றது. வாழ்கை, குடும்ப வாழ்கை, உறவுகளில் பாதிப்பு, சமூக வாழ்கையில் சீரழிவு ஏற்படுகின்றது. வேலைத் தளத்தில் ஒழுங்காகவும், சரியாகவும் வேலை செய்யமுடியாத நிலைமையை ஏற்படுத்துகின்றது. வேலைக்கு ஒழுங்காக செல்லமுடியாத நிலைமையையும் ஏற்படுத்தும். மேலும் சில சமயத்தில் வேலையையே இழக்க வேண்டிய நிலைமையை உருவாக்கும்.

கர்ப்பம் அடைந்துள்ள பெண்கள் அற்ககோல் அருந்துவதால் பிறக்கின்ற குழந்தை சராசரியை விட சிறிய அளவினதாக இருக்கும். கர்ப்பிணிப் பெண்கள் மிக அதிக அளவில் மது அருந்துவதால் 'Fetal Alcohol Syndrome' என்ற பாதிப்பு சிசுக்களுக்கு ஏற்படலாம்.

இதனால் பிறக்கின்ற குழந்தைகளுக்கு Physical disabilities (impaired growth and small head), Learning difficulties (poor memory and attention problems.), Emotional and behavioural difficulties, children exposed to alcohol in the womb are 3.2 times more likely to have behaviour and aggression problems compared to non-exposed children, Changed facial features (flat mid-faces, thin upper lips and distinctive facial features) போன்ற நிலைமைகள் ஏற்படலாம்.

ஒரு நாளைக்கு ஒரு குழந்தையாவது 'Fetal Alcohol Syndrome'துடன் பிறக்கின்றது என்று Health Canada கூறுகின்றது.

Dr. Gideon Koren, founder and director of the Motherisk program at Toronto's Hospital for Sick Children, "வளருகின்ற மூளைக்கு அற்ககோல் கூடாது" ( alcohol is not good for the developing brain) என்று சொல்லுகின்றார்.

Self-assessment questionnaire

இந்தக் கேள்விகளுக்கு ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட இடங்களில் "ஆம்" என்று நீங்கள் பதில் அளித்திருந்தால் நீங்கள் அற்ககோல் அல்லது Drug பிரச்சனைக்குள் சிக்கிக் கொண்டுள்ளீர்கள் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். உங்களுக்கு உடனடியாக உதவி தேவை.

- நீங்கள் மருத்துவத்தை தவிர வேறு எந்தக் காரணத்திற்காகவும் Drugsஐ பயன்படுத்தி உள்ளீர்களா?
- நீங்கள் மதுபானத்தை, அல்லது Drugsஐ பாவிக்காத சமயத்தில் சற்று களைப்படைந்தது போல் அல்லது week ஆக இருப்பதாக உணர்ந்துள்ளீர்களா?
- நீங்கள் அற்ககோலை, அல்லது Drugsஐ பாவிக்கின்ற போது 'blackouts' or 'flashbacks' என்ற நிலைமை உங்களுக்கு ஏற்பட்டுள்ளதா?
- நீங்கள் அற்ககோலை, அல்லது Drugsஐ பாவிக்கின்ற போது உங்களுக்கு குற்ற உணர்வு ஏற்படுகின்றதா?
- உங்களுடைய மனைவி அல்லது நண்பி நீங்கள் அற்ககோலை, அல்லது Drugsஐ பாவிப்பது தொடர்பாக உங்கள் மீது குற்றம் சுமத்தி உள்ளனரா?
- நீங்கள் அற்ககோலை, அல்லது Drugsஐ பாவிப்தன் காரணமாக உங்களுக்கும் உங்கள் வாழ்க்கைத் துணைக்கும், அல்லது பிள்ளைகளுக்கும் இடையில் சண்டை சச்சரவுகள் எப்போதாவது ஏற்பட்டுள்ளதா?
- நீங்கள் அற்ககோலை, அல்லது Drugsஐ பாவித்தன் காரணமாக உங்கள் வேலைத் தளத்தில் ஏதாவது பிரச்சனை, சிக்கல்கள் ஏற்பட்டதா?
- நீங்கள் அற்ககோலை, அல்லது Drugsஐ பாவித்த காரணத்தால் சண்டைகள், அல்லது பெரும் வாய் தர்க்கத்தில் ஈடுபட்டீர்களா?
- நீங்கள் அற்ககோலை, அல்லது Drugsஐ பாவிக்காத நாட்களில் ஒரு விதமான உடல் நிலை கோளாறு மாதிரி நிலைமை (felt sick) ஏற்பட்டுள்ளதா?
- நீங்கள் அற்ககோலை, அல்லது Drugsஐ பாவிக்கின்ற போது குறைத்து பாவிக்க வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு எப்போதாவது ஏற்பட்டுள்ளதா?
- யாருக்கும் தெரியாமல் மிக இரகசிமாக நீங்கள் அற்ககோலை, அல்லது Drugsஐ பாவிப்பது உண்டா?
- உங்களுடை குடும்ப அங்கத்தினர் எவராவது நீங்கள் அற்ககோலை, அல்லது Drugsஐ பாவிப்பதனால் ஏற்பட்ட பிரச்சினைக்காக உங்களுக்காக அல்லது தங்களுக்காக உதவி தேடி உள்ளார்களா?
- நீங்கள் அற்ககோலை, அல்லது Drugsஐ பாவித்த காரணத்தால் எப்போதாவது உங்கள் குடும்ப அங்கத்தவர்களுடன் தவறாக, வன்முறையாக நடந்து கொண்டுள்ளீர்களா?
- நீங்கள் அற்ககோலை, அல்லது Drugsஐ பாவித்த காரணத்தால் வேலைக்கு போக முடியாத நிலைமை எப்போதாவது ஏற்பட்டு ள்ளதா?



இந்தக் கேள்விகளுக்கு ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட இடங்களில் "ஆம்" என்று நீங்கள் பதில் அளித்திருந்தால் நீங்கள் அற்ககோல் அல்லது Drug பிரச்சனைக்குள் சிக்கிக் கொண்டுள்ளீர்கள் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். உங்களுக்கு உடனடியாக உதவி தேவை.

உங்களுக்கு அல்லது உங்கள் அன்புக்கு உரியவர் அற்ககோலில் இருந்தோ Drug பிரச்சினையில் இருந்தோ விடுபட வேண்டும் என்றால் http://www.canadarehab.ca என்ற இணையத்தளத்திற்கு சென்று பார்வையிடலாம். அல்லது 1-800-419-7941 என்ற இலக்கத்தை ரொறன்டோவில் உள்ளவர்கள் அழைக்கலாம்.

நீங்கள் அற்ககோலிசத்திலிருந்து விடுபட வேண்டும் என்று தீர்க்கமாக உங்கள் மனம் சொல்லுமாயின் உங்களால் அதில் இருந்து விடுபடமுடியும். ஆனால் உங்களுக்கு அதற்கு உதவி தேவை. அந்த உதவியை பயன்படுத்தி இந்த அற்ககோலிசத்தில் இருந்து உங்களால் நிச்சயமாக விடுபடமுடியும்.

mukilan@thaiveedu.com

■ ■ ■


## Driving School

ஒட்டுனர் பயிற்சியில் நட்பான அணுகுமுறை, நவீனத்துவமான பயிற்சி முறையுடன் நம்பிகையான வெற்றி G1, G2 தேர்வுப் பயிற்சிகள், போக்குவரத்து வசதிகள், தெளிவான விளக்க வகுப்புகள், வீதித் தேர்வுக்கான வாகன ஒழுங்குகள், வசதிக்கேற்ற தேர்வு நாட்கள்.

நீண்டகால அனுபவத்தின் தனித்துவமான பயிற்சி

General Driving School

Ministry of Transportation Approved Instructor

பேரின்பநாதன் வேந்தன்

416-731-2829

# வாழ்க்கையைப் புர...

5ம் பக்கத் தொடர்ச்சி...

சமானவை என்பதால், உங்கள் தொலைந்த passwordகளை மீளவும் எடுத்து தர உதவக் கூடிய நேரடி தொடர்பு இலக்கங்களோ வசதிகளோ இருப்பதில்லை. நீங்கள் ஒரு Accountஐ திறக்கும் போது அதனுடன் சம்பந்தமான Password recovery போன்ற வசதிகளை பாது காப்பாக, முன்னேற்பாடாக செய்து கொள்ள வேண்டும். அவற்றையும் தொலைத்தால் "அரோகரா!" தான். பல்வேறு முறைகளால் தேடி, மீளவும் passwordஐ கண்டுபிடிக்கும் போது காலம் கடந்துவிட்டிருக்கும்

திருமணம் செய்ய இருப்பவர்கள் ஒருவர் ஒருவரைப்பற்றி அறிந்துகொள்ளவும், நிறுவனங்கள் தாம் பணிக்கு அமர்த்தவிருப்பவர்கள் பற்றி அறிவதற்கும், காவல்துறையினரின் புலனாய்வுகளுக்கும் கூட இந்த social networkகளில் கிடைக்கும் தகவல்கள் மிக மிக உதவியாக இருக்கின்றன. இந்த வகையில் பல முக்கியமான முடிவுகளுக்கு இந்த இணையத்தளங்களில் கிடைக்கும் தகவல்களே ஆதாரமாக அமைந்து விடுகின்றன. இதிலிருந்து இந்தவகை இணையத்தளங்களில் பதிவு செய்யப்படும் தகவல்களில் நாம் எவ்வளவு எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்பது உங்களுக்கு புரிந்திருக்கும்.

Facebook போன்ற சமூகவலையமைப்புகள் இளம் பருவத்தினரிடம் தான் பெரும்பாலும் பாவிக்கப்படுகின்றது என்று ஒரு போதும் எண்ணாதீர்கள். கணிணித் துறையில் இருப்பவர்கள் Facebook போதை / பித்து பிடித்து அலைகிறார்கள். இதனால் அதிகமான கணினி மயப்படுத்தப்பட்ட நிறுவனங்களில் Facebook போன்ற தளங்களைப் பாவிப்பது தடை செயப்பட்டுள்ளது. அடிக்கொரு தடவை தமது இணையப் பக்கத்தை பார்க்காவிட்டால் 'மூச்சு விட முடியாத" அவஸ்த்தைப் படுபவர்களையும் சந்தித்துளேன்.

பாலியல் துஷ்பிரயோகம் செய்யும் குற்றவாளிகளுக்கு இந்த Social networkகள், அவர்களின் ஆபாச வெறிகளை அப்பாவி இளம் பருவத்தினர் மீது திணிப்பதற்கு ஒரு முகத்திரையாகவே உதவுகின்றன. பெரும்பாலும் இவர்கள் தமது இளவயதுப் படங்களையும், பொய்யான வயதினையும் தங்களின் Facebook இணைய அடையாளமாக காட்டிக் கொள்வார்கள். தமது சாமர்த்தியமான உரையாடல்கள் மூலம், வெள்ளை மனம் கொண்ட அப்பாவி இளம் பெண்களையும், ஆண்களையும் வீட்டை விட்டு வெளியேறி (ஓடி) தம்முடன் வரும்படி செய்துவிடுகிறார்கள். சிலவேளைகளில் முகமே தெரியாத இந்த தொடர்புகள் கொலை, பாலியல் வல்லுறவு, பழிவாங்கல், ஆட்கடத்தல் என்று எதிர்பாராத திருப்பங்களையும் ஏற்படுத்தி விடுகின்றன.

அண்மையில் ஒரு பெண்ணின் தாய் தன் மகளின் தோழி, தன் மகளை விட நன்றாக படிக்கின்றாள் என்ற ஆதங்கத்தில் தன்னை ஒரு ஆணாக Facebookஇல் அறிமுகப்படுத்தி, அந்த கெட்டிக்கார பெண்ணை தனக்கு காதலியாக வசியம் செய்தாள். இதையறியாத அப்பாவிப்பெண்ணும் இந்த மாயக் காதல் வலையில் வீழ்ந்துவிட்டாள். பின்னர் சரியான சந்தர்ப்பம் வந்ததும், அந்தப்பெண்ணின் மனம் மிகவும் புண் படும்படியாக வார்த்தைகளை கொட்டி, அவரிடம் இருந்து விலகுவதாகக் கூறி நாடகமாடியிருக்கிறார். அந்த மனங்குழம்பிய இளம் பெண், தன் பெற்றோரிடம் தன மனநிலையைப் பற்றிக்கூறிய போதும் அவர்கள் கண்டுகொள்ளாததால், ஒரு நாள் தற்கொலை செய்து கொண்டாள். இணையத் தொடர்பாடல்கள், குற்ற, வன்முறைகள் பற்றி சரியான, தெளிவான சட்ட முறை இன்னமும் இல்லாத நிலையில் அந்த குற்றமிழைத்த பெண் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பி விட்டார்.

"ஐயோ, ஐயோ.. ஐயோ... இவ்வளவு கொடுமையான சம்பவங்களை ஏற்படுத்தும் இந்த சமூக இணையத்தளங்களை ஏன் இணையத்தில் வைத்திருக்கிறார்கள்?" என்று நீங்கள் தலையில் அடித்துக் கொள்ளலாம். இணையம் என்பது ஒரு பெரிய நூலகம் போன்றது. அங்கு நாம் எதைத் தேடுகின்றோம், எப்படி நமது நேரத்தை செலவு செய்கின்றோம் என்பது முக்கிமானது. அதுமட்டுமன்றி நாம் நம் குழந்தைகளை நூலகத்திற்கு கூட்டிச்சென்று, அவர்கள் பின்னாலேயே எந்தப் பகுதிக்குப் போக வேண்டும், எந்தப் புத்தகத்தை வசித்தால் நல்லது, அந்த நூலகத்தில் நடக்கும் வேறு நிகழ்ச்சிகளில் எது நல்லது, எது தேவையற்றது என்று அறிவுறுத்துகிறோமல்லவா? அது போலவே இணையத்தையும், இந்த வகையான சமூக இணையத்தளங்களையும் பாவிக்கும் போதும் வழிகாட்டி அழைத்துச்செல்ல வேண்டும்.

## இப்படிப்பட்ட அனர்த்தங்களில் இருந்து உங்களை எப்படி பாதுகாத்து கொள்ளலாம்.

- இப்படிப்பட்ட இணையதளங்களில் நீங்கள் எழுதும் கருத்துக்களும், பதிவேற்றும் புகைப்படங்களும் காற்றில் விட்ட வார்த்தைகள் போன்றவை. அவற்றைப் பதிவுசெய்த பின் (நடுச் சந்தியில் போஸ்டர் ஒடியது போல்) அவை உங்கள் கட்டுப்பாட்டில் இருக்காது என்பதை முழுமையாக உணர்ந்துகொள்ள வேண்டும்.
- உங்கள் User name / password போன்றவை உங்களுக்கு மட்டுமே தெரிந்ததாகவும் எளிதில் அறிந்து கொள்ள முடியாத, ஏழு எழுத்துகளுக்கு குறையாததாகவும், இலக்கங்களை உள்ளடக்கியதாகவும் அமைந்திருப்பது நல்லது.
- Password Recovery optionகள் பற்றிய அறிவை வளர்த்துக்கொள்ளுங்கள்.
- பெற்றோர் தம் குழந்தைகளுடைய இணையத்தள பதிவுகளைக் கண்காணிப்பது மட்டுமல்லாமல் அவர்களுடைய நண்பர்களுடைய இணையப் பதிவுகளையும் கண்காணிப்பதன் மூலம், நண்பர்களைப் பற்றி நிறைய அறிந்து கொள்ள முடியும்.
- பிள்ளைகளின் Username / Password போன்றவற்றை நீங்களும் வாங்கி வைத்திருந்து, சிலதடவைகள் அவை வேலை செய்கின்றதா என்பதனை சரி பார்த்துக்கொள்ளுங்கள்.
- உங்களைப் பற்றிய தகவல்களை முடிந்தவரை, உங்கள் தனிப்பட்ட அடையாளத்துக்கும், பாதுகாப்புக்கானதுமே என்ற எண்ணத்தை வலுவாக மனதில் நிறுத்திக் கொள்ளுங்கள்.



சரி, இந்த Scial Netwok இணையத்தளங்களால் நன்மைகளே இல்லையா என்று நீங்கள் கேட்கலாம்? நிச்சயமக உண்டு. சரியான முறையில் பாவிக்கும்போது இவை நமக்கு நன்மை பயக்கும் தொடர்பூடகமாவே மாறிவிடுகின்றன. இதை யாருடைய கையில் ஒரு கூரிய கத்தி இருக்கின்றது என்பதுடன் ஒப்பிடலாம். ஒரு வைத்தியரிடமா அல்லது ஒரு கொலைகாரனிடமா? கத்தி ஒரு உயிரற்ற சடம். அது இருக்கும் கையைப்பொறுத்து ஒரு உயிரைக் காப்பாற்றும் அல்லது குடிக்கும்.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் வெற்றிக்கு இந்த Social Networkகுகள் பெரும் உதவியாக இருந்தன. ஒபாமா இளைஞர்களை ஒன்றுகூட்டவும், உடனுக்குடன் செய்திகளை வெளிவிடவும், போட்டியாளர்களின் குற்றச்சாட்டுகளுக்கு மிகவேகமாகப் பதிலளிக்கவும் இவ்வகையான சமூகவலையமைப்புகளை மிக லாவகமாகப் பாவித்தார். ஹிலரி கிளின்டனை விடவும் ஒபாமா சமூகவலையமைப்புகளைப் பாவித்தமை அதிகமாக இருந்தது. ஒபாமா தனது அறிமுக உரையைக் கூட இணையத்தினூடகவே நிகழ்த்தி எல்லோரையும் ஆச்சரியப்படுத்தினார்.

இன்றைய நவீன உலகில் இருக்கும் எல்லா முக்கியஸ்தர்களும் தங்களுக்கு என்று ஒரு இனையத்தளம் வைத்திருப்பது மட்டுன்றி, Face Book போன்ற சமூகவலையமைப்புகளிலும் அங்கத்தவராக இருந்து தம்முடைய அறிக்கைகளையும், திட்டங்களையும், செயற்பாடு களையும் மிக எளிதாகவும், விரைவாகவும் வெளிக்கொண்டுவருகிறார்கள். நம்முடைய சூர்யா, கமல்ஹாசன் முதல் ஜிம்கரி, மடோனா

33ம் பக்கம் பார்க்க...

### இப்படியும் நடக்கிறது

கனடாவில், 29 வயதுடைய நட்டாலி ப்லஞ்சார்ட் என்ற பெண்மணி தனது மன அழுத்தத்தை காரணம்கூறி, அவர் பணிபுரிந்த IBM நிறுவனத்தில் இருந்து 2008ஆம் ஆண்டுமுதல் நீண்டநாள் விடுப்பு எடுத்து, அதற்குரிய மாதாந்தக் கொடுப்பனவை வீட்டிலிருந்தபடியே பெற்றுக்கொண்டிருந்தார். இந்த பணத்தை அனுப்பிக்கொண்டிருந்த Manulife காப்புறுதி நிறுவனம், பணம் அனுப்புவதனை திடீரென நிறுத்திக்கொண்டது. 'இது அநியாயம்' என்று காப்புறுதி நிறுவனத்தை நட்டாலி தொடர்புகொண்டார். காப்புறுதி நிறவனம், நட்டாலி தனது Face book பக்கத்தில் பதிவுசெய்திருந்த, அவருடைய பிறந்தநாள், விடுமுறைப் புகைப் படங்களில் அவர் மகிழ்வாக வாழ்வதனைச் சுட்டிக்காட்டியது. நீங்கள் பணிக்குப்போகக் கூடிய மகிழ்வான மனநிலையில் இருப்பதால் உங்களுக்கு கொடுப்பனவு இல்லை என்று Manulife கூறிவிட்டது. Facebookஇல் தான் பதிவேற்றிய புகைப்படங்களால் நட்டாலி நொந்துபோயிருக்கிறார்.

### Facebook சில தகவல்கள்

- Facebookஇன் அரைவாசி பாவனையாளர்கள் 18க்கும் 34க்கும் இடைப்பட்ட வயதினர்.
- Facebook பாவனையில் வேகமாக வளர்ந்துவரும் நாடுகள்: தாய்வான், கானா, இந்தோனேஷியா.
- அமெரிக்காவுக்கும், இங்கிலாந்துக்கும் அடுத்தபடியாக துருக்கி அதிக Facebook பாவனையாளர்களைக் கொண்டுள்ளது.
- வெனிசூலாவின் மக்கள் தொகையில் 63.27வீதமானோர் Facebook பாவனையாளர்கள்.
- சிரியா Facebook பாவனையைத் தடைசெய்திருக்கும் நாடு.

### Facebookஆல் வந்த சோதனை

கடந்த முறை நடந்த அமிரிக்க அதிபர் தேர்தலில் குடியரசுக் கட்சியின் சார்பில் முக்கிய வேட்பாளராகக் கருதப்பட்டவர் ரூடி கூலியானி. முன்னாள் நியூயோர்க் மாகாண மேயர். செல்வாக்கு மிகுந்த அரசியல் தலைவர். இரட்டைக்கோபுர தாக்குதல் சம்பவத்தை கூலியானி கையாண்ட விதம் அவருக்கு மேலும் செல்வாக்கை அதிகரித்திருந்தது. பராக் ஒபாமாவை எதிர்கொள்ள சரியான தலைவராக அவர் கருதப்பட்டார். அவருடைய 17 வயது மகள் கரோலின் தான் ஒரு ஒபாமாவின் ஆதாரவாளர் என்றும் 'One million strong for Barack' என்ற குழுவில் அங்கத்துவம் வைத்திருப்பதாகவும் தனது Facebook பக்கத்தில் எழுதிவைத்தார். ஸ்லேற் எனும் இணைய சஞ்சிகை இதை வெளிவிட்டதும் பூதம் கிளம்பியது. உடனடியாக கரோலின் அந்தப் பதிவை அழித்த போதும் அவரது பக்கத்தை அச்சு அசலாக பல ஊடகங்கள் வெளியிட்டிருந்தன. தனது மகளின் ஆதரவையே பெற முடியாதவர் அனைத்து மக்களின் ஆதரவை எவ்வாறு பெறப்போகிறார் என்று விமர்சனம் எழுந்தது. செல்வாக்கு சரிந்தது. வேறுபல காரணிகளும் தொற்றிக்கொள்ள, இறுதியாக கூலியானி குடியரசுக்கட்சியின் அதிபருக்கான வேட்பாளர் தேர்தலிலிருந்து விலகிக்கொண்டார்.



**Computek College**

BUSINESS · HEALTH CARE · TECHNOLOGY

www.computek.edu

A Career College near you ...

**Get ready for job in 6 - 12 months !**

**Information Technology**

Computek, one of the pioneers in offering IT programs, started IT training in 1992. Since then we followed various upgradings to ensure our students acquire current skills required in the field of Information Technologies. The purpose of this program is to provide the necessary skills and "hands-on" training in planning, configuring, installing & maintaining network operating system and networking Hardware.



**Network Engineering**

- CompTIA A+
- MCP, MCSA, MCSE
- CCNA
- Linux 1
- Network +

**JOB OPPORTUNITIES**

- LAN Manager
- Network Administrator
- Network Support Analyst
- Server Administrator
- System Administrator

**Enterprise Network Eng.**

**Application Development**

**Healthcare**



**Personal Support Worker (PSW)**

*Graduates of this program may find jobs as :*

- Personal Support Worker
- Home Support Worker
- Personal Care Attendant
- Residence Care Aid
- Nursing Assistant

**Medical Office Admin (MOA)**



*Graduates of this program may find jobs as :*

- Medical Office Assistant
- Medical Admin. Asst.
- Medical Receptionist
- Medical Secretary
- Medical Records Clerk
- Hospital Ward/Unit clerk

**Early Childcare Asst.(ECA)**



*Graduates of this program may find jobs as :*

- Childcare Assistant
- Childcare Worker
- Early Childhood Educator Assistant
- Daycare / Preschool Worker
- Infant Daycare Worker

**Business**

**Computerized Accounting**



*Graduates of this program may find jobs as :*

- Accounting Assistant
- Accounts Administrator
- Accounts Manager
- Accounts Payable Clerk
- Accounts Receivable clerk
- Payroll clerk

**Business Administrator**



*Graduates of this program may find jobs as :*

- Administrative Assistant
- Office Administrator
- Office Support Personal
- Management Trainee
- Executive Assistant

For details of financial assistance, please contact our Financial Aid Officer

| Markham Campus | Scarborough Campus | Toronto Campus |
|---|---|---|
| Markham / Steeles | Kennedy / Sheppard | Kennedy / Eglinton |
| 202 - 7 Eastvale Drive. | 301-2347 Kennedy Road | 248-2390 Eglinton Ave E |
| Markham L3S 4N8 | Scarborough M1T 3T8 | Toronto M1K 2P5 |
| 905.471.3344 | 416.321.9911 | 416.285.9941 |

NOT ALL THE COURSES ARE AVAILABLE AT ALL THE CAMPUSES


# வாழ்க்கையைப்...

32ம் பக்கத் தொடர்ச்சி...

என்று எல்லோரும் இதில் அடங்குவார்கள்,

பல சமுதாய புரட்சிகளுக்கும் இந்த சமூக-வலையமைப்புகள் காரணமாக இருக்கின்றன. வீதியோர, அரசியல் எதிர்ப்பு, இயற்கை நலம் காக்கும் போராட்டங்கள், உடல் நலம் காக்கும் சங்கங்கள், இயற்கை வைத்திய முறை, கணினி வல்லுனர்கள் கருத்து மையம், சிறுவர் பரா மரிப்பு முறை குழுமம், வைத்தியர்கள் மருத்துவ ஆராய்ச்சிக் குழுமம் என்று ஏராளமான, வலுவான குழுமங்கள் சமுதாயப் புரட்சியை ஏற்படுத்துகின்றன. இதன் மூலமாக சிறந்த வேலை வாய்ப்புக்களையும், புதிய உத்திகளை-யும், நல்ல தொழில் நிறுவனங்களையும் பலர் ஆரம்பிக்கிறார்கள். ரூம் போட்டு சிந்திப்போர் சங்கம், வேலைக்கே போகாத கணவன்மார்கள் சங்கம், பழைய சோற்றை பிசைந்த படியே யோசிப்போர் சங்கம் என்று ரொம்ப அசத்த-லான குழுமங்களும் உண்டு.

இணையத் தளத்தினூடாக விளம்பரம் செய்ய விரும்பும் அல்லது வியாபாரம் செய்யும் அத்தனை நிறுவனங்களும் இந்த சமூகவலை-யமைப்புகளை (பத்திரிகைகள் /வானொலிகள் /தொலைக்காட்சிகளை விட) மிக அதிகமாக விரும்புகின்றன.

வரைகலைக் கலைஞர் கருணா (Digi Graphics)வினுடைய புகைப்படங்கள், பலருக்கு தெரிய வந்தது அவர் இவ்வாறான சமூக வலையமைப்புகளில் கால் பதிக்க தொடங்கியதன் பின்னர் தான் என்பது மிகச்சிறிய உதாரணம்.

என்னுடைய 99வீதமான பாடசாலை மற்றும் பால்ய நண்பர்கள் பல்வேறு துறைகளிலும், பல ஊர்களிலும் இருக்கிறார்கள். அவர்க-ளுடன் எங்கள் பாடசாலையில் நடக்கும் விழாக்கள், ஊர்ச்சங்கக் கூட்டங்கள், அரசியல் கூத்துக்கள், மொட்டைக் கடித விபரங்கள், குடும்ப விடயங்கள் என்று உறவுப்பாலங்க-ளைப் பலமாக வைத்திருக்க இந்த Facebook

> **Facebookஇல் அங்கத்தவராக இருந்தவர் இறந்துவிட்டால்?**
>
> இறந்தபோன தன் குடும்ப அங்கத்தவர்க-ளின் அங்கத்துவம், அவர் இறந்த பின்பும் Facebookஇல் இருப்பதனால் சிலர் பீதியடை-கிறார்களாம். இந்தப் பிரச்சினையை எப்படி தீர்க்கலாம் என்று Facebook நிறுவனம் தலையைப் பிய்த்துக்கொள்கிறதாம்.
>
> 'அதுவெல்லாம் ஜுஜுபி" என்னும் விதத்தில், இறந்துபோன தங்கள் நண்பர்களின் பக்கங்-களில், தங்களால் அவருடைய ஈமைக்-கிரியைகளில் பங்கு பற்றமுடியாமைக்கான காரணத்தையும் கூறி அனுதாப கருத்துக்-களையும் எழுதி அவரின் ஆத்ம சாந்திக்-காகவும் வேண்டிக்கொள்கிறார்களாம்.
>
> (அட கடவுளே... எங்க போகுது உலகம்...)

சமூகவலையமைப்பு (புகைப்படங்கள், வீடி-யோக்கள், கருத்துக்கள் என்று பல தளங்-களிலும்) பெரிய அளவில் உதவுகின்றது.

இந்த சமூகவலையமைப்பு வசதிகள் சாதார-ணமாக கல்லூரி மாணவர்கள் மட்டுமல்லாமல், கல்விமான்கள், அரசியவாதிகள், விளையாட்டு வீரர்கள் என்று எல்லோரும் பாவிக்க கூடிய வகையில் மிக எளிதாக அம்மைக்கப்படிருப் பதனால் இதன் பாவனையும், இது ஏற்படுத்தி வரும் சமுதாயத் தாக்கமும் இளையவர்கள் சிந்திக்கும் மனோபாவத்தையே மாற்றி வருகிறது.

அடுத்துவரும் இதழ்களில் Email, Chats, You Tube போன்ற தொழில்நுட்பத்தில் இருக்கும் புதினங்களைப் பார்ப்போம்.

மறவாதீர்கள் கண்டது கற்றவன் பண்டிதன் ஆவான்!

jiffry.u@thaiveedu.com

■ ■ ■

# "வீடு"வினாவும்...

11ம் பக்கத் தொடர்ச்சி...

செய்யுங்கள் - மினுக்குங்கள்.

- தரைகளை எப்போதும் பளபளப்பாகவும் சுத்தமாகவும் (Wax) பேணுங்கள்.
- தளபாடங்களை தூசி அகற்றி, காற்றாடி-கள் மற்றும் மின்குமிழ்கள் விளக்குகள் போன்றவற்றிலும் தூசிகள் படியா வண்ணம் துப்பரவு செய்யுங்கள்.
- பழைய தரை விரிப்புகள் நிட்சயம் மாற்-றப்படவேண்டும். Carpet உள்ள வீடாக இருப்பின் Steam Cleaning அத்தியாவசியம்.
- சமையலறை/குளியலறை தரைகளில் tilesகளின் இடைவெளிகள் பொதுவாக அழுக்காக காணப்படும் அவற்றினை Bleach கொண்டு துப்பரவு செய்வதன் மூலம் புதிய பார்வையுடன் காணப்படும்.
- அலுமாரிகளின் கதவுகள், மற்றும் சுவர்கள், Baseboards போன்றவற்றை தேவைப்படின் கழுவுதல் நன்று.
- சமையலறை அலுமாரிகளின் உட்புற பகுதி-களும் சுத்தமாக இருத்தல் வேண்டும்.

மேலே குறிப்பிட்ட சில தகவல்கள் தவிர்த்து இன்னும் வீட்டினை எவ்வாறு அழகு படுத்த-லாமோ அவ்வாறு பேணுதல் உங்கள் வீட்டிற்கு தகுந்த பெறுமதியை பெற்றுத் தருவதற்கு உதவும். வீடு விற்பனை முகவர்கள் மற்றும் வீடு ஒழுங்கமைப்பாளர் நிறுவனங்கள். இவை பற்றி மேலதிக தகவல்களை வழங்குவர் அவர்களின் உதவியினை நாடுவதும் நன்று.

**வீட்டுக்கூரைகளின் ஆயுள் பொதுவாக 25 வருடமாக கணிப்பிடுகின்றது. ஆனால் 10 வருடங்கள் மட்டுமே ஆன எனது வீட்டுக் கூரையின் ஒரு பகுதி மட்டும் உலர்ந்தும் மூலைகள் சுருண்டுபோயும், வெடித்துப்போயும் உள்ளன. ஏனைய பகுதிகள் நன்றாக விருக்கின்றன. இதற்கு என்ன காரணம்?**

ராம்.ப. Beamption

இயற்கையின் பாதிப்புக்கள் சீற்றமின்றி சீராக இருப்பின் ஓர் கூரையின் வயது எல்லை சுமார் 25 வருடங்கள் நீடிக்கும் என்பது உண்மையே. உங்கள் குறிப்புகளின் படி கூரையின் தரத்தில் குறைபாடுகள் எதுவுமில்லை போல் தெரிகிறது. ஒரு பக்கம் மட்டுமே உலர்ந்து போவதற்கு காரணம் சூரிய வெப்பமே. தென்திசை கூரை-கள் பொதுவாக அதிக வெப்பத்தினால் பாதிப்-படைவது உண்டு. இன்னுமொரு உதாரணமாக தென்திசையை பார்த்துக்கொண்டிருக்கும் வீடுகளைக் கனடியர்கள் விரும்பி வாங்குவ-தற்கு முக்கிய காரணங்களிலொன்று தென் திசையிலிருக்கும் வாகனப் பாதையில் பனிக்-குவியல் தங்காது உருகிப்போய்விடும் என்-பதற்காக. வெய்யிற் காலங்களில் வெப்பத் தினால் ஓடுகளின் (Shingles) கீழுள்ள தார் இளகிப்போய் ஓடுகளின் மூலைகள் சுருள ஆரம்பிக்கின்றன. எனவே இதனை சீர்செய்-வதற்கு கூரைக்கு தகுந்த காற்றோட்டத்தை வழங்கும் பொருட்டு சுழல் காற்றாடிகள் பொருத்திக்கொள்ளலாம் Roof Doctors என்று Googleஇல் பார்வையிடுவதன் மூலம் இது பற்றிய மேலதிக விபரங்கள் துலங்கும்.

நல்லது நேயர்களே, பொதுவாகவே புத்தாண்டு என்பது, எதிர்பார்ப்புடன் மலர்வதுதான். அவ்விதம் 2010ஆம் ஆண்டினை, ஆவலுடன் காவல் இருக்கும் அனைவருக்கும் இனிய விடுமுறை வாழ்த்துக்கள். அவரவர் எண்ணம் போல் புதிய ஆண்டு புலரட்டும் என்று இறைவன் ஆசி வேண்டி மீண்டும் தொடரும் இதழ்களில் நாமும் தொடர்வோம்.

karunagopalapillai@thaiveedu.com

■ ■ ■


Thinking of Buying or Selling Real Estate
அனுபவம்! அறிவு! திறமை! பொறுமை!
21 வருடங்களாக இத்துறையில் முன்னணியில்.........
RED CARPET
Royal Realty Ltd., Brokerage
Real Estate Service
Web: redcarpetcanada.com
Multi Award Winner
Karu Kandiah FRI, CRES,
Real Estate Broker / President
Bus: 416.284.5555 (24 Hrs.) or Toll Free- 1-877-284-5561
$409,900
Brampton
4 Bedrooms, 3 Washrooms
Walk To Public Transit
$244,900
Birchmount/Ellesmere
2 Bedrooms, 2 Washrooms
Luxury Tridel Building
$299,900
Warden /Finch
3 Bedrooms, 3 Washrooms
Low Maintenance Fee Condo
$444,900
Ajax
4 Bedrooms, 3 Washrooms
2400 Sq Feet As Per Builder's Plan
$659,000
Mcvean/Hy 7 Ebenizer
4+1 Bedrooms, 4 Washrooms
$$$$ Spent On Upgrades.
$329,900
Heartlake/Bovaird
3 Bedrooms, 3 Washrooms
3 Yr New Luxury Freehold home
$197,900
Neilson / Ellesmere
4+2 Bedrooms, 4 Washrooms
Close To Ttc, School, U Of T
$419,900
Markham / Bur Oak
3 Bedrooms, 3 Washrooms
Close To Schools, Go Train
$158,900
Neilson/Mclevin
2 Bedrooms, 2 Washrooms
Approx 1077 Sq. Ft. With Balcony
$149,500
Scarboro Golf/Kingston
3 Bedrooms, 2 Washrooms
Mintes To Subway, University
$1,200 For Lease
Markham/Mclevin
3 Bedrooms, 2 Washrooms
Walk To Shopping/schools
$134,900
Finch/Pharmacy
2 Bedrooms, 1 Washrooms
Step To Finch And Pharmacy Buses
$157,900
Mccowan/Sheppard
2 Bedrooms, 1 Washroom
Close To Schools, Shopping
$1,700 For Lease
Brampton
4 Bedrooms, 2 Washrooms
Close To Hospital, Hwy, School
$1,600 For Lease
Derry / Mavis
3 Bedrooms, 2 Washrooms
Close To All 400 Highways, To Transit
SEP. ENTRANCE
BASEMENT FOR RENT
MIDDLEFIELD/HIGHGLEN
Bright & spacious 2 Bedroom Basement apartment for rent with separate entrance
$ 850 FOR RENT
FOR MORTGAGE AGENTS
OFFICE PLACE FOR RENT
MISSISSAUGA
Cal for more info.
416-284-5698
Looking for a New Real Estate Career...
Tel: 416-284-5698 Join a winning team for your success
• Referral leads
• Help & guidance for newly licensed agents
• Free Real Estate Classes
• Regular Sales Training from Experts


மூலிகைத் தயாரிப்புக்கள்
புதிய டிசைன்களில் சபோனா காப்புகள்
The ERVAMATIN™ HAIR LOTION
உங்கள் முடியுதிர்வை தடுக்கவும் மீண்டும் தலைமயிர் வளரவும் மிக உன்னதமாக தொழில் புரிகிறது எவமாட்டின் மூலிகை ஔடதம்! உலகெங்கும் பல்லாயிரக்கணக்கானவரின் பாராட்டுதலைப் பெற்ற மூலிகைத் தயாரிப்பு. இப்போது எவமாட்டின் சாம்பூவும் கிடைக்கிறது.
Tel: 416•264•8787
SABONA
க்லூட்டியலா பானமானது மிகுதியான உடல் கொழுப்பை குறைக்கக் கூடியதும், ஊமைச் சதை பெருகுவதை தடுக்கவும், கொழுப்பினால் விளையக் கூடிய கெடுதியினை கட்டுப்படுத்தவும் வழிவகுக்கிறது.
டயபீனா இது உடலில் மிகுதியான குழுக்கோசினை குறைக்கக்கூடியது. கண்டிப்பாக நீரிழிவு நோயினால் வருந்துபவர்கள் மட்டுமே பாவிக்கவேண்டியது.
கொன்சிடாப் மலச்சிக்கலுக்கு எதிராக போட்டியிடும் சக்திவாய்ந்தது. உடலிலிருந்து கழிவுப் பொருட்களை இயற்கையான முறையில் வெளியேற்றுவதற்கு உதவுகிறது.
இயற்கை மூலிகையிலான தலை முடி மை
இயற்கை மூலிகையான மருதாண்டி கொண்டு செய்யப்படும் இவ் மை உங்கள் தலை முடியையும் நன்கு பராமரிக்கிறது.
லோங்லைஃப் இதனை தினமும் அருந்துவதன் மூலம் எமது சரீரத்தின் வெளித்தோற்றத்தையும் திடகாத்திரதன்மையையும் விருத்தி செய்து கொள்ளலாம்.
www.dreamron.ca
www.mediherbs.ca
இங்கேயும் விற்பனையாகின்றன!
மிக விரைவில் ஐரோப்பா எங்கும் விற்பனையாகவிருக்கின்றன
New Spicy Land
416 292 9769
Daily Needs
416 490 7703
Jaffna Super Store
416 289 8812
M&S Convenience
416 444 8202
Eera Super Market
416 269 2622
Durcaa Supermarket.
905 796 6762
Amazon Health Care
www.amazonhealthcare.com 2602, Eglinton Ave East (Midland/ Eglinton)

# கடன்தொல்லை?




- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

**நாங்கள் ஒரு புதிய ஆரம்பத்திற்கு வழிகாட்டுகிறோம், இனி**

- நிம்மதியான தூக்கம்
- மீண்டும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்கலாம்
- ஏக்கத்தை விட்டொழிக்கலாம்
- உங்கள் மேலிருக்கும் அந்தச்சுமையை அகற்றிவிடலாம்
- உங்களைப் பற்றி பெருமையாயும், ஆனந்தமாயும் உணருங்கள்
- இனி கட்டவேமுடியாத Billகளைப்பற்றி கவலையில்லை.
- நண்பர்கள், உறவினர்களிடம் கடன் வாங்கும் சிறுமையும் இனி இல்லை

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**SRI**

**CREDIT SOLUTION CENTRE**

Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ்
இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்

80 Corporate Drive, Suite 309
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Fax: 416.439.0226
creditsolutioncentre@gmail.com



digi

# கனடாவில் தனிநபரின் வங்குரோத்து நிலை

## (Personal Bankruptcy in Canada)

கனடாவில் வங்குரோத்து நிலை என்பதன் எண்ணக் கருத்து உங்களது கடன்கள் அனைத்தையும் முழுமையாக இல்லாமல் செய்வதற்காக நீங்கள் உங்களது சொத்துக்கள் அனைத்தையும் வங்குரோத்து செயற்பாட்டுக்கான நம்பிக்கை பொறுப்பாளரிடம் (trustee in bankruptcy) ஒப்படைப்பதாகும். வங்குரோத்து செயற்பாட்டின் உதவியின் மூலம், அதிகளவு கடன் சுமையை உடைய ஒருவர் புதிய வாழ்வைத் தொடக்குவதற்கு வழி ஏற்படுகிறது.

தனியார் வங்குரோத்து என்பது கனடிய மத்திய அரசாங்கத்தின் the Bankruptcy & Insolvency Act என்ற சட்டத்துக்கு உட்பட்ட சட்டவியல் செயற்பாடாகும். நேர்மையான வாழ்க்கை நடத்தும் ஒருவர் துரதிஷ்டவசமாக கடனாளியாகும் நிலை ஏற்படுமானால் இந்தச் சட்டம் அவருக்கு நிவாரணம் வழங்கும். அதே சமயம் அவருக்கு கடன் வழங்கியவர்கள் யாவரும் சமமான வகையில் நடத்தப்படுவதற்கும் இந்தச் சட்டம் வழி வகுக்கிறது.

கனடாவில் ஒருவர் வங்குரோத்து நிலைக்கு செல்வதற்கு தகுதி பெறுவதற்கு அவர் இந்த நாட்டில் வசிப்பவராக அல்லது இங்கு வர்த்தக துறையில் ஈடுபடுபவராகவும், அவர் தனது கடனை செலுத்த முடியாதவராகவும் (Insolvent) இருக்க வேண்டும். அதன் அர்த்தம் பின்வருமாறு:

- அவர் குறைந்தது $1,000 கடனுடையவராக இருக்க வேண்டும்.
- திருப்பி செலுத்த வேண்டிய வேளையில் கடனை கொடுக்க முடியாத நிலையில் இருக்க வேண்டும்.

### வங்குரோத்து நிலை செயற்பாட்டுக்கான கட்டணம்

வங்குரோத்து நிலை செயற்பாட்டுக்கான நம்பிக்கை பொறுப்பாளர்கள் யாவரும் மத்திய மத்திய அரசின் அனுமதி பெற்றவர்கள். அவர்களது கட்டணங்கள் யாவும் சட்டத்தினால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனவே வங்குரோத்து நிலைச் செயற்பாட்டிற்கான கட்டணம் நியாயமானதாகவே அமையும்.

### கடன் வழங்கியவர்களின் செயற்பாடுகள் நிறுத்திவைக்கப்படும்

வங்குரோத்து நிலை செயற்பாடு சட்டபூர்வமானது. எனவே, இச்செயற்பாடு தொடங்கிய பின்பு, கடன் வழங்கியவர்களின் செயற்பாடுகள் யாவும் நிறுத்திவைக்கப்படும் (Stay of proceedings). இதன் காரணமாக உங்களது சம்பளத்தில் இருந்து பணம் கழிக்கப்படுதல் (Garnishment), சட்ட நடவடிக்கை எடுக்கப்படுதல், கடன் வழங்கியவர்கள் உங்களை தொலைபேசியில் அழைத்தல் ஆகிய செயற்பாடுகள் யாவும் தடுத்து நிறுத்தப்படும்.

### வங்குரோத்துநிலையில் இருந்து விடுபடுவதற்கான காலம்

நீங்கள் முன்பு எப்பொழுதும் வங்குரோத்து நிலைக்கான செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்காதவராக இருப்பவராகவும், தற்போதைய வங்குரோத்து நிலை தொடர்பான கடமைகள் பொறுப்புக்கள் என்பவற்றை முழுமையாக நிறைவேற்றியவராகவும் இருந்தால், பொதுவாக ஒன்பது மாதத்தின் பின்பு உங்களால் வங்குரோத்து நிலை பொறுப்புக்களில் இருந்து விடுபட முடியும். (வங்குரோத்து நிலையில் இருந்து விடுபடுவதற்கு நீதிமன்றம் விதித்துள்ள ஆகக் குறைந்த காலம் இதுவாகும்)

உங்களது வங்குரோத்துநிலை தொடர்பான தகவல்கள் ஆறு வருடங்கள் வரை பதியப்பட்டிருக்கும். இதன் காரணமாக எதிர்காலத்தில் நீங்கள் கடன் பெறக்கூடிய தகமை பாதிக்கப்படலாம்.

### கனடாவில் தனிநபரின் வங்குரோத்து நிலை (Personal Bankruptcy in Canada)

ஒரு தனி நபர் வங்குரோத்து நிலைக்கு விண்ணப்பிக்க வேண்டி ஏற்படுவதற்கான காரணம் என்ன?

பெருமளவு கடன் சுமை காரணமாக நீங்கள் நிதி நெருக்கடியை சந்திக்க நேரிடும் போது, வங்குரோத்து நிலைக்கு விண்ணப்பம் செய்து உங்கள் பிரச்சினைக்கு முடிவு காண்பது பற்றி நீங்கள் சிந்திக்கலாம். கனடாவில் களை ஆராய்வது அவசியம். அவ்வாறான சில தீர்வுகள் பின்வருமாறு.

- உங்களது கடன்களை ஒன்றிணைக்கும் கடன் (Debt Consolidation Loan) பெறுதல்.
- Credit Counseling பெற்று உங்களது கடனை கட்டுப்படுத்த முயற்சி செய்தல் (Credit Counselling & Debt Management).
- கடன் பெற்ற ஒருவர் கடன் வழங்கியவர்களிடம் பெற்ற தொகையின் ஒரு பகுதியை திரும்ப செலுத்துவது தொடர்பாக ஆலோசனைகளை முன்வைத்தல். (Consumer Proposal)
- தனியார் வங்குரோத்து நிலைக்கான செயற்பாடு (Personal Bankruptcy) க்கு முயற்சித்தல்.

> “வங்குரோத்து நிலை செயற்பாடு சட்டபூர்வமானது.
> எனவே, இச்செயற்பாடு தொடங்கிய பின்பு,
> கடன் வழங்கியவர்களின் செயற்பாடுகள் யாவும்
> நிறுத்திவைக்கப்படும் *(Stay of proceedings).*
> இதன் காரணமாக
> உங்களது சம்பளத்தில் இருந்து பணம்
> கழிக்கப்படுதல் *(Garnishment),*
> சட்ட நடவடிக்கை எடுக்கப்படுதல்,
> கடன் வழங்கியவர்கள் உங்களை
> தொலைபேசியில் அழைத்தல்
> ஆகிய செயற்பாடுகள் யாவும்
> தடுத்து நிறுத்தப்படும்.”

ஒவ்வொருவருடமும் ஏறக்குறைய 100,000 பேர் தனிநபர் வங்குரோத்து நிலை (Personal Bankruptcy) அல்லது கடன் பெற்றவர்கள் முன்வைக்கும் ஆலோசனைகள் (Consumer Proposal) என்ற செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

### உங்களுக்கு பின்வரும் பிரச்சினைகள் ஏதாவது உண்டா?

- வேலை இழப்பு அல்லது தனிப்பட்ட வர்த்தக செயற்பாட்டில் நஷ்டம் ஏற்பட்டதனால், வருமான இழப்பு ஏற்படுதல்.
- உங்களது வருமானத்தில் இருந்து திரும்ப செலுத்த முடியாத அளவுக்கு அதிக அளவான மாணவர் கல்விக் கடன் இருத்தல்.
- விபத்து அல்லது கடுமையான நோயின் காரணமாக பெறப்பட்ட கடனைத் திருப்பிக் கட்ட முடியாத நிலை ஏற்படுதல்.

### நீங்கள் எதிர்நோக்கும் நிதி நெருக்கடிக்கு தனிப்பட்ட முறையிலான வங்குரோத்து மட்டுமா ஒரே தீர்வு?

இல்லை. தனிப்பட்ட முறையிலான வங்குரோத்து நிலைக்கு விண்ணப்பிப்பதற்கு முன்பு நீங்கள் பல்வேறு மாற்றுவகையிலான தீர்வு-

மேலே உள்ள நான்கு தீர்வுகள் ஒவ்வொன்றும் அதற்கு முன்பு குறிப்பிடப்பட்டுள்ள தீர்வை விட கடுமையான தன்மையுடையது. எனனவே மேலே குறிப்பிடப்பட்ட நான்கு வகை தீர்வுகளையும் அதே ஒழுங்கு வரிசையில் ஆராய வேண்டியது அவசியம்.

இவற்றில் எது உங்களுக்கு பொருத்தமானது என்று நீங்கள் முடிவு செய்வதற்கு, அனுமதி பெற்ற வங்குரோத்து நிலை பொறுப்பாளர் ஒருவரின் உதவியைப் பெறமுடியும்.

### தனிநபர் வங்குரோத்து நிலையினால் ஏற்படும் நன்மை, தீமைகள்

#### நன்மைகள் (Advantages)

- நீங்கள் பெற்ற கடனை, உங்களிடமிருந்து பெறுவதற்கு சட்டபூர்வமான நடவடிக்கை எடுத்தல், உங்களது சம்பளத்தில் இருந்து பணம் (aynishment) கழிக்கப்படுதல், பணம் அறவிடுவதற்கான தொலைபேசி அழைப்புக்கள் என்பனவற்றில் இருந்து பாதுகாப்பு வழங்கப்படுகிறது.
- நீங்கள் பெற்ற உத்தரவாதமற்ற கடன்கள் (Unsecured Debts) முற்றாக நீக்கப்படுகிறது.
- சட்டபூர்வமான இந்த செயற்பாட்டை மிக



வி. சிறி

விரைவாக செய்து முடிக்கலாம்.
- உங்களது பிரச்சினைக்கான ஏனைய தீர்வுகளை விட வங்குரோத்து நிலை செயல்ப்பாடு மிகவும் குறைந்த செலவுடையது.

#### தீமைகள் (Disadvantages)

- நீங்கள் கடன் பெறக்கூடிய தன்மை கடுமையாக பாதிக்கப்படும்.
- நீங்கள் உங்களது உடமைகள் சிலவற்றை வங்குரோத்து நிலை பொறுப்பாளரிடம் ஒப்படைக்க வேண்டி நேரிடலாம்.

நீங்கள் வங்குரோத்து நிலையில் இருக்கும் காலப்பகுதியில் உங்களது வரவு, செலவு பற்றிய விபரமான பதிவுகளை (Detailed records of your income and expenses) பதிவீடு செய்து வைக்க வேண்டிய கட்டாயம் உண்டு.

### உங்கௗது கடன்களில் இருந்து விடுபடுவதற்கான விதிவிலக்குகள்

#### A. உத்தரவாதமற்ற கடன் (Unsecured Debts)

வங்குரோத்து நிலை செயற்பாடு என்பது
- கடன் அட்டை (Credit cards)
- தனிப்பட்ட கடன் (Personal Loans),
- வருமான வரி (Income Tax)
- உங்கள் வங்கி கணக்கில் உள்ள தொகையை விட மேலதிகமாக பணம் எடுத்தல் (Over Draft)

போன்ற விடயங்களுடன் மட்டுமே ஈடுபடுகிறது.

#### B. உத்தரவாதத்துடன் பெறப்பட்ட கடன் (Secured Debt)

கார் வாங்குவதற்காக பெறப்பட்ட கடன் (Car Loan) வீட்டு அடைமானக் கடன் (Mortgage) ஆகியவை வங்குரோத்து நிலை செயற்பாடுகளில் உள்ளடக்கப்படுவதில்லை. ஏனெனில் இவ்வகையான கடன்களை பெறும் போது ஏதாவது ஒரு சொத்தை பொறுப்பாக வைத்து அந்த உத்தரவாதத்தின் அடிப்படையிலேயே நீங்கள் கடன் பெறுகிறீர்கள். எனவே நீங்கள் அவர்களுக்கு செலுத்த வேண்டிய கடனை உங்களிடமிருந்து பெறுவதற்கு அவர்கள் வங்குரேத்து நிலை செயற்பாட்டினூடாக செயற்பட வேண்டியதில்லை.

**குறிப்பு:** உத்தரவாதமின்றி பெறப்பட்ட ஒரு சில வகை கடன் பொறுப்புக்களில் இருந்து வங்குரோத்து மூலம் விடுபட முடியாது.

**உதாரணம்:**

- நீங்கள் உங்களது கல்வியை முடித்து 7 வருடங்களுக்கும் குறைவான காலம் வரையிலான, மாணவர்களது கடன் (Student Loan)
- தாபரிப்பு பணம் (Alimon payment), பிள்ளை பராமரிப்புக்கான பணம் (child support).

சொத்துக்கள் முழுவதையும் ஒப்படைப்பது தொடர்பான விதிவிலக்குகள் (Exceptions to the Surrender of all Assets) பற்றிய விபரங்களுடன், ஜனவரி மாதத்தொடர் வளரும்...

sri.v@thaiveedu.com

■ ■ ■

# உடுக்கை இழந்தவன் கைபோல்



சிவவதனி
பிரபாகரன்

'நண்பனுக்காக உயிரையும் கொடுப்பது பெரிய விடயமல்ல. ஆனால் உயிரைக் கொடுப்பதற்குரிய நண்பனைப் பெறுவதே கடினம்'

உலகிலேயே எவன் செல்வந்தன் என்றால் நல்ல நண்பர்களை உடையவனே என்பேன். நல்ல நண்பர்கள் நிறைவான வாழ்விற்கு வழிகாட்டுகின்றனர்.

நல்ல நண்பர்களை இழப்பதை விட இவ்வுலகத்தில் மிகப்பெரிய இழப்பு என வேறொன்றும் இல்லை. உண்மையான நண்பர்கள் எவ்வித எதிர்பார்ப்புமின்றி உண்மையன்போடு பழகுவார்கள். உண்மையுள்ள இடத்தில் நட்பு தளைக்கும். உண்மை பொய்க்கும் இடத்தில் நட்பு சாகும்.

'உயிர் காப்பான் தோழன்' என்பர். உண்மையான நண்பன் நட்பிற்கு உயிர் கொடுப்பான். தன் தோழன் உயிர் காக்க தன்னுயிர் துறக்கவும் துணிவான். இன்றைய உலகில் உண்மையான நட்பைக் காண்பது வெகு அபூர்வம். உண்மையான நண்பர்களாகத்தான் இல்லாது போனாலும் நட்பிலேனும் உண்மை பேணுபவர்களாக இன்றைய மாந்தர் வாழ்கின்றனரா என்றால் இல்லையென்றே தோன்றுகின்றது.

நம்பிக்கைக்குரிய ஆத்ம நண்பர்களை காவியங்களில் மட்டுமே காணமுடிகின்றது. மானிடர்கள் எல்லோருள்ளுமே ஏதோவொரு சுய நலம் மட்டுமே தலைவிரித்தாடுகின்றது. சுயநலமாக இருப்பதில் தவறில்லை. எம் வாழ்வில் சிலபொழுதுகளேனும் உறவுகளைப் பேணி மதிப்பதாக, உறவுகளுடனான உண்மை அன்பை வலுப்படுத்துவதில் செலவிடுகின்றோமா என்று எம்மை நாமே கேட்டுப்பார்க்க வேண்டும். உண்மை நட்பை உரமூட்டி வளர்க்கும் நல்ல நண்பர்களாக நாம் வாழ்கின்றோமா என எம்மை நாம் வினவவேண்டும்.

தமிழர்களது வரலாற்றில் நட்பு பூணுதலும் நட்பைப் போற்றுதலும் காலம் காலமாக வலியுறுத்தப்பட்டு வந்துள்ளது.

இற்றைக்கு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் எழுதப்பட்ட திருக்குறளில்

'உடுக்கை இழந்தவன் கை போல
ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு'

என அற்புதமாக வரைவிலக்கணம் தருகிறார் திருவள்ளுவர். எம் உடலிலிருந்து நழுவும் ஆடையை எம் கைகள் நாமுணருமுன்பே ஓடிச்சென்று பிடித்து ஏந்தி எம் மானத்தைக் காப்பது போல், தன் நண்பனுக்கு ஒரு ஊறு வருகையில் உடன் சென்று உதவுபவனே உண்மையான நண்பன் ஆவான். உண்மையான நண்பர்கள் இன்பத்தில் மட்டுமன்றி துன்பத்திலும் பங்கெடுத்து அருகிருப்பர்.

வெறுமனே முகம் சிரிக்க நடப்பது மட்டும் நட்பன்று. முகமும் அகமும் மலரும் வண்ணம் உள்ளன்பு கொண்டாடுவதே நட்பின் சிறப்பு.

உலகில் இரத்த பந்தம் இல்லாமலே எங்கெங்கோ பிறந்து வளர்ந்த இருவர் தமக்குள்ளே இதர இறுக்கமான விசுவாசமான பற்றை வளர்த்துகொள்ளும் இந்த உறவு இதர உறவுகளை விஞ்சிய உறவாகத் திகழுகின்றது.

நட்பு வட்டத்துள் நுளைந்தால் மட்டும் நல்ல நட்பு என்று ஆகிவிட முடியாது. தன்னலமற்ற நட்பாக இருக்க முடியாத ஒரு நட்பு வளர்வதை விட தேய்ந்து மறைவதே நன்று.

நண்பர்கள் எங்கள் முகவரியைச் சொல்வார்கள். 'உன் நண்பன் யாரென்று கூறு. உன்னைப்பற்றிச் சொல்லிவிடுகின்றேன்' என்பார்கள். எனவே எம் நண்பர்களை நல்ல நண்பர்களாக தெரிவு செய்வது அவசியமாகும். நாங்கள் யார் என்பதை எடுத்துச்சொல்பவராக மட்டுமல்ல எடுத்துக்காட்டாக வாழ்பவராகவும் எம்மை சுற்றியுள்ள நண்பர்கள் திகழ்கின்றனர்.

நல்ல நட்பு என்பது கிடைத்தற்கரிய மாணிக்கம் போன்றது. அங்ஙனம் கிடைத்தற்கரிய நட்பை பெற்றபின் அதனை நிலைக்க வைக்க அரும் பாடு படவேண்டும்.

'எவருடனும் நட்பு பூண்கையில் அவசரப்படாதீர்கள். அங்ஙனம் நட்பு கொண்டபின் அதனை நிலைத்து வைக்க இயன்றவரை முயலுங்கள்' என்கின்றார் சாக்கிரடீஸ்.

நல்ல நண்பர்கள் கவலை போக்கும் மருந்தாகத் திகழ்வர். திருவள்ளுவர் நட்பைப்பற்றிக் கூறுகையில்,

'அழிவின் அவைநீக்கி ஆறு உய்த்து
அழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு'

என்கிறார். அதாவது அழிவைத்தரும் தீமைகளை நீக்கி நல்ல வழியில் நடக்கச் செய்து கேடுவரும் காலத்தில் உடன் இருந்து துன்பத்தை பகிர்வதே நட்பாகும் என மிகச் சிறப்பாக சொல்லியுள்ளார். நட்பில் நல்லது தீயது என இருவகை கிடையாது. நன்று மட்டுமே நட்பு. மற்றையவை நட்பு எனும் வேடம் தரித்திருந்தாலும் கயமைத்தனத்தின் வெளிப்பாடேயாகும். உறவாடிக் கெடுக்கும் இன்றைய நண்பர்களைப் பார்க்கின்றோம். ஆவர்களை நண்பர்கள் என்று சொல்வதே நட்பிற்கு இழுக்காகும். துரோகிகளை திட்டுவதைவிட துரோகிகளை நண்பர்களாக்கியவர்களையே தவறிழைத்தவர்கள் என சாடுவேன். பாலும் நீரும் கலந்து வைத்தால் நீரில் இருந்து பாலை விலக்கி அருந்தும் அன்னப் பட்சிகள் போல் நல்ல நண்பர்களை தெரிந்து வாழும் பக்குவத்தினை நாம் சிறு வயதிலிருந்தே பெறவேண்டும்.

நட்பு என்பது அடிப்படையில் தூய அன்பின் வெளிப்பாடே என்றாலும் அதற்கென தனித்துவமான பல சிறப்புக் குணங்கள் உள்ளன. நல்ல நண்பனாக இருப்பதற்கு நண்பன் துயரைத் தன் துயராக எண்ணிச் சுமக்கும் தாய்மை மனப்பாங்கு இருப்பது அவசியம்.

அழைத்து வருபவன் விருந்தாளி. அழையாமலே ஓடி வந்து வாசலில் நிற்பவனே நல்ல நண்பன். மனிதர்க்கு மனிதர் குணங்கள் வேறுபடலாம். தகைமைகள் தரங்கள் பண்புகள் கூட வேறுபடலாம். ஆனால், எத்தகைய வேறுபாடுகளையும் கடந்து அன்பு என்ற உறவுச் சங்கிலியால் பிணைக்கும் சக்தி உண்மையான நட்புக்கு மட்டுமே உண்டு.

> **"மனிதர்க்கு மனிதர் குணங்கள் வேறுபடலாம்.**
> **தகைமைகள் தரங்கள் பண்புகள்கூட வேறுபடலாம்.**
> **ஆனால்,**
> **எத்தகைய வேறுபாடுகளையும் கடந்து**
> **அன்பு என்ற உறவுச் சங்கிலியால் பிணைக்கும்**
> **சக்தி**
> **உண்மையான நட்புக்கு மட்டுமே உண்டு."**

நல்ல நட்பின் துணை இல்லாதவர்கள் துடுப்பில்லாத ஓடங்கள் போன்றவர்கள். துன்பத்தில் துணையில்லாதான் வாழ்வு பட்ட மரத்திற்கு ஒப்பானது. நல்ல நண்பர்களின் அன்பான வார்த்தைகள் மருத்துவர்கள் தரும் மருந்தை விட மகத்தானவை.

நல்ல நட்பைச் சம்பாதிக்க வேண்டுமானால் முதலில் நாம் நல்ல நண்பர்களாக வாழக் கற்றுக்கொள்ள வேண்டும்.

கனிகொண்ட மரத்தை நாடி பறவைகள் வருவதும், பூத்திருக்கும் செடிகளை நாடி வண்டுகள் வருவதும் அதிசயமல்ல. அதேபோன்ற வசதிபடைத்தவரை நண்பர் குழாம் இலகுவில் சூழ்ந்து கொள்ளும். பசையுள்ள போது ஒட்டிக்கொள்ளும் இத்தகைய நட்புகளில் உண்மை அன்பைக் காண்பது அபூர்வம். மாறாக இழிநிலையுற்றாலும் உற்ற உறவாக ஓடோடி வந்து தோள் தருபவனே நல்ல நண்பன் ஆவான். நல்ல நண்பரால் இன்பம் கூடுவதோடு துன்பங்கள் விலகும்.

இன்றைய உலகில் பணத்திற்கு கொடுக்கும் முன்னுரிமையை நாம் நண்பர்களுக்கும் இதர உறவுகளுக்கும் கொடுக்கத் தவறுகின்றோம். அதனால் தான் எவ்வளவோ வசதிகள் செல்வங்கள் இருந்தாலும் மனிதர்கள் மனங்களில் நெருடிக் கொண்டிருக்கும் குறைகளோடு வாழுகின்றனர்.

எம்முன்னால் தேனொழுகப் பேசிவிட்டு எம் முதுகுக்கு பின்னால் எம்மைப்பற்றி அவதூறாக புறம்பேசும் 'நண்பர்கள்' போல் வேசமிடும் கயவர்களிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

அவர்கள் மனங்களில் தூய நட்பின் உணர்வு இருக்குமானால் ஒருபோதும் தம் நண்பர்களை யாருக்காகவும் எவரிடமும் எந்நிலையிலும் விட்டுக்கொடுக்க மாட்டார்கள்.

கூடிச் சிரிப்பதை விட நெறி தவறுகையில் உடன் இருந்து காத்து நன்னெறிப்படுத்துவதே நல்ல நட்பு.

நடுத்தர விவசாயக் குடும்பத்தில் பிறந்த ஆபிரகாம் லிங்கன் அமெரிக்க அதிபராக வருவதற்கு பலவகையிலும் உதவியர்வர்களில் அவரின் நல்ல நண்பர்களின் பங்கு முக்கிய மானது. நல்ல நட்பினால் அருஞ் செயல்களைச் சாதனையாக்கிக் காட்ட முடியும்.

நல்ல நண்பர்கள் விழிதொடும் தூரத்தில் இருக்க வேண்டுமென்றில்லை. தொலை தூரத்தில் வாழ்ந்தாலும் அவர்களின் இதயங்கள் அருகமர்ந்து பேச வேண்டும். நிறைந்த நட்பு வளர்மதியாக வளர்ந்து கொண்டே இருக்கும். அத்தகைய நட்பின் வளர்ச்சிக்கு எல்லையோ தேய்வோ கிடையாது.

நட்புக்கு வயதுகள் கிடையாது. எனினும் ஒரே பருவத்தினரின் நட்பு ஒருவருக்கொருவர் பயனுள்ளதாக இருக்கும். உண்மையும் நேர்மையும் நட்புக்கான இருகண்கள் போன்றவை. எங்கே இவ்விரண்டும் களங்கம் பெறுகிறதோ அங்கே நட்பு சிதைக்கப்படுகின்றது.

ஒருவருக்கு சமூகத்தில் நல்ல அங்கீகாரம் வேண்டுமானால் நல்ல நண்பர்கள் அவர்களுக்கு இருப்பது அவசியம்.

ஔவையார் ஆத்திசூடியில் 'இணக்கம் அறிந்து இணங்கு' என நல்லவர்களை இனம் கண்டு நட்புப் பூணுமாறு கூறுகின்றார். அதேபோல் 'கூடா நட்பு கேடாய் முடியும்' எனவும் எச்சரித்திருக்கிறார்.

நட்புப் பூணும் நற்பண்பை சிறுவயது முதலே வளர்த்துக்கொள்ளல் அவசியம். நண்பர்கள் இல்லா உலகம் பாலைவனத்துப் பயணத்திற்கு ஒப்பானது. ஆனால், நல்ல நண்பர்கள் உள்ளவர்கள் வாழ்வோ பாலைவனப் பயணத்தையும் பசுஞ்சோலைவழிப் பயணமாக மகிழ்ந்து இரசிக்க வைக்கும்.

வாழ்வை நீடிக்க உதவுவது நட்பு. சமூக நல்லுறவு போல் மலிவான மகத்தான மருந்து வேறொன்றுமில்லை. நல்ல சமூகஉறவினை சுமூகமாக்கி வளர்த்துக்கொள்ள நட்புணர்வு உதவுகின்றது.

அமெரிக்கா, ஸ்கண்டிநேவியா, யப்பான் ஆகிய நாட்டு ஆராய்ச்சிகள் சிலவற்றில் நட்பிற்கும் ஆரோக்கியமான நல்வாழ்விற்குமிடையே தொடர்புகள் உள்ளதாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

'நட்பு ஒரு சுகம்.
விவரிக்க முடியாத சுகம்.
எண்ணிப் பேச வேண்டாத
அளந்து பேசத் தேவையற்ற
ஆனால், நினைத்ததை
அப்படியே கொட்டக்கூடிய நேசம்'

என்கிறார் ஆங்கிலக் கவிஞர் ஜார்ஜ் எலியட்.

வாழ்நாளில் நண்பர்களோடு கழிக்கும் நேரங்கள் பொன் போன்றவை. நல்ல நண்பர்களை கொண்டிராவிட்டாலும் நண்பர்கள் போல் பழகும் கயவர்கள் நட்பு சூழாது பார்த்துப் பழகுவோமாக. அதேபோல் நண்பர்களுக்கு மனதாலேனும் துரோகம் இழைக்காத நல்ல நண்பர்களாக வாழ்ந்து நட்பை வாழவைப்போமாக. இங்ஙனம் உலக மாந்தர் ஒவ்வொருவரும் நினைவுகளைச் சுத்தமாக்கி உறவுகளைப் பேணினால் தீதென்றும் அநீதியென்றும் உலகில் ஏது மிஞ்சும்?

நாம் தவறு செய்கையில் தடுத்து நல்ல செயல்களுக்கு வழிகாட்டி தோள் கொடுக்கும் நட்பை உயிருள்ளவரை காப்போமானால் வாழ்வில் இன்பம் என்றென்றும் நிறைந்து இருக்கும். எல்லோரும் இன்புற்றிருக்க எண்ணுவோமாக.

sivavathani.p@thaiveedu.com

■ ■ ■

**Saree Blouse**

உங்கள் சகலவிதமான சாறி புளவுஸ் (Saree Blouse) தைப்பதற்கும் அழையுங்கள். 416 264 6400


வீடு வியாபார நிலையம் வாங்க விற்க...
$299.900
Rehab Buisness with Property
Midland / McNicoll
$499,900
Port Union / Lawson
4 Bedrooms 4 Washroom
Finished Basemen
$429,900
BRAMPTON
Torbram & Father Tobin
4 Bedrooms 3 Washroom
$599.000
WOODBRIDGE
Rutherford / Western Rd
4 Bedrooms, 4 Washroom
Finished Basement
$429.900
Rutherford / Weston
3 Bedrooms, 3 Washroom
In Cambridge
GAS STATION WITH CONV. + LOTTO 649 + WAREHOUSE +GARAGE
$845.000
In Hamilton
GAS STATION
Petro Canada
$1,700.000
In Orono
ESSO GAS STATION
$1,100.000
In Norwood
ESSO GAS STATION
$749.000
In Port Hope
SHELL GAS STATION
$1,750.000
மேலும் பல GAS STATION களும் விற்பனை நிலையங்களும் விற்பனைக்குண்டு
நம்பிக்கை நேர்மை நட்பான சேவைக்கும் அழையுங்கள்
*Some conditions may apply
சத்தி மருதப்பா
Sales Representative
[முழுநேர வீடு விற்பனை முகவர்]
Affiliate Realty Inc.
Brokerage
208 - 80 Corporate Drive,
Toronto, Ontario M1H 3G5
Bus: 416-290-1200
Fax: 416-290-1900
416-816-1500
Century 21


வீடு வியாபார நிலையம் வாங்க விற்க...
$191,000
Bank Sale
Kingston/Glenanna
2+1 Bdrm & 3 Wrm
Geat Location
$139,900
BANK SALE
Jane/Sheppard
3 Bdrm & 2 Wrm
Convenient Location
$155,100
Kennedy/401
3 Bdrm & 1 Wrm
Excellent Location
$193,000
Mccowan/401
1 Bdrm & 1 Wrm
Great Location
$139,000
Vic Park/Danforth
2 Bdrm & 1 Wrm
Excellent Location
$289,900
Meadowvale/ 401
3+1 Bdrm & 2 Wrm
Finised Basement
$369,200
Conlins/Ellesmere
3 Bdrm & 2 Wrm
Excellent Location
$369,900
Brimley/Brimorton
3+2 Bdrm & 2 Wrm
Fin Bsmt & 2 Kit
$169,900
Middlefild/Finch
2+1 Bdrm & 1 Wrm
Excellent Location
$365,990
Brimley/Lawrence
3+3 Bdrm & 2 Wrm
Fin Bsmt & Sep Ent
$1500
Lease
Wasaga Beach
2 Bdrm & 2 Wrm
5 mins Drive To Beach
$189,000
Lowrence/Midland
2Bdrm & 2 Wrm
Great Location
If u want to see more houses visit at
www.krishome.ca
Are You Investor?
you want to buy new condos in Toronto
Call krish for more details...
Full Time Realtor
Krish Sivapatham
Sales Representative
Direct : 416-895-4457
HomeLife/ Future Realty Inc., Brokerage
205 - 7 Eastvale Dr, Markham, ON, L3S 4N7
Bus:905-201-9977 Fax: 905-201-9229
Indepently Owned and Operated, REALTOR
This is not intended to solicit properties Currently under conract/ some conditions may apply
HOMELIFE HIGHER STANDARDS
CENTUM
Gold Mortgages
Looking out for your best interest
இது ஒரு நல்ல சந்தர்ப்பம், உங்கள் நிதிப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு...
1st, 2nd, 3rd MORTGAGES *
COMMERCIAL MORTGAGE *
LINE OF CREDIT *
POWER OF SALE *
SELF - EMPLOYED *
BRIDGE FINANCING *
SWITCHING *
REFINANCING *
BAD CREDIT *
All Mortgages Needs
☎: 416- 844-8692
supen71@hotmail.com
Fixed rate
as low as for 5 yrs - 3.65%
closed variable
as low as - 2.25% (prime rate)
open variable
as low as - Prime(2.25%) + 0.70
Second mortgage avaiable with out income qualify and deal can be closed within two days.
Supen Subramaniam
Mortgage Consultant (MO8006045)
*Some Condition Apply



# Shan Thayaparan

Sales Representative




**Thinking of .....**

Selling

Buying or

Renting....

**For all your Real Estate needs**

**Please Call me First.**

***Dir: 416-567-7675***

***Web:shan123.com, Email: shan123@rogers.com***

***Bus: 416-321-2228***

Flexible Commission

Reliable Service & Full Time Agent

Free Market Evaluation

RE/MAX Above the Crowd!® Vision Realty Inc. 2210 Markham Road. TorontoM1B 5V6

My Team will help you to find Lawyers, Home Inspectors, Mortgages
Also We do Refinances and find Tenants for your Rental properties

*Not Intended to solicit properties currently listed or Buyers under buyers under agreement*

# வீடுகளின் திருத்த வேலைகளுக்கு அரச கூட்டுத்தாபனம் வழங்கும் உதவிகள்

**‘சொந்த குடியிருப்பு வீடுகளின் முக்கிய திருத்த வேலைகளுக்கு அரச கூட்டுத்தாபனம் வழங்கும் பண உதவிகள்’ (Home owner Residential Rehabilitation Assistance Program – RRAP’ Provided by Canada Mortgage and Housing Corporation)**

கனடாவில் தமது சொந்த வீட்டில் குடியிருக்கும் ஒருவர் தமது வருமானம் குறைந்த நிலையில் வாழ்ந்து வரும் கட்டத்தில், தமது வீட்டில் உள்ள சில குறிப்பிடப்பட்ட முக்கியமான திருத்த செலவுகளுக்கு அதாவது கட்டாயம் செய்தேயாக வேண்டும் என்ற வேலைகளுக்கு மட்டும் திருப்பி செலுத்த தேவையே இல்லாத பண உதவிகளை ஒரு அரச கூட்டுத்தாபனம் செய்து வருகின்றது என்பதனை அறிந்து கொண்டீர்களா? அந்த நிறுவனமே ‘கனடா அடமான வீட்டு கூட்டுத்தாபனம்’ (Canada Mortgage and Housing Corporation) ஆகும்.

கனடிய மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும் இத்தேசிய கூட்டுத்தாபனம் கனடாவில் வீடு தொடர்பான நிர்மாணங்கள், மற்றும் வீடுகளை அடமானம் வைத்து வழங்கும் கடன்கள் தொடர்பான சட்டங்கள் போன்றவற்றை நடைமுறைப்படுத்துவதுடன், இவ் இரு விடயங்களிலும் (வீடுகள் + வீட்டு அடமானக் கடன்கள்) பல்வேறு வகையான சேவைகளையும் செயல்பாடுகளையும் நாட்டு மக்களுக்கு வழங்குகின்றது.

ரொறன்ரோவில் இக் கூட்டுத்தாபனத்துடன் தொடர்பு கொள்ள வேண்டுமாயின் பின்வரும் விலாசத்தில் இந்நிறுவனம் இயங்குகின்றது.

**Canada Mortgage & Housing Corporation**
**CMHC Ontario Business Centre**
**100, Sheppard Avenue East**
**Suite #300**
**Toronto**
**Ontario M2N 6Z1**

**தொலைபேசி: (416) 221 2642**
**1 800 668 2642**

**இணையதளம்: www.cmhc.ca**

ஆனால் வீடுகளின் திருத்த செலவுகளுக்கு இக் கூட்டுத்தாபனம் மட்டுமல்ல இதனுடன் சேர்ந்து மாகாண அரச, நகர சபை அரசுகளின் நிறுவனங்களும் சேர்ந்து பண உதவி வழங்கும்போது பின்வரும் விடயங்களை கருத்தில் கொள்ளும். அவையாவன பின்வருமாறு:

- கூட்டுத்தாபனம் எதிர்பார்க்கும் விலையினை விட குறைந்த விலையில் இவ் வீட்டின் பெறுமதி இருத்தல் வேண்டும்.
- இவ் வீடு ஐந்து வருடத்திற்கு குறையாத காலத்து வீடாக இருத்தல் வேண்டும்.
- வீட்டு உரிமையாளர் வருமானம் குறைந்தவராக இருத்தல் வேண்டும்.
- ஒரு பதினைந்து வருடத்திற்கு நின்று பிடிக்கும் அளவுக்கு பின்வரும் முக்கியமான விடயங்களில் மட்டும் இதன் திருத்த வேலைகள் இருத்தல் வேண்டும்.

அவையாவன:

### முக்கியமான திருத்த வேலைகள்

- **Heating** (குளிர் காலத்திற்கு தேவையான மிக முக்கியமாக செய்ய வேண்டிய திருத்த வேலைகள்)
- **Structural** (ஆபத்திலிருந்து மீள வேண்டிய நிலையில் உள்ள உள்ளக அமைப்பு வேலைகள்)
- **Electrical** (மின்சார திருத்த வேலைகள்)
- **Plumbing** (நீர் குழாய் திருத்த வேலைகள்)
- **Fire Safety** (தீயினால் ஏற்படும் பாதுகாப்பு தொடர்பான வேலைகள்)

அதாவது திருத்த வேலை என்பது வீட்டினுள் இருப்பவர்களுக்கு உடல் ஆரோக்கியத்திற்கும் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தல் வழங்கும் நிலையில் அதில் இருந்து மீளும் நிலைமையினை திருத்த வேலைகளினால் உருவாக்கி கொடுக்கலாம் என்ற நிலையில் இருந்தால் மட்டுமே இத் திட்டத்திலிருந்து பண உதவி கிடைக்கும்.

இக் கூட்டுத்தாபனம் வழங்கும் பண உதவிக்கு மேலால் செலவு இருக்குமாயின் மிகுதி தொகையினை வீட்டு உரிமையாளர் தமது சொந்த பணத்தில் இருந்தே கொடுக்க வேண்டும்.

### இப் பண உதவியினை எப்படி பெறுவது?

இந் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு முதலில் எழுத்துமூலம் அங்கீகாரம் பெறுதல் வேண்டும். நாம் குடியிருக்கும் சகல பகுதிகளுக்கும் இப் பண உதவி கிடைக்க போவதில்லை. இணையத் தளத்தினூடாகவே தங்களின் வீடு உள்ள தபால் குறியீட்டினை குறிப்பிட்டு இப்பகுதிக்கு பண உதவி கிடைக்குமா? என்பதனை பரிசீலனை செய்து பார்க்கலாம். இல்லையேல் இந் நிறுவனத்துடன் நேரடியாக தொடர்பு கொண்டும் பரிசீலனை செய்து பார்க்கலாம்.


செய்ய வேண்டிய முக்கியமான திருத்த வேலைகளுக்கு பண உதவி வழங்க, தாங்களும் தங்கள் குடியிருப்பு மனையும் தகுதியான நிலைக்குள் உள்ளதா? என்ற அங்கீகாரம் கிடைத்த பின்பு தங்களின் விணணப்பம் இக் கூட்டுத்தாபனத்தின் தகைமைக்குள் இருந்தால் பண உதவி கிடைக்கும்.

பண உதவியின் ஆக கூடுதலான தொகையினை பின்வரும் மூன்று வலயங்களாக பிரித்து தீர்மானிக்கப்படுகின்றது. அவையாவன:

- **Zone (1)** Southern areas of Canada (கனடாவின் தென்பகுதி) $16,000
- **Zone (2)** Northern areas of Canada (கனடாவின் வடபகுதி) $19,000
- **Zone (3)** Far Northern areas (வடபகுதிக்கும் அப்பால்) $24,000

இவை தவிர மேலும் சில நிலைகளில் உள்ளவர்களுக்கும் பண உதவிகள் வழங்கும் திட்டங்கள் இக் கூட்டுத்தாபனத்தில் உள்ளது. அவையாவன:

**உடல் இயங்க முடியாதவர்கள் குடியிருக்கும் வீடுகளில் தேவையான திருத்த வேலைகளுக்கு வழங்கும் பண உதவிகள் (Residential Rehabilitation Assistance Program for Persons with Disabilities – RRAP – Disabilities)**



இது இன்னொரு நிலையில் உள்ளவர்களுக்கு என இக் கூட்டுத்தாபனம் வழங்கும் பண உதவிகள் ஆகும். அதாவது உடல் இயங்க முடியாத நிலையில் சக்கரநாற்காலி அல்லது ஊன்றுகோல் உதவிகளுடன் இயங்குபவர்களுக்கு அவர்கள் குடியிருக்கும் வீடுகளில் மேற்கொள்ள வேண்டிய முக்கியமான வேலைகளுக்கு அவர்களின் வருமானம் போதாது என்ற ஒரு நிலைமை இருக்குமானால் அந்த நிலைமையில் உள்ளவர்களுக்கும் இந் நிறுவனம் திருப்பி செலுத்தவே தேவையில்லாத இப் பண உதவியினை செய்கின்றது.

அதாவது உடல் இயங்க முடியாத நிலையில் உள்ளவரின் (Disabled Person) சௌகரியங்களுக்கு ஏற்ற மாதிரி உள் நிர்மாண வேலைகளில் மாற்றங்கள் செய்வதற்கென பண உதவிகளை செய்கின்றது.



றஞ்சன் பிரான்சிஸ்
- வீடு விற்பனைப் பிரதிநிதி -

**முதியவர்களின் குடியிருப்புகளில் அவர்களின் சுதந்திரமான வசதிக்கு ஏற்றவாறு மாறறியமைப்பதற்கு வழங்கும் பண உதவிகள் (Home Adaptations for Seniors’ Independence (HASI)**

வருமானம் குறைந்த முதியவர்கள் குடியிருக்கும் வீடுகளில் அவர்களின் வசதிகள், சௌகரியங்களுக்கு ஏற்ற மாதிரி மாற்றியமைப்பதற்கு வழங்கும் பண உதவிகள் இத் திட்டத்தின் கீழே வழங்கப்படுகின்றன.

ஆனால் இத் திட்டத்தில் முதியவர் ஒருவர் பண உதவி பெறவேண்டுமாயின் பின்வரும் தகைமைகளுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

- 65 வயதுக்கு மேற்படடவராக, அன்றாட வாழ்வில் இயங்குவதற்கு சிரமமானவராக வாழ்ந்து கொண்டிருப்பவராக இருத்தல் வேண்டும்.
- இம் முதியவர் குறிப்பிட்ட வீட்டில் நிரந்தரமாக வசிப்பவராகவும், இவரது வருமானம் என்பது ஒரு வரையறையுக்குள்ளும் இருத்தல் வேண்டும்
- செய்யப்படும் திருத்த வேலை என்பது முதியவருக்கு வாழ்வில் ஒரு சௌகரியத்தினை வழங்குவதாக இருத்தல் வேண்டும்

**அவசர திருத்த வேலைகளுக்கு வழங்கும் பண உதவி (Emergency Repair Program – ERP)**

இத் திட்டத்திலிருந்து பண உதவி என்பது கனடாவின் சிறு நகரங்களில் இருக்கும் வருமானம் குறைந்தவர்களுக்கு மட்டுமே (Low Income Households in Rural areas) வழங்கப்படுகின்றது

**பண உதவி வழங்கும் திருத்த வேலைகளை பின்வரும் வகையாக குறிப்பிடலாம்.**

- Heating Systems
- Chimneys
- Foundations
- Roofs, walls, floors and ceilings
- Vents, Louvers
- Plumbing
- Electrical Systems

$6,000 முதல் $11,000 வரை பிராந்தியங்களுக்கு ஏற்ற மாதிரி பண உதவி கிடைக்கும்.

sivapanchalingam@thaiveedu.com

■ ■ ■

GP
TELECOM
இரமணன் திரு
(முன்னாள் பெல் கனடா, ரோஜேர்ஸ் ஊழியர்)

For Your Business We
- Install, Repair, Sell
- Meridian Phone Systems & System Phones
- Structured Voice & Data Cabling
- Install, Repair Home Phone Wiring
- TV Cable (RGB)
- Network Cable

உங்கள் அழகிய வீட்டில் பழுதுகள் ஏதும் ஏற்படாமல்
சுவர்களுக்கு உள்ளால் வயர் எடுத்து கொடுக்கப்படும்

416.203.0344



# அடமானக் கடனும் வங்கித் தெரிவும்

## சரியான வீட்டு வசதி அடமான வங்கியை தேர்ந்தெடுப்பது

நீங்கள் முதன் முதலில் ஒரு வீடு வாங்குவதாக இருந்தாலோ அல்லது தற்போதைய வீட்டு அடமானத்தை புதுப்பிப்பதற்கோ அல்லது அதற்கு மறுநிதி உதவி பெறுவதற்கு விரும்பினாலோ, எவ்வகையிலும் நீங்கள் தேர்ந்தெடுக்கும் அடமானத்தின் வட்டி விகிதங்கள் தான் மிக முக்கியமான விஷயங்களில் ஒன்றாகும். ஒரு மிக நல்ல விஷயம் எதுவெனில் வட்டி விகிதங்கள் மிகவும் கவர்ச்சிகரமான சலுகைகளுடன் உள்ளன. ஆனால் உங்கள் சூழ்நிலைக்கு தகுந்தவாறு எந்த வகையான அடமானக்கடன் மிகவும் சரியானது? நீங்கள் பாதுகாப்பு, இணங்கும் குணம் அல்லது மாற்றிச் செல்லத்தக்க வசதி ஆகியவற்றில் எதை விரும்பினாலும், உங்கள் தேவைகளை நிறைவு செய்கிற ஒரு அடமானத்தை இன்றைய நாட்களில் நீங்கள் சுலபமாக கண்டறிய முடியும். உங்களுக்கு உரிமையுள்ள விருப்பத்தேர்வுகளை தேர்ந்தெடுப்பதற்கு, அது சம்பந்தமாகக் கீழே உள்ள சில தகவல்களை கவனியுங்கள்.

- எந்த வகையான அடமானம் உங்களுக்கு பொருத்தமானது?
- புதுப்பித்தல் மீது பணத்தை மிச்சப்படுத்துதல்.
- மறுபடியும் பணத்திற்கு எப்போது ஏற்பாடு செய்தல்.

## எந்த வகையான அடமானம் உங்களுக்கு பொருத்தமானது

ஒவ்வொருவருக்கும் மிகச்சரியான வகையிலான சூழ்நிலையுடன் சில விசேஷமான அடமான அம்சங்கள் அடங்கிய ஒரு அரிச்சுவடி (prime) இங்கே விவரிக்கப்பட்டுள்ளது.

### Closed fixed rate Mortgage:

இந்த வகையான அடமானத்தில் உங்கள் வட்டி விகிதம் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு, வழக்கமாக ஐந்து வருடங்கள் அல்லது ஏழு வருடங்கள் வரை நிலையாக இருக்கும். வட்டி விகிதம் பற்றி மறுபடியும் நீங்கள் பேச்சு வார்த்தை நடத்த விரும்பினாலோ அல்லது குறிப்பிட்டகாலம் முடிவதற்கு முன்பே மீதமுள்ள தொகை முழுவதையும் நீங்கள் செலுத்த விரும்பினாலோ, அடமான ஒப்பந்தம் முடிவுறுவதற்கு நீங்கள் ஒரு குறிப்பிட்ட கட்டணத்தை செலுத்த வேண்டி வரும்.

### தகுந்தவாறு உள்ளவர்கள் (Appropriate for):

அடமான காலத்தின் போது வட்டியுடன் செலுத்தப்படும் தவணைப் பணங்கள், முதல் பணத்திலிருந்து எப்படி கழிக்கப்படும் என்பதை விரும்பும் வீட்டை விலைக்கு வாங்கும் நபர்கள். மற்றும் வட்டி விகிதங்கள் அதிகமானாலும் தற்போதைய வட்டிவிகிதத்திலேயே பணத்தை கட்ட நீங்கள் விரும்பினால் உங்களுக்கு closed fixed rate mortgage தான் பொருத்தமானது.

### Open mortgage:

நீங்கள் வாங்கிய அடமான பணத்தை எந்த நேரத்திலும் ஒரு அபராதத் தொகையும் இல்லாமல் கட்டக் கூடிய வசதி open mortgageல் உள்ளது. ஆறுமாதங்கள் அல்லது ஒரு வருடம் போன்ற குறுகிய கால தவணைகளில் தான் அவை வழக்கமாக கிடைக்கும்.

### தகுந்தவாறு உள்ளவர்கள் (Appropriate for):

அடுத்த வருடம் வட்டி விகிதங்கள் குறைய வேண்டும் என்று விரும்பும் நபர்கள். குறுகிய காலதவணையில் நீங்கள் பணத்தை செலுத்த விரும்பினாலோ அல்லது அடமான முதல் தொகையில் மொத்தப் பணத்தையும் நீங்கள் கட்ட விரும்பினாலோ உங்களுக்கு ஒரு open mortgage பொருத்தமானது.

### மாறுகிற வட்டி உள்ள அடமானம் (Variable rate mortgage):

இந்த வகை அடமானத்தில் ஆரம்ப வட்டி விகிதத்திலிருந்து மாறுபட்ட வட்டி விகிதத்தில் நீங்கள் பணத்தை செலுத்த முடியும். பல நேர்வுகளில் உங்கள் அடமானத் தவணைத் தொகை அடமான காலத்திற்காக மாறுபடாது. நீங்கள் ஒரு நிலையான தொகையை செலுத்துகிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம், வட்டி விகிதங்கள் குறையும் போது நீங்கள் கட்டவேண்டிய அசல் தொகையில் கணிசமான அளவு குறைந்துவிடும். வட்டி விகிதம் கூடும்போது நீங்கள் கட்டவேண்டிய முதல் தொகையில் சிறிய அளவுதான் கூடும். மாறுகிற வட்டி உள்ள சில அடமானங்களில் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் வட்டி விகிதம் உயராது என்ற உத்திரவாதம் தரப்பட்டுள்ளது. சிலவற்றை fixed rate mortgageக்கு மாற்ற முடியும்.



### தகுந்தவாறு உள்ளவர்கள் (Appropriate for):

வட்டிவிகிதங்கள் கூடாமல் ஒரேமாதிரியாக அல்லது குறையக் கூடியதாக இருக்க வேண்டும் என்று விரும்பும் வீட்டு உரிமையாளர்கள் மிகக்குறைந்த வட்டிவிகிதங்கள் உள்ளது போல தோன்றினாலும், நிலையான அடமான திட்டத்தில் இணைவது சிறந்தது. பொதுவாக கூறினால் இன்றைய சூழ்நிலையில், அடமானத் தொகையை செலுத்துவதற்கான காலம் குறைவாக இருந்தால் அதற்கான வட்டித் தொகையும் குறைவாகதான் இருக்கும். காலம் அதிகமாக இருந்தால் வட்டியும் அதிகமாக இருக்கும். முதன் முதலில் வீடு வாங்கும் அனேகமானோர் நீண்டகால தவணை முறையைதான் விரும்புகிறார்கள் ஏனென்றால் அவர்கள் தங்கள் நிதிநிலைக்கு தகுந்தவாறு திட்டமிட்டு தவணைகளை செலுத்த முடியும். குறைந்த வட்டி என்ற நிலை இருந்தால் நீண்டகால தவணைத் திட்டத்தில் சேர்வது சிறந்த யோசனை.

அதே வேளையில், வட்டி விகிதங்கள் குறையும் என்று தோன்றினால், குறுகிய கால தவணைத் திட்டத்தில் சேர்வதின் மூலம், உங்கள் அடமானத்தை நீங்கள் புதுப்பிக்கும் போது நீங்கள் கொஞ்சம் பணத்தை மிச்சப்படுத்த முடியும். வட்டிவிகிதங்கள் எந்த போக்கில் செல்கிறது என்பதை முன்கூட்டியே நிர்ணயம் செய்வது கடினம். உங்கள் அடமான ஆலோசனையாளர் தற்போதைய பொருளாதார சூழ்நிலையை மதிப்பிடவும் மற்றும் வட்டி விகிதத்தின் ஏற்றத்தாழ்வுகளை திட்டமிடவும் உங்களுக்கு உதவுவார்.

### புதுப்பித்தல் மூலம் பணத்தை மிச்சப்படுத்துதல்

நீங்கள் உங்கள் அடமானத்தை புதுப்பிக்கும் போது பணத்தை மிச்சப்படுத்துவதற்கு உங்களுக்கு உதவும் சில உபயோகக் குறிப்புகள் இங்கு தரப்பட்டுள்ளன.

### உங்கள் amortizationஐ குறையுங்கள்:

amortization என்பது உங்கள் அடமானத் தொகை முழுவதையும் தவணைமுறையில் வட்டியுடன் திருப்பிச் செலுத்தும் காலத்தை குறிக்கும் சொல். மிக குறுகிய amortizationஐ தேர்ந்தெடுத்து நீங்கள் பணத்தை கட்டினால் ஒவ்வொரு மாதமும் ஒரு உயர்ந்த தொகையை கட்டவேண்டியது வரும். ஆனால் அடமானத்தின் ஆயுட்காலத்தில் நீங்கள் செலுத்த வேண்டிய வட்டி தொகையில் பெருந்தொகையை மிச்சப்படுத்த முடியும்.



ராகவன் ராமநாதன்
-Mortgage Development Manager-

### மொத்த பணத்தொகையாக செலுத்துங்கள்.

நீங்கள் புதுப்பிக்கும் போது உங்களிடம் எவ்வளவு பணம் உள்ளதோ அதை எல்லாம் நீங்கள் வாங்கிய அடமான முதல் தொகைக்காக திருப்பிச் செலுத்தி விடுங்கள்.

நீங்கள் கட்ட வேண்டிய மாதாந்த தவணையை அதைவிட வேகமாக இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை அல்லது வாரத்திற்கு ஒருமுறை என்ற தவணைகளில் கட்டிவிடுங்கள். இதன்படி ஒரு வருடத்திற்கு ஒரு அதிகப்படியான மாதத்தவணையை நீங்கள் கட்டியிருப்பீர்கள். அதன்காரணமாக நீங்கள் கட்டவேண்டிய முதல் தொகை மிகவும் குறையும். மேலும் வட்டியாக நீங்கள் நிறைய பணத்தை செலுத்த வேண்டியதில்லை. எனவே ஏராளமான பணத்தை நீங்கள் மிச்சப்படுத்த முடியும்.

### எப்போது மறுபடியும் பணத்திற்கு ஏற்பாடு செய்வது.

வட்டிவிகிதங்கள் மிக குறைவாக இருக்கும் போது, அனேகமான வீட்டு உடைமைக்காரர்கள், தங்களுடைய மிக முக்கியமான சொத்தை வைத்து பணத்திற்கு ஏற்பாடு செய்வது பற்றி ஆழ்ந்து யோசிப்பார்கள். உங்கள் அடமானம் சம்பந்தமாக மறுபடியும் நீங்கள் பேச்சுவார்த்தை நடத்த தீர்மானிப்பதற்கு முன், அதற்காக ஆகும் செலவுகள் பற்றி கவனமாக சிந்தியுங்கள். உங்கள் அடமானம் முடிவுற்றால், நீங்கள் மறு பேச்சு வார்த்தை நடத்தும் போது, நீங்கள் ஒரு அபாரதத் தொகை செலுத்த வேண்டிவரும். ஆனால் மறுபடியும் பணத்திற்கு ஏற்பாடு செய்வது சிறந்த தீர்வுதான். நீங்கள் கட்ட வேண்டிய அபராதத் தொகை, வட்டி தொகையை விட குறைவாக இருந்தால், பிரயோசனமான விஷயம்தான். நீங்கள் செலுத்திவரும் தற்போதைய வட்டியை விட புதிய வட்டிவிகிதம் குறைந்த பட்சம் இரண்டு சதவீதமாவது குறைவாக இருந்தால், நீங்கள் மறுபடியும் பணத்திற்கு ஏற்பாடு செய்வது அடமான ரீதியில் ஒரு அறிவுக்கூர்மையான விஷயம் தான். உங்கள் அடமான ஆலோசனையாளர் நீங்கள் மிகவும் குறைந்த வட்டியில் மீண்டும் அடமான கடன் பெறுவதற்கு உதவுவார்.

நீங்கள் ஒரு வீடு வாங்குவதாக இருந்தாலோ அல்லது தற்போதைய வீட்டு அடமானத்தை புதுப்பிப்பதற்கோ விரும்பினாலோ அல்லது அதற்கு மறு நிதி உதவி பெறுவதற்கு விரும்பினாலோ, எவ்வகையிலும் உங்கள் சூழ்நிலைக்கு பொருத்தமான விசேஷ அம்சங்கள் பற்றி ஒரு அடமான ஆலோசனையாளரை கலந்து பேசுங்கள்.

ragavan.ramanathan@thaiveedu.com


■ ■ ■

வீடு வாங்குவதற்கும் விற்பதற்கும்



Century 21
Service Plus
5855 Taschereau Blvd (Office)
Brossard, Quebec. J4Z 1A5
Email : sugumaran@sympatico.ca

Office : (514) 299-3186
(450) 926-1881



Sugumaran Sinnaiah
Chartered Real Estate Broker

# Law Office

## T. JEGATHEESAN

(Barrister, Solicitor and Notary Public (on)



உங்கள் சட்டப் பிரச்சினை எதுவாகிலும் தமிழிலும் ஆங்கிலத்திலும்
ஆலோசனைகளுக்கும் சட்ட நடவடிக்கைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.

**தி. ஜெகதீசன்**

(Barrister, Solicitor and Notary Public (on)

Off: **416 • 266 • 6154**
Res: 416 • 449 • 0358
Fax: 416 • 266 • 4677

2620 Eglinton Ave., East # 201
Scarborough. ON
M1K 2S3

# KathirHomes Design group

DIV. OF 1780681 ONTARIO LTD.

**Build Your Dream Home**

**கனவு மனை ஒன்றை புதிதாய் கட்டி வாழ்ந்திட**



**Design & Construction**

**416 856 6900**

*Custom home Design*
*Building permit*
*Committee of adjustment*



**Kathir**
**S Kathirgamanathan P.Eng.**

# வீட்டுக்கடன் காப்புறுதி திட்டம்

## Mortgage Life Insurance

### வங்கிக் கடன் காப்புறுதி

01. வங்கியே உடமைக்காரர்.
02. வங்கியின் அதிகாரத்தில் இருக்கிறது.
03. கடன் தவணைகள் தவறினால் காப்புறுதி செயலிழந்து விடும்.
04. வங்கியே பாத்தியக்காரர்.
05. உங்கள் காப்பு தொகை குறைந்துகொண்டே வரும்.
06. காப்புறுதிக்கு திரும்பவும் விண்ணப்பிக்கவேண்டும்.
07. காப்புறுதி தொகை, கடன் தொகையை தாண்டக்கூடாது.
08. கடனை முற்றிலும் தீர்க்கவேண்டும்.
09. நீட்டவோ மாற்றவோ முடியாது.
10. திட்டமில்லாத வைப்புகளுக்கு சலுகை இல்லை.
11. காப்புறுதி எடுத்தவர் இறந்த பிற்பாடே வங்கி அதன் தராதரங்களை முற்றாக ஆராயும்.
12. வங்கி காப்புறுதி மிகவும் கூடிய செலவு.
13. வங்கி காப்புறுதியை எப்பவும் லண்டன் லைஃப் காப்புறுதிக்கு மாற்றலாம்.
14. முடிவு உங்களுடையது, வங்கியுடையது அல்ல.

### லண்டன் லைஃப் காப்புறுதி

01. காப்புறுதி எடுத்தவரே உடமைக்காரர்.
02. காப்புறுதி எடுத்தவரே அதிகாரம் கொண்டவர்.
03. கடன் தவணைகள் தவறினாலும் காப்புறுதி செயலிழக்காது.
04. உங்கள் பாத்தியக்காரராக யாரையும் நீங்கள் நியமிக்கலாம்.
05. உங்கள் காப்பு தொகை நிரந்திரமானது, காப்புறுதி தவணையும் ஒரே அளவானது.
06. கடன் உதவியவரை மாற்றினாலும் காப்புறுதி தொடரும்.
07. காப்புறுதி தொகையை உங்கள் தேவைப்படியும், வசதிப்படியும் தீர்மானிக்கலாம்
08. உங்கள் உரிமைக்காரர் பணத்தை தக்கவைத்துக்கொண்டு அதன் வருமானத்தில் தவணைகளைக் கட்டலாம்.
09. உங்கள் காப்புறுதியை மிண்டும் புதுப்பிக்கலாம் மாற்றலாம்.
10. திட்டமில்லாத வைப்புகளுக்கு சலுகை உண்டு.
11. காப்புறுதிகளின் தராதரம் விண்ணப்ப சமயத்தில், தீர்மானிக்கப்படும்.
12. எங்களுடையது போட்டிகளை எதிர்த்து நிற்கும் வல்லமை கொண்டது.
13. மேற்சொன்ன காரணங்களினால் இதுவே சிறந்தது.

Freedom 55 Financial
A division of London Life Insurance Company



**பாலா பாலசுந்தரம்** B. Eng

சிறந்த விற்பனையாளருக்கான விருது பெற்றவர்

**Office: 416-291-0451 Ext.227**
**Cell: 416-518-9489**
**300-2075 Kennedy Rd, Toronto. ON M1T 3V3**

**E-mail: bala.balasundaram@freedom55financial.com | Now Representing Manulife, Sunlife & Greatwest Life.**

MANI
a life style

# புதிய தொழில்நுட்பத்துடன் உரையாடுங்கள்




## மணியின் புதிய அறிமுகம்
## மணிபேசி
## (Bluetooth Mirror)



ஒன்ராரியோவில் புதிதாய் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கும் சட்டமொன்றின் மூலம் வாகன ஓட்டுனர்கள் வாகனம் ஓட்டும்போது கைத்தொலைபேசியை கையில் வைத்து உரையாடுவது சட்டவிரோதமானதாகும். எமது புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய மணிபேசியொன்றைப் பாவிப்பதன் மூலம் தடங்கலின்றி வாகனத்தைச் செலுத்தியபடியே நீங்கள் உரையாடலைத் தொடரலாம். இது சட்டபூர்வமானது. அபராதங்கள் அற்றது. இந்த அதி நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய மணிபேசியை உங்கள் வாகனத்தில் சில நிமிடங்களில் இணைத்துவிடலாம். மணிபேசிகள் பாதுகாப்பானவை. துல்லியமான ஒலித்தரம் கொண்டவை. ஏனைய உபகரணங்களைப் பாவிக்கும்போது ஏற்படும் தலைவலி, கதிரியக்கம் மூளையைப் பாதிக்குமா போன்ற கவலைகள் இங்கு இல்லை. மணியின் Bluetooth Hands Free Automobile Unit ஒன்றை பாவித்து அபராதம் செலுத்துவதைத் தவிருங்கள்.

- துல்லியமான ஒலிவாங்கும் தரம்
- தொடர்புகள் இடையே விடுபட்டுப்போகாது தொழில்நுட்பத்தின் மூலம் இணைந்திருக்கும் தன்மை
- ஆரோக்கியமான அலைபேசிப் பரிமாற்றம்.

## அறிமுக சிறப்புச் சலுகை



மணியின் இப்புதிய உபகரணத்தை உங்கள் வாகனத்தில் பொருத்திக்கொள்வதன் மூலம் வாகனத்தை பின்னோக்கி செலுத்தும்போது அருகிலுள்ள பொருள் அல்லது சுவர் எவ்வளவு தூரத்திலுள்ளது என்பதை துல்லியமாக இது கூறிவிடுகிறது. இந்த புதிய தொழில்நுட்பம் சுவர்களில் வாகனம் உராய்வதைத் தடுக்கிறது. இலகுவாக பின்னோக்கி செலுத்த உதவுகிறது. அறிமுக சலுகையாக இந்த உபகரணத்தை முற்றிலும் இலவச இணைப்பாகப் பெற்றுக்கொள்ளலாம்.

digi Media

A V A I L A B L E   A T

Brampton
**Thurka Supermarket**
Kennedy & Steeles or
Kennedy & Queen
905.796.6762

Mississauga
**Akshayas Fashion**
HW10 & Dundas
905.306.7052

Etobicoke
**Uthayas Supermarket**
Kipling & Steeles
416.740.7971

**Vijai Takeout & Catering**
Finch & Westmore Dr
416.742.8717

Downtown
**Kalaimagal Book Depot**
Wellesley & Parliament
416.921.5018

Scarborough
**Manchula Fashions**
Tappscott & Finch
416.297.9875

**Raa CD Market**
Eglinton & Brimley
416.269.1716

**Yarl Cake House**
Markham & Lawrence
416.431.6604

**SP Importers**
Lawrence & Brimley
416.261.3881

**Murugan Book Depot**
Middlefeild & Finch
416.285.9118

**Wire Magic**
Middlefield & Finch
416.754.7526

**Daily Needs**
Pharmacy & Finch
416.490.7703

**Ayngaran Video**
Markham & Nashdene
416.266.5566

Markham
**Markham Video**
Markham & Denison
905.294.4253

மேலதிக மற்றும் சில்லறை விற்பனை விபரங்களுக்கு
**416.570.1990**

MANI
a life style

www.maninational.com

# வர்த்தகத்தை குவியப்படுத்தும் La Senza

La Sensa Brand பெண்களின் உள்ளாடைகளின் விற்பனையில் கனடாவில் முதன்மை வகிக்கும் நிறுவனமாகும். கடந்த பல ஆண்டுகளாக வாடிக்கையாளர்களுக்கு மிகுதியான வகையறாக்களை வழங்கி வந்தது. ஆனால் அது சற்று மிகையான, குவியம் குறைந்த வர்த்தக நடவடிக்கையாகி விட்டது என்பது தற்போது தெளிவாகி விட்டது.

அடுக்கடுக்காக அடுக்கப்பட்ட பெண்களின் பலவிதமான அந்தரங்க ஆடைகளின் மத்தியில் ஒரு 34C மார்புக்கச்சையை கண்டுபிடிப்பது வைக்கோலில் குண்டுசியை தேடுவது போலாகி விட்டது. பல சந்தர்பங்களில் வாடிக்கையாளர்கள் அதை வாங்காமலே வந்த பாதையிலே திரும்பி விட்டிருக்கிறார்கள்.




ஆகவே அடிப்படையான வர்த்தகத்தை சீர் செய்து சரிந்து கொண்டிருக்கும் வருவாயைச் சரிப்படுத்த நிறுவனம் தீர்மானித்து விட்டது. ஆத்துடன் அதன் சகோதர நிறுவனமான Victoria's secret கனடிய கிளைகளை 2010ல் திறக்க இருக்கிறது. இந்த இரு நிறுவனங்களினதும் உரிமையாளர் Limited Brands என்ற நிறுவனமாகும்.

இந்த நிறுவனத்தின் தற்போதய புதிய நடவடிக்கைகள் பல சந்தர்பங்களையும் பல பிரச்சினைகளையும் கொண்டிருக்கிறது. இது Best buy, Reitmans (Canada) நிறுவனங்கள் செய்தது போல குறுகிய வகைகளுடன் கூடிய வாடிக்கையாளர்களை கவரக்கூடிய வகையில் இருக்கும்.

கடந்த இரு வருடங்களாக La Sensaவின் வியாபாரதில் பெரிதான முன்னேற்றம் எதுவும் இல்லை. ஆனால் இந்தப் புதிய திட்டத்துடன் கனடிய $1.4 Billion பெண்களின் அந்தரங்க ஆடைச் சந்தையில் 30% பாகத்தை அடைய எண்ணம் கொண்டிருக்கிறது. இந்த நிறுவனம் எந்தப் பொருளுக்கு மவுசு வாய்ந்ததோ அந்தப் பொருளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் அதாவது Braவுக்கும் Panty க்கும் முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் ஒழுங்கு பண்ண இருக்கிறார்கள்.


**தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.**

***E-mail:thaiveedu@gmail.com***

***Fax: 416-849-0594***

***Tel: 416-646-3422***


Columbus Ohioவில் தளமாகக் கொண்ட Limited Brands கனடிய வர்த்தகத்திற்கு உத்வேகம் கொடுத்து இனி வரும் சில வருடங்களுக்குள் $1 Billion விற்பனை இலக்கை அடைய முடிவு செய்து இருக்கிறாகள். தற்போது $450 Million பெறுமதியான பொருள்களை மட்டுமே விற்பனை செய்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. Victoria's Secret, La Senza ஆகிய இரு பெயர்களையும் வித்தியாசப்படுத்தி சந்தைப் பாகத்தை Sears Canada, La Vie En Rose - Quebec ஆகியவற்றுடன் போட்டி போட்டுக் கொண்டு அதிகப்படுத்தலாம் என நிர்வாகத்தினர் நம்புகிறார்கள்.


La Senza வின் 265 கடைகளுடன் 15 to 20 Victoria's Secret கடைகளை ஆரம்பிக்க இருக்கிறார்கள். சுராசரியாக 10,000 சதுர அடி பரப்பில் அமையவிருக்கும் Victoria's Secret, La Senza முன்னைய கடைகளை விட மூன்று மடங்கு பெரியதாகும். Victoria's Secret நவீன தயாரிப்புகளுடன் செல்வம் கூடிய வாடிக்கையாளர்களை இலக்கு வைக்கும் அதே சமயம் La Senza இளைய தலைமுறைக்கு வாங்கக் கூடிய முறையில் தர இருக்கிறார்கள்.

இந்த நிறுவனங்களின் நிர்வாகிகள் Future Shopபை வாங்கிய Best buy அடைந்த வெற்றியை அடைய நினைக்கிறார்கள். அந்த நேரத்தில் ஒரு பெயர் முற்றாக மறையும் என பலரும் எதிர்பார்த்த நேரத்தில் சற்று வித்தியாசமான வாடிக்கையாளர்களை தேர்ந்த படியால் இரு பெயரும் தப்பிப் பிழைக்க கூடியதாக அமைந்து விட்டது. இந்த இரு பெயரும் சந்தைப் பங்கை இரு மடங்கை விட அதிகமாக அடைய உதவி இருக்கின்றது.

ஆனால் La Senza வேறு சில பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய சந்தர்ப்பம் இருக்கிறது. வடஅமெரிக்காவில் 3,000 கடைகளை வைத்திருக்கும் தாய் நிறுவனமான Limited Brands தனது வியாபார நடவடிக்கைகளை சீர் செய்ய வேண்டும். பொருளாதார பின்னிடைவினாலும் கடும் போட்டியினாலும் ஏற்பட்டுள்ள பாதிப்புகளுக்கு முகம் கொடுப்பதானால் மிகவும் சுறுசுறுப்பாக இயங்க வேண்டி இருக்கும் என நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளார்கள்.

முன்பு ஒரு மார்புகச்சையை உற்பத்தி செய்து கடையில் அடுக்குவதற்கும் இடையில் 18 மாதங்கள் எடுத்தது. அது தற்போது 9 மாதங்களாக குறைக்கப் பட்டுள்ளது. இதை 4 மாதங்களாக குறைப்பதுதான் இலக்கு என நிர்வாகத்தினர் மேலும் தெரிவித்துள்ளார்கள்.

வெளிநாடுகளில் இருந்து வரும் வரவை நம்பியுள்ள தாய் நிறுவன நிர்வாகிகள் La Sensa நிர்வாகத்தில் நேரடி கவனத்தை காட்டி வருகின்றனர். இது தாய் நிறுவனத்தின் வழங்கல் சங்கிலியையும் சந்தைப்படுத்துதலில் உள்ள நிபுணத்துவத்தையும் பாவிக்க உதவும். La Senza குளியல் ஆடைகள் சாதாரண ஆடைகள் என பல வகையறாக்களில்லும், இன்னும் பல வகைகளில் அந்தரங்க ஆடைகளையும் வழங்கினாலும் இனிவரும் காலங்களில் அடிப்படை அந்தரங்க ஆடைகளான Bra/Pantyயில் எல்லா அளவிலும் கவர்சியான வடிவமைப்பிலும் வழங்கத் தீர்மானித்திருக்கிறார்கள். விற்பனையாகாத வகைகள் நீக்கப்பட இருக்கிறன.

**மாறன் செல்லையா**

- நிதி திட்டமிடல் ஆலோசகர் -


அத்துடன் இந்த ஆடைகளை சரியாக எடுப்பாக அணிவதை அழகாக சொல்லித் தருவ தற்கும் ஊழியர்களை (பெண் ஊழியர்கள்தான்) நியமித்து இருக்கிறுர்கள். வாங்கும் பொருளை எப்படிப் பாவிப்பது எனத் தெரியாவிட்டால் பிரயோசனம் இல்லை அல்லவா!

கடந்த 6 மாதமாக செய்யப்பட்ட இந்த மாற்றங்கள் பலனை அளிக்கத் தொடங்கி உள்ளன என்கிறார்கள் நிர்வாகிகள்.

பெண்களின் ஆடை அலங்காரங்களுக்கு எவ்வளவு செலவாகும் என்பது எமக்கு எல்லோருக்கும் தெரியும். சரசரக்கும் காஞ்சிபுரமும் கலகலக்கும் அட்டியலும், காப்பும் எவ்வளவு காசை எடுக்கும் என்பது நமக்குத் தெரியும். ஆனால் மேற்குலக பண்பாட்டில் உள்ளாடைகளுக்கு இருக்கும் மவுசு தனி. இந்த சந்தை யில் முதலிட விரும்பினால் இந்த நிறுவனம் New York சந்தையில் LTD (Limited Brands) என்ற அடையாளத்தில் பங்கு பற்றுகிறது. முதலீட்டாளர்கள் ஒருபுறம் இருக்க இந்த நிறுவனங்கள் வெளியிடும் (Catalogs) பட்டியல் புத்தகங்களிலிருந்து இளம் பெண்கள் தாங்கள் வாங்கக்கூடிய பொருளைப் பற்றி அறிய முடியும். அதே நேரத்தில் ஆண்கள் இளையோர் முதியோர் என்ற வேறு பாடில்லாமல் அந்தப் புத்தகங்களில் உள்ள படங்களை பார்த்து இரசிக்க முடியும் என்பது குறிப்பிடத் தக்கது.

maran.chelliah@thaiveedu.com

■ ■ ■




# காப்புறுதியில் குழப்பமா?

மருத்துவ ரீதியின்றி உடனடியாக அமலுக்குக் கொண்டுவரும் காப்புறுதித் திட்டத்தில் நிறுவனம் A, நிறுவனம் B ஆகிய இரண்டுமே அதிகபட்சம் 50,000 டொலர்வரையும் குறைந்த பட்சம் 1,000 டொலர் அல்லது மாதாந்தக் கட்டணம் 30.00 டொலருக்குக் குறைவாக இல்லாத திட்டங்களை அளிக்க முன்வந்திருக்கின்றன. அத்துடன், மாதாந்த கட்டணம் மாறாமல் வருடாவருடம் அதிகரிக்கும் காப்புறுதித் திட்டத்தைப் பொறுத்தவரையில் நிறுவனம் A, அதிகபட்சம் 30,000 டொலர்களையும், நிறுவனம் Bஆனது அதிகபட்சம் 50,000 டொலர்கள் வரையும் அனுமதிக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன், இந்த இரண்டு நிறுவனங்களை பொறுத்தவரை இரண்டுமே அகால மரணத்திற்கு இரட்டிப்பான தொகையைக் கொடுத்தாலும் இந்த அகால மரணம் பொதுவாக மக்கள் செல்லும் பேருந்து, வாடகை வண்டி, புகையிரதம், விமானம், கப்பல் ஆகியவற்றில் ஏற்பட்டால் நிறுவனம் A இனைப்பொறுத்தவரை விண்ணப்பித்த தொகையிலிருந்து மூன்று மடங்கு காப்புறுதி இழப்பீட்டுத் தொகையாகக் கொடுக்கப்படும் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். அத்துடன், விண்ணப்பதாரர் விரும்பினால் இந்த இரண்டு நிறுவனத்திற்கும் விண்ணப்பிக்கலாம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

> “ இந்த திட்டங்களுக்கு மனுச்செய்வோர் திட்டங்கள்பற்றிய முழு விவரங்களையும் அறிந்து மாதாந்த கட்டுப்பணத்தையும் அறிந்து செயற்படுவது சாலவும் சிறந்தது. ”

இனி, கீழ்வரும் அட்டவணைகள் மூலம் இந்த இரண்டு நிறுவனங்களின் மாதாந்த அறவீட்டுத் தொகையை ஒப்பிட்டுப் பார்ப்போமானால் உங்களுக்கு எந்த நிறுவனம், எந்த தொகை உங்கள் “விரலுக்கு ஏற்ற வீக்கத்துடன்” அமைகிறது என்பது புரியும். இதில் அட்டவணை (1) ஆரம்பத்திலிருந்து காப்புறுதி மனுத் தொகை ஒருபோதும் மாறாத திட்டமாகவும், அட்டவணை (2) வருடாவருடம் 3%இனால் அதிகரிக்கும் காப்புறுதித் திட்டமாக, ஆனால் மாதாந்த கட்டணம் மாறாத திட்டமாக அமையும். பத்திரிகையில் இந்த முழு அட்டவணையையும் பிரசுரிக்க போதிய இடவசதியில்லாமையால் முறையே $50,000, $40,000, $30,000, $20,000 ஆகிய நான்கு தொகைக்கும் வெவ் வேறு வயதுகளுக்கு ஒப்பிட்டு பிரசுரிக்க விரும்புகிறேன். இதைவிட வேறு தொகைக்கு மனுச்செய்ய விரும்பின் உங்கள் ஆயுட் காப்புறுதி முகவருடன் தொடர்புகொள்ளலாம்.

அட்டவணை (3) 2 வருடத்திற்குப் பின் அமலுக்குக் கொண்டுவரும் காப்பறுதித் திட்டமாகும். இந்தவகையான திட்டத்தில் முதல் இரண்டு வருடத்திற்குள் மரணம் ஏற்படின் நீங்கள் கட்டிய தொகையுடன் வட்டியும் கொடுக்கப்படும். இதில் நிறுவனம் Aஇனைப் பொறுத்தவரை 3% வட்டியையும், நிறுவனம் Bஇனைப் பொறுத்தவரை 10% வட்டியையும் கொடுக்கும் என்றால் மிகையாகாது.

அட்டவணை 4, 5, 6 புகையிலை பதார்த்தம் உபயோகிக்கும் ஆண், பெண் ஆகியோருக்கான மாதாந்த கட்டுப்பணம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அட்டவணை (1) இனை சற்று துல்லியமாக அவதானித்தோமேயானால் ஆண்களைப் பொறுத்தவரை வயது 35 இலிருந்து 50 வயதுவரை உள்ளவர்களுக்கு நிறுவனம் B, நிறுவனம் Aஇலும் பார்க்க சற்று குறைந்த மாதாந்த அறவீட்டுப் பணத்தையும், வயது 50இலிருந்து 85 வயதுடையோர்க்கு நிறுவனம் Aஇன் மாதாந்த அறவீட்டுப் பணம் நிறுவனம் Bஇலும் பார்க்க குறைவாக இருப்பதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. ஆனால், பெண்களைப் பொறுத்தவரை நிறுவனம் A நிறுவனம் Bஇலும் பார்க்க சகல வயதுடையோர்க்கும் குறைந்த, மாதாந்த அறவீட்டுப் பணத்தை அளிக்கிறார்கள் என்பதையும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. அத்துடன் மனுச்செய்யும் விண்ணப்பத் தொகையை பொறுத்து 45 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் ஆகிய இருபாலாருக்கும் கட்டுப்பணம் எப்படி அதிகரித்துக்கொண்டு போகிறது என்பதையும் சற்று உன்னிப்பாக அவதானிப்போமேயானால் காப்புறுதிக்கு விண்ணப்பம் செய்வதற்கு பின்போடும் ஒரு சிலருக்கு இந்த அட்டவணை ஒரு விழிப்புணர்ச்சியையும் இதனால் ஏற்படும் விபரீதங்கள், நட்டங்களை நிச்சயம் ஆணித்தனமாக எடுத்துக்காட்டும் என்பது எனது பரிபூரண நம்பிக்கை. கீழ்வரும் அட்டவணையிலிருக்கும் மாதாந்த கட்டுப்பணம், இது பிரசுரத்திற்கு வரும்வரையில் உள்ள கட்டுப்பணம் என்பதும் எதிர்காலத்தில் இந்த திட்டங்களுக்கு மனுச்செய்வோருக்கு நிறுவனங்களின் இலாப நட்டங்களை பொறுத்து இவர்கள் மாதாந்த கட்டுப்பணத்தை அதிகரிக்கவும் அதிகாரமிருக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. இதனால் இந்த திட்டங்களுக்கு மனுச்செய்வோர் திட்டங்கள்பற்றிய முழு விவரங்களையும் அறிந்து மாதாந்த கட்டுப்பணத்தையும் அறிந்து செயற் படுவது சாலவும் சிறந்தது.



சக்திவேல்
- ஆயுட் காப்புறுதி முகவர் -

### அட்டவணை (1) (புகைபிடிக்காதவர்கள், புகையிலைப் பதார்த்தங்கள் பாவிப்போர்)

| காப்புறுதித் தொகை | வயது | ஆண் மாதாந்த செலவு | | பெண் மாதாந்த செலவு | |
|---|---|---|---|---|---|
| | | நிறுவனம் A | நிறுவனம் B | நிறுவனம் A | நிறுவனம் B |
| 50,000 | 25 | - | - | - | - |
| | 35 | - | 64.76 | - | 58.32 |
| | 45 | 115.61 | 109.35 | 91.17 | 96.93 |
| | 55 | 151.88 | 179.82 | 125.73 | 140.49 |
| | 65 | 278.60 | 321.08 | 210.20 | 246.06 |
| | 75 | 559.67 | 635.45 | 397.85 | 528.17 |
| | 85 | 1253.12 | - | 957.96 | - |
| 40,000 | 25 | - | - | - | - |
| | 35 | - | 52.88 | - | 47.74 |
| | 45 | 93.56 | 88.56 | 74.02 | 78.62 |
| | 55 | 122.58 | 144.94 | 101.66 | 113.47 |
| | 65 | 223.96 | 257.94 | 169.24 | 197.93 |
| | 75 | 448.81 | 509.44 | 319.36 | 423.61 |
| | 85 | 1003.57 | - | 767.45 | - |
| 30,000 | 25 | - | - | - | - |
| | 35 | - | 41.01 | - | 37.15 |
| | 45 | 71.52 | 67.77 | 56.86 | 60.32 |
| | 55 | 93.29 | 110.05 | 77.60 | 86.45 |
| | 65 | 169.32 | 194.81 | 128.28 | 149.80 |
| | 75 | 337.96 | 383.43 | 240.87 | 319.06 |
| | 85 | 754.03 | - | 576.94 | - |
| 20,000 | 25 | - | - | - | - |
| | 35 | - | 2914 | - | 26.57 |
| | 45 | 49.48 | 46.98 | 39.71 | 42.01 |
| | 55 | 63.99 | 75.17 | 53.53 | 59.44 |
| | 65 | 114.68 | 131.67 | 87.32 | 101.66 |
| | 75 | 227.11 | 257.42 | 162.38 | 214.51 |
| | 85 | 504.49 | - | 386.42 | - |

(தொடரும்)

saththivel@thaiveedu.com


## சக்தி என்றால் காப்புறுதி



1983ஆம் ஆண்டிலிருந்து காப்புறுதித்துறையில் முழுநேர நெறியான சேவை

“சகல காப்புறுதி நிறுவனங்களினதும் பிரதிநிதி”


- பாரபட்சமின்றி எந்த நிறுவன திட்டமாக இருப்பினும் தெளிவான துல்லியமான இலகுவில் கிரகிக்கும் வண்ணம் விளக்கம்.
- 10,000 இற்கும் மேற்பட்ட திருப்திகரமான வாடிக்கையாளர்கள்
- 144 துரித காப்புறுதி இழப்பீடுகள். 20 நிரந்தர ஊன இழப்பீடுகள்
- எனது வாடிக்கையாளர் பட்டியலில் ஒருசில
  - வருமான வரி இலாகா, கணக்கியல் சோதனையாளர்கள் (Revenue Canada Auditors) ,
  - நிதியமைச்சு அதிகாரிகள் (Ministry of Financial Services),
  - காப்புறுதி பிரதிநிதிகள், அவர்கள் குடும்ப அங்கத்தவர்கள், முதியோர், சிறார்கள்,
  - பிரபல வர்த்தகர்கள், குடும்பத்தவர்கள்,
  - பிரபல எழுத்தாளர்கள்,
  - வைத்தியர்கள்,
  - வழக்கறிஞர்கள்
- 85 வயதுக்குட்பட்ட எவருக்கும், எச்சூழ்நிலையிலும், நிச்சயமாக காப்புறுதியளிக்கும் திறமை (நிறுவனங்களின் நிபந்தனைப்படி)
- எக்காப்புறுதித் திட்டமாக இருப்பினும், விளக்கத்துடன் மன ஆறுதல் திட்டமாக பெற்றிட தயங்காமல் நாடுங்கள்
- மருத்துவ ரீதியின்றி 375,000 வரை காப்புறுதி

**- சக்திவேல் -**

தொலைபேசி: **416.706.3530, 905.428.9299, 905.763.8912**
Fax: 905 428 9307 Email: george14@sympatico.ca

**மன்னிக்கவும்!**
வாகனக் காப்புறுதி (Car Insurense), தீ காப்புறுதி (Fire Insurance) செய்வதில்லை!






VEEDU REALTY INC. BROKERAGE
1345 Morningside Ave., Unit #8
Toronto, ON, M1B 5K3
Tel: 416.759.6000
Fax: 416.759.6005

• Building permit
• Zoning info.
• Site plan approval
• Rezoning approval

Gop Kalaieswaraan
Master in Architecture
Sales Representative
(Residential, Commercial, Institutional)
Dir: 416.723.7467




TWO FULL TIME REALTORS
ONLY ONE COMMISSION
Bayly & Salem
$ 259,000
2+2 Bedrooms + 3 Washrooms
Kennedy & Ellesmere
$ 347,000
3+2 Bedrooms + 3 Washrooms
Brimley & Ellesmere
$ 359,000
3 Bedrooms + 4 Washrooms
Mccowan & 16th Ave.
$439,000
3 Bedrooms + 3 Washrooms
9th & 14th Ave.
SOLD
$ 432,000
3 Bedrooms + 3 Washrooms
Westney & Williamson
$ 459,000
5 Bedrooms + 4 Washrooms
Kennedy & Lawerence
SOLD
$ 364,000
3 Bedrooms + 3 Washrooms
Brimley & Ellesmere
$ 289,000
2+1 Bedrooms + 2 Washrooms
Markham & Lawerence
$ 378,900
3+3 Bedrooms + 4 Washrooms
Brimley & Eglinton
$ 335,000
3+1 Bedrooms + 2 Washrooms
Dundas & Garrard
$ 99,900
Sale of Business (Pizzeria)
Markham & Buroak
$ 399,000
3 Bedrooms + 3 Washrooms
9th Line &Main St.
$ 439,000
4 Bedrooms + 3 Washrooms
Markham & Denison
SOLD
WITH IN ONE DAY
$ 279,900
2+1 Bedrooms + 2 Washrooms
9th Line &14th Ave.
$ 528,900
4 Bedrooms + 3 Washrooms
Hwy 410 & Williams Pkwy
$ 369,000
3+1 Bedrooms + 3 Washrooms
Mondeo & Ellesmere
$ 228,000
2 Bedrooms + 2 Washrooms
Brimley & Borough.
$ 229,000
1+1 Bedrooms + 2 Washrooms
Mccowan & 16th Ave.
$ 557,900
4+2 Bedrooms + 5 Washrooms
Banquet Hall
OVER 500 SEATS
$ 425,000
Call us for more details.
முகவரி காட்டும் முகவர்களாய் நாங்கள்,
வீடு வாங்க..விற்க..அழையுங்கள்
இன்றைய அதிகுறைந்த Mortgage Rate இனை
பெற்றுக்கொள்ள எங்களால் உதவமுடியும்
அழையுங்கள்.
LISTING FLEXIBLE COMMISON
HomeLife/Future Realty Inc., Brokerage*
7 Eastvale Dr, Suit 205,Markham ON. L3S 4N8
Busi : 905-201-9977 Fax : 905-201-9229
www.realhouse.ca
Thamil Suberamaniam
Salesrepresentative
Direct:416-358-6200
Email:thamilrealtor@gmail.com
Mugunthan Nadarajah
Salesrepresentative
Direct:416-276-8025
Email:homelifemugunthan@gmail.com
புதிய முகவரி தேடும் உங்களுடன் என்றும் நாங்கள்

# ஓய்வூதிய சேமிப்பு



கல்யாணி நாதன்
- முகாமையாளர் -

ஒரு சந்தர்ப்பத்தில் பெரியாழ்வாரிடம் மன்னன் அறிவுரை கேட்ட வேளையில் அவர் "மழைக் காலத்துக்கான உணவை கோடை காலத்தில் சேர்த்து வைக்க வேண்டும், இரவுக்கு வேண்டியதை பகலில் சேமிக்கவேண்டும். அதைப்போல் அடுத்த பிறப்புக்கு வேண்டியதை இந்தப் பிறவியில் தேடவேண்டும்" என்று அறிவுரை கூறினார். அதேபோல் இந்த வாழ்வில் வேலை செய்து ஓய்வுபெறும் காலத்துக்கான செல்வத்தை வேலைசெய்யும் வேளையில் சேமித்து வைப்பதுவே அறிவுள்ள செயலாகும். பனிக் காலம் ஆரம்பிக்கும் இவ்வேளையில் உங்கள் எதிர்காலம்பற்றி திட்டமிடுவதற்கு சிறந்த காலமாகும்.

ஓய்வூதிய சேமிப்பு திட்டங்களைப் பற்றி பல முனைகளிலுமிருந்தும் அறிவுரைகள் வரலாம். நிதிசார்ந்த நிறுவனங்களில் கடந்த இருபது வருடங்களாக சேவைசெய்து பெற்றுக்கொண்ட அனுபவத்தை முதலாகக் கொண்டு, சில அறிவுரைகளை தரலாமென்று எண்ணுகிறேன். இங்கு ஓய்வூதிய சேமிப்பு பற்றி சில அடிப்படைத் தகவல்களைத் தருகின்றேன்.

உங்கள் எண்ணங்களில் முதல் தோன்றும் சந்தேகம் ஏன் ஓய்வூதியச் சேமிப்பு செய்ய வேண்டும் என்பதே. முதலில் இது யாருக்கு மிக உகந்தது எனப் பார்ப்போம்.

ஓய்வூதிய சேமிப்புக்காக நாலு காரணங்களை தெரிவிக்கலாம். இவற்றை ஆராயும் வேளையில் உங்கள் சந்தேகங்கள் பெரிதும் நீங்கும் என நம்புகின்றேன்.

1. நீங்கள் ஓய்வுபெறும் வேளையில் CPP, JAS என இரு திட்டங்கள் ஓய்வூதியம் கொடுக்கும். இவை யாவும் ஒருவரை வறுமைக் கோட்டுக்கு கீழ் செல்லாமல் காப்பாற்ற வழங்கப்படுகிறது எனக் கூறினால் மிகையாகாது. வாழ்நாள் முழுவதும் வளமுடன் வாழ்ந்து இறுதி நாட்களை இன்புடன் வாழ இவை ஒருபோதும் ஈடுசெய்யமாட்டா. இன்று மனிதரின் வாழ்நாள் எதிர்பார்ப்பு எண்பதுக்கு மேல் இருப்பது சர்வ சாதாரணம். அறுபத்தைந்து வயதில் ஓய்வுபெற்ற ஒருவர் பதினைந்து வருடங்களுக்கு உழைப்புமில்லாமல் ஊதியமும் இல்லாமல் வாழ்வது மிக வேதனைக்குரியதாகும். எனது சொந்த அனுபவத்தில் ஒரு எழுபது வயது முதியவர், தான் ஒரு செக்கியுறிற்றியாக வேலை செய்யப்போவதாகக் கூறினார். "ஏன் ஐயா, இந்த வயதில் இப்படி வேலை என்று அலைகிறீர்கள், வீட்டில் உள்ளவர்கள் ஏற்றுக்கொள்வார்களா?" என வினாவினேன். அதற்கு அவர் வீட்டில் பெரும் எதிர்ப்புத்தான் எனவும், தனது ஓய்வுக்காக ஒன்றும் சேர்த்து வைக்காததால் வரவும் செலவும் சரியாக இருக்கிறது என்றார். மேலும் கொஞ்சம் மேலதிக பணம் இருந்தால், இந்தியா, இங்கிலாந்து என்று சென்று வரலாம் என யோசிப்பதாகக் குறிப்பிட்டார். அவரது பென்சன் காசு வீட்டிற்கும் சாப்பாட்டிற்கும் மட்டுமே போதுமானதாயிருந்தது, எனவே. இறுதிக் காலத்தில் மகிழ்ச்சியாய் வாழ்வதற்கு ஓய்வூதிய சேமிப்பு அவசியமானதே.

2. ஓய்வூதிய சேமிப்புக்கான அடுத்த காரணம் - உங்கள் நடப்பு வருட வரித் தொகையைக் குறைப்பதற்காகும். ஓய்வூதிய சேமிப்பில் முதலீடு செய்யும் தொகைக்கு அரசாங்க வரிவிலக்கு தரப்படுகிறது. இதனால் கட்டுத்தொகை பெரிதும் குறைக்கப்படுகிறது. உதாரணத்திற்கு நீங்கள் 40 வீத வரி செலுத்துபவராக இருப்பின், நீங்கள் 2,500 டொலர் உங்கள் ஓய்வூதிய சேமிப்பில் இடுவதனால் உங்கள் வரி கணிப்பானது 2,000 டொலர் குறைந்த தொகைக்கே கணிக்கப்படும். இதனால் நீங்கள் செலுத்த வேண்டிய வரிக் கட்டணம் 1,000 டொலரினால் குறையும். இது நீங்கள் கட்டிய சேமிப்பில் 1,000 டொலர் மீள்பெறுவதாகும்.

3. வருடாவருடம் நீங்கள் சம்பாதிக்கும் பணத்தில் மேலதிகமாக வரும் பணத்தை ஏதாவது கஷ்ட நஷ்டத்தில் பாவிக்கலாம் என இட்டு வைத்தால் அப்பணத்தில் பெறப்படும் வருவாயும் வரிகணிக்கப்படும். ஆனால், ஓய்வூதிய சேமிப்பில் அப்படியல்ல. இங்கு வருவாய்க்கு வரி அறவிடப்பட மாட்டாது. ஆதலால், நிதி பெருமளவு வளர்ச்சிபெறும். இங்கு வாசகர்களுக்கு விளக்குவதற்கு இரு வித்தியாசமான ஓய்வூதிய சேமிப்புகளைக் காட்டுவேன்.

உதாரணம் 1:
ஒருவர் தொழில் தொடங்கியவுடன் பெற்றோர் வற்புறுத்தலில் ஓய்வூதிய சேமிப்பில் 2,500 டொலரை தமது இருபதாவது வயதில் சேமித்து, பின்னர் தொடர்ந்து வருடம் ஒன்றுக்கு ஆயிரம் டொலர்கள் இட்டுவந்தால் அவர் ஓய்வுபெறும் அறுபத்து ஐந்தாவது வயதில் 7.5 விகித வட்டியில் நிதி வளர்ந்திருந்தால் 396,826.60 டெலர்கள் வளர்ந்திருக்கும்.

உதாரணம் 2:
முன்புபோலவே, இருபது வயதில் 2,500 டொலர்களை இட்டு பின்னர் வருடம் தவறாது 2,000 டொலர்களைச் சேமித்து வந்தால் 7.5 வீத வளர்ச்சியில் ஏறத்தாழ 850,000 டொர்கள் சேமித்திருக்கும். இதை கணவன் மனைவி இருவருமே பாவிக்கலாம். மேலும், பிள்ளைகளுக்கு விட்டுச்செல்லலாம். இதனால்தான் ஏழை பணக்காரனாவதற்கு ஒரே வழி கூட்டு வட்டி என்பார்கள்.

4. வாழ்வு என்பது பல மேடு பள்ளங்கள் உடையது. எனவே, சில சந்தர்ப்பங்களில் வருவாய் குறைந்திருக்கும் வேளைகளில் இந்த ஓய்வூதிய சேமிப்பிலிருந்து பணம் மீள்பெறுவதுடன், குறைந்த விகிதத்தில் வரி செலுத்துவீர்கள். உதாரணத்திற்கு ஒரு வீட்டு உரிமையாளராய் இருக்கும் வேளையில் சிலகாலம் வேலையற்று இருக்கநேர்ந்தால் அக்காலகட்டத்தில் ஓய்வூதிய சேமிப்பில் சிறுதொகையை மீள்பெற்று வாழ்வு நிலைதடுமாறாமல் முன்னேறிச் செல்லலாம்.

> "வருடாவருடம் நீங்கள் சம்பாதிக்கும் பணத்தில்
> மேலதிகமாக வரும் பணத்தை
> ஏதாவது கஷ்ட நஷ்டத்தில் பாவிக்கலாம் என
> இட்டு வைத்தால்
> அப்பணத்தில் பெறப்படும் வருவாய்க்கும்
> வரிகணிக்கப்படும்.
> ஆனால்,
> ஓய்வூதிய சேமிப்பில் அப்படியல்ல.
> இங்கு வருவாய்க்கு வரி அறவிடப்படமாட்டாது."

5. நீங்கள் வாழ்வின் ஆரம்பப் படியில் இருப்பதானால் பின்னர் வீடு வாங்க முற்படும் வேளையில் உங்கள் ஓய்வூதிய சேமிப்பிலிருந்து வீட்டிற்கான முற்பணத்தை பெறச் சலுகை உண்டு.

இக்கட்டுரையை படிக்கும் சிலர் வாய்க்குள் முணுமுணுப்பது புரிகிறது. அதாவது "எல்லாம் சரியாகத்தான் சொல்லப்படுகிறது, ஓய்வூதியம் பயனுள்ள அத்தியாவசியமான ஒன்றுதான். ஆனால், நத்தார், பொங்கல் எல்லாம் வருகிறது. இந்த நாட்களில் கிறெடிற் காட் முழுக்கவும் பாவித்தாகிவிட்டது. வெறுங்கையால் முழம் போட முடியுமா; எதனைக் கொண்டு ஓய்வூதியச் சேமிப்பில் முதலீடு செய்வது" என்று யோசிக்கலாம்.

இத்தகைய தேவைகளை மனதில் கொண்டு தான் இலங்கையை தாயமாகக் கொண்ட மக்களால் இங்குள்ள எம் மக்களுக்கு உதவு முகமாக Margosa Credit Union ஆரம்பிக்கப்பட்டு வழியும் காட்டுகிறது. இவ்வமைப்பின் அங்கத்தவர்களுக்கு அடித்தள வட்டி விகிதத்தில் கடன் கொடுக்கப்படுவதுடன், வரி மீள்பணம் (refund) வரும்வரை கடன் திருப்பிக் கொடுக்கும் சலுகையையும் தருகிறார்கள். மேலும் வருடத்திற்கு 1,200 டொலர் ஓய்வூதியத்திற்காக ஒதுக்க விரும்புபவர்கள் கிறெடிற் யூனியனில் மாதம் 100 டொலர்களை சேமிக்க விட்டு வைப்பதற்கு வசதியும் உண்டு. இத்தகைய ஓய்வூதிய சேமிப்புக்கு ஆரோக்கியமான ஆலோசனையும் வசதியும் Margosa Credit Union அங்கத்தவர்களுக்குண்டு.

இன்னுமொரு சந்தேகம் எழுவதுண்டு. அதாவது முதலுக்கு என்ன உறுதி என்ற அந்த அச்சத்துக்கே இடமில்லை. Margosa Credit Unionஇல் வைப்பு செய்யப்படும் அனைத்து Registered servingsஉம் DICO இன்சூரன்சினால் அனைத்து முதலும் காப்புறுதி செய்யப்பட்டுள்ளது. அண்மைக் காலத்தில் நிதிச்சந்தை வீழ்ச்சி கண்ட வேளை Mutual Fundஇல் முதலீடு செய்தவர்கள் பெருநட்டம் அடைந்ததை அறிவீர்கள். அதற்கு மாறாக Credit Unionஇல் வைத்த அனைத்து முதலுக்கும் காப்புறுதி உண்டு.

இன்று ஔவைப் பாட்டியிடம் ஓய்வூதியம்பற்றி அறிவுரை கேட்டால் அவர்,

"பாடுபட்டு தேடிய பணத்தை வரியாய் செலுத்தும்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள் - உங்கள்
வீடுவந்த பணத்தை ஓய்வூதியத்தில் சேமித்தால்
நாடுபல பார்த்து நன்மை ஓய்வு பெறலாம்"

என்று ஒரு பாட்டை அவிழ்த்து விடுவார். எனவே, நீங்களும் ஓய்வூதிய சேமிப்பினால் பலன் பல பெற வாழ்த்துக்கள்.

kalyani.nathan@thaiveedu.com

■ ■ ■

தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.

*E-mail:thaiveedu@gmail.com*

*Fax: 416-849-0594*

*Tel: 416-646-3422*




நீங்கள் கனடாவுக்கு புதிதாய் வந்திருக்கும் அகதியா?

சட்ட உதவிப் பத்திரத்துடனிருக்கும் புதிய அகதிகளுக்கு
குடிவரவு சம்மந்தமான சேவைகள் அனைத்தும்
**இலவசம்**

20 வருடங்களுக்கு மேற்பட்ட குடிவரவாளர் சேவை

தமிழில் தொடர்புகளுக்கு
**என். பொன்னா**

**LANK-CAN LINK Ltd.**
106 Rough River Drive.,
Scarborough, ON
(Morningside & Sheppard)
Tel: **416.269.5883**
Fax: 416.281.3404


CR Canada
உங்கள்
கடன்
பிரச்சினைகளைக்
கண்டு
ஓடிஒழிய
நேர்ந்ததா?
கவலையை விடுங்கள்!
உங்கள் வீடு, நிலம், வாகனம், வியாபாரம், எல்லாவற்றிற்கும் பிரச்சனைகளின்றித் தீர்வைப் பெற்றுத்தருவோம்.
உங்கள் கடன் தொகையிலிருந்து 15-20% மட்டும் தவணை முறையில் கட்டி முடிக்கலாம்.
அழையுங்கள்
CR Canada
சங்கர் அல்லது கிறிஸ்
Having difficulty repaying your student load?
New rule changes can help
CR Canada
Credit Reform Canada
Judgement in your favour!
416 264 1010
885 Progress Ave, Unit - 202, Scarborough.


எல்லா வயதினருக்குமான
யோகாசன, உடற் பயிற்சி
வகுப்புகள் நடைபெறும் இடங்கள்:
A1 ACME PHOTO
Brimbly & Eglington
ARMADALE
Community Center
Mc.Cowan & Denison
BHARATHI ARTS
Middlefield & finch
மன அழுத்தங்களிலிருந்து விடுபடவும்...
நோயற்ற ஆரோக்கியமான வாழ்வுபெறவும்...
Contact: Malini Para
416 - 997 24 28


S.P.IMPORTERS
Furniture
SP
அனைத்து தளபாடங்களும் மிக மிக மலிவு விலையில்
NO PAYMENT INTEREST for 1 YEAR
416-266-3077
கொள்வனவு விலையில்
மலிவு விற்பனை
S.P.IMPORTERS
Sealy
Posturepedic
Special Sealy
Mattress on SALE
ஒரே பிளாசாவில் 4 தனிப்பெரும் ஸ்தாபனங்கள்...
2861 Lawrence Ave. East, Scarborough, ON M1P 2S8
(Brimley & Lawrence சந்திப்பில்)

# பாதுகாப்பான மற்றும் சௌகரியமான உறக்கம்



ஐம்பது வீதத்துக்கும்
அதிகமான பணத்தை
மீளப்பெற ஒரு வாய்ப்பு

உங்கள் Furnace, Air Conditionerஐ Energy efficient systemதிற்கு மாற்றினாலும், தண்ணீர் சூடேற்றியை Tankless Systemமாக மாற்றினாலும் Rebates & Grantsஆக பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம். இதை விட **15%** அரசாங்க grant பெறலாம். நீங்கள் செலவளிப்பதில் இருந்து ஐம்பது வீதத்திற்கும் அதிகமான பணத்தை பெற்றுக்கொள்ள இது ஒரு நல்ல வாய்ப்பு.

Furnaceக்கு **$1845**
Air Conditionerக்கு **$750 - $900**
Tankless Systemக்கு **$950 - $1050**

Solutions of Home Security Inc.

Authorized Dealer ADT Security Services

## பாதுகாப்பு

### How do Burglars Get into your home?

Statistics show that burglars enter homes using the following entrances,

- 2% from the 2nd floor
- 4% from the basement
- 6% using unlocked entrances
- 9% from the garage
- 22% from the back door
- 23% from the 1st floor windows
- 34% from the front door

E-mail: info@quickhomesecurity.com
Web: www.quickhomesecurity.com

## சுத்தம்

### For all kind of Vacuums

- Central Vacuum Systems
- Commercial Vacuums
- Comfortable & easy to use Vacuums
- Clean hard-to-reach areas
- Great for pets and allergens
- Environmentally friendly products
- Less Energy and Resources
- Whole house cleaning convenience
- Central Vacuum Power Units
- Central Vacuum Yellow Jacket

**Contact Raman Appliances for all your Cleaning needs and enjoy the comfort of your home.**

EUREKA® Invented for the way you clean
Authorized Dealers



## இதமான காலநிலை



### For all your Heating Needs

**Gas Furnaces:**
Every model in our Freedom® Furnaces family is designed to provide maximum heat for minimum fuel usage. The ultimate models even reduce temperature swings and short cycling.

**Oil Furnaces:**
Our oil furnaces are durably constructed with only the finest materials and components. So you can rest easily and warmly. Freedom® 80 oil furnaces heat your home quickly and efficiently, even during the toughest winters.



### For all your Cooling Needs

Stay cool and save a comfortable amount of money with American Standard Air Conditioning's line of Allegiance® air conditioners. Our air conditioners range in efficiency from 13 to 18+ SEER - among the highest efficiency ratings in the industry.

Our Allegiance® family offers a wide range of comfort choices, plus exclusive state-of-the-art technology the quietly, meticulously and efficiently conditions your air. Get ready for a level of comfort you and your family may never have experienced before.

American Standard
HEATING & AIR CONDITIONING
Authorized Dealers

Heating & Air-conditioning Contractors.
Raman Appliances Inc.
www.raheatingcooling.com

## Raman Appliances

# Raman Chelliah



3021 Markham Rd. Unit 51, Scarborough ON. M1X 1L8
**Tel: 416.332.1989**
**Cel: 647.893.4414**
Fax: 416.332.4967
E-mail: info@raheatingcooling.com


Season's Greetings
From All Of Us At SERANDIB TRAVEL 1
AWESOME WINTER SEAT SALES TO INDIAN DESTINATIONS
JET AIRWAYS
$1250.00 taxes INCL *
Toronto - Brussels - Chennai
Travel From: Jan 1st - March 31st
ETIHAD AIRWAYS
$1050.00 taxes INCL *
Travel up to Jan 31st
Toronto - Abu Dhabi - Chennai / Kolkata
QATAR AIRWAYS
Toronto - Washington DC - Doha - Indian Destinations:
$1140.00 taxes INCL *
Travel From: Jan 9th - April 30th
• Mumbai • Delhi • Chennai
• Cochin • Hyderabad • Kozhikode
Emirates
$1340.00 taxes INCL *
Travel From: Jan 13th - March 31st
Toronto - Dubai: - Chennai / Delhi / Mumbai / Bangalore / Hyderabad
ALL INDIA FARE
starting from
$1277.00 taxes INCL *
Toronto - Brussels - Indian Destinations
• Cochin • Goa • Trivandrum • Bangalore
• Mumbai • Delhi • Hyderabad
* Above fares are Seat Sale Fares. Certain conditions and restrictions apply. Prices are subject to availability of seats.
SUPER SEAT SALES TO SOUTH EAST ASIAN DESTINATIONS
AIR CANADA
$1527.00 +taxes*
Toronto - Vancouver - Sydney
Travel From: Dec 23rd - Jan 24th
JAL
$941.00 +taxes*
Toronto - Tokyo - Bangkok
Travel From: Jan 1st - March 31st
AIR CANADA
$1616.00 +taxes*
Toronto - Vancouver - Sydney - Melbourne
Travel From: Dec 23rd - Jan 24th
JAL
$1108.00 +taxes*
Toronto - Vancouver - Tokyo - Singapore
Travel From: Jan 1st - March 31st
JAL
$1039.00 +taxes*
Toronto - Tokyo - Kuala Lumpur
Travel From: Jan 1st - March 31st
JAL
$981.00 +taxes*
Toronto - Tokyo - Manila
Travel From: Jan 1st - March 31st
mbgraphicx
* Above fares are Seat Sale Fares. Taxes range from $200-$370. Certain conditions and restrictions apply. Prices are subject to availability of seats.
Your Satisfaction is Our Success.
Serandib travel.com
Toll Free: 1.888.207.0902
Toronto: 416.750.0009
2075 Lawrence Ave East Suite 202
Mississauga: 905.564.7564
Calgary: 403.770.9647
Montreal: 514.448.1389
Vancouver: 604.625.0495
PATA ACTA

# கரப்பான்களின் உணவகங்களும் நாமும்


- மயூரன் தேவதாசன் -

கடந்த மாத நடுப்பகுதியில் ரொறன்ரோ கிழக்கு; மார்க்கம், எக்லின்டன் சந்திப்பிற்கு அருகில் அமைந்துள்ள சந்திரா உணவகத்திற்கு (Chandra's Takeout Restaurant and Catering) உணவு சுகாதார முறைகேடுகளுக்காக ரொறன்ரோ பொது சுகாதாரப் பிரிவால் கடுமையான தண்டம் விதிக்கப்பட்டது. நவம்பர் மாதம் 17ம் திகதி வெளியான Toronto Star பத்திரிகைச் செய்தியின் படி நான்கு பிரிவுகளின் கீழ் $20,000 தண்டம் விதிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

மிகஅதிகமான கரப்பான் பூச்சிகள் காணப்பட்டமை, தொற்று ஏற்படாது சரியான முறையில் உணவு பாதுகாக்கப்படாமை, உரிமம்பெற்ற ஒரு உணவுப் பராமரிப்பாளர் இன்மை, ரொறன்ரோ அரச சுகாதாரப்பிரிவின் ‘உணவகம் மூடப்பட்டுள்ளது’ என்பதற்கான அறிவித்தலை மறைத்தமை என்ற நான்கு பிரிவுகளின் கீழேயே இந்தத் தண்டம் அறவிடப்பட்டுள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் 24ம் திகதி சுகாதாரப் பரிசோதகர் அங்கு சென்ற போது உணவு தயாரிக்கும் பகுதியில் ஏராளமான கரப்பான் பூச்சிகளைக் கண்டதாகவும், தொற்று ஏற்படும் வகையில் உணவு பாதுகாப்பின்றி இருந்ததாகவும் Toronto Star செய்தி கூறுகிறது. மேற்கண்ட நான்கு குற்றங்களையும் சந்திரா உணவகம் ஏற்றுக்கொண்டதன் பின்னரே இந்தத் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

துயரமான செய்தி என்னவெனில் இந்தச் செய்தி பெருளவில் தமிழ் ஊடகங்கள் எதிலும் வெளிவந்ததாகத் தெரியவில்லை. Toronto Star, CBC, 680 News போன்ற மைய நீரோட்ட ஊடகங்கள் பெரும்பாலானவற்றில் இந்தச் செய்தி பெரும் முக்கியத்துவத்துடன் வெளிவந்திருந்தது. மைய நீரோட்ட ஊடகங்களின் வாசகர்களில் குறைந்த எண்ணிக்கையானோரே இந்தவகை உணவகங்களுக்குச் செல்கின்றனர். நாங்கள் இந்தச் செய்திகளை இருட்டடிப்புச் செய்வதன் மூலம் எமக்குத் தனிப்பட்ட ரீதியில் தெரிந்த ஒருவரைக் காப்பாற்றி விட்டதாக நினைக்கிறோம் அல்லது எமது எதிர்கால விளம்பரத் தேவைக்கு பங்கம் ஏற்படவில்லையென்று நிம்மதியடைந்து விடுகிறோம்.




நன்றி: Google Streetveiew

ரொறன்ரோ அரச சுகாதாரப் பிரிவு எமக்காகவே இவற்றைச் செய்கிறதென்பதை உணர மறந்துவிடுகிறோம். சிறிது காலத்துக்கு முன் தமிழர்களால் நடத்தப்பட்ட ஒன்றுகூடல் ஒன்றில் உணவு பழுதடைந்திருந்தமையால் குழந்தைகள் உட்பட பலர் பாதிக்கப்பட்டமை நாம் அறிந்ததே.

பழுதடைந்த, தொற்று ஏற்பட்ட உணவை உட்கொண்டதால் நோயைத் தேடிக்கொண்டவர்கள் பற்றியும், இறந்தவர்கள் பற்றியும் செய்திகளை நாம் அறிந்திருக்கிறோம். தமது குழந்தைகளுக்கு கரப்பான்களின் விளையாட்டு மைதானத்திலிருந்து இடியப்பம் வாங்கிச்செல்ல எந்தப் பெற்றோரும் விரும்ப மாட்டார்கள்.

பல தமிழ் உணவகங்கள் உணவு பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் அதிக அக்கறை காண்பிக்கின்றன. அவற்றின் முன் அலைமோதும் கூட்டத்திலிருந்தே உணவின் சுவையை மட்டுமல்ல பாதுகாப்பான உணவு தமக்குக் கிடைக்கின்றதென்ற மக்களின் நம்பிக்கையையும் நாம் அறிந்துகொள்ளலாம். ஆனால் சில உணவகங்களில் தரமான உணவை மக்களுக்குக் கொடுக்கவேண்டும் என்ற எண்ணம் மருந்துக்கும் காணப்படுவதில்லை. ‘எங்கடையடையாக்களுக்கு இது போதும்’ என்ற அலட்சியத்தன்மை, அவற்றை கரப்பான்கள் துள்ளிவிளையாடும் இடங்களாகவும், எலிகளின் கூடாரங்களாகவுமே மாற்றிவிட்டிருக்கின்றன.

திருமணங்களுக்கும், விழாக்களுக்கும் உணவு வழங்கும் (பரிமாறும்) தமிழர்களுக்குச் சொந்தமான ஒரு நிறுவனத்தில் பணிபுரியும் எனது நண்பியொருத்தி, தனக்கு அங்கு பணிபுரியப் பயமாகவிருப்பதாகக் கூறினாள். சில நேரங்களில் தனியே பணிபுரியும்போது எலிகள் தன்னைச் சட்டை செய்யாது பெரிய சத்தத்துடன் சண்டையிட்டுக் கொள்வதாயும், கரப்பான்கள் தமக்குள்ளே ஓட்டப்போட்டி நிகழ்த்துவதாயும், ஒரு நாள் நிச்சயம் அவை தன்னைக் கடித்துத் தின்றுவிடும் என்று கூறினாள். ‘அங்கு தான் ஏராளமான உணவுகள் இருக்கிறதே: பின்பு ஏன் அவை உன்னைக் கடிக்கப்போகின்றன’ என்று கேட்டேன். தமக்கு ஏதும் நோய் வந்தாலுமென்று அங்குள்ள உணவுகளை அவை உண்பதில்லை என்றும், எப்படியாவது அங்குள்ள உணவுகளை அருந்தவைத்து அவற்றைக் கொன்றுவிடப்போவதாயும் கூறினாள். கரப்பான்களையும், எலிகளையும் கொலைசெய்தமைக்காக மேற்குலக மனிதஉரிமைவாதிகளும், மிருகவதை எதிர்ப்பாளர்களும் உன்னைத் தூக்கில் போடப்போகிறார்கள் என்று கூறினேன்.

இது நகைச்சுவையான ஒரு உரையாடல் என்றாலும் இதற்குப் பின்னால் மறைந்திருக்கும் உண்மை மிகப்பாரதூரமானது. உணவுப்பாதுகாப்பு விடயத்தில் நாம் அதிக சிரத்தை எடுக்க வேண்டுமென்பதையே இது சுட்டிநிற்கிறது.

வாடிக்கையாளர்களாகிய எமது தரப்பிலும் சில தவறுகள் உள்ளன. மோசமான உணவைத் தரும் உணவகங்களை பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஊக்குவிப்பவர்களே நாம் தான். எது மலிவாகக் கிடைத்தாலும் கேள்வி கேட்காது வாங்கிவிடுகிறோம். அவற்றின் தரம், பாதுகாப்பின் முக்கியத்துவம், இவற்றால் என்ன பாதிப்பு ஏற்படும் என்பது பற்றியெல்லாம் நம்மில் பலர் சிந்திப்பதேயில்லை. ஒரு விருந்து அல்லது விழா ஏற்பாடு செய்கிறோமென்றால் ‘விருந்தினர்கள்’ தானே, இவர்களுக்கு இது போதும் என்று நம்மில் சிலர் எண்ணி விடுகிறார்கள். ‘தேவியக்கா நூறு பேரைக் கூப்பிட்டுச் சாப்பாடு குடுத்தவ, நான் நூற்றியம்பது பேருக்கெண்டாலும் குடுக்கவேணும்’ என்ற எண்ணத்தில் உணவின் தரம் காணாமல் போய் விடுகிறது. இதுவே இந்த உணவகங்களுக்கு சாதகமாய்ப் போய் விடுகிறது.

எனவே நம் முன்னே விரிந்திருக்கும் முக்கிய பணி... உணவுப் பாதுகாப்பு என்ற விடயத்தில் அதிக அக்கறை எடுத்தாகவேண்டும். தரமான உணவகங்களை ஊக்குவிக்கவேண்டும். மலிவாகத் தந்தாலும் மோசமான உணவகங்களை நிராகரித்தாக வேண்டும்.

thevathasan.m@thaiveedu.com

■ ■ ■


The Real Estate Leaders

TAKE ADVANTAGE OF HISTORIC LOW INTEREST RATES!!

WHY RENT?? OWN IT NOW!!

Above the Crowd!

*$343.69 /MONTH



SAVE YOUR MONEY!!

^WOW!... Starter Home!!!

^ Two Bed Rooms + 2 wash Rooms

^Walk to Schools, shopping & TTC

*$512.09 /MONTH



LARGE FAMILY HOME!!

^HUGE!!!!...1450 Sq.ft Home!!!

^ Three Bed Rooms + 2 wash Rooms

^Walk to Schools, shopping & TTC

*$580.83 /MONTH




LUXURY FOR LITTLE!!!

^UNBELIEVABLE!... Small Investment!

^ Two Bed Rooms + 2 wash Rooms

^Walk to Schools, shopping & TTC

*$687.37 /MONTH



UPSCALE LIFESTYLE!!

^Yes!!... Must See!!!

^ Million Dollar Recreation

^Walk to Schools, shopping & TTC

*$777.29 /MONTH




DOUBLE YOUR MONEY!!

^WONDERFUL... Downtown Living!!!

^Live & Work or Rent it!

^Walk to Financial District

*$955.45 /MONTH



THREE FAMILY HOME!

^Believe it or Not!!... Live for FREE!!

^ Three Bed Rooms + 3 wash Rooms

^Walk to Schools, shopping & TTC

*$1061.99 /MONTH




IN-LAW SUITE!!!

^FANTASTIC!... Less than the Rent!!!

^ Three Bed Rooms + 2 wash Rooms

^Walk to Schools, shopping & TTC

*1141.04/MONTH



INCOME POTENTIAL!!!

^Hey!!...Oversized Range Bungalow!!!

^ Three Bed Rooms + 2 wash Rooms

^Walk to Schools, shopping & TTC

*$1577.52 /MONTH




AFFORDABLE LUXURY!!!

^Beautiful!... Ideal Location!!!

^ Four Bed Rooms + 4 wash Rooms

^Walk to Schools, shopping & TTC

*$1268.21 /MONTH



LIVE & WORK!!

^LOOK!!!... Care Free Investment!!!

^ Three Bed Rooms + Store Front

^Gross Rental Income $2850.00

* Mortgage Payment OAC @ Current prime rate of 2.25% - In addition to Mortgage payments, Property Taxes and Utility / Maintenance charges may be applicable

DO NOT WAIT ANY MORE!! CALL US NOW FOR IMMEDIATE ACTION!!!

Direct: 416-613-2877

Vijay Thiagarajah
Real Estate & Business Broker

Uthayan Nadarajah
Real Estate & Business Broker

RE/MAX Rouge River Realty Ltd., Brokerage, Independantly owned and operated

3785 Kingston Road, Toronto, ON., M1J 3M4 Tel: 416-264-5151 Fax: 416-264-2635

****Not Intended to solicit any property under contract****

அறியவில்லையானால் அறிந்துகொள்ளுங்கள் - கனடாவில் சில தகவல்கள்

# ஆயுள் காப்புறுதி கம்பனி ஒன்று கனடாவில் காணாது போனால்?

கடந்த யூலை 27, 2009!

அந்த மனிதனின் மரணச் செய்தி! அவரைத் தெரிந்தவர்கள் யாவருக்கும் ஒரு அதிர்ச்சி யான செய்தி என்பதில் எதுவிதமான சந்தேகமேயில்லை.

எப்போதும் நடக்கலாம் என எதிர்பார்த்திருக்கும் தமது உயிரிழப்பின் பின்பு தமது குடும்பம் நிர்க்கதியாகிவிடக்கூடாது என்னும் நோக்கில் சுமார் பத்து வருடங்களுக்கு முன்பு, மே 7, 1999இல் ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவதற்காக கனடாவின் காப்புறுதி கம்பனிகளின் முகவர் என்ற ரீதியில் சந்தித்ததே எனது முதல் சந்திப்பு!

இன்று அவரின் வாழ்வு முடிந்து விட்டது. ஆனால் அவரில் தங்கி வாழும் அவரின் குடும்பத்தவரின் வாழ்க்கை தொடர்ந்த வண்ணமேயுள்ளது.

சுமார் பத்து வருடங்களுக்கு முன்பு அவர் ஆயுள் காப்புறுதி செய்து கொண்ட கம்பனி 'நோர்விச் யூனியன் லைவ் இன்சூரன்ஸ் கம்பனி' (Norwhich Union Life Insurance Company) என்ற பெயரில் உள்ள ஒரு கம்பனியாகும். சில வருடங்களின் பின்பு அந்தப் பெயரிலுள்ள இக்கம்பனியினை கனடாவில் காணவில்லை. ஆனால் அவரது ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் தொடர்ந்த வண்ணமே இருந்தது. மாத கட்டுப் பணமும் அவரது ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்திற்கு வங்கி கணக்கிலிருந்து போய் கொண்டேயிருந்தது.

"ஏ.ஐ.ஜி லைவ் இன்சூரன்ஸ் கம்பனி ஒவ் கனடா" (A.I.G Life Insurance Company of Canada – American Insurance Group) என்னும் புதிய இன்னொரு கம்பனிக்கு மாத கட்டு பணம் போய்க் கொண்டேயிருந்தது.

அதே பெயரில் அதே காப்புறுதி இலக்கம்!

அதே காப்புறுதி தொகை!

அதே காப்புறுதி ஒழுங்கு சட்ட விதிகள்!

அவ் விதிகளின்படி உள்ள விலைகள்!

அதே கம்பனி இருந்த இடத்தில் கம்பனியின் விலாசம்! அதே தொலைபேசி இலக்கம்.

ஆனால் கம்பனியின் பெயர் மட்டும் மாறியுள்ளது என்ற தகவல் இவரது குடும்பத்துக்கு ஒரு கடிதத்தில் வந்திருந்தது அவர்களுக்கு ஒரு ஞாபகம்!

ஆனால் என்ன ஆச்சரியம்!

அவரது உயிரிழப்பின் பின்பு இன்று ஆயுள் காப்புறுதியில் இருந்து நட்டஈடு கோருவதற்காக அந்த கம்பனியினை தேடி அழைத்த போது அந்த புதிய கம்பனியும் கனடாவில் காணாமல் போய்விட்டது. கடந்த சில மாதங்களாக மாத கட்டு பணம் மூன்றாவது புதிய இன்னொரு கம்பனிக்கே போய் கொண்டிருந்தது.

'பாங் ஒவ் மொன்றியல் லைவ் இன்சூரன்ஸ் கம்பனி' (BMO Life Insurance Company) என்பதே தற்போது காணாமல் போன இடத்திற்கு வந்த புதிய கம்பனி ஆகும்.

இன்று மரணித்து விட்ட அந்த மனிதனின் ஆயுள் காப்புறுதி இலக்கமும் மாறவில்லை. ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்தில் பத்து வருடங்களுக்கு முன்பு கைச்சாத்திட்ட தொகைகள், அத் தொகைக்கு மாதா மாதம் செலுத்தும் விலைகள், அக் காப்புறுதி ஒப்பந்தத்தின் சட்ட ஒழுங்கு விதிகள் எதுவும் மாறவில்லை. கம்பனி விலாசம், தொலைபேசி இலக்கம் மாறவில்லை. ஆனால் மூன்றாவது புதிய கம்பனியாக பெயர் மட்டும் மாறியுள்ளது.

கடிதத்தில் கம்பனி மாறியது செய்தியாக மட்டும் மீண்டும் ஒருமுறை வந்திருந்தது. பார்த்தால் கனடாவில் தமிழர்களின் பலசரக்கு கடைகள், வர்த்தக நிலையங்கள் பெயர் மாறியிருந்து, புதிய ஒரு உரிமையாளரும், நிர்வாகமும் நடாத்துவது போல கண்ணுக்கு தெரியும்.

ஆனால் ஆயுள் காப்புறுதி செய்து கொண்ட வாடிக்கையாளருக்கு ஏமாற்றமேயிருக்கவில்லை. உயிரிழந்தவரின் செய்தியினைப் பெற்று, காப்புறுதி கோரும் விண்ணப்பங்களை பரிசீலனை செய்து அவரின் குடும்பத்திற்கு சேர வேண்டிய ஆயுள் காப்புறுதி பணத்தினை கோரும் விண்ணப்பப் படிவங்களை மூன்றாவதாக கை மாறிய கம்பனியே பரிசீலனை செய்து எதுவிதமான தடங்கலும் இல்லாது காப்புறுதித் தொகையின் காசேலையினை மரணமாகியவரின் குடும்பத்திற்கு வழங்கியது.

ஆயுள் காப்புறுதி செய்தவரின் மரணம் நடந்து, காப்புறுதி தொகை கோரும் நடிவக்கையினை முன்னெடுத்தபோது வழமையான ஒழுங்கு முறையின்படி, மரண அத்தாட்சிப் பத்திரம் (Death certificate), நட்டஈடு கோருபவரின் விண்ணப்பம் (Claiment's statement), வைத்தியரின் அத்தாட்சிகள் (Physician's statement), போன்றவற்றினை ஒழுங்கு முறையில் சமர்ப்பிக்க ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்தில் குறிப்பிட்டிருந்த மிக பெரிய ஒரு தொகை மூன்றாவது கைமாறிய கம்பனியினால் உருவாக்கப்பட்ட காசோலையாக மரணமாகியவரின் குடும்பத்திற்கு வந்து சேரவேண்டும் என்பது கனடிய அரசின் சட்டநெறியில் உருவாக்கப்பட்ட வழிநடத்தலாகும்.

ஒப்பந்தமும் ஒழுங்காக எந்த சந்தர்ப்பத்திலும் ரத்து செய்யப்படாது இருந்து, மரணத்தின் பின்பு சமர்ப்பிக்க வேண்டிய பத்திரங்களையும் ஒழுங்காக சமர்ப்பிக்கும் போது நட்ட ஈட்டு தொகை தேடி வரும் என்பதில் சந்தேகமேயில்லை அத்துடன் காலதாமதமும் ஏற்படாது என்பது எங்கள் முகவர் தொழில் அனுபவங்களில் கண்ட உண்மைகள்!

ஒரு உயிரை பறிகொடுத்த குடும்பத்தவர்களுக்கு ஒரு சிறு ஆறுதலாக கை கொடுக்கும் காப்புறுதியாக இருக்கும் இக் காசோலையினை காப்புறுதி கம்பனியின் சார்பில் நேரடியாக கையளிக்கும் போது எங்கள் முகவர் தொழிலில் கிடைக்கும் ஆத்ம திருப்தி உள்ளதே! அது ஒரு எல்லையற்ற திருப்தி! அந்த நேரம் அது ஒரு வர்த்தகம் அல்ல. சேவையின் திருப்தியாகவே தென்படும்.

**தகவல் தொடர் - 35**

இவ் அனுபவரீதியான சம்பவத்தினை தொடர்ந்து இங்கு குறிப்பிட்ட தலைப்புக்கு வருவோம்.

### ஆயுள் காப்புறுதி கம்பனி ஒன்று கனடாவில் காணாது போனால் காப்புறுதி செய்தவர் நட்டஈடு கோருவது எங்கே?

இங்கு கனடாவில் உள்ள சகல காப்புறுதி கம்பனிகள், வங்கிகள், நிதி நிறுவனங்கள் யாவற்றினையும் கனடிய மத்திய, மாகாண அரசுகளின் நிதி அமைச்சு ஒவ்வொரு நிமிடமும் பின் தொடர்ந்து கண்காணித்துக் கொண்டே உள்ளது.

எந்தவொரு காப்புறுதி கம்பனி, வங்கி, நிதி நிறுவனமும் இக் கண்காணிப்பில் இருந்து தப்பவே முடியாது. ஒரு கம்பனியின் நிதி நிலைமைகள், வருமானங்கள், செலவுகளை கூர்ந்து பார்த்துக் கொண்டிருக்கும் மத்திய, மாகாண அரசுகளின் நிதி அமைச்சு, இக் கம்பனி சரிந்து கொண்டு போகின்றது என்றால் வாடிக்கையாளர் பாதிக்காமல் இருப்பதற்காக இன்னொரு கம்பனிக்கு ஒப்பந்தங்களை மாற்றி அமைத்து ஏதோ ஒழுங்குகளை செய்து கொள்ளும். பல சந்தர்ப்பங்களில் ஒரு காப்புறுதி கம்பனியின் ஒப்பந்தங்களை இன்னொரு கம்பனி வாங்கி கொள்ளும் நிலைமைக்கு அல்லது அவற்றினை ஏனைய கம்பனிக்கு விற்பனை செய்ய வேண்டும் என்ற நிலைமைக்கு அரசினால் காப்புறுதிக் கம்பனிகள் தள்ளப்படுவது வழமையாகும்.

சில நேரங்களில் அரச நிதி அமைச்சுகளின் கண்காணிப்புகளையும் மீறி ஒரு ஆயுள் காப்புறுதி கம்பனி ஒன்று சரிந்து சென்று வங்குரோத்து நிலைமைக்கு உள்ளாக்கப்பட்டால், வாடிக்கையாளர் ஒருவர் பாதிக்காமல் இருப்பதற்கு பாதுகாப்பினையும், உத்தரவாதத்தினையும் அரச நட்டஈடு வழங்கும் நிறுவனம் ஒன்று வழங்குகின்றது. அதாவது காப்புறுதி கம்பனி நியாயமற்ற முறையில் ஏமாற்றினால், அதற்கு இவ் அரச நிறுவனம் பொறுப்பு ஏற்கும்.

இந்நிறுவனமும் அது தொடர்பான விவரங்களும் பின்வருமாறு!


முன்னர் "Compensation Corporation" என்னும் பெயரில் இருந்து டிசம்பர் 1, 2005இல் Assuris எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இந் நிறுவனம் ரொறன்ரோவில் இயங்கும் விலாசம்

**ASSURIS**
**250, Young Street**
**Suite # 3110, P.O.Box 23**
**Toronto**
**Ontario M5B 2L7**

**இணையத்தளம் : www.assuris.ca**
**தொலைபேசி : 1-866-878-1225**
**மின்னஞ்சல் : Info@assuris.ca**

கனடாவின் சகல ஆயுள் காப்புறுதி கம்பனிகளும் இந் நிறுவனத்தில் தங்களின் வங்குரோத்து நிலைமை என்ற ஒரு நிலமை ஏற்படலாம் என்ற ஆபத்துகளுக்கு பாதுகாப்பாக ஒரு காப்புறுதி செய்து இந் நிறுவனத்தின் அங்கத்தவராக இருக்க வேண்டும் என்பது காப்புறுதி கம்பனிகளை கண்காணிக்கும் அரசின் நிபந்தனையாகும்.

வாடிக்கையாளர் ஒருவர் ஆயுள் காப்புறுதி கம்பனியின் வங்குரோத்து நிலைமையினால் பாதிக்கப்பட்டால், ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் $200,000 வரை உத்தரவாதம் வழங்குகின்றது



சிவ பஞ்சலிங்கம்
- ஆயுட்காப்புறுதி பிரதிநிதி -

$200,000இற்கு மேற்பட்ட ஆயுள் காப்புறுதி தொகைகளுக்கு அம் மொத்த தொகையில் 85.5வீதம் வரை உத்தரவாதம் இந் நிறுவனத்தினால் வழங்கப்படுகின்றது.

ஆயுள் காப்புறுதி தொகையுடன் சேர்ந்த முதலீட்டு தொகைகளுக்கு $20,000 வரை உத்தரவாதம் வழங்குகின்றது. இதற்கு மேற்பட்ட பெருந் தொகைகளுக்கு இத் தொகையில் 85 வீதம் வரை உத்தரவாதம் வழங்குகிறது.

உடல் இயங்க முடியாத நிலைமையில் மாத வருமான இழப்பீடு பெற ஒப்பந்தம் செய்து வைத்திருக்கும் காப்புறுதி ஒப்பந்தத்தில் (Disability Income Insurance) மாதம் $2000 வரை உத்தரவாதம் வழங்குகின்றது. இதற்கு மேற்பட்ட பெருந்தொகை மாத வருமான இழப்பீட்டு ஒப்பந்தமாக இருந்தால் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட தொகையின் 85 வீதத்திற்கு உத்தரவாதம் வழங்குகின்றது.

இது தவிர ஆயுள் காப்புறுதி கம்பனிகளில் ஒப்பந்தம் வைத்திருப்பவர்களுக்கு கம்பனி மீது ஏதாவது முறைப்பாடுகள் அல்லது பிரச்சினைகள் இருந்தால் பின்வரும் முகவரியில் உள்ள அரச நிறுவனத்திற்கு தங்கள் முறைப்பாட்டினை எடுத்து செல்லும் போது, அதனை விசாரித்து நியாயமான தீர்வினை வழங்குவதற்கு என இலவசமானமுறையில் கை கொடுக்க என்றும் இன்னொரு அரச நிறுவனம் ஒன்று தயார் நிலையில் உள்ளது. அதன் விபரம் பின்வருமாறு! (ரொறன்ரோவில் உள்ள விலாசம்)

**Canadian Life & Health Insurance Association**
**01, Queen Street East**
**Suite # 1700**
**Toronto**
**Ontario M5C 2X9**

**தொலைபேசி : 416 777 2221**
**இணையதளம் : www.clhia.ca**


உங்கள் வீட்டில் ஒருவரின் மரணம் நடந்தால் மரணமாகியவர் எங்கு ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் செய்து வைத்திருந்தார் என்பது தெரியவில்லையானால் அதனை தேடி அறிந்து கொள்வதற்கும் மரணமாகியவரின் குடும்பத்தவர்களுக்கு மேற்கூறிய இந் நிறுவனம் இலவசமாக உதவி செய்யும்.

எனவே ஆயுள் காப்புறுதி கம்பனி ஒன்று கனடாவில் காணாது போனால், வங்குரோத்து நிலைமைக்கு உள்ளாக்கப்பட்டால், காப்புறுதி செய்தவர் நட்டஈடு கோருவது எங்கே என்ற அச்சம் எதுவும் கனடாவில் காப்புறுதி செய்தவர்களுக்கு என்றுமே தோன்ற தேவையில்லை. ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அம்சங்கள், சரத்துகள், விதிகளை புரிந்து கொண்டு அதன் விலை என குறிப்பிடப்பட்ட மாத அல்லது வருட கட்டு பணத்தினை தொடர்ந்து செலுத்தி அவ் ஒப்பந்தம் ரத்தாகும் நிலைமைக்கு உள்ளாகாமல் பார்த்து கொண்டால் சரி, காப்புறுதி என்றும் கை கொடுக்கும்! அது உறுதியான நம்பிக்கை! சரியாக கை கொடுக்கின்றதா என்பதனை அரசு தமது உத்தரவாதத்துடன் கண்காணிக்கும்.

harini.suren@thaiveedu.com

■ ■ ■

உங்கள் சகல காப்புறுதிகளுக்கும்
பல்வேறு வகையான காப்புறுதி கம்பனிகளிலும் விலைகளை அறியவேண்டுமா
To shop around insurance price please call



Siva Panchalingam, B.Com.
(Licensed Insurance Broker)

Office: 905-479-3400 Ext. 132
Home: 416-321-0999, Cell: 416-990-4908
800, Denison Ave., Suite 201, Markham, ON



# வங்கிக் கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை

## NEW LIFE FRESH START

- கடன் 80% குறைய நடவடிக்கை
  **Reduce your debts upto 80%**
- கடனுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
  **Stop all interest on your debts**
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புக்கள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்
  **Stop collection calls, legal action & garnishments**
- உங்கள் சொத்துக்கள் பாதுகாக்கப்படும்
  **Protect all your assets** (House, Car, RRSP, RESP)
- மாதாந்த ரீதியில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
  **Make one monthly payment to all of your creditors**
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
  **Give you solutions with out bankruptcy**

digi Media

வங்குரோத்து சட்டங்களில் மாற்றங்கள். மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்.
**NEW Changes from Bankruptcy Act. Call me for Details.**

**Suren Sornalingam**
Certified Insolvency Counsellor

Tel: **416.264.1272**
Fax: 416.332.0914
web: www.creditrecoverycanada.com



crc

**CREDIT RECOVERY CANADA**

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON
M1P 4X4

# எச்சரிக்கை - தொட்டிலிலும் ஆபத்து



கந்தசாமி
கங்காதரன்

> நாங்களும் தவறிழைத்திருக்கின்றோம்.
> எதை எதை எங்கு வாங்குவது என்று
> ஒரு சுரணை எங்களிடமும் இல்லை.
> மலிவாகக் கிடைக்கிறது என்றால்,
> எதையும் எங்கும் வாங்குகின்ற குணம் மாறவேண்டும்.
> தேவையில்லாத வில்லங்கங்களையும்
> சேர்த்துத்தான் வாங்குகின்றோம்.

ஓர் உற்பத்திப் பொருள் விற்பனைக்கு வரும் போது எத்தனையோ பாதுகாப்புச் சோதனைகளையும் தாண்டித்தான் வருகிறது. பெரும்பாலான பொருட்கள் விற்பனையான பின், அந்தப் பொருளை நுகர்வோரின் பாதுகாப்புக் குறித்த உற்பத்தியாளர்களின் பொறுப்பு முடிவடைந்துவிடுவதில்லை. ஒரு பொருளைத் தவறாகப் பயன்படுத்திவிட்டு அதன் விளைவுகளையும் உற்பத்தியாளர்களின் தலையில் கட்டுவதும் எமக்குப் புதிதான விடயமல்ல. அதேவேளை விற்கப்பட்ட பொருள் நுகர்வோருக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய சூழ்நிலைகள் காணப்படின் அல்லது அந்தப் பொருள் சரியாக இயங்குவதில்லை என்று காணப்படின் பெரும்பாலான வணிக நிறுவனங்கள் அந்தப் பொருட்களை மீளப்பெற்று திருத்தங்களை மேற்கொள்ளுவதும், மிக அரிதாக மாற்றீடு செய்வதும் அடிக்கடி நாம் கவனிக்கக்கூடிய விடயங்கள்.

நவம்பர் மாதத் தொடக்கத்தில் அமெரிக்காவிலும் கனடாவிலும் Maclaren நிறுவனத்தின் குழந்தைகளுக்கான Strollerகள் மீளப் பெறப்பட்டு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு நுகர்வோருக்கு மீள வழங்கப்படுகின்றன.

இப்போது புதிதாக இன்னுமொரு குழந்தைகளுக்கான பொருள் விற்பனை நிறுத்தப்பட்டு, ‘விற்கப்பட்டவற்றையும் சரியான முறையில் ஆபத்தில்லாமல் இருக்கின்றனவா?’ என உறுதிப்படுத்தவும் கட்டளையிடப்பட்டிருக்கிறது. கனடிய அரச சுகாதாரப்பிரிவு - Health Canada




நுகர்வோருக்கான அறிவிப்பொன்றையும் வெளியிட்டுள்ளது. அமெரிக்காவிலும் இது போன்ற எச்சரிக்கை + அறிவித்தல் வெளியாகியுள்ளது.

அது என்ன பொருள்?

இதை வாசித்துக்கொண்டிருக்கும் உங்களுக்கான பொருள் அல்ல அது. அதைப் பயன்படுத்தும் வயது இதுவல்ல. அதையும் தாண்டி வந்துவிட்டீர்கள்

சரி... பீடிகை போடாமற் சொல்லிவிடுகிறேன். அது தொட்டில். அதிலும் ஒரு பக்கத் தடுப்பினை ஏற்றி இறக்கக்கூடிய வகையிலான தொட்டில்கள் தாம் (Drop Side Crib) இப்போது மீளப்பெறப்படுகின்றது. Stork Craft Drop Side Cribs மற்றும் Stork Craft Drop Side Cribs with Fisher Price Logo ஆகியவற்றுள் எது உங்கள் வீட்டில் இருந்தாலும் இந்தக் கட்டுரை உங்களுக்கான எச்சரிக்கை.

Stork Craft Drop Side Cribs – ஜனவரி 1993இலிருந்து ஒக்டோபர் 2009 வரையிலான உற்பத்தி மற்றும் விநியோக காலத்தினை இவை கொண்டிருந்தால் இந்த எச்சரிக்கை உங்களுக்குப் பொருந்தும்.

Fisher Price Logoவுடன் கூடிய Stork Craft Drop Side Cribs – ஒக்டோபர் 1997இலிருந்து டிசம்பர் 2004 வரையிலான உற்பத்தி மற்றும் விநியோகக் காலத்தினை இவை கொண்டிருந்தால் இந்த எச்சரிக்கை உங்களுக்குப் பொருந்தும்.


‘சரி... இவற்றுளொன்றுதான் என் குழந்தைக்காக நான் வாங்கி வைத்திருக்கிறேன். ஆனால், இந்த உற்பத்தி விநியோகக் காலத்தினை எங்கே நான் தேடுவது’ என்று அங்கலாய்ப்பீர்கள். இந்தத் தொட்டிலை நீங்கள் வாங்கும்போது அதை ஓர் ஆணியும் மிச்சம் வைக்காமல் அல்லது ஆணி, உதிரிப்பாகங்கள் பற்றாக்குறை ஏற்படாமல் எப்படிப் பொருத்துவது என்று வரைபடங்களுடன் விளக்கமாய்ச் சொல்லும் கடதாசி ஒன்று Mattress Support Board உடன் ஒரு பொலித்தீன் பையில் போடப்பட்டு ஒட்டப்பட்டிருக்கும். பெரும்பாலும் அதைப் பார்க்காமல் அலட்சியம் செய்துகொண்டு பொருத்த முனைந்து ஆணிகள், உதிரிப்பாகங்கள் பற்றாக்குறை ஏற்பட்டு அல்லது மிஞ்சிப் போனபின், ஞானம் பிறந்து அறிவுறுத்தலைப் பின்பற்றி பொருத்துபவர்கள் நாம். அந்த அறிவுறுத்தலை எல்லோரும் கவனமாக வைத்திருப்பீர்கள் (என்று நம்புகிறேன்). அதில் Manufacture / Distribution Date, Model Number, Crib Name எல்லாம் குறிப்பிடப்பட்டிருக்கும்.

இந்தத் தொட்டிலிக் கண்டுபிடிக்கப்பட்ட ஆபத்து என்னவென்று பார்ப்போம். ஒருபக்கத் தடுப்பு




உயர்த்தி இறக்கக்கூடியனவாய் இருக்கும் (Drop Side Cribs). இதைத் தலைகீழாகவும் பொருத்தலாம். ஆனால் அப்படி இருக்கக்கூடாது. இப்படிப் பொருத்தும் போது சில பிளாஸ்டிக் உதிரிப்பாகங்களை உடைத்துவிடுகிறது. அல்லது சேதப்படுத்தி அந்த உதிரிப்பாகத்தின் சரியான செயற்பாட்டைத் தடுத்துவிடுகிறது. இதன் காரணமாக அந்தத் தடுப்பு தொட்டிலின் மூலைகளில் ஒரு பெரிய இடைவெளியை ஏற்படுத்தி விடுகிறது. இது மெத்தைக்கும் பக்கத் தடுப்புக்குமிடையேயான இடைவெளி. சின்னஞ்சிறு குழந்தை உருண்டு புரண்டு படுக்கும்போது இந்த இடைவெளிக்குள் அகப்படக்கூடும். அப்படி அகப்படும்போது காயங்கள் ஏற்படலாம். மூச்சுத் திணறி, குழந்தையின் உயிருக்கும் ஆபத்தாகலாம். அந்தத் தடுப்பு முற்றுமுழுதாகத் தொட்டிலிலிருந்து கழன்று தனியே வரும்போது குழந்தை தொட்டிலிலிருந்து கீழே விழக்கூடிய ஆபத்தும் உண்டு. இவற்றைக் கேட்டு ஒரேயடியாக இந்த வகைத் தொட்டில்கள் உயிராபத்து விளைவிக்கும் என்று பயந்து விடாதீர்கள். அவை கனடியத் தரக்கட்டுப்பாட்டு, பாதுகாப்புக் கட்டுப்பாட்டு நியமங்களுக்கு அமைவாக உற்பத்தி செய்யப்படுபவை. ஆனால் தவறாக பொருத்தும்போதும் அடிக்கடி கழற்றிப் பொருத்தும்போதும் நீண்டகாலப் பாவனையின் பின்பு பிளாஸ்டிக் உதிரிப்பாகங்கள் உடைந்து போய்விடுவதலும் அவற்றின் வினைத்திறன் குறைந்து அல்லது இல்லாது போவதையும் இதுவரையில் பதிவான விபத்துக்கள் சுட்டிக் காட்டுகின்றன.

கனடாவில், தொட்டிலுக்கும் தடுப்புக்குமிடையில் குழந்தைகள் அகப்பட்டுக்கொண்ட மூன்று சம்பவங்கள் பதிவாகியுள்ளன. தடுப்பு முற்று முழுதாகக் கழன்றுபோய், குழந்தைகள் தொட்டிலிலிருந்து கீழே விழுந்ததாக எட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. உயர்த்தி அல்லது இறக்கக்கூடிய தடுப்புள்ள பக்கத்தின் பிளாஸ்டிக் உதிரிப்பாகங்கள் உடைந்துபோனதாக 32 சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அமெரிக்காவில் குழந்தைகள் தொட்டிலுக்கும் தடுப்புக்குமிடையே 12 சம்பவங்களில் அகப்பட்டிருக்கின்றன. அதில் நான்கு உயிர்கள் இழக்கப்பட்டிருக்கின்றன. 12 சம்பவங்கள் குழந்தைகள் தொட்டிலிலிருந்து விழுந்ததாகவும், உடைந்த உதிரிப்பாகங்கள் 43 சம்பவங்களிலும் பதிவாகியுள்ளன. பெற்றோர்களும் குழந்தைப் பராமரிப்பாளர்களும் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கவேண்டிய விடயம் இது. குழந்தையைத் தொட்டிலிற் கிடத்த முன் உதிரிப்பாகங்கள் இறுக்கமாக இல்லாது விடின் அல்லது ஏதாவது உதிரிப்பாகங்கள் இல்லாமல் இருந்தால் எக்காரணம் கொண்டும் தொட்டிலைப் பயன்படுத்தக் கூடாது. ஏதாவது சேதங்கள் அவதானிக்கப்பட்டாலும் அந்தத் தொட்டிலைப் பயன்படுத்தக்கூடாது என்று அறிவுறுத்தப்படுகிறது. ஏதாவது திருத்த வேலைகள் செய்வதென்றாலும் உதிரிப்பாகங்களை மாற்றுவதென்றாலும் கண்ட கண்ட இடங்களிலும்




உதிரிப்பாகங்களை வாங்கக் கூடாது. தொட்டிலின் உற்பத்தியாளர்களிடம் பெறப்படும் உதிரிப்பாகங்களை மட்டுமே நம்புங்கள். இழைக்கயிறு, தேடாவளையம், Wiring Tape, Duct Tape, வயர்த்துண்டுகள், கட்டுக்கம்பி என்று கண்டது கேட்டதை எல்லாம் கொண்டு வந்து உடைந்த பாகங்களை வரிந்துகட்டவே கூடாது. மேலதிக உதிரிப்பாகங்கள் தேவைப்படுமிடத்து உற்பத்தியாளர்களை மட்டுமே தொடர்புகொள்ள வேண்டும்.

உங்கள் குழந்தைகளின் பாதுகாப்பு உங்கள் கைகளில் மட்டுமே. தொட்டிலில் ஏதாவது குறைபாடுகள் காணப்படின் எக் காரணம் கொண்டும் அதனைப் பயன்படுத்தாதீர்கள். குழந்தைக்கு வேறு பாதுகாப்பான வசதியான இடத்தை ஏற்படுத்தலாம். ஆனால் ஏதாவது விபத்துக்கள் ஏற்பட்டு விட்டால்...!?

இந்த மீளப்பெறுதல் என்பது முற்றுமுழுதாக அந்தப் பொருளை உங்களிடமிருந்து வாங்கி, பதிலாக வேறு பொருளோ பணமோ தருவதல்ல. அந்தப் பொருளின் பாதுகாப்பான நேர்த்தியான பயன்பாட்டை உறுதி செய்வதே இங்கு நடைபெறுகிறது.

உங்கள் வீட்டிலும் இப்படியான தொட்டில்கள் இருப்பின் உற்பத்தியாளர்களைத் தொடர்பு கொள்ளுங்கள். ஏற்றி இறக்கக்கூடிய பக்கத் தடுப்பை நிலையாகப் பொருத்தக்கூடிய உதிரிப்பாகங்களையும் அறிவுறுத்தலையும் தருவார்கள்.

இந்தத் தொட்டில் உற்பத்தியாளர்கள் Stork Craft Manufacturing Inc – இது ஒரு கனடிய நிறுவனம். கட்டணமில்லாத் தொலைபேசி எண்: **1-877-274-0277**
இணையத்தளம் **www.storkcraft.ca**

மேலதிகத் தகவல்களுக்கு, கனடிய அரசினால் நிர்வகிக்கப்படும் மக்கள் நல இணையத்தளம் www.healthycanadians.gc.ca.

அமெரிக்க நுகர்வோர் பாதுகாப்பு ஆணைக்குழு – United States Consumer Product Safety Commission – இணையத்தளம் www.cpsc.gov

கனடாவில் இந்த மீளப்பெறப்படுகின்ற வகைத் தொட்டில்கள் 970,000 வரையிலும் அமெரிக்காவில் 1,210,000க்கு மேலும் விற்பனையாகியுள்ளன. Sears, Wal Mart மற்றும் பல நிறுவனங்கள் விற்பனை செய்துள்ளன. நவம்பர் 24 செவ்வாய் காலைமுதல் Wal Mart நிறுவனம் இவ்வகைத் தொட்டில்களின் விற்பனையை நிறுத்தியுள்ளது.

பாதுகாப்புக்கு முன்னுரிமை என்ற வகையில் இனிமேல் ஒருபக்கத் தடுப்பை ஏற்றி இறக்கக்கூடிய வகையில் தொட்டில்கள் உற்பத்தி செய்வதில்லை என்று முடிவாகியிருக்கிறது.

அமெரிக்காவில் உயிரிழப்பு ஏற்பட்ட தொட்டில்களில் ஒன்று எங்கோ ஒரு Garage Saleல் வாங்கப்பட்டதாகவும் மீள தீந்தை பூசப்பட்டதாகவும் சரியாகப் பொருத்தப்பட்டிருக்கவில்லை எனவும் உற்பத்தியாளர்கள் வாதிடுகின்றனர். Stork Craft நிறுவனத் தலைவர், “எமது நிறுவனம் உற்பத்தி செய்யும் தொட்டில்கள் தரமானவை, பாதுகாப்பானவை” என்று உறுதிப்படுத்தியிருக்கின்றார். “அறிவுறுத்தல்களின்படி பொருத்தினால், பயன்படுத்தினால் அவை எப்பொழுதுமே பாதுகாப்பானவை” என்றும் Canadian Press செய்தி நிறுவனத்திற்கு வழங்கிய செவ்வியில் அவர் தெரிவித்திருக்கின்றார்.

நாங்களும் தவறிழைத்திருக்கின்றோம். எதை எதை எங்கு வாங்குவது என்று ஒரு சுரணை எங்களிடமும் இல்லை. மலிவாகக் கிடைக்கிறது என்றால், எதையும் எங்கும் வாங்குகின்ற குணம் மாறவேண்டும். தேவையில்லாத வில்லங்கங்களையும் சேர்த்துத்தான் வாங்குகின்றோம். - அங்கீகாரம் இல்லாத இடங்களில் எதையாவது வாங்கும்போது...

சரி வாசித்துவிட்டீர்களா...? ‘தாய்வீடு பத்திரிகையில் மற்றக் கட்டுரைகளையும் வாசித்து விட்டு மூடிவைத்துவிட்டால் சரி’ என்று இருக்காமல், இம்மாதிரியான தொட்டில்கள் பயன்படுத்துகிறவர்கள் யாரையேனும் உங்களுக்கு தெரிந்திருந்தால் அவர்களுக்கும் இந்த விடயத்தைத் தெரியப்படுத்துங்கள். பெரும்பாலான விபத்துக்கள் தவிர்க்கப்படக்கூடியவை. கவனமும் முன்னெச்சரிக்கையும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றும் உணர்வும் இருந்தால் எத்தனையோ விபத்துக்கள் தவிர்க்கப்படக்கூடியவை.

இப்போது ஒரு விபத்தைத் தவிர்ப்பதில் நீங்களும் பங்குதாரராகிவிடுவீர்கள்.

gangatharan.k@thaiveedu.com

# வாகன விபத்தில் காயமடைந்துவிட்டீர்களா?

அனுபவசாலிகளின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்







Over **50 Years**
Combined Experience

Even if you are:
- unemployed
- cyclist
- passenger
- pedestrian
- traveling in public transit
- student
- housewife

## FIREMAN WOLFE LLP

PERSONAL INJURY LAWYERS

CERTIFIED AS A SPECIALIST IN CIVIL LITIGATION

SPECIALIZING IN SERIOUS PERSONAL TRAUMATIC INJURIES AS RESULT OF A

**MOTOR VEHICLE ACCIDENT**

FRACTURES • SPINAL CORD INJURY • BRAIN OR HEAD INJURY
SCARRING OR DISFIGUREMENT • INTERNAL INJURIES OR DEATH

**உங்களுக்குத் தெரியுமா?**

விபத்து உங்கள் தவறில்லாவிடின் உங்களால் வலி, வருத்தம், வாழ்வில் இழந்த மகிழ்ச்சி ஆகியவற்றுக்காக பணமாக **$330,000.00** வரையும், சம்பள இழப்பீடுகள், அத்துடன் **$172,000.00** வரை இழப்பாகவும் மற்றும்பல்வகையான இழப்புக்களுக்கு நஷ்டஈடுகள் பெறமுடியும்.

**உங்களுக்குத் தெரியுமா?**

விபத்து உங்கள் தவறாகயிருப்பின் உங்களால் **$172,000.00** வரையும் வருமான இழப்பீடாக வாரத்திற்கு **$400.00** வரையும், இன்னும் பலவகை இழப்பீடுகளையும் பெறமுடியும்.

**If the impairment catastrophic your claim can be:**
- Medical and Rehabilitation expenses up to **$1,000,000.00**
- Personal care expanses up to **$1,000,000.00**

## தீபன்


Thiparanjan Sivarajalingam
Accident Benefit Specialist
Licensed Paralegal
(Member of The Law Society of Upper Canada)

இலவச ஆலோசனைகளுக்கு: **(416) 505-9804**

24 Hours Direct Line **(416) 624-4751**

அனுபவம் இல்லாதவர்களின் ஆலோசனையின் கீழ் விழுந்திடாதீர்கள்

"One of the best personal injury law firm in Ontario"



**Jack J. Fireman Q.C. LLM.**
Jack J. Fireman Q.C. has been voted to the "Most Frequently Recommended Lawyer" catergory in L'Expert since 1997 as voted by the his peers from Ontario



**William C. Wolfe B.A. LLB**

Prior to 2000, Mr. Fireman and Mr. Wolfe defended insurance companies before changing their practices to representing injured people only.

IF YOU HAVE OPTIONAL INSURANCE, YOU CAN CLAIM UP TO **$1,000.00** IRB'S PER WEEK
வரை
இழப்பதற்கு அனுமதிக்காதீர்கள்

TORONTO SCARBOROUGH MISSISSAUGA



# ஆயுட் காப்புறுதி

**Universal Life • Whole Life • Term Life • Non Medical**

| RESP | RRSP | CRITICAL ILLNESS |
|---|---|---|
| + 20% Government Grant 15% Company Bonus | Loan Aproved Even SIN Number 9 | Upto 25 Illness |

digi



**VASANTH VINAYAGAMOORTHY**
Insurance Broker
**647-885-3012**
www.vvinsurance.ca

759 Warden Ave., Toronto, ON M1l 4B5
Office: 416-759-5453, Fax: 416-759-6220

# அமைதியை கலாச்சாரம் ஆக்குங்கள்

உலகெங்கும் அமைதியை உருவாக்குவது பற்றி பேச்சு நடைபெற்றுக் கொண்டேயிருக்கிறது. அமைதியை யாரும் உருவாக்க முடியாது. மோதல்கள்தான் மனிதர்களின் உருவாக்கம். மோதல்களை உருவாக்காமல் விட்டாலே அமைதி தானாக நிகழும்.

உலகில் பலவகையான மோதல்கள் நிகழ்கின்றன. தனி மனிதன் தனக்குள்ளேயே சில மோதல்களை உணர்கிறான். அது வெளியிலும் நீள்கிறது. குடும்பத்தோடு பக்கத்து வீட்டோடு நிகழும் மோதல்களே சமூகங்களுக்கிடையிலும், தேசங்களுக்கிடையிலும், மதங்களுக்கு நடுவிலும் கூட நிகழ்கிறது.

## அதிக மோதல்களுக்கு காரணம் மதங்களே

இந்த உலகுக்கு மோதல்கள் புதிதல்ல. மனித குலம் தோன்றிய காலம் தொட்டு மோதல்கள் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. சண்டைகளை அவ்வப்போது சரி செய்யத்தான் பார்த்திருக்கிறார்களே தவிர, நிரந்தரமான தீர்வுக்கு யாரும் முயற்சித்ததில்லை. சண்டை வருகிறபோது சமாதானம் ஏற்படுத்துகிறார்கள். சிறிது காலத்திற்கு பிறகு அது மீண்டும் வெடிக்கிறது. அமைதியின் உறைவிடங்களாய் கருதப்படும் மதங்களின் பேரிலேயே அதிக அளவு மோதல்கள் உலகெங்கும் ஏற்படுகின்றன.

எனவே, அவ்வப்போது சண்டைகளை சரிசெய்வது பற்றி மட்டும் சிந்திக்காமல் நிரந்தரமான தீர்வை நோக்கி நகர வேண்டும். அமைதியை ஒரு கலாச்சாரமாகவே உருவாக்க வேண்டும் என்று கருதினால் முதலில் ஒன்றைப்புரிந்து கொள்ளவேண்டும். ஒரே இரவில் சலாச்சாரத்தை உருவாக்கிவிட முடியாது. தீர்மானம் இயற்றுவதாலோ சட்டம் நிறைவேற்றுவதாலோ கலாச்சாரங்கள் உருவாகுவதில்லை. ஒரு முழு தலைமுறை அமைதியில் வாழுமேயானால் அடுத்த தலை முறையில் அமைதி ஒரு கலாச்சாரமாக மலர வாய்ப்பிருக்கிறது. எனவே ஒரு சிக்கலுக்கு உடனடியாக எதையோ செய்யவேண்டும் என்று யோசிப்பதை விட நிரந்தரத் தீர்வு என்ன என்று சிந்திப்பதே நல்லது.

## நஷ்டம் பிறகு பதட்டம் பிறகு மோதல்

மனிதர்களைப் பொறுத்தவரை எது நிகழ்ந்தாலும் அது ஒருவருக்கு ஆதாயம் தருவதாகவும் இன்னொருவருக்கு நஷ்டம் தருவதாகவும்தான் அமையும். காலங்காலமாகவே உலகெங்கும் இந்தக் கொடுக்கல் வாங்கல் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. குடும்பங்கள் மத்தியில் என்றாலும் தேசங்களுக்கு மத்தியில் என்றாலும் நஷ்டம் ஏற்படுகிறபோது கோபமும் பதட்டமும் ஏற்படுமேயானால் அங்கே அமைதி ஏற்பட வாய்ப்பில்லை.

எல்லா மனிதர்களுக்குமே வாழ்வின் சில தருணங்களில் சில பாதகங்களும் அநீதிகளும் ஏற்படத்தான் செய்கின்றன. அப்போதெல்லாம் மனிதர்கள் பதட்டமடைகிறபோது மோதல்கள் எழுவது இயற்கையாகின்றது.

அமைதியான மனிதர்கள் உருவாகும்வரை அமைதியான உலகம் என்பது நிறைவேறாத கனவாகத்தான் இருக்கும். இன்று அமைதி குறித்துப் பேசுகிற உலக நாடுகள் கூட தங்களுக்கு சூழ்நிலை பாதகமாக இருந்தால் அமைதி குறித்துப் பேசுவார்கள். சூழ்நிலை சாதகமாக இருந்தால் போர் குறித்துப் பேசுவார்கள்.

## இல்லாததைப் பகிர்ந்து கொள்வோம்!

சோவியத் யூனியனில் கம்யூனிஸம் சிறந்து விளங்கியபோது அது குறித்து கேள்விப்பட்ட மார்க் ட்வெயின், அந்தக் கொள்கை பற்றி அறிந்து கொள்ள சோவியத் நாட்டிற்குச் சென்றார். இருப்பதை பகிர்ந்து உண்பது என்கிற கோட்பாடு அவருக்கு மிகவும் பிடித்திருந்தது. சோவியத் நாட்டின் கிராமப்புறத்து வீதி ஒன்றில் கைகளில் இரண்டு கோழிகளோடு சென்று கொண்டிருந்த ஒரு விவசாயி அவர் கண்களில் பட்டார். அவரிடம் சென்று, “தோழரே! உங்களிடம் இரண்டு வீடுகள் இருந்தால் என்னிடம் ஒன்றைக் கொடுத்து விடுவீர்களல்லவா?” என்றார் மார்க் ட்வெயின் அவர் ஆமோதித்தார். “தோழரே! உங்களிடம் இரண்டு வாகனங்கள் இருந்தால் என்னிடம் கொடுத்து விடுவீர்களல்லவா?” என்றார் அந்த விவசாயி “ஆம்” என்றார். மார்க் ட்வெயின் மிகவும் உற்சாகமாகி, அப்படியானால் உங்களிடமிருக்கிற இரண்டு கோழிகளில் ஒன்றை என்னிடம் கொடுத்து விடுவீர்கள்தானே” என்றதும் அந்த மனிதர் அதிர்ந்துபோய் “என்ன உளறுகிறீர்கள்! என்னிடம் இருப்பவை இரண்டே கோழிகள்” என்றாராம்.

> “இன்று அமைதி குறித்துப் பேசுகிற
> உலக நாடுகள் கூட
> தங்களுக்கு சூழ்நிலை பாதகமாக இருந்தால்
> அமைதி குறித்துப் பேசுவார்கள்.
> சூழ்நிலை சாதகமாக இருந்தால்
> போர் குறித்துப் பேசுவார்கள்.”

இந்தக் கதை மனிதர்களின் மனஇயல்பைக் காட்டுகிறது. தங்களிடம் இல்லாததைப் பகிர்ந்து கொள்ள மனிதர்கள் தயாராக இருக்கிறார்களே தவிர இருப்பதைப் பகிர்ந்து கொள்ள மாட்டார்கள். அதுமட்டுமல்ல இல்லாதவர்கள்தான் சமரசம் பற்றியும் சமாதானம் பற்றியும் பேசுகிறார்கள். இருப்பவர்கள் தங்களுக்கு வேண்டியதை பெறுவதிலேயே குறியாய் இருக்கிறார்கள். இன்றைய உலகின் 90% வளங்கள் 5% மனிதர்களின் கைகளில் இருக்கின்றன. இப்படி இருக்கும்போது அமைதி என்பதே மிகவும் சிரமமான விஷயம்.

## கோபத்தில் எடுக்கும் முடிவு அபத்தமாகவே இருக்கும்

அமைதியை ஒரு கலாச்சாரமாக உருவாக்குவது என்று சொன்னால் நிகழ்கால உலகின் நிதர்சனங்களை வைத்து நாம் மதிப்பிட முடியாது. அடுத்து வருகிற 50 அல்லது 100 ஆண்டுகளில் நிகழப்போவதைப் பற்றியே நாம் பேசுகிறோம். இது நிகழவேண்டுமானால் ஒரு மனிதன் அமைதி நிறைந்த உயிராய் ஆவது எப்படி என்று பார்க்க வேண்டும். இப்படிச் சொன்னால் மிக மெதுவாகவும் நிதானமாகவும் மனிதர்கள் இயங்க வேண்டும் என்று பொருளல்ல. இன்றைய இளைஞர்கள் இதனை நன்கு புரிந்து கொள்ளவேண்டும். செயல்படுவது என்றால் அதிரடியாக இயங்குவது, வன்முறையாக இயங்குவது என்று பலரும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். உங்களுக்குள் இருக்கும் திறமை வெளிப்படும் விதமாக செயல்பட வேண்டுமென்றால் முதலில் உங்களுக்குள் அமைதி இருப்பது அவசியம்.

நீங்கள் கோபமாக இருக்கிறபோதுதான் மிக அபத்தமான முடிவுகளை எடுக்கிறீர்கள்.

கோபத்தின்போது உங்களுக்குள் என்ன உணர்கிறீர்கள்? அசௌகரியத்தைத்தான் உணர்கிறீர்கள். தனக்குத்தானே அசௌகரியத்தை ஏற்படுத்திக் கொள்ளக் கூடியவரை அறிவாளி என்றா அழைக்க முடியும். உள்தன்மையில் அமைதி நிலவினால் மிகக் கடுமையான சூழ்நிலைகளைக் கூட உங்களால் திறம்படக் கையாள முடியும். உங்களுக்குள் அமைதியை ஏற்படுத்த முடியாதபோது உலகத்திற்குள் அமைதியை எப்படி உருவாக்க முடியும்.

சிறு குடும்பப்பிரச்சினை கூட உங்களை 20 வருடங்கள் கோபத்தில் வைத்திருக்கிறது

உலக அமைதி பற்றி பேசுபவர்கள் ஒரு விநாடி கூட தங்களுக்குள் அமைதியாக இருக்க முடிவதில்லை என்றால் அது மிகப்பெரிய வேடிக்கையாகத்தான் இருக்கமுடியும். இன்னும் சிலபேர் ஒரு கேள்வி கேட்பதுண்டு நம்மைச் சுற்றி அநீதியும் அநியாயங்களும் நடைபெறுகிறபோது அமைதியாய் இருப்பது எப்படி என்று கேட்பார்கள். உங்களைச் சுற்றி அநியாயங்கள் நடைபெறுகிறபோதுதான் இன்னும் அமைதியாய் இருக்க நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டும். ஏனென்றால் பதட்டமான சூழலில் அமைதியிழப்பது சூழ்நிலையை மேலும் சீர்குலைக்குமே தவிர சரிசெய்யாது.

அப்படியானால் அமைதியாய் இருப்பது எப்படி? இதனை விஞ்ஞான பூர்வமாக பலரும் அணுகுவதே இல்லை. சூழ்நிலையை எப்படியாவது சமாளிக்கவே பலரும் நினைக்கிறார்கள். தங்களைச் சுற்றியிருக்கும் அனைத்தும் சரியாக இருந்தால் அமைதியாக இருக்கமுடியும் என்று நினைக்கிறார்கள். நீங்கள் எவ்வளவு வல்லமை வாய்ந்தவராக இருந்தாலும் வெளிச் சூழல் என்பது முழுமையாக உங்கள் கையில் இல்லை. யார் மீதாவது எதற்காவது கோபப் பட எல்லோரிடமும் ஏதோ ஒரு காரணம் இருக்கிறது. நீங்கள் கோபப்பட வேண்டுமென்றால் அதற்கு பெரிய யுத்தம் நிகழவேண்டும் என்று அவசியமில்லை. உங்கள் குடும்பத்தில் நடக்கும் சிறு பிரச்சனை கூட இருபது வருடங்களுக்கு உங்களை கோபமாகவே வைத்திருக்கும்.

வெளிச் சூழ்நிலையால் உங்கள் அமைதியையும் அமைதியின்மையையும் தீர்மானிக்க



- சத்குரு வாசுதேவ் -

முடியுமென்றால் நீங்கள் யாருக்கோ அடிமையாக இருக்கிறீர்கள் என்றுதான் அர்த்தம். எனவே உங்களுக்குள் என்ன நிகழவேண்டுமென்பதை நீங்களே தீர்மானிக்க வேண்டுமென்றால் அதற்கொரு தொழில் நுட்பம் இருக்கிறது. இன்று நவீன தொழில் நுட்பத்தின் உதவியுடன் வெளியே இருக்கிற உஷ்ணத்தைக் கூட்டவோ குறைக்கவோ உங்களால் முடியும். அதுபோல் உள்நிலையையும் உங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதற்கு வழிசெய்யும் தொழில்நுட்பம்தான் யோகா.

## தனிமனிதர் முதலில் அமைதியை தங்கள் இயல்பாக்கிக் கொள்ள வேண்டும்

உள்நிலை அமைதி என்பது ஒரு வகை ரசாயனம். ஒரு மனிதர் மனத்தளவில் பதட்டமாகிறார் என்றால் அவருக்கு சில மருந்துகளைக் கொடுக்கிறார்கள். அதாவது மருந்தின் வழியாக ஒரு வித ரசாயனம் அவருக்குள் செலுத்தப்படுகிறது. மகிழ்ச்சி, சோகம், பதட்டம், ஏக்கம் எல்லாமே ஒரு வகையான ரசாயனம் தான். ஒரு மனிதன் தனக்குள் சரியான ரசாயனத் தன்மையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென்றால் அதற்கென்று ஒரு நாளில் சில நிமிடங்களை ஒதுக்கினால் போதும். அமைதியும் ஆனந்தமும் உங்களுக்குள் இயல்பாகவே தோன்றும். தனி மனிதர்கள் அமைதியானவர்களாக உருவாகாத வரையில் கலாச்சாரத்தில் அமைதி இருக்காது. உலகத்தில் அமைதி இருக்காது. தங்களை மாற்றிக் கொள்ள தனி மனிதர்கள் தயாராகிறபோது அவர்கள் தொடர்பு கொள்கிற வெளியுலகிலும் அதே அமைதியை உருவாக்க முடிகிறது.

யோகப் பயிற்சியின் மூலம் உலக நாடுகளில் யுத்தங்களைத் தடுத்து அமைதியை ஏற்படுத்த முடியுமா என்று சிலர் கருதலாம். இந்த உலகின் வலிமை மிகுந்த நாடுகளையெல்லாம் தலைமை தாங்கி வழிநடத்துபவர்கள் தனி மனிதர்கள் தானே தவிர பிசாசுகள் அல்ல. தங்கள் மனிதத் தன்மையோடு தங்களை அடையாளப்படுத்திக் கொள்ளாமல் தங்கள் சமூகத்துடனோ, சமயத்துடனோ தேசத்துடனோ சிலர் தங்களை அடையாளப்படுத்தக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் மனிதத் தன்மையோடு அடையாளப்படுத்திக் கொள்ள வாய்ப்பளித்தால் எந்தச் சிக்கலையும் பேசித் தீர்த்துக் கொள்ளலாம். உள்நிலையில் அமைதி இல்லாதபோது எல்லாச் சின்ன விஷயங்களும் பிரம்மாண்ட மோதல்களாக ஊதிப் பெரிதாக்கப்படுகிறது.

இந்த உலகில் பொறுப்புள்ள இடங்களில் இருப்பவர்களை அமைதி நிறைந்த மனிதர்களாக மலரச் செய்தால் அமைதியை ஒரு கலாச்சாரமாக உருவாக்குவது காலப்போக்கில் சாத்தியம் ஆகும்.

mahesan.thiru@thaiveedu.com

■ ■ ■

**ABC Private Tutoring & Homework Help**

**French -** For grade 4 to grade 10 By a native French speaking teacher from France **Math -** For grade 5 to grade 12 In English or French medium

Intersection

**Victoria park & Ellesmere**

**Mr. Shanthakumar**

**Tel: 647 262 9430**

**தமிழில் பேசுவோம்!**

**தமிழில் பெயர் வைப்போம்!!**

**தமிழில் வழிபடுவோம்!!!**


Mortgage Mortgage Mortgage
5 வருட ஈட்டுக்கடனுக்கான வட்டி விகிதம் 3.79%
variable 2.00%
வருடத்தைக் கொஞ்சம் கூட்டி மோட்கேஜ் கட்டுக்காசைக் குறைக்க வேணும். பெனால்டி கூட வருமோ என்று பயமாக இருக்கு!!
வீட்டை மாற்றி எழுதவேணும். ஒருவருடைய பெயரை எடுத்து விட்டு, மற்றைய நபரின் பெயரைச் சேர்க்கவேண்டும். அதற்கு நல்ல அட்வைஸ் தேவை!!
CONSOLIDATE ALL YOUR CREDIT CARDS & OTHER HIGH INTEREST DEBTS!
LOWER YOUR MORTGAGE PAYMENTS!
CALL NOW:
(416) 716-8707
தயா PK கந்தையா BAS, ABR®
Principal Mortgage Broker
FSCO LIC# M08001083
CENTUM™ Rapid Mortgages Inc.
FSCO LIC #10158
- WWW.CENTUMRAPID.COM -
Scotiabank CIBC TD Canada Trust FirstLine Mortgages IA Industrial Alliance Insurance and Financial Services Inc. Home Trust Street Capital
211-80 NASHDENE RD • TORONTO, ON • M1V 5E4 • BUS: 416-644-3555 • FAX: 866-696-3893
Interest rates are subject to change without notice. Rates based on individual credit worthiness and income. Some other conditions may apply, call for details

# நீங்கள் முகவரிற்கு (ஏஜென்சி) ஊடாக தொழில் புரிபவரா?

- மிலன் நடராஜா -

**சட்டத்தில் புதிய மாற்றம்! நவம்பர் 6, 2009ல் இருந்து அமலுக்கு வருகின்றது.**
ஆம், நாம் சாதித்துள்ளோம்!

தொழிலாளர் நடவடிக்கை நிலையமும் ஒன்ராறியோ மாகனம் முழுவதிலும் உள்ள அதன் அங்கத்துவர்களும், ஆதரவாளர்களும், ஏஜென்சிக்கு ஊடாக தொழில் செய்யும் தொழிலாளர்களும் பல வருடங்களாக ஏஜென்சிக்கு ஊடாக தொழில் புரியும் தொழிலாளர்களிற்கு மேலதிக சட்டப் பாதுகாப்பு வேண்டி போரடி வருகின்றார்கள்.

இந்த மாற்றங்கள் ஆனது எங்களது முயற்சிகளிற்கு கிடைத்த நேரடிப் பயன் ஆகும்.

**உங்களுடைய முகவர்களும் (Agency) இந்தப் புதிய சட்டங் களை மதித்து நடக்கின்றார்களா?**

**பொது விடுமுறைக்குரிய (Public Holiday) ஊதியம்.**
ஏஜென்சிக்கு ஊடாக வேலை செய்யும் அனைத்து தொழிலாளர்களும் ஏனைய தொழிலாளர்கள் போல் பொது விடுமுறைக்குரிய ஊதியத்தைப் பெற்றுக் கொள்ள சமஉரிமை உள்ளது. நீங்கள் தற்பொழுது வேலை செய்து கொண்டிருந்தாலும், தற்காலிகமாக ஏஜென்சிக்கு ஊடாக வேலை அற்று இருப்பினும் உங்களிற்கும் பொது விடுமுறைக்குரிய ஊதியத்தைப் பெற்றுக் கொள்ள சந்தர்ப்பம் இருக்கின்றது. இந்த ஊதியத் தொகையை கணக்கிடுவது எவ்வாறெனில், அந்த பொது விடுமுறை தினத்திற்கு முந்தைய நான்கு கிழமைச் சம்பளம் மற்றும் அந்த நான்கு கிழமைக்கு உரிய விடுமுறைக்குரிய (Vacation) தொகை ஆகியவற்றைக் கூட்டி 20ஆல் வகுக்க வரும் தொகையே அந்த தொகை ஆகும். நீங்கள் ஏஜென்சிக்கு ஊடாக இந்த பொது விடுமுறைக்கு முதல் உள்ள நான்கு கிழைமையும் வேலை செய்யாமல் இருக்கும் பட்சத்தில் இந்த தொகை $0 ஆக இருப்பதற்கு வாய்ப்புள்ளது.

**கட்டணங்கள் அறவிடப்பட முடியாது.**
எந்த ஒரு ஏஜென்சியும் உங்களிற்கு வேலை பெற்றுத் தருவதற்கு உதவி செய்வதற்கோ அல்லது, நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு உங்களை தயார்ப்படுத்துவதற்கோ அல்லது தன்விபரக் கோவையை தயாரிப்பதற்கோ அல்லது முகவர்களிடத்தில் உங்களை பதிவு செய்வதற்கோ உங்களிடம் இருந்து எந்த ஒரு கட்டணமும் அறவிட முடியாது.

**நிரந்தர வேலையை பெற்றுக் கொள்வதில் உள்ள தடைகள் குறைக்கப்பட்டுள்ளது.**
ஏஜென்சிக்கு ஊடாக ஒரு கம்பனியில் நீங்கள் வேலை பார்த்துக்கொண்டு இருக்கும் போது, உங்களை அந்தக் கம்பனி நேரடியாக தனது தொழிலாளியாக வேலைக்கு அமர்த்துவதை அந்த ஏஜென்சி தடை செய்ய முடியாது. ஆனால் உங்களை தங்களது நிரந்தர தொழிலாளியாக மாற்றிக் கொள்வதற்காக ஏஜென்சி அந்தக் கம்பனியிடமிருந்து கட்டணங்களை அறவிடலாம். ஆனால் உங்களிடம் இருந்து அறவிட முடியாது. நீங்கள் ஏஜென்சிக்கு ஊடாக அந்தக் கம்பனியில் வேலைக்கு அனுப்பப்பட்டு முதல் 6 மாதங்களிற்குள் உங்களை அந்தக் கம்பனி தனது சொந்த தொழிலாளியாக மாற்றினால் மட்டுமே இந்தக் கட்டணத்தை அறவிட முடியும். ஒரு கம்பனி உங்களிற்கு reference கடிதம் தருவதை ஏஜென்சி தடை செய்ய முடியாது.

> “ நீங்கள் தற்பொழுது ஏஜென்சிக்கு ஊடாக
> வேலை செய்து கொண்டிருந்தாலும்,
> அல்லது
> தற்காலிகமாக ஏஜென்சிக்கு ஊடாக
> வேலை அற்று இருப்பினும்,
> ஏனைய தொழிலாளர்கள் போல் உங்களிற்கும்
> பொது விடுமுறைக்குரிய ஊதியத்தைப்
> பெற்றுக்கொள்ள
> சந்தர்ப்பம் இருக்கின்றது. ”

**உங்களது வேலை பற்றிய விபரங்களை உங்களது ஏஜென்சி உங்களிற்க்கு கட்டாயம் வழங்க வேண்டும்.**
உங்களது ஏஜென்சி அதனது பெயர், தொடர்பு கொள்வதற்குரிய விபரங்கள் ஆகியவற்றை உங்களிற்கு எழுத்து மூலம் வழங்க வேண்டும். அத்துடன் தொழில் அமைச்சினால் வழங்கப்படுகின்ற உங்களது தொழில் உரிமைகள் பற்றிய விபரங்களை உங்களிற்கு வழங்க வேண்டும். அதுமட்டுமல்லாமல், உங்களிற்கு ஏஜென்சி ஒரு கம்பனியில் வேலை பெற்றுத் தருவார்கள் எனின்; அந்தக் கம்பனியின் பெயர், சம்பளத் தொகை, எத்தனை மணித்தியாலங்களிற்கு வேலை செய்ய வேண்டும், வேலை பற்றிய தகவல்கள், எவ்வளவு காலத்திற்கு (எனத் தெரிந்தால்) அந்த வேலை, சம்பளம் வழங்கும் கால இடை வெளி, சம்பளம் வழங்கும் நாள் என்ற விபரங்களை உங்களிற்கு உங்களது ஏஜென்சி கட்டாயமாக வழங்க வேண்டும். ஏஜென்சி இவை அனைத்தையும் உங்களிற்கு வேலை வழங்கும் பட்சத்தில் இயன்றளவு விரைவாகத் தரவேண்டும்.

**Termination and Severance Pay**
நீங்கள் ஒரு கம்பனியில் ஆகக் குறைந்தது 3 மாதங்கள் வேலை செய்திருப்பின் உங்களது வேலை நிறைவிற்கு வரும்பட்சத்தில் (வேலை நீக்கம் அல்லது வேலை இல்லாமல் 20 கிழமைகள் இருந்திருப்பின் 13 கிழமைக்குப் பின்னர்) உங்களிற்கு அதற்குரிய அறிவித்தல் கடிதம் அல்லது அதற்குப் பதிலாக ஒரு குறிப்பிட்ட தொகைப் பணம் வழங்க வேண்டும். நீங்கள் அந்தக் கம்பனியில் எவ்வளவு காலம் வேலை புரிந்தீர்கள் என்பதைப் பொறுத்தே அந்த வேலை நீக்கக் கடிதம் தரவேண்டிய காலம் அல்லது அதற்குப் பதிலாக தரப்படும் பணத்தின் தொகை நிர்ணயிக்கப்படும்.

**உங்களது உரிமைகள் பற்றி நீங்கள் கேட்பதினால் உங்களிற்கு எந்த தண்டனைகளும் வழங்கப்பட முடியாது.**
உங்களது உரிமைகளை நீங்கள் கேட்பதற்காக எந்த ஒரு ஏஜென்சியும் உங்களை தண்டனைக்குள்ளாக்க முடியாது. உங்களது உரிமைகளை நீங்கள் நிலை நாட்ட முற்படும் பட்சத்தில் அதற்காக தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டால் ஏஜென்சியும், அதற்கு ஊடாக நீங்கள் தினமும் வேலை செய்யும் கம்பனியும் அதற்கு பொறுப்பேற்க வேண்டும்.

**உங்களுடைய ஏஜென்சி இந்தச் சட்டத்தை கடைப் பிடிக்காவிட்டால் நீங்கள் என்ன செய்யலாம்.?**
நீங்கள் Workers' Action Centreஐ தொடர்பு கொள்ளலாம். அல்லது எங்களுடைய இணையத்தளத்திற்கு விஜயம் செய்வதன்மூலம் இது பற்றிய விபரங்களையும் அடுத்து நீங்கள் என்ன செய்யலாம் என்ற விபரங்களையும் நீங்கள் அறிந்து கொள்ளலாம். சகல அழைப்புக்களும் இரகசியமாக பேணப்படும்.

**அடுத்த கட்டம்.**
நாம் இந்தப் புதிய சட்ட உரிமையை ஓர் வெற்றியாகக் கொண்டாடலாம். ஆனாலும் இந்தப் புதிய சட்ட உரிமை எங்களை உண்மையில் முற்று முழுதாக பாதுகாப்பதற்கு போதுமானதாக இல்லை. இன்னும் நாங்கள் சிறந்த சட்ட அமுலாக்கத்தை உறுதி செய்தல், தற்போதைய தொழிலாளர் சட்டத்தை புதுப்பித்தல், மற்றும் ஏஜென்சிக்கு ஊடாக வேலை செய்பவர்களது சம உரிமை என்பவற்றிற்காக பெரிய அளவில் போராடவேண்டி உள்ளது. எங்களது செயற் திட்டமாகிய "ஒன்ராறியோ மாகான தொழிலாளர்களிற்கு ஒரு நியாயமான தொழில் உரிமை வேண்டும் - Ontario Workers' Need A Fair Deal" என்ற செயற் திட்டத்தில் நீங்களும் இணையுங்கள்.

www.workersactioncentre.org 416 531 0778
நியாயமான வேலை நிலையை பெற்றுக் கொள்வதற்காக ஒன்றிணைவோம்.

milan.n@thaiveedu.com

■ ■ ■

**தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.**

*E-mail:thaiveedu@gmail.com*
*Fax: 416-849-0594*
*Tel: 416-646-3422*

TRAFFIC TICKETS!

- SPEEDING
- RED LIGHT
- CARELESS
- STOP SIGN
- ACCIDENT
- TICKETS

TRAFFIC TICKETS $100 மட்டுமே



CALL
PETER JOSEPH
பீற்றர் ஜோசப்
416.757.7707
416.757.7797
2425 Eglinton Ave, E., Unit 1A
(Kennedy & Eglinton)

# தொழிற்கல்விக்கான ஒரு அரிய வாய்ப்பு

### Software Training for Engineers

- AutoCAD 2010
- SolidWorks 2009
- Revit 2009
- CATIA V5
- Pro/Engineer
- AutoDesk Inventor 2009

### Electrician Pre Exam Courses

- Industrial Electrician - 442A
- Construction Electrician - 309A
- Industrial Instrumentation Electrician - 447A

### Graphic Design Software Training

- Photoshop - Adobe CS
- Illustrator - Adobe CS
- InDesign - Adobe CS
- QuarkXpress

### Accounting Software Training

- MS Office
- QuickBook Pro
- ACCPAC
- Simply Accounting
- Advanced Excel for financial analysts

## Canadian Electrician Licence (அனுமதிப்பத்திரத்தை) பெற்றுக்கொள்வதற்கு நாம் வழிகாட்டுகிறோம்.

எமது Graphic Coursesஐ கற்றுக்கொள்வதன் மூலம் புதியதொரு தொழில்திறமையை வளர்ப்பதுடன், எதிர்கால வாழ்வை வளமாக்க புதியதொரு தொழிலைத்தேடும் வாய்ப்பையும் பெறுகிறீர்கள்

**வார இறுதி மற்றும் மாலை நேர வகுப்புகள். பகல்நேரம் பணிபுரிபவர்களுக்காக நடத்தப்படுகின்றன.**





- digi Media -

beta College
of Business & Technology

1200 Markham Road, # 525
(Markham & Ellesmere)
Scarborough, ON
M1H 3C3

Tel: 416.449-BETA(2382)
www.betacollege.ca
info@betacollege.ca

# சேமமான சாரதி

## தொடர் - 06



செந்தூரன் புனிதவேல்
- காப்புறுதி முகவர் -

கவனமாக வாகனம் செலுத்துவதன் 10 நிபந்தனைகளை தொடர்ச்சியாகப் பார்த்து வந்துள்ளோம். அத்தகைய அறிவுறுத்தல்களின் அடுத்த கட்டமாக கவனிக்க வேண்டிய சில விடயங்களைக் கவனிப்போம்.

### கட்டளை 11: தூர நோக்குடன் இருங்கள்

வாழ்க்கையில் மட்டுமல்ல வாகனம் செலுத்துவதிலும் தூர நோக்குடன் இருப்பதவசியம். வாழ்க்கையில் தூர நோக்குடன் இருக்கும் ஒருவர் தனது உடனடி ஆசைகளை தியாகம் செய்து, தொலைவில் உள்ள இலக்கை அடைவார்கள். ஆனால், வாகனச் சாரதிக்கு இவ்விடயம் எப்படி பயன்படுகிறது என்று பார்ப்போம். பொதுவாக சாரதிகள் 5-8 செக்கனில் செல்லும் தூரத்தை குறிவைத்தே வாகனத்தைச் செலுத்துவதாக அவதானித்துள்ளார்கள். ஆனால், சிறப்பாக வாகனத்தைச் செலுத்துவதற்கு 15 முதல் 20 செக்கன் தூரத்தில் எமது பார்வை இருப்பதவசியம். இப்படி தூரத்தில் பார்வை இருப்பின் வரும் தடையை முன்கூட்டியே அறிந்து அதற்கு வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கையை எடுக்கக்கூடியதாக இருக்கும். அல்லாவிடில், சிறு தடை பெருவிபத்தில் முடியாலாம். பாதையில் சுருக்கங்கள், கட்டுமானம் நடப்பது, வாகன நெருக்கடி இருப்பது, மறைவான வீதி உங்கள் வீதியைத் தொடுவது போன்றவை எமக்கு தெரியாவிடின் அதற்கேற்ப வாகனத்தை மாற்றிச் செலுத்த முடியாது. பல சந்தர்ப்பங்களில் முன்னால் அடிபட்டிருக்கும் வாகனத்தில் பின்னால் வருபவர் இடிப்பதற்கு இதுவே காரண மாகும். இப்படி தூர நோக்கில் வாகனத்தைச் செலுத்துவது புதிதாக வாகனம் ஓட்டும் சாரதிகள் வாகனத்தைச் சீராக செலுத்த பெரிதும் உதவும். நீங்கள் கண்களை தூரத்தில் நோக்குவது வாகனத்தின் Bonnetஐ அல்ல. தூர நோக்கு வாகனம் வீதியில் ஸ்திரமாக செலுத்தப் பெரிதும் உதவும். அதாவது வாகனத்தை குறுக்கும் நெடுக்குமாக செலுத்தாமல் நேராக செலுத்தக்கூடியதாய் இருக்கும்.

உங்கள் கண்ணோட்டம் இன்றியமையாததொன்று. வள்ளுவர், வீதி விபத்தைப் பார்த்து விட்டுத்தானோ தெரியாது

"கண்ணிற்கு அணிகலன் கண்ணோட்டம், அஃதின்றேற் புண்ணென் றுணரப்படும்.

என்று கூறினார் போலும். ஆனால், வீதியில் சாரதியின் கண்ணோட்டமும் பரந்துபட்டதாக இருக்க வேண்டியதவசியம். சாரதிகள் தம்மைச் சுற்றியுள்ள அனைத்தையும் அவதானிப்பதவசியம். அவர்கள் நூறு அடி மட்டுமல்ல, இரு பக்கத்திலும், பின்னால் நடப்பதில் அவதானமாயிருப்பதவசியம். இப்படி இருப்பீர்களானால் மற்றவர்கள் கவனிக்காது விபத்துக்குள்ளாகும் வேளையில் நீங்கள் அவதானமாக தப்பிவிடலாம். உதாரணத்துக்கு வீதியில் ஓடிய பந்தை துரத்திக்கொண்டு வரும் பிள்ளை அல்லது சமாந்தரமாய் (Parallel Parking) நிறுத்தப்பட்டிருந்த வாகனம் திடீரென வீதிக்குள் வருகையில் அல்லது பாதசாரி வாகனத்துக்குப் பின்னால் மறைந்திருந்து திடீரென வீதிக்கு வருகையில் என பல விபத்துக்கள் தவிர்க்கப்படும்.

இங்கு கவனிக்க வேண்டிய இன்னுமொரு முக்கிய விடயம், ஏதாவதொரு குறிப்பிட்ட பொருளை ஒரு விநாடிக்கு மேல் (அழகான யுவதியையோ இளைஞனையோ கூட) கவனிக்க வேண்டாம். உங்கள் குறிப்பான பார்வை நூறு அடி தூரத்தில் ஐந்தடி அகல இடத்தை மட்டுமே நோக்கும். மற்றைய அனைத்தும் ஒரு சுற்று நோக்காக பார்ப்பதல்ல, அங்கு ஏதும் அசைவு ஏற்பட்டால் தான் தெரியுமே அன்றி தெளிவாக ஒன்றும் தெரியாது. இதனை உங்களுக்கு தெளிவுபடுத்த ஒரு இலகுவான பரீட்சை தருகிறேன். உங்கள் இடது கையை நீட்டி பின் அதை மடித்து விரல்களின் பின்பக்கத்தை அவதானியுங்கள் அதைப் பார்த்தபடியே கண்களை அசைக்காமல் கைக்கடிகார நேரத்தை உங்களால் கூற முடியாது. அதற்குக் காரணம் உங்கள் நோக்கு, அங்கு குவியாமையே. இதனால் தான் உங்கள் கண்கள் வாகனம் செலுத்தும் வேளை அசைந்தபடி இருக்கவேண்டும் என்கிறேன். அப்படி செய்தால்தான் நீங்கள் வாகனம் செலுத்துகையில் ஏற்படக்கூடிய விபத்துக்களைத் தவிர்க்கலாம்.

உங்கள் கண்களின் சுற்றுநோக்கின் முக்கியத்துவம் அது குறிப்பிட்ட பொருளை பார்க்காவிடினும் அசையும் பொருட்கள் அதன் அவதானத்திற்கு வரும். இது உங்களுக்கு ஒரு முன்னறி கருவியாக அமையும். ஒரு குறிப்பிட்ட பொருளில் பார்வையை குவிக்கும் வேளையில் மற்றைய காட்சிகள் மறைந்து விடும். இதனை Tunnel Vision என்பார்கள் இந்த நிலையில் மற்றைய அசைவுகள் தெரிவதில்லை.

தெளிவான பார்வை செம்மையாக வாகனத்தைச் செலுத்துவதற்கு மிக அவசியம் என்பதை நான் சொல்லாமலே நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள். இயன்றளவு தொலைவில் உங்கள் பார்வையை குவியவையுங்கள். மேலும் சுற்றாடலைப் பற்றி தெளிவுடன் இருங்கள்.

### கட்டளை 12: இடைவெளி வையுங்கள்

உங்களைச் சுற்றி போதிய அளவு இடைவெளி உள்ளதா எனக் கவனித்துக்கொள்ளுங்கள். அல்லாவிட்டால் பொறியில் அகப்பட்ட விலங்காக துடிக்க வேண்டிவரும். போதிய இடைவெளி இருப்பின் விபத்துக்களை தவிர்க்க எளிதாக இருக்கும். ஒரு வாகனத்துக்குப் பின்னால் செல்கையில் இரண்டு வினாடியாவது இருப்பதவசியம் என்பர். மேலும் வாகனத்தைச் செலுத்தும் வேளை மற்றவர்களுடைய Blind Spotஇனை தவிர்த்து வாகனத்தினைச் செலுத்துங்கள். மேலும் உங்களை மிக நெருக்கமாக தொடராமல் பார்த்துக்கொள்ளுங்கள். வேண்டுமானால் ஒழுங்கையை (Lane) மாற்றுங்கள் அல்லது வேகத்தை மாற்றி பின்னால் வருபவர்கள் முந்திச் செல்ல வழிவகுத்துக் கொடுங்கள்.

எம்மில் பலருக்கும் வாகனத்தின் நீளத்தினைக் கொண்டு எப்படி வாகனம் செலுத்த வேண்டும் என கற்பிக்க வேண்டும். ஆனால் இக்காலத்தில் அந்த வழிமுறையை யாரும் பயிற்றுவிப்பதில்லை. காரணம் இரண்டு கார் இடைவெளியை கற்பனை செய்வது கடினம். முன்பு ஒவ்வொரு 10 km/h வேகத்துக்கும் ஒரு கார் இடைவெளி என்பது. அப்படியாயின் 60 km/hஇல் செல்லும் வேளையில் ஆறு கார் இடைவெளியை கற்பனை செய்ய வேண்டும். இந்தச் சிக்கலை தவிர்க்கும் முகமாக இரண்டு வினாடி விதி வகுக்கப்பட்டது. 60 km/h வேகத்தில் இரண்டு செக்கன்களில் 176 அடி இடைவெளி கிடைக்கும். வாகனத்தை நிறுத்துவதற்கு இது போதுமானது. ஆனால், இன்னுமொரு சிக்கல் உள்ளது, அதாவது இந்த இரண்டு செக்கன் இடைவெளியை நிர்ணயிப்பது எப்படி? உங்களுக்கு முன்னால் செல்லும் வாகனம் ஒரு நிலையான குறியை தாண்டுவதை கவனியுங்கள். உதாரணத்திற்கு விளக்குக் கம்பம் அல்லது அறிவிப்பு சமிக்ஞை எதுவானாலும் பரவாயில்லை. பின் நீங்கள் ஓராயிரத்தொன்று, ஓராயிரத்திரண்டு என எண்ணுங்கள் அந்த குறியை நீங்கள் எண்ணுவதற்கு முன் கடந்தால் நீங்கள் நெருக்கமாக செல்கிறீர்கள் என பொருள்படும். உடனே வேகத்தை குறையுங்கள்.

நான் இங்கு இன்னுமொரு முக்கிய விடயத்தைக் குறிப்பிடவேண்டும். அதாவது பாதையில் பனி இருந்தால் அல்லது முன்னால் செல்வது மோட்டார் சைக்கிள் அல்லது பாரிய டிரக் உங்கள் பார்வையை மறைத்திருந்தால் உங்களுக்கு இரண்டு செக்கன் இடைவெளி போதாது. முக்கியமாக பாதை பனிக்கட்டியாய் இறுகியிருப்பின் பத்துசெக்கன் இடைவெளி விடுங்கள். இடைவெளி விடுவதற்கு தயங்குவதன் காரணம் யாராகிலும் இடையில் செருகி விடுவார்களோ என்னும் அச்சம் தான். உண்மையில் இத்தகைய இடைச்செருகல் அதிகம் நேரம் விரயமாக்காது என்பதுடன், கொஞ்ச நேரம் பிந்தினாலும் வீட்டில் இருப்பவர்கள் ஏமாறக்கூடாதல்லவா? எனவே லேட்டாக போனாலும் லேட்டஸ்ட்டாக நீங்கள் கவனமாக வாகனத்தை செலுத்துங்கள்.

இக்கட்டுரைத் தொடர் இன்னும் பல வழிகளில் எப்படி விபத்து, குற்றப்பத்திரிகை இல்லாது வாகனத்தை செலுத்தலாம் என்பதை தொடர்ந்து ஆராயும்.

senthuran.punithavel@thaiveedu.com

■ ■ ■

## இம் மாதத்திற்குரிய முக்கிய குறிப்புகள்

டிசம்பர் மாதக் குறிப்புகள்

- நத்தார்விடுமுறை காலத்திற்குரிய அலங்காரங்களை ஒழுங்கமையுங்கள்.
- விடுமுறை காலத்திற்குரிய வாழ்த்துமடல்களை மாதத்தின் ஆரம்பத்திலேயே எழுதுவதுடன், இறுதி நிமிடத்தில் அவசரப்பட்டு அனுப்புவதை தவிருங்கள்.
- விடுமுறை காலத்தில் பரிசுப்பொருட்களை பொதி செய்யும் கடதாசிகள், ரிப்பன்கள், நாடா, பரிசுப்பொருட்களுக்குரியவர்களின் பெயர்களை எழுதிக் கட்டும் அட்டைகள் (Tags) போன்றவற்றை சேகரிக்க ஆரம்பியுங்கள்
- விடுமுறைகாலத்தில் மேசைகளில் வைப்பதற்குரிய மெழுகுவர்த்திகள் போதியளவில் இருக்கின்றதா என பாருங்கள். மேலதிகமாகத் தேவைப் படின் அவற்றை வாங்கி சேமியுங்கள்.
- மெழுகுவர்த்திகளின் திரிகளின் மேற்பகுதிகளை? அங்குல நீளமுள்ளதாக கத்தரிப்பதன் மூலம் புகைபிடிப்பதைத் தவிருங்கள்.
- விடுமுறைகாலத்திற்குரிய பலகாரங்கள் தயாரிப்பதை ஒரு கிழமைக்கு முன்னிருந்தே ஆரம்பியுங்கள்.
- குக்கீஸ்(cookies) செய்வதற்குரிய மாவைத் தயாரித்து உறைநிலையில் (Freeze) வைத்து தேவைப்படும் போது கனலடுப்பில் (Oven) இட்டு குக்கீஸ் தயாரிக்கலாம்.
- யன்னல்கள், கதவுகளிற்கிடையே குளிர்காற்று உட்புகுவதற்கான இடைவெளிகளில்லாது இறுக்கமாக இருக்கின்றதா என சரிபாருங்கள்.
- உற்பத்தியாளரால் கூறப்பட்டபடி வெப்பமேற்றியின் (Furnace) வடிகட்டியைப் பரிசோதித்து தேவையாயின் மாற்றுங்கள்.
- வெப்பமூட்டல் மற்றும் வளிசீராக்கும் உபகரணங்களை (Heating, Ventilation and Air Conditioning) உற்பத்திசெய்பவர்களின் அறிவுறுத்தல்களுக்கேற்ப சுத்திகரியுங்கள்.
- வளிக்குழாய்களில் (Air ducts) கழிவுப்பொருட்கள் காணப்படுகின்றனவா என சரிபாருங்கள்
- தீயணைப்பு உபகரணங்களை பரிசோதியுங்கள். தீயணைப்புக் கருவியின் ஊசிமுனைப் பகுதி (Nozzle) அடைபட்டிருக்கின்றதா என்பதை பரிசோதியுங்கள்.
- சுவர்கள், சுவரையும் உட்புறத்தளத்தையும் இணைக்கும் பலகைகள் (Base boards), தளபாடங்கள், தளம் (Floor) என்பவற்றை சுத்திகரியுங்கள்.
- உங்கள் மோட்டார் வாகனத்தினுள் மாரிகால வானிலைக்குரிய அவசரத் தேவைகளுக்காக பனிக்கட்டி அகற்றும் கருவிகள் (Compact shovel, ice scraper) மின்விளக்கு (Flash light), மணல்(வாகனம் வழுக்கிச் செல்லக்கூடிய நிலையைத் தவிர்க்கும்), ஓர் தடித்த கம்பளிப் போர்வை, குளிரிலிருந்து பாதுகாக்கக் கூடிய உடைகள் என்பவற்றை தயார் நிலையில் வையுங்கள்.
- 2009 ஆம் ஆண்டு முடிவடையும் காலம் நெருங்கி விட்டதால், 2009ஆம் ஆண்டிற்குரிய வருமான வரியை பூர்த்தி செய்ய தேவையான ஆவணங்களை இப்பொழுதே இந்த விடுமுறை காலத்தில் ஆயத்தப்படுத்தி வைத்தால், ஏதேனும் ஆவணங்கள் தொலைத்திருந்தால் அதன் மீள் பிரதியினையோ அல்லது தேடி எடுத்தோ வைக்கக் கூடியதாக இருக்கும்.

தொகுப்பு: மகேன் சிங்கராசா




- வீடுகள்
- தொடர்மாடி வீடுகள்
- தொழிற்சாலைகள்
- வியாபார நிலையங்கள்

ஆகிய அனைத்து இடங்களிலும் எலி, பூச்சித் தொல்லைகளை அறவே நீக்க அழையுங்கள்!

KANTHAN
416•291•3997

# 85 வயதுவரை ஆயுட்காப்புறுதி...

எண்பது வயதைத் தாண்டி விட்டோம் இனி நமக்கு Insurance எடுக்கமுடியாமல் போய்விட்டதே என எண்ணி ஏங்குபவர்கள்அந்த மனக்கவலையை விடுங்கள். வைத்திய பரிசோதனை அற்ற காப்புறுதி 85 வயதுவரைக்கும் எடுக்கலாம்.

## அதுவும் மிகக் குறைந்த விலையில்.



**Life**
Universal Life
Whole Life
Term Life

**RRSP**
Loan Aproved
Even SIN Number 9

**RESP**
+
20% Government Grant
15% Company Bonus

**Critical Illness**
Upto 25
Illness

digi Media



Insurance Broker

## Guna Selliah

## 416.371.7776

Assumption Life · IA · RBC

759 Warden Ave., Toronto, Ontario, M1L 4B5, Tel: 416.759.5453 ext: 401
Fax: 416.759.6220, E-mail: guna@lilandinsurance.com

# ஒன்றாறியோவின் பசுமை சக்தியும் பசுமைப் பொருளாதாரச் சட்டமும்

**ஒன்றாறியோவின் (Ontario) பசுமை சக்தி மற்றும் பசுமைப் பொருளாதாரச் சட்டம், 2009.**

தற்போது பசுமை சக்தி சட்டம் திருத்தங்களை கொண்டு வந்துள்ளது. இந்த சட்டத்தை (GEA) அமல்படுத்துவதற்கான சட்டவிதிமுறைகள் இனிமேல் தான் தீர்மானிக்கப்படும். இந்த சட்டம் பல முக்கியமான சுவாரசியமான விஷயங்களை தன்னகத்தே கொண்டிருக்கும். Ontarioவின் சக்தி உற்பத்தி துறையில் பங்குதாரர்களாக இருக்கும் பலதரப்பட்ட மனிதர்களுக்கு, இது நன்மையை விளைவிக்கும் பசுமை சட்டத்தின் மனம் கவரும் முக்கியமான விஷயங்களைப் பார்ப்போம்.

**மரபுசாரா சக்தியின் உற்பத்தி அளவை உயர்த்த சுறுசுறுப்புடன் உழைத்தல்.**

அதிகாரம் கிடைக்கும் அவை எவை எனில்:

- சக்தியை செலவழிப்பதற்கும் மற்றும் சிறந்த தணிக்கை அறிக்கைகளை அளிப்பதற்கும் வாடிக்கையாளர்களுக்கு real estate சொத்துகளை விற்பதற்கும் திறமையுள்ள விற்பனையாளர்களை தேர்ந்தெடுத்தல்.
- இந்த சட்டத்தின் கீழ் சக்தி பயன்பாட்டை ஊக்குவிப்பதற்கு தேவையான பொருள்கள், சேவைகள் மற்றும் தொழில் நுட்பங்கள் ஆகியவற்றை ஏற்பாடு செய்தல்.
- இந்த சட்டத்தின் கீழ் உள்ள புதுப்பிக்கக் கூடிய சக்தி திட்டங்களையும் மற்றும் சக்தி ஆதாரங்களையும் வளர்ச்சியடையச் செய்யும் நோக்கங்களில் புதிய பகிர்மான முறைகளையும் மற்றும் வினியோக முறைகளையும் உண்டு பண்ணுதல்.
- சக்தியை பயன்படுத்துவதற்கும் மற்றும் உற்பத்தி செய்வதற்கும் ஒரு மேலாண்மை திட்டத்தை தயாரித்து சக்தி நல மேம்பாட்டு காரங்களை பெறுவதும் அந்த அலுவலகத்தின் நோக்கங்களாக இருக்கவேண்டும்.

இந்த சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு ஆய்வாளருக்கு சகல அதிகாரங்களும் உண்டு. இந்த சட்டம் அல்லது அதன் விதி முறைகளில் ஏதாவதை மீறும் எந்த நபர் மீதும் குற்றவியல் நடவடிக்கை எடுக்கமுடியும். மீறுபவர் ஒரு தனிநபர் என்றால் 10,000 டொலர் அபராதமும் அல்லது ஒரு நகராட்சிக் கழகம் என்றால் 25,000 டொலர் அபராதமும் விதிக்கப்படும்.

**மின்சாரம் வினியோகிக்கும் smart grid**

நவீன தொழில் முறைப்படி மின்சாரத்தை ஒழுங்காக வினியோகிப்பதற்கு ஒரு சிறந்த smart gridஐ ஏற்படுத்தி மேலாண்மை செய்வதற்கு மின்சார சட்டம் 1998ன் கீழ் அரசுக்கு



K. கண்ணன்
- Marketing Director -

பார்வையின் கீழ் உழைக்க வேண்டும். ஒவ்வொரு வினியோகஸ்தர்களுக்கும் இலக்குகளை அடைவதற்கு தனித்தனி பொறுப்புகளை OEB வழங்கும்.

பயன்பாடு மற்றும் மேலாண்மை செயற்திட்டங்கள் அமைச்சகத்தின் மூலம் நேரடியாகவே மேற்கொள்ளப்படும். அமைச்சகத்தின் செயற்திட்டங்களுக்குரிய நிதி சம்பந்தமான செயல் நுட்பங்களை OEB வழங்கும்.

**நகராட்சிகளும் மற்றும் வினியோகஸ்தர்களும் தங்களுக்கென சொந்தமாக மரபுசாரா சக்தி உற்பத்தி செய்யும் நிறுவனங்களை நிறுவ அனுமதி பெறமுடியும்.**

ஒரு நகராட்சியோ அல்லது ஒரு வினியோகஸ்தரோ தங்களுக்கென சொந்தமாக மரபுசாரா சக்தி உற்பத்தி செய்யும் நிறுவனத்தை நிறுவ சட்டப்படி அனுமதி பெறமுடியும். 10mw அல்லது அதற்கும் குறைவான சக்தி உற்பத்தி செய்யும் நிறுவனங்களை, விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு நிறுவவேண்டும்.

**கட்டிடக் கட்டுமானச் சட்டம் மாறுதல் அடைகிறது.**

சக்தி பயன்பாட்டிற்கான தரநிர்ணய அளவுகளை கருத்தில் கொண்டு ontarioவின் கட்டடக் கட்டுமானச் சட்டத்தில் சில திருத்தங்கள் கொண்டு வர நகராட்சி நலத்துறை மற்றும் வீட்டுவசதி அமைச்சகம் 1992வது வருடவாக்கில் ஒரு மறுஆய்வு செய்து தீர்மானம் நிறைவேற்றியது. Energy Advisory Councilஐ நியமித்து கட்டிடம் சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு சக்தி பயன்பாட்டை ஒழுங்குபடுத்த அரசு முடிவு செய்தது.



**சக்தி சட்ட செய்தி அறிக்கை (energy law bulletin)**

Ontario அரசு நீண்டகாலம் எதிர்பார்த்து காத்திருந்த பசுமை சக்தி சட்டத்தை 2009, பெப்ருவரி 23ஆம் தேதி ஒன்டேரியோ சட்ட சபையில் அறிமுகப்படுத்தியது. ஒரு சுகாதாரமான பொருளாதார வளர்ச்சியை நோக்கி ஒன்டேரியோ பயணிக்கும் பாதையில் இந்த சட்டம் ஒரு பெரிய மைல்கல்லாக விளங்கும். ஒன்டேரியா சக்தி முன்னேற்ற சங்கம், கனடாவின் சூரிய சக்தி தொழிற்சாலைகள் சங்கம், மற்றும் கனடாவின் காற்றாலை சக்தி சங்கம் உள்ளிட்ட பல எண்ணிக்கையிலான புதுப்பிக்க கூடிய சக்தி முன்னேற்ற சங்கங்கள் இந்த சட்டமசோதாவை பெரிதும் வரவேற்றன. தற் போதைய சக்தி சட்டம், சுற்றுச்சூழல் சுகாதாரச்சட்டம், மற்றும் realestate சட்டம் போன்றவைகளில் பல திருத்தங்களை கொண்டு வர இந்த சட்டம் வழிவகை செய்யும். புதுப்பிக்க கூடிய சக்தியை உருவாக்கும் திட்டங்களை நிறைவேற்றுவதற்கும், மாநிலத்தில் சக்தியை சேமிக்கும் ஒரு கலாச்சாரத்தை உண்டு பண்ணுவதற்கும், இந்த சட்டம் ஒரு பரந்த ஒழுங்கமைப்புடன் கூடிய கட்டுப்பாட்டு உணர்வை ஏற்படுத்தும் சட்டத்தின் சில முக்கியமான உட்பிரிவுகளை இந்த செய்தி அறிக்கை கீழ்வருமாறு விளக்கமாக விவரிக்கிறது.

**புதிய கட்டுப்பாட்டு ஒழுங்கு முறை உருவாக்கப்பட்டது.**

புதிப்பிக்கக் கூடிய சக்தி தொழிலின் பல்வேறு அம்சங்களை ஒழுங்குபடுத்தி விரிவாக்கம் செய்வதற்கு ஒரு அடிப்படையை இந்த சட்டம் தரும். அதன் மூலம் பலதரப்பட்ட சட்ட ஒழுங்கு முறைகளை உருவாக்குவதற்கு அரசுக்கு அமைச்சகத்திடம் சமர்ப்பிக்க திறமையான பயனாளிகளை தேர்ந்தெடுத்தல்.

ஒன்டேரியோ பொது நிறுவனம் சம்பந்தமாக அரசுக்கு கட்டுப்படுத்தும் அனைத்து அதிகாரங்களும் உண்டு. பொதுத்துறை நிறுவனங்களையும் மற்றும் நகராட்சிகளையும் கட்டுப்படுத்தும் சகல அதிகாரங்களையும் அமைச்சகத்திற்கு இந்த சட்டம் வழங்கும். மேலும் இந்த சட்டத்தின் பயன்கள் எவை எனில்:

- சக்தி பயன்பாடு மற்றும் தேவை பற்றிய ஒரு மேலாண்மை திட்டத்தை தயாரித்தல்.
- சக்தி விரயம் ஆகும் இலக்குகளை தீர்மானித்தல் மற்றும் சக்தி பயன்பாட்டு தர நிர்ணய அளவுகளை திட்டமிடுதல்.
- சக்தியை பயன்படுத்துவதற்கு தேவையான பொருள்கள், சேவைகள் மற்றும் பண முதலீடுகள் ஆகியன பெறுவதற்கு சிறந்த சக்தி உற்பத்தி திட்டங்களில் ஈடுபடுதல்.

அரசு தன் சொந்த நலத்திட்டங்களை உருவாக்கி, செயல்படுத்தும் போது "பசுமை சக்தி" கொள்கைகளையும் நிறைவேற்ற வேண்டும். சக்தி பயன்பாடு மற்றும் பசுமைப் புரட்சி gas emissions சம்பந்தமான ஒரு அறிக்கையை அமைச்சகம் வெளியிட வேண்டியது அவசியம். சுற்றுச் சூழலை தூய்மைப்படுத்துவதற்கு புதிய கட்டமைப்பு அல்லது சிறந்த புதுப்பித்தல் போன்ற குறைந்தபட்ச நடவடிக்கைகளையாவது அரசு எடுக்கவேண்டும். ஒன்டேரியோவின் சக்தி மற்றும் உள்கட்டமைப்பு அமைச்சகத்தின் கூடுதல் ஒரு அங்கமாக புதுப்பிக்கக்கூடிய சக்தி நல அலுவலகம் ஒன்றை அரசு ஆரம்பிக்க வேண்டும். புதுப்பிக்கக் கூடிய சக்தி திட்டங்களை அபிவிருத்தி செய்வதும் மற்றும் அந்த திட்டங்களுக்கு தேவையான அங்கீ போதிய அதிகாரம் உண்டு. மாநிலத்தில் புதுப்பிக்கக் கூடிய சக்தி ஆதாரங்களை பயன் படுத்துவதற்கும் மற்றும் நவீன தொழில் நுட்பத்தை செயல்படுத்துவதிலும் smart grid அரசின் ஒரு முக்கியமான கருவியாக விளங்குகிறது. smart gridன் பொறுப்புகள் மற்றும் கடமைகளை பயனுள்ள வகையில் செயலாற்ற இந்த சட்டத்தின் விதிமுறைகள் மிக துணை புரிகின்றன.

**சக்தியை தேடிப்பெறுதல் (Energy Procurement)**

புதுப்பிக்கக் கூடிய சக்தியை கணிசமான அளவில் பெறுவதற்கு தேவையான ஒரு செயல்திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கு இந்த சட்டம் வழிவகை செய்யும். அரசின் செயல்திட்டங்கள் மற்றும் அது நிர்ணயித்துள்ள விலையை பொறுத்து புதுப்பிக்கக் கூடிய சக்தி திட்டத்தின் வகையும் அமையும்.

**சக்தியை பயன்படுத்துவதற்கும் மற்றும் புதுப்பிப்பதற்கும் தேவையான செயல்திட்டங்களுக்கு நிதி உதவி அளித்தல் (Funding of Conservation Programs and Renewable Energy Programs).**

OPAவின் சக்தி பயன்பாட்டு கழகம் தன் பொறுப்பின் கீழ் உள்ள சில அதிகாரங்களை சுற்றுச்சூழல் ஆணையத்திற்கு மாற்றியுள்ளது. சக்தி பயன்பாடு மற்றும் தேவை, மேலாண்மை நிர்வாகம் போன்றவை அமைச்சகத்தால் திட்டமிடப்பட்டு நிறைவேற்றப்படும். வினியோகஸ்தர்கள் மற்றும் அனுமதி பெற்றவர்கள் அரசு நிர்ணயித்த இலக்குகளை, அடைய ஒன்றாறியோ சக்தி கழகத்தின் (OEB) மேற்-

**நலத்திட்டங்களுக்கானச் சட்டம் மாறுதல் அடைகிறது**

மரபுசாரா சக்தியை உற்பத்தி செய்யும் திட்டங்களுக்கு, பலசட்டங்கள் மற்றும் துணைச் சட்டங்களிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படும். Demolition Control துணைச் சட்டங்கள், Zoning துணைச் சட்டங்கள், அனுமதி விதிமுறைகள் மற்றும் வேறு பல விதிமுறைகளிலிருந்து, மரபுசாரா சக்தியை உற்பத்தி செய்யும் நபர்களுக்கு, அவர்களுடைய நிறுவன குத்தகை காலம் 20 வருடங்கள் காலம் வரையிலும், இந்த Planning Actன் கீழ் விதிவிலக்கு அளிக்கப்படும். மேலும் சுற்றுச் சூழல் பாதுகாப்புச் சட்டம் மற்றும் ontario நீர்வள ஆதாரங்கள் சட்டத்தின் கீழ் அவர்களுக்கு அனுமதி பெறுவதற்கான நிபந்தனைகள் தளர்த்தப்படும்.

**முடிவுரை.**

இந்த சட்டத்தின் கீழ் ஏராளமான விதிமுறைகள் தொகுக்கப்பட வேண்டும். அதற்கு பிறகு Green Act, 2009 சட்டத்தின் மூலம் ontarioவின் சக்தி உற்பத்தி தொழில் முறையாளர்கள் சிறந்த பலன்களை அடைவார்கள். மரபுசாரா சக்தியை உற்பத்தி செய்யும் திட்டங்களுக்கு ontario அரசு தகுந்த ஆதரவை வழங்கவேண்டும். அதற்கான கட்டுப்படுத்தும் விதிமுறைகளை அரசு அபிவிருத்தி செய்யவேண்டியது மிக அவசியம். இத்தகைய உள்கட்டமைப்பு வசதியை அரசு செய்துதந்தால் ஒன்றாறியோவின் மின்சக்தி பயனாளிகளுக்கு அது ஒரு பெரிய நன்மையாக அமையும். பசுமைப்புரட்சிக்கு நாம் கொடுக்கும் விலையாக அது அமையும்.

kannan.k@thaiveedu.com

■ ■ ■


உங்கள் வீட்டு நீரை சூரிய ஒளியில் வெப்பமாக்குங்கள்... உங்கள் பணத்தை மிச்சமாக்குங்கள்...
இதோ உங்களுக்காக
Solar Domestic Hot Water System
BSi
BRIGHT SOLAR INC.
FINANCE PLANS
TD
Prime Plus 2.75% (Over $10,000)
(Prime 2.5% effective Mar 2009)
Prime Plus 3.25% (Over $5,000)
(Prime 2.5% effective Mar 2009)
NO PAYMENT FOR 6 MONTHS !
உங்களுக்கான எமது விஷேட சலுகைகள்
$ 2500 தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் விலைக்கழிவுகள்
$ 150 வீட்டு மின் உபயோக கணிப்புப் பரிசோதனை கழிவுகள்
HRTC வரியிலிருந்து $ 1350.00 வரையிலான மீள் பெறும் உரிமை
இன்னும் பல...
உங்களது சேமிப்புகள் பாரியளவில் வளர்ச்சி பெற சரியான முதலீடு
நாம் உங்களது வீட்டுமின் உபயோக கணிப்புப் பரிசோதனைக்கு
50% செலுத்துவோம்
* condition apply
எமது பிரதான உற்பத்திகள்
சூரியசக்தி மூலம் வீட்டு நீரை வெப்பமாக்கும் முறை (Domestic)
சூரியசக்தி மூலம் வாயு வெப்பமாக்கும் முறை
Photovoltaic மின்சாரம்
காற்றலைகள்
புவி சார்ந்த வெப்பவியல் (Geothermal) மற்றும் உதிரிப்பாகங்கள்
CSA# 232467
BRIGHT SOLAR INC.
வந்து பாருங்கள், உங்களால் எவ்வளவு சேமிக்க முடியுமென்பதை நீங்களே உணர்ந்து கொள்ளுங்கள்...
5215, GTA Square, Finch Avenue East, Suite 257, Toronto,Ontario, Canada M1S 0C2
Tel: 416 754 8327
www.brightsolarinc.com
இயற்கையிலிருந்து இலவச வாழ்வாதார சக்தி


2009 FINAL DRIVE SALES EVENT
Why buy a Honda?
• HIGH RESALE VALUE • LOW COST OF OWNERSHIP • AFFORDABLE
• RELIABLE • FUEL EFFICIENT • ADVANCED SAFETY • FUN TO DRIVE!
Why buy a Honda right now?
UNTIL NOVEMBER 2nd TAKE ADVANTAGE OF
ONE-TIME-ONLY HONDA GREAT NEW DEAL SAVINGS!
SAVE UP TO $3,500¥ on select models
Civic EX-L Coupe model FG1109JN
Accord EX Sedan model CP2579J
Civic EX-L Sedan model FA1509JNX
FINAL DRIVE SAVINGS
'09 Civic Coupe
MSRP for Civic DX Coupe $17,190
SAVE $3,000¥
NOW $14,190
'09 Civic Sedan
MSRP for Civic DX Sedan $16,990
SAVE $2,500¥
NOW $14,490
'09 Accord Sedan
MSRP for Accord LX Sedan $25,290
SAVE $3,000¥
NOW $22,290
HONDA
ATHEESAN (SHAN) SARVANANTHAN
CELL (416) 720-1184
FORMULA HONDA
2240 MARKHAM ROAD, SCARBOROUGH, ONTARIO M1B 2W4. TEL: 416-754-455 EXT.2705, FAX: 416-754-9465
HONDA

# Your life.
# Your career.
# *Your call.*

If you're looking for a career that offers the potential for financial success and have the drive, discipline, energy, and self-confidence to run your own business, then consider becoming a Sun Life Financial advisor. Contact us to learn more about this rewarding career opportunity.



**Chandran Rasalingam**
Sales Manager
Bus 416-412-0401 ext 305
Cell 416-909-0400
Fax 416-412-1438
gnanachandran.rasalingam@sunlife.com

2075 Kennedy Road, Suite 1300
Scarborough ON M1T 3V3

Sun Life Financial

Sun Life Financial advisors are contracted with Sun Life Financial Distributors (Canada) Inc., registered in Quebec as a financial services firm.
© Sun Life Assurance Company of Canada, 2008.

# கடந்த மாதத்தில்...



சோதி அவர்களின் 50அகவை நிகழ்வில்



செனகா கல்லூாயில் நடைபெற்ற பல்லின ஊடகவியலாளர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கில் மூர்த்தி செல்லத்துரை (வீரகேசரி மூர்த்தி) அவர்கள் பிரதமர் திரு. ஸ்ரீபன் ஹாப்பரிடம் இருந்து சான்றிதழைப் பெற்றுக்கொண்டபோது.





ரொறன்ரோவில் இடம்பெற்ற மாவீரர் நிகழ்வில் (27 .11 .09)





1999 திரைப்பட வெளியீட்டு நிகழ்வில் தயாரிப்பாளர் மற்றும் நடிகர்கள் (13 .11 .09)







ஈழமுரசு பத்திரிகை நடாத்திய அகவை 55 பிறந்ததின நிகழ்வில் (26 .11 .09)





சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு தமிழர் மக்களாட்சி உரிமைக்கான கனடியர்களின் ‘சிறுவர் கலை பட்டறையும் விழிப்புணர்வும் நிகழ்வும்’ நிகழ்வில் (20 .11 .09)



“கரையைத்தேடும் கட்டுமரங்கள்” எழுத்தாளர் K.S. பாலச்சந்திரனுடன் ஒரு சந்திப்பு நிகழ்வில் (08 .11 .09)



குரு அரவிந்தனின் ‘நீர்மூழ்கி நீரில் மூழ்கி’ என்ற நூல் வெளியீட்டு நிகழ்வில் (07 .11 .2009)



**Chamber of Commerce - cheque presentation to Scarborough Hospital**





**Durham Tamil Association Youth Festival** நிகழ்வில்





கல்வித் தேவையை முன்னிறுத்தி மேற்கொள்ளப்பட்ட “கற்க கசடற” - கல்விக் கண்காட்சி நிகழ்வில்

இப் பகுதியில் உங்கள் விழாக்களின் படங்களும் இடம்பெறவேண்டுமாயின் விழா யாரால், எங்கு, எப்போது நடைபெற்றது என்னும் விபரங்கள் மற்றும் தொடர்பிலக்கங்களுடன் **events@thaiveedu.com** என்னும் மின்அஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

**உங்கள் நிகழ்வுகளை பார்ப்பதற்கும் பதிவதற்கும் www.inayam.net**

# நற்காற்றும் நம்வாழ்வும்



அலன் சிவசம்பு
- வீடு விற்பனைப் பிரதிநிதி -

பொதுவாக ஒவ்வொரு குடும்பத்தினர்க்கும், வீட்டினுள்ளே உள்ள நற்காற்றே அவர்களது கூடுதலான சுகவாழ்க்கைக்கு உதவி புரிகின்றது. நற்காற்று வீட்டினுள் இல்லாவிடில் உடலில் எதிர்விளைவுகள் (Allergies) சம்பந்தமான நோய்கள், சுவாசம் சம்பந்தமான நோய்கள் வருவதற்கு சந்தர்ப்பங்கள் கூடுதலாக அமையும். ஆகவே நாம் நமது வாழ்க்கையை சுகமாக அனுபவிக்க indoor air qualityஐ நன்றாக வைத்திருப்பது அவசியமாகும்.

ஒரு Air quality என்பது. குடிக்கும் தண்ணீரில் உள்ள தன்மையைப் போன்றது. குடிக்கும் தண்ணீரில் பல வகையான தண்ணீர்கள் உள்ளன. சமையல் அறையில் உள்ள வடிகுழாய் (Faucet), போத்தல்களில் அடைக்கப்பட்ட தண்ணீர் போன்றவை எனப் பலவகைகள் உள்ளன. ஆனால் எல்லாத் தண்ணீரும் குடிக்கக் கூடிய தண்ணீராக இருக்க முடியாது. அதாவது குளிக்கும் தண்ணீரை சுத்திகரிக்காமல் குடிக்க முடியாது. அதுபோலவே உள் வீட்டுக் காற்றும் சரியான உபகரணத்தைப் பாவித்து சுத்திகரிக்காவிடில் சுவாசத்திற்கு உகந்ததாக இருக்க மாட்டாது.

## Air Filtration

காற்றைச் சுத்திகரிக்கக்கூடிய உபகரணங்களை வீட்டினுள் பூட்டுவதால், வீட்டிற்குள் இருக்கும் காற்று சுத்தமாக இருப்பதற்கு உதவி புரியும். பொதுவாக One inch air filterஐ return duct இனுள் வைப்பதால் சுத்தமான காற்றைப் பெறமுடியும். ஆனால், நாம் கடைகளில் கிடைக்கும் சில air cleanersஐ வாங்கிப் பாவிப்பதால் உள்காற்றோட்டம் சுத்திகரிக்கப் படமாட்டாது. அக்காற்று வீட்டினுள்ளேயே அடைக்கப்பட்டிருக்கும். ஆகவே இது எமது சுகாதாரத்திற்குப் பெரிதும் உதவிபுரியப் போவதில்லை. ஆனால், நாம் Whole home air filtration என்னும் High efficiency air filter, furance உடன் பொருத்துவதால், air qualityஐ செம்மையாக்குவதற்கு மிகவும் உதவி புரியும்.

## Fresh Air Ventilation

நன்றாக எதுவித இடைவெளிகளும் இல்லாது அடைக்கப்பட்ட வீடு சக்தியைப் (energy) பாதுகாப்பதற்கு மிகவும் உதவியாக இருக்கும் இருந்தாலும் சுத்தமான காற்று வீட்டினுள் வருவதற்கு முடியாமல் இருப்பது வீட்டினுள் உள்ள மணங்கள் வெளியே செல்லாது இருப்பது ஈரத்தன்மையின் மட்டத்தை சரியாகப் பாதுகாக்க முடியாமல் இருக்கலாம். அதேநேரத்தில் யன்னல்களைத் திறந்து வைப்பதால் இயற்கையான காற்று உள்ளே வந்தாலும் அதனுடன் சேர்ந்து Pollen, bacteria ஆகியனவும் வீட்டினுள்ளே வருவதற்கு மிகவும் சாத்தியக்கூறுகள் உள்ளன. ஆகவே Fresh air ventilatorஐப் பொருத்துவதால் வெளிக் காற்றை உள்ளே துப்பரவாக வருவதற்கு உதவி புரிவது மட்டும் அல்லாது energy costஐயும் அதிகரிக்காமல் சமாளிக்க முடியும்.

## Air Flow

காற்றுவரும் குழாய்கள் (Duct) எல்லாவற்றையும் திறந்து வைத்தும் தளபாடங்களோ அல்லது தொங்கும் திரைகளோ மறைக்காமலும் இருப்பது நல்லது. இல்லாவிடில் Heating, Air condition போன்றவை தன் இயல்பாக செயலாற்ற முடியாமல் போகலாம். இதனால் energyயின் அழிவு அதிகரிப்பது மட்டும் அல்லாது வீட்டினுள் உள்ள ஈரத்தன்மையின் மட்டத்தையும் சரியாகப் பாதுகாக்க முடியாது.

## Duct clearing and sealing

Ductன் உள்ளே அதிகளவு அழுக்குகள் படிந்தால் microbial எனும் bacteria நன்றாக வளர்வதற்கு உதவியாக இருக்கும். இதனால் சுவாசப் பாதைகளில் பிரச்சினைகள் வருவதற்கு வாய்ப்புகளை அதிகரிக்கும். ஆகவே தேவையான போது Duct Cleaningஐச் செய்வதால் பல பிரச்சினைகளில் இருந்து விடுபட முடியும்.

## Humidity Control

Humidity Control என்பது உள்வீட்டின் ஈரப்பதனைச் சரியாக வைத்திருப்பதற்கு மிகவும் உதவி புரியும். வீட்டினுள் உள்ள ஈரப்பதனைச் சரியாக வைத்திருக்காவிட்டால் Plumbing repair, basementல் ஈரப்பதன் எனும் பிரச்சினைகள் உருவாகலாம். ஈரப்பதனை Humidifierஐ வீட்டினுள் பூட்டுவதால் ஈரப்பதனைச் சரியான அளவில் வைத்துக்கொள்ளலாம்.







## Carbon Monoxide

கடைசியாகச் சொன்னாலும் இதுவும் ஒரு முக்கியமாகத் தெரிந்து கொள்ள வேண்டிய ஒன்றாகும். இந்த toxic வாயுவானது கண்ணுக்குத் தெரியமாட்டாது. ஆனால், ஆபத்து நிறைந்த வாயு ஆகும்.

இந்தக் Carbon Monoxide fturnace, Hot water heaters, gas stove என்பன சரியான முறையில் இயங்காத நிலையில் உருவாகக்கூடியது. இந்த வாயு வீட்டினுள் வந்தால் தலையிடி, அசௌக்கியம், வாந்தி போன்ற பிரச்சினைகள் உருவாகும். ஆகவே மேலே குறிப்பிட்ட சாதனங்கள் சரியாக இயங்குகின்றனவா எனப் பார்த்துக்கொள்ளுதல் வேண்டும். அத்தோடு Carbon monoxide detectorஐயும் பொருத்தி அது சரியாக இயங்குகின்றதா எனவும் பரீட்சித்தல் வேண்டும்.

ஆகவே மேலே குறிப்பிட்ட தகவல்கள், உங்களது வீட்டினுள் நற்காற்று வீசுவதற்கு உதவி புரியும் என எண்ணுகின்றேன்.

alan.sivasambu@thaiveedu.com

■ ■ ■

COMPUTERIZED ACCOUNTING



EARN YOUR DIPLOMA IN 6 MONTHS
AND START A NEW CAREER
PROGRAM START DATE : SEPT.28,2009
SUBJECTS:
MS OFFICE
ACCOUNTING PRINCIPLES
FINANCIAL ACCOUNTING
QUICK BOOKS
SIMPLY ACCOUNTING
ACCPAC
100% INSTRUCTOR LED
HANDS ON TRAINING
HIGH EMPLOYMENT RATE
EI Recipients Welcome
ஆலோசனைகளுக்கு அழையுங்கள்
416-291-5155
TORONTO BUSINESS COLLEGE
4465 SHEPPARD AVE EAST #208
( SHEPPARD & BRIMLEY )
SCARBOROUGH
E-Mail t.businesscollege@gmail.com
(REGISTERED AS A PRIVATE CAREER COLLEGE UNDER THE PRIVATE CAREER COLLEGES ACT 2005)


INPROBUS REALTY CORPORATION
Specialty Investment, Property and Business Brokers

Men's clothing store
For sale
22yrs in Business
---
Office space for lease
close to Subway.
Good location for Mississauga, Etobicoke and Down town clients.

Inprobus Realty Corporation
Call : Alan 647-504-2536

# ‘சிறப்புத் தேவையுள்ள பிள்ளைகள்’ இனங்காணுதலும் இணைந்து வாழ்தலும்

ஜீவா திசைராஜா



**சிறப்புத் தேவையுள்ள பிள்ளைகளை (Special needs children) இனங்காணுதலும் அவர்களுடன் இணைந்து வாழ்தலும்**

கடந்த இதழில் பிள்ளைகளுக்கும் பெற்றோருக்குமிடையே பரஸ்பர மரியாதையின் அவசியத்தை நோக்கினோம். பிள்ளைகள் உலகில் மற்றவர்களின் கஷ்டங்களை அறிந்து கொள்வதும் முக்கியமாகும். தன்னைப் பற்றியே எப்போதும் நினைப்பதும், பெற்றோரின் அன்பும் கவனிப்பும் தனக்குத் தான் கிடைக்க வேண்டும் என்று நினைப்பதும், ஏனையோரைப் பற்றிய அதாவது சமூகத்தைப் பற்றிய பிரக்ஞையை பிள்ளையிடமிருந்து அகற்றி விடுகின்றது. சிறு வயதிலேயே பிள்ளைகள் சமூக உணர்வுள்ளவர்களாக வளர்க்கப்பட வேண்டியது அவசியமாகும்.

எமது பிள்ளைகளை நாம் அளவுக்கதிக செல்லம் கொடுத்து வளர்க்கும் போது பிள்ளை பாடசாலை செல்லும் வயதடைந்ததும் பாடசாலையில் தன்னை எல்லோரும் கவனிக்க வேண்டும், ஆசிரியரும் தன்னைத் தான் கொஞ்ச வேண்டும் என்னும் எதிர்பார்ப்புடன் அளவுக்கதிகமாக குறும்பு செய்வது, ஓரிடத்தில் இருக்காது ஓடித் திரிவது, ஏனைய பிள்ளைகளை அடிப்பது போன்றவற்றில் ஈடுபடுவது (Behavioural problems) இயல்பானதாகும்.

இத்தகைய பிள்ளைகளை சிறப்புத் தேவையுள்ள பிள்ளைகளின் (Special needs children) பட்டியலில் பாடசாலைகள் சேர்த்துவிடவும் சந்தர்ப்பம் உள்ளது. சிறப்புத் தேவை என்பது ஓர் விரிவான பதமாகும்.

## சிறப்புத் தேவை

‘சிறப்புத் தேவைகள்’ என்பதனுள் பலதரப்பட்ட தேவைகள் அடங்கும். சிறப்புத் தேவைகள் எனும்போது ஓரளவு கற்றல் இயலாத்தன்மைகள் அல்லது மனநல குறைபாடுடையவர்களாகவோ, உணவு ஒவ்வாமை அல்லது தொடர்ச்சியான சுகவீனம், அபிவிருத்தி தாமதமாதல், அடிக்கடி பயம் அல்லது தீவிரமான உளவியல் பிரச்சனைகளால் பாதிக்கப்படல் போன்றவற்றை உள்ளடக்கும். இவ்வாறு பாதிக்கப்பட்ட பிள்ளைக்கு தேவையான சேவைகளைப் பெறுவதற்கும், பொருத்தமான இலக்குகளை நிர்ணயிப்பதற்கும், பிள்ளையின் தகைப்புக்குட்பட்ட குடும்பத்திற்கு (stressed family) விளக்கத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் இவ்வாறு ‘சிறப்புத் தேவை’ என அடையாளப்படுத்துவது அவசியமாகும்.

பொதுவாக ஓர் பிள்ளையால் என்ன செய்ய முடியாது என்பதால் ‘சிறப்புத் தேவை’ என்பது வரையறுக்கப்படுகின்றது. அதாவது அடையப்படாத வெற்றிகள், தடை செய்யப்பட்ட உணவு, தவிர்க்கப்படும் நடவடிக்கைகள், மறுக்கப்படும் அனுபவங்கள் எனும் அறிகுறிகள் சிறப்புத் தேவையினுள் இனங்காணப்படுகின்றன. இந்த எதிர்மறைகள் குடும்பங்களுக்கு கவலைகளையும் கடினமான அனுபவங்களையும் கொடுக்கின்றது. அத்துடன் ‘சிறப்புத் தேவைகளை’ ஓர் துக்ககரமான தலைப்பாக மாற்றுகின்றது. சில பெற்றோர், தமது பிள்ளைகளால் இயலாத காரியத்தை நினைத்து துக்கப்படுவதோடு அநேக விடயங்கள் காலம் செல்லச் செல்ல மிகவும் பிரச்சனைக்குரியதாக மாறிவிடுகின்றது. வேறும் அநேக குடும்பங்கள் தமது பிள்ளைகளின் முயற்சிகளை சந்தோஷமாக வரவேற்பதுடன் பலவீனங்களுடன் பலங்கள் இருப்பதையும் அறிவதால் சந்தோஷமடைகின்றனர்.

சிறப்புத்தேவையுள்ள மாணவர்களின் பெற்றோர் அல்லது பராமரிப்பை வழங்குபவர்கள் ஏமாற்றம், விரக்தியடையும் நிலையை ஒரு சில சமயமாவது எதிர்நோக்குகின்றனர். சில சமயம் தமது பிள்ளைகள் பாடசாலைகளில் எதிர்நோக்கும் கஷ்டங்களைக் காணும்போது அல்லது அவர்களுக்கேயுரிய தேவையுடனான கல்வியைக் (Special education) கற்க வேண்டியிருப்பதைக் காணும்போது மனஅழுத்தத்திற்கும் உட்படுகிறார்கள். எனவே சிறப்பான கற்கைத் தேவையுள்ள பிள்ளைகளின் வாழ்வில் வளர்ந்தோர் ஈடுபட்டிருக்கும் போது வளர்ந்தவர்களுடனான தொடர்பாடல், இரக்கம், புரிந்துணர்வு என்பன சரியான முறையில் அமைந்திருத்தல் அவசியம்.

தமது பிள்ளைகளை சிறப்புத் தேவையுள்ள பிள்ளைகளின் பட்டியலில் சேர்த்து விட்டனரே எனக் கவலைப்படும் பெற்றோரும் உள்ளனர். பிள்ளைகளை அவ்வாறு சிறப்பாகக் கவனிக்கும்போது அவர்களுக்குரிய தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு, எதிர்காலத்தில் சமூகத்தில் அவர்களும் கௌரவமாக வாழ அது வழி செய்யும் என்பதை பெற்றோர் உணரத் தவறிவிடுகிறார்கள். தற்போதைய தமது கௌரவத்திற்காக பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கையை எண்ணத் தவறிவிடுகிறார்கள்.

> “ உங்கள் பிள்ளைக்கு
> சிறப்புத் தேவை உள்ளது என்பதை
> அறிந்து கொண்டதும்
> அதனையிட்டு
> அச்சப்படவோ, பதகளிப்படையவோ
> தேவையில்லை.
> உடடியாக நீங்கள் அது பற்றி வினவி,
> உதவிகளைப்
> பெற்றுக்கொள்ள முயலுங்கள். ”

தமது பிள்ளைகளை அறிந்திருப்பதில் பெற்றோர்களே நிபுணர்களாக இருக்கின்றனர் என்பது உண்மை. எனினும் பிள்ளைகளை எப்போதும் மற்றவர்களுக்கு முன்னால் உயர்வாகவே வைத்திருக்க விரும்பும் பெற்றோர் அவர்களுக்கு சிறப்புத் தேவைகள் உள்ளன என்பதை பிறர் முன் ஏற்றுக் கொள்ள விரும்புவதில்லை. ஆசிரியர்களுக்கு தெரியாத அநேக பிள்ளைகளைப் பற்றிய தகவல்களை அறிந்திருக்கும் பெற்றோர் தமது பிள்ளைகளுக்கான கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை ஆசிரியர்கள் தயாரிப்பதற்கு உதவுபவர்களாக இருக்க வேண்டும்.

## சிறப்புத் தேவையுள்ள பிள்ளைகளைப் பற்றி எவ்வாறு கற்றுக் கொள்வது?

சிறப்புத் தேவையுள்ள பிள்ளைகள் சிறப்பான உதவியும், புரிந்து கொள்தலும் தேவைப்படுபவர்களாக இருப்பர். அப்பிள்ளை உங்கள் பிள்ளையோ அல்லது அயலவரின் பிள்ளையோ, பிள்ளையின் தேவைகளுடன் உங்களைப் பழக்கப்படுத்திக் கொள்ளலும், அவர்களின் வாழ்க்கையில் உங்களை இணைத்துக் கொள்வதும் ஓர் கடினமான விடயமேயாகும்.

பொதுவாக சிறப்புத் தேவையுள்ள பிள்ளைகள் நகைப்புக்கிடமாவதுடன், அதிகமாக கண்டிக்கப்படுவதுடன் அநேகமான சந்தர்ப்பங்களில் பொதுவான சமூக செயற்பாடுகளில் இருந்து ஒதுக்கப்படுவதும் கவலைக்குரியதாகும். இவர்கள் தோற்றம், நடத்தை, பேச்சு என்பவற்றில் ஏனையோரிடமிருந்து வேறுபட்டவர்களாக இருப்பர்.

முதலில் சிறப்புத் தேவைகளுள்ள பிள்ளைகளை எவ்வாறு அறிந்து கொள்வது என்று பார்ப்போம். இதற்காக ஆறு அடிப்படை வினாக்களை வினவுவோம்:

### 1. என்ன?

முதலில் என்னவகையான சிறப்புத் தேவையை நாம் கையாளுகின்றோம் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இவை பொதுவாக 5 பிரதான வகைகளுள் அடங்குகின்றன:

- உடலியல் ரீதியானது (Physical).
- உணர்வு ரீதியானது (Emotional).
- அபிவிருத்தி சார்ந்தது (Developmental).
- சமூகம் சார்ந்தது (Social).
- கண்டுணர்தல் சார்ந்தது (Perceptional).

சில சமயம் சில நிலைமைகள் ஏனைய தேவைகளுடன் சேர்ந்திருக்கும் நிலையையும் காணலாம்.

உடலியல் தேவைகளுள் நரம்பியல் பிரச்சினைகள் (Neurological problems – காக்கை வலிப்பு போன்றவை), புலனுணர்வு பிரச்சினைகள் (உதாரணமாக பாரிச வாதம்), தசைநார் பிரச்சனைகள், பேச்சில் பிரச்சனைகள் இருத்தல் (Speech impairments), காது கேட்டல் மற்றும் பார்வை பிரச்சனைகள் (hearing and sight impairments), தம்முள் முடங்கிக் கொள்ளும் தன்மை (Autism) போன்றன அடங்கும். இவை உடல் பயன்பாடு மற்றும் அசைவை பாதிக்கும் நிலைமைகளாகும். இந்த வகைக்குள் அடங்குபவையாக சிறப்புப் பராமரிப்பு தேவைப்படும் ஆரோக்கிய பிரச்சினைகளான உணவு உண்ணுதலில் ஒழுங்கீனங்கள். இளவயது நீரிழிவு, குழந்தைகளில் எச்.ஐ.வி மற்றும் AIDS தொற்றுக் காணப்படுதல், குழந்தைகள் போதை வஸ்துக்கு அடிமையாயிருத்தல், அளவுக்கதிக நிறை (Obesity) என்பவற்றையும் அடக்கலாம்.

உணர்வியல் தேவைகளுள் அடிக்கடி மன அழுத்தம் ஏற்படல், அதீத பயம், அதிக கவலை, உணவுண்ணுதலில் ஒழுங்கீனம் போன்றவற்றை உள்ளடக்கலாம்.

அபிவிருத்தி ஒழுங்கீனங்கள் எனும்போது பொதுவாக மூளையின் பகுதிகள் ஒரு கட்டத்திற்கப்பால் வளர்வது நின்று விடுதல் அல்லது சரியாக தொழிற்படாமையைக் கூறலாம்.

சமூக தேவைகள் பொதுவாக குடும்பச் சூழல் விடயங்களான துஷ்பிரயோகம், அலட்சியம், வறுமை, கைவிடப்படுதல் (Abandonment), கஷ்டமான சந்தர்ப்பங்களின் பின் ஏற்படும் தகைப்பு (Post trauma stress) போன்றவற்றிலிருந்து எழும் தேவைகளாக அமைகின்றன.

கண்டுணர்தல் தேவைகள் (Perception) எனும்போது நாம் பொதுவாகக் கூறும் கற்றல் இயலாத் தன்மைகளையே குறிக்கும். இப்பிரச்சினைகளுள் அநேகமானவை நாம் எவ்வாறு தகவல்களை பார்க்கிறோம், எமது மூளை எவ்வாறு அவற்றை செயல்முறைக்கு உட்படுத்தி நாம் உணர்ந்து கொள்ளச் செய்கின்றது என்பதில் இருந்தே எழுகின்றன. இதனுள் வாசிப்பு பிரச்சினை, ஒருங்கிணைத்து நோக்குவதில் பிரச்சினை, எழுதுவதில் பிரச்சினை என்பன சிலவாகும்.

### 2. யாருக்கு?

சிறப்புத் தேவைகள் என்றால் என்ன என்பதை இப்போது நாம் அறிந்திருப்போம். இனி யாருக்கு சிறப்புத் தேவைகள் உள்ளன என்பதையும் யாரை நாம் உதவிக்காக அழைப்பது என்பதையும் கவனத்தில் கொள்வோம்.

சிறப்புத் தேவைகளுள்ளோரை அறிந்து கொள்வதற்கு சில சமிக்ஞைகளை இனங்காண்பது அவசியமாகும். குடும்பத்தில் காணப்படும் கஷ்டங்கள், குடும்ப வரலாறு, பிள்ளையின் வளர்ச்சியையும் நடத்தையையும் அவதானித்தல் மூலம் இனங்காணலாம். பிள்ளையின் வைத்தியர் மற்றும் குடும்ப வைத்தியர், தாதிமார், பிள்ளையின் ஆசிரியர், பராமரிப்பை வழங்குபவர் போன்றோரிடமிருந்து யாருக்கு இத்தகைய தேவைகள் உள்ளன என்பதை அறிந்து கொள்ளலாம்.

### 3. எப்போது?

உங்கள் பிள்ளைக்கு சிறப்புத் தேவை உள்ளது என்பதை அறிந்து கொண்டதும் அதனையிட்டு அச்சப்படவோ பதகளிப்படையவோ தேவையில்லை. உடனடியாக நீங்கள் அது பற்றி வினவி உதவிகளைப் பெற்றுக் கொள்ள முயலுங்கள்.

### 4. எங்கே?

சிறப்புத் தேவைகளுள்ள பிள்ளைகளைப் பற்றி நீங்கள் எங்கிருந்து அறிந்து கொள்ளலாம்? இதில் நிபுணத்துவம் வாய்ந்தவர்களிடம் உதவிகளைப் பெற்றுக் கொள்ளுங்கள். இது தொடர்பாக இணையத் தளத்தில் தேடுவதுடன், பிரசுரமாகும் கட்டுரைகளையும் வாசியுங்கள். சிறப்புத் தேவைகளைக் கொண்டுள்ள ஏனைய பெற்றோர்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். பிள்ளையின் பாடசாலையில் சென்று கதையுங்கள். சிறப்புத் தேவையுள்ள பிள்ளைகளுக்கான நிதியினைப் பெற்றுக் கொள்ளுங்கள், இவர்களுக்கான நிகழ்ச்சித் திட்டங்கள், போக்குவரத்து வசதிகள், பயிற்சிகள், உதவி, கல்வி போன்றன கிடைக்கக் கூடியதாக உள்ளன. அவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு ஆவன செய்யுங்கள். இத்தகைய வசதிகள் அப் பாடசாலையில் இல்லையெனின் நீங்கள் வேறு பாடசாலைக்கு பிள்ளையை மாற்றிப் போவதாகக் கூறலாம்.

### 5. ஏன்?

உதவி கேட்பதற்கு தயங்க வேண்டாம். ஏனெனில் நீங்கள் இவற்றைத் தனியாக செய்ய முடியாது. அவ்வாறு செய்யவும் தேவையில்லை. சிறப்புத் தேவையுள்ள பராமரிப்பாளருக்கு அரசாங்கத்திடமிருந்து ஆதரவு எப்போதும் உண்டு.

தொடரும்...

jeevathisairajah@thaiveedu.com

■ ■ ■

# இப்பவே உயிர்க் கடன் செய்யுங்கள்!

**- குமார் புனிதவேல் -**

இருபது வருட திருமண வாழ்க்கைக்குப் பின் சற்று சலிப்பு வருவது இயற்கைதானே. இந்த சலிப்பை மாற்றி, எமது உறவில் ஒரு புதுப் பரிமாணத்தை கொண்டு வர எனக்கு நல்ல ஐடியா தோன்றியது. அதாவது எங்கள் உறவில் புத்துயிரும் புதுப்பொலிவும் கொண்டுவர இன்னுமொரு பெண் இருந்தால் நல்லது எனத் தோன்றியது. உண்மையில் அந்த எண்ணம் எனக்கு முதல் என் மனைவிக்குத்தான் தோன்றியது என்றால் வியப்படைவீர்கள்.

ஒரு நாள், ஒரு ஞாயிற்றுக்கிழமை என்று நினைக்கின்றேன். எனது மனைவியுடன் T.V. பார்த்துக்கொண்டிருக்கும் வேளை திடீரென எனது மனைவி ‘தேவா, ஒரு Suggestion. நாங்கள் கலியாணமாகி பல வருஷங்களாகி விட்டது, போரடிக்குது. (ஒருபெண் ஒருத்தியைக் குறிப்பிட்டு) “அவவை ஒரு டேட்டிற்கு அழைத்துச் செல்லுங்கோவன்” என சொன்னாள். “என்ன சாந்தி உமக்கு விசரா” என்று உடனே மறுத்தாலும் அது நல்ல ஐடியாவாக எனக்குப் பட்டது. ஆனால், சாந்தி ‘தேவா நீங்கள் அவவை ஒரு காலத்தில் வேறு எந்தப் பெண்ணையும் விட அதிகம் நேசித்தீர்கள் தானே” என்றார். நான் மறுத்து. ‘ஆனால் அது ஒரு காலம். இப்போ நீர் தான் ஒரே பெண் என்பது உமக்கே தெரியும்” என்று கூறினாலும் சாந்தி சொன்னது நியாயமாகப்பட்டது.

உங்கள் கற்பனையை அதிகம் வளர்த்துவிடாதீர்கள்.

சாந்தி ‘Date’ஆக அழைத்துச் செல்லச் சொன்னது வேறு யாருமல்ல எனது அம்மாவைத்தான். அவ அப்பாவை இழந்து பதினான்கு வருடமாகிறது. இப்போ ஸ்காபரோவில் ஒரு சீனியர்ஸ் ஹோமில் வசித்து வருகிறா. எப்பவாவது ஒரு கல்யாண வீட்டிற்கு அல்லது செத்த வீட்டிற்கு அழைத்துச் செல்ல அங்கு செல்வேன். தவறாமல் பிள்ளைகளுடன் தீபாவளி, பொங்கல், வருடப்பிறப்பு ஆகிய மூன்று நாட்களும் ஒரு சிறு பரிசுடன் சென்று பார்த்து வருவேன். மற்றும்படி இரண்டு பிள்ளைகள், வேலை என்று நேரம் இருப்பதில்லை. அவவுடன் நேரத்தைச் செலவிட பாசம் இல்லையென்றில்லை நேரமில்லையென்பதே காரணம்.

> “ உங்களில் யாருக்காவது தாய் இருந்தால்;
> மரணச்சடங்கை சிறப்புறச்செய்தேன் என்று
> மார் தட்டுவதிலும், கல்வெட்டு அடித்து Cabbage
> போவதற்கு செலவிடுவதிலும்,
> சித்திரா பறுவத்தில் ரீமோட்டில்
> பிதிர்க்கடன் கொடுப்பதிலும் பார்க்க
> இப்பவே உயிர் கடன் செய்யுங்கள். ”

திங்கட்கிழமை நான் அழைத்து, செவ்வாய் டின்னருக்குப் போய் பின்பு அப்படியே படமும் பார்த்து வருவோமா என்று தொலைபேசியில் கேட்ட பொழுது மறுமுனையிலிருந்து மறுமொழி வரவில்லை. எனக்கு சந்தேகம் வந்துவிட்டது. பிழையான நம்பரோ என்று. அம்மா என்று அழைத்தேன். தொலைபேசியின் மறு பக்கத்திலிருந்து ‘என்ன தம்பி ஏதாவது பிரச்சினையா? சாந்தி எப்படி இருக்கிறாள்?” என்று பதில் வந்தது. அவவை பொறுத்தமட்டில் இப்படியான ஒரு Call குடும்பப் பிரச்சினைக்கு முதல் கட்டியம்.

“அப்படி ஒன்றுமில்லையம்மா. இரண்டுபேருமா ஒரு ரெஸ்டொரன்டில் கதைத்து கொண்டு இருந்து சாப்பிட்டு பிறகு ஸ்காபரே சென்டரில் சந்திரன் நடித்த ஒரு படம் நடக்கிறது பார்த்து விட்டு வரலாம்” என்றேன்.

“என்ன.. நாங்கள் இரண்டுபேரும் தனியாகவா” என்ற பதிலைத் தொடர்ந்து உடனே அடுத்த பதில் “எத்தனை மணிக்கு, நான் ரெடியாயிருக்கிறேன்” என்று.

அடுத்த நாள் செவ்வாய்க்கிழமை. நான் பின்னேரம் அவ இருந்த ‘Seniors Homeஇற்குப் போய் கீழே கதவு திறந்திருந்ததால் நேராக மாடியின் அவவின் Unit இலக்கம் 216இல் தட்ட கை எடுக்குமுன் கதவு திறந்தது. அம்மா ரெடியாக கோட் போட்டபடி முகம் மலர நிற்க, வியப்புடன் கேட்டேன்! எப்படி சரியாக கதவை திறந்தீர்கள் என்று. “நான் யன்னல் வழியாக கார் வருவதை கண்டு விட்டேன்” என்று எனது டேப் அறிவித்தது.

காரில் ஏறினது தான் தாமதம் அம்மா சொன்னா; “நான் மற்றவர்களுக்கு சொன்னேன். அவர்களும் எப்படி எனது ‘டேட்போனது’ என்று அறிய ஆவலாய் இருப்பதுடன் மிகவும் ஆச்சரியப்பட்டார்கள்” என்றார்.

நாங்கள் சென்ற ரெஸ்டொரன் CN Tower

73ம் பக்கம் பார்க்க...


சகல சட்டத் தேவைகளுக்கும்

Real Estate Law
Purchase, Sale & Mortgage
Immigration Law
Refugee Claim, Sponsorship, Work Permit & Student Permit
Business Law & Commercial Law
Accident Benefit Claims
Translation Services
Tamil, English & Sinhala languages



தமிழ் வழக்கறிஞர்
Raphael Maharaja
Barrister, Solicitor & Notary Public

Tel: 416-847-7077
Fax: 416-847-7088

GTA SQUARE
5215 Finch Ave. East, Unit 219
Scarborough, ON
M1S 0C2

# CTR தகவல் பலகை

## ROOMS / BASEMENT RENT

**STEELS & BIRCH MOUNT**
2bed room walkout basement
Raj: 905-944-9982 / 416-887-5315

**MARKHAM & STEELS**
1 bed room walkout basement,
Vimala: 905-209-1321 / 647-302-5993

**NELSON & MCLEVIN**
1 bed room basement
Devy: 647-330-2855

**PHARMACY & FINCH**
2 bed room condo for rent
Baskaran: 416-809-4415

**PHARMACY & FINCH**
2 Rooms for rent in a house
Brintha: 416-300-1122

**NEILSON & MCCLEVIN**
1 room for rent
Kala: 416- 412-1441

**MARKHAM & LAWRENCE**
2B/R Basement
Kirupa: 416-430-0422

**MARKHAM & LAWRENCE**
2 B/R Basements
Kumar: 416-431-1924

**PHARMACY & FINCH**
Condo for rent
Raja: 647-404-9569

**NEILSON & FINCH**
2 Rooms for rent
Rasalingam: 416-412-7468

**MARKHAM & STEEL**
1B/R Basement
Balan: 416-898-5325

**STEEL & BIRCH**
2B/R Basement
Raj: 905-944-9982, 416-887-5315

**NEILSON & TAPSCOTT**
Room for rent
Kala: 416-754-8947

**BIRCH & SHEPPARD**
2B/R Basement
Sri: 647-449-7119

**PHARMACY & FINCH**
2 Rooms for rent in a house
Apraham: 416-300-1122

**MORRISON & ELLESMERE**
2B/R Basement
Manohary: 416-617-4671

**NEILSON & MCLEVINE**
Room for rent
Devi: 416-283-6651

**MORNINGSIDE & LAWRENCE**
1 Large B/R
Sugi: 647-617-0390

**NEILSON & MCLEIVAN**
2B/R Basement
Kala: 416-754-8947

**BRAMPTON**
Basement
Thayan: 647-207-5465

**MARKHAM & LAWRENCE**
3B/R House for rent
Suresh: 416-804-3220

**MARKHAM & LAWRENCE**
2 B/R Basements
Kirupakaran: 416-430-0122

**MARKHAM & LAWRENCE**
2B/R Basement
416-431-1924

**MARKHAM & STEEL**
2B/R Basement
Annamma: 905-209-1321, 647-302-5993.

**BRITANNIA & MAVIS**
1 Room for rent
Raj: 289-997-3195

**WARDEN & SHEPPARD**
1 Room basement
Pram: 416-497-0685, 416-302-0771

## HOUSE FOR SALE

**MARKHAM & SHEPPARD**
Condo 1B/R for sale
Kumar: 647-919-1415

**BRAMPTON**
2700 sq – 4 Bedrooms
Kumar: 416-400-2222

**WESTON & EGLINTON**
Condo 2 bedroom
Suresh: 416-294-9764

## AUTO FOR SALE

**2001 HONDA CIVIC**
Gold Manual window
Rajan: 416-716-2975

**99 TOYOTA COROLLA**
137km
Selvan: 647-998-2870

CTR
கனடியத் தமிழ் வானொலி
416 264 8798

**2002 GMC GARGO**
Raja: 416-220-1390

**99 TOYOTA COROLLA DX**
Rajan: 416-430-0588

**99 HONDA CIVIC**
Mohan: 416-832-0576, 416-887-5592

------------------------

**TRANSLATION & TUITION**
Sabarimuthu: 416-570-6920, 416-282-0951.

## OTHERS

**DINING TABLE & CHAIR**
For sale
Francisco: 416-289-1951

**MARKHAM & LAWRENCE**
Sony TV 62"
Suntharam: 647-219-4558

**FRIDEGE**
Yogaraja: 416 -451-6895

**MUSIC CLASSES**
Santhiran: 905-501-8198 416-659-8198

**TWIN STOOLLER**
Suresh:416-294-9764

உங்கள் சிறு
விளம்பரங்களும்
இடம்பெற வேண்டுமா?
416 857 6406

# துயர் பகிர்வோம்



### திரு. சுந்தரலிங்கம் சிறீதரன்

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் சூரிச்சை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரலிங்கம் சிறீதரன் அவர்கள் 07.11.2009 அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற சுந்தரலிங்கம் இந்திராதேவியின் அன்புமகனும், கனகசபை புவனேஸ்வரியின் மருமகனும், தர்சினியின் அன்புக்கணவரும், சுஜீதரன், சுஜீவன், சரீசன் ஆகியோரின் பாசமிகுதந்தையும், விஜயதரன், சிறீராம், சிறீக்குமார், சிறீதேவி, சிறீறஞ்சனி, சிறீறஞ்சன், காலஞ்சென்ற சிவபாலன் ஆகியோரின் சகோதரனும், சுதர்சன், சுபதினி, தர்சினி, தேவகுமார், சதா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி வணக்க நிகழ்வு சூரிச்சில் இடம்பெற்றது.

சிறி : 413 19 92 2064
தேவா : 414 43 72 3654
சதா றஞ்சனி : 416 401 0040



### திருமதி. ஜெயக்குமார் தேவிகா

கோண்டாவில் கிழக்கை பிறப்பிடமாகவும் கனடா மார்க்கத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. ஜெயக்குமார் தேவிகா அவர்கள் 12.11.09அன்று காலமானார்.

அன்னார் திரு - திருமதி மகாலிங்கம் பரமேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகளும், ஜெயக்குமார் செல்வரட்ணத்தின் (ஹோம் இன்ஸ்பெக்டர்) அவர்களின் அருமை மனைவியும், திரு - திருமதி செல்வரட்ணம் யோகம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், தாமிரா, அக்ஷயா ஆகியோரின் அன்புத் தாயாரும், சுரேஷ்குமார், ரமேஸ்குமார் ஆகியோரின் உடன்பிறப்பும், சசிக்குமார், சியாமளா, அனித்தா, பிறேமரஞ்சினி, சுகிர்தா, யசோ ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதி வணக்க நிகழ்வு 16.11.09 அன்று கனடாவில் இடம்பெற்றது.

ஜெயக்குமார் : 905 201 5835
சுரேஷ்குமார் : 647 409 8960
ரமேஸ்குமார் : 674 299 7404



### திரு. சுப்பிரமணியம் குமாரசுவாமி

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட குமாரசுவாமி மாஸ்டர் என அன்புடன் அழைக்கப்பட்ட திரு. சுப்பிரமணியம் குமாரசுவாமி அவர்கள் 26-11-2009 அன்று நல்லூரில் காலமானார்

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் காமாட்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற வைத்தியலிங்கம் சிவகாமி தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தையல்முத்து அவர்களின் அன்பு கணவரும், ஜெயகௌரி (கனடா), ஜெயபாரதி (யாழ்ப்பாணம்), ஜெயகுமார் (திருகோணமலை), ஜெயப்பிரகாசன் (ஜெயா, கனடா), ஜெயதீஸ்வரி (நடன ஆசிரியை, கனடா) ஆகியோரின் பாசமுள்ள தந்தையும், சக்திவடிவேல் (கனடா), விமலன் (யாழ்ப்பாணம்), ஜெயவாணி (திருகோணமலை), வாசுகி (கனடா), பாலமுகுந்தன் (பாலா, கனடா) ஆகியோரின் பாசமுள்ள மாமனாரும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு, சோம சுந்தரம், பண்டிதர் பசுபதி, வள்ளியம்மை, குமாரவேலு, கண்மணி, முத்துத்தம்பி ஆகியோரின் சகோதரருமாவார்.

சக்தி-கௌரி 647 436 7088
ஜெயா-வாசுகி 416 901 8816, 647-388 3225
பாலா-கோதை 905 471 7251
விமலன்-பவா 021 222 8827
ஜெயக்குமார்-வாணி 011 94 263264914



### திரு.ஆறுமுகம் கந்தராஜா

யாழ்.நீராவியடியை பிறப்பிடமாகவும் கனடாவில் வசித்தவருமான திரு.ஆறுமுகம் கந்த ராஜா (உதவி முகாமையாளர் - தொழில் துறை அமைச்சு) அவர்கள் 23.11.2009 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - அழகம்மா தம்பதியினரின் புத்திரனும், காலஞ் சென்ற இராசையா-பொன்னம்மா தம்பதிகளின் மருமகனும், நாகேஸ்வரியின் கணவரும், காலஞ்சென்ற மனோகரன், கருணாகரன் (ஜேர்மனி), பாஸ்கரன் (சுவிற்சர்லாந்து), கிருபாகரன் (வவுனியா), சுமதி(கனடா), ஆகியோரின் தந்தையும், புஸ்பராணி, (ஜேர்மனி), யாழினி (சுவிற்சர்லாந்து), கோணேஸ்வரி (வவுனியா), ஐயாத்துரை (Central Driving School) ஆகியோரின் மாமனாரும், பரமேஸ்வரி, மகேஸ்வரி, தெய்வேந்திரன், திருச்செல்வம், மகேந்திரன் ஆகியோரின் மைத்துனரும், நடேசபிள்ளை, பத்மநாதன், மல்லிகாதேவி, கமலாதேவி, உருத்திராதேவி ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதி வணக்க நிகழ்வு 29.11.09அன்று கனடாவில் இடம்பெற்றது.

கனடா : 416 890 5273, 905 201 0067
சுவிற்சர்லாந்து : 41 31 991 3185,
ஜேர்மனி : 494 21 427 6684,
வவுனியா : 94 24 324 1254.

## இப்படியும் மனிதர்கள் - 02

# பாரதிக்குத் தடா



- 'சோக்கல்லோ' சண்முகநாதன் -

"பாலமைத்து, வீதிசமைத்து சிங்களத் தீவைத் தாக்குவதற்கு திட்டம்".

சுமார் நூறு வருடங்களுக்கு முன்பே பாரத தேசத்து பாரதி சதித்திட்டம்.

அப்போதிருந்த புத்திசாலித்தனமான இலங்கை அரசினால் திட்டம் தவிடுபொடியாக்கப்பட்டது.

சிந்து நதியின்மிசை
நிலவினிலே...

இந்தப் பாடல் இலங்கை வானொலியில் நீண்ட காலமாக ஒலித்துக்கொண்டிருந்தது. பல நேயர் விருப்ப நிகழ்ச்சிகளிலும் அடிக்கடி ஒலிபரப்பப்பட்ட ஒரு பாடலாகும். யார் செய்த பாபமோ ஒருநாள் திடீரென்று வானொலி நிலையத்திற்கு உத்தரவு வந்தது. இந்தக் குறிப்பிட்ட பாடல் ஒலி பரப்பிற்கு தடைசெய்யப்படுகின்றது என்று. சாதாரண உத்தரவு அல்ல, அரச உத்தரவு. அதிகாரிகள் என்ன? ஏது? என்று அறியாமல் விழித்தார்கள். ஆனால், பாடல் அந்த நிமிடத்திலிருந்து தடைசெய்யப்பட்டது.

சிங்களத் தீவினுக்கோர் பாலமைப்போம்
சேதுவை மேடுறுத்தி வீதிசமைப்போம்
வங்கத்திலோடிவரும் நீரின்மிகையால்
மையத்து நாடுகளிற் பயிற்செய்குவோம்

மேலேயுள்ள முதல் இரண்டுவரிகளுமே பிரச்சினைக்குள்ளானது. யாரோ தமிழ் நன்கு அறிந்த புண்ணியசீலன் றோட்டுப்போட்டு, பாலம் கட்டி எம்மை அடிக்க திட்டமிடுகிறார்கள் என்று, கூனி கைகேயிக்குச் சொன்னது போல் சொல்லியிருக்கின்றார்கள்.

70களில் ஆட்சியில் இருந்தவர், உலகத்தின் முதலாவது பெண் பிரதமர், சிறிமாவோ பண்டாரநாயக்கா அவர்கள். அவர்தான் இப்பாடலை தடைசெய்து பெருமையை தனதாக்கிக் கொண்டவர்.

பாரதிக்கு இதுவும் வேண்டும். இன்னமும் வேண்டும். இலங்கையை 'சிங்களத் தீவு' என்று சொல்லி தமிழர்களிடம் வாங்கிக் கட்டிக்கொண்டவர். சிங்களத்தீவுக்கு நட்புப் பாலம் போடப்போய் அந்த இனத்தவராலேயே சந்தேகிக்கப்பட்டவர். அக்கிரகாரக் கழுதையாகி, பிராமணர்களாலேயே கிராமப் பிரதிஷ்டை செய்யப்பட்ட, கடைய பிராமணர்தானே இவர்.

'சிரஞ்சீவி' உலக மஹாகவியே! உக்கு இப்படி ஒரு சோதனையா? 'மனிதர் மிகவும் இனியர்' என்று சொன்னவன் நீ தானே?

சில மாதங்களின் பின் அரசிற்கு விளக்கம் கொடுக்கப்பட்டது. களனி ஆற்றின் மேல் கட்டப்பட்ட யப்பான் நாட்டு நட்புறவுப்பாலம், கட்டுநாயக்கா விமான நிலையத்திற்குப் போகும் கனடா நட்புறவு வீதி, இப்படித்தான் பாரதியின் இந்தப் பாலமும். தமிழறிந்த இன்னுமொரு புண்ணிய சீலனின் விளக்கம் இது. விளக்கம் ஏற்கப்பட்டு, பாடல் மீண்டும் ஓகோ என்று ஒலிபரப்பாகியது.

இதற்கிடையில் கவிஞர் சில்லையூர் செல்வராசன் என்னிடம் ஓர் செய்தியைச் சொன்னார். அந்தச் காலக் கட்டத்தில் தான் பூதத் தம்பி நாடகமும் வானொலிக்காகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்நாடகத்தில் 'அந்திராசித்தனை ஆனை அடிக்காதோ' என்று ஒரு பாடல் வரி வருகிறது' 'பூதத் தம்பி' கதை தெரிந்தவர்களுக்கு, இதுவும் தெரியும். விளக்கம் தேவையில்லை.

'அந்திராசி' என்றால் பெண் அரசி.

பெண் அரசியாகிய சிறிமாவோ, அம்மையாரை சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவரை, ஆனை அடிக்காதோ, யு.என்.பி. கட்சியாகிய யானைச் சின்னத்தைக் கொண்ட எதிர்க்கட்சி அடித்து வீழ்த்தாதோ? என்று நான் ஓர் விளக்கம் கொடுக்கப்போகிறேன். என்று கவிஞர் சில்லையூர் என்னிடம் சொன்னார். எனக்கு ஏன் சொன்னார் என்று இன்றுவரை எனக்குத் தெரியவில்லை. இன்று அவர் இல்லை. தெய்வமாகிவிட்டார். அவர் சொல்லவேயில்லை. சொல்லயிருந்தால் நாடகத் தயாரிப்பாளர் வேலையில்லாமல் போயிருப்பார். சில்லையூர் ஒரு நல்ல நகைச்சுவையாளன்.

எப்படியெல்லாம்
மனிதர்கள்

தொடரும்...



sanmuganathan@thaiveedu.com

# இப்பவே உயிர் கடன்...

71ம் பக்கத் தொடர்ச்சி...

போல் இல்லாவிட்டாலும் ஒரு நல்ல இந்தியன் ரெஸ்டோரன்ட். எங்களுக்கு முன்பே அறிவித்திருந்தபடியால் ஒரு வசதியான இடத்தில் இருவர் இருப்பதற்கு ஏற்ற மேசையை தந்தார்கள். பொதுவாக காதலர்களுக்கு ஒதுக்கும் ஒரு மேசையாகத்தான் இருக்கவேண்டும்.

உடனே நான் அம்மாவுக்கு பின்னே நின்று அவவுடைய கோட்டை கழற்றி கதிரையில் தொங்கவிட்டு, அவ வசதியாக இருக்க கதிரையை அரக்கி இருக்க விட்டு, என் ஆசனத்துக்கு திரும்பியபோது என் கண்கள் கலங்கி விட்டன. எத்தனை முறை அப்பா அம்மாவுடன் சென்றபோது அப்பா போய் இருந்துவிடுவார். அம்மாதான் கோட்டை கழற்றி ஆசனத்தில் இருக்கவைத்திருப்பா என்பது ஞாபகத்திற்கு வந்தது.

எனது ஆசனத்தில் அமர்ந்து அவவுடைய முகத்தை பார்த்தபோது எனது கட்டி அனைத்து முத்தம் கொடுக்க வேண்டும்போலிருந்தது. 'தம்பி இந்த மெனுவை வாசி தம்பி, எனக்கு சின்ன எழுத்து வாசிப்பது கடினம்' என்றபோது மீண்டும் இந்த உடலகத்திற்கு திரும்பி வந்தேன்.

அன்று என்னுடைய டேட் 'முந்தி நான் தான் உனக்கு வாசிப்பன், இப்ப நீ எனக்கு வாசிக்கிறாய் என்று கலகல என்று சிரித்தார். 'அது தான் இப்ப நீங்க ரிலக்ஸ்சாக இருங்கள் நான் செய்கிறேன்' என்று சொல்லி வாசித்தேன்.

டின்னர் சாப்பிட்டுக்கொண்டு என்னென்னவோ எல்லாம் கதைத்தோம். ஒரு விடயம் என்று, பிரச்சினை என்று இல்லாமல் கடந்தகாலத்தை இருவருமாக இரைமீட்டவண்ணம் இருந்தோம். சிறுவயதில் நான் போட்ட சண்டைகள் குழப்படிகள் இப்படி பல பல விடயங்கள் கதைத்ததில் நேரம் போவது தெரியாமல் இருந்து விட்டோம். கடைசியில் ரெஸ்டோரன்ட் இற்கு வெளியே வருகையில் படத்திற்கு லேட் ஆகிவிட்டது.

வழக்கமாக Seniors apartment வாசலில் தான் எனது அம்மாவை இறக்கிவிடுவது. ஆனால், அன்று எனது டேட்டை கட்டிப்பிடித்தபடி லிப்ட்டில் ஏறி அறைவாசல் வரை கொண்டு விட்டேன். அவ என்னை கட்டிப்பிடித்து கன்னத்தில் முத்தம் இட்டபோது உச்சி குளிர்ந்தது. விட்டுப்பிரிய விருப்பமில்லாமல் மெதுவாக திரும்பினேன். லிப்ட் அடிக்கு வந்து திரும்பியபோது அந்த மெல்லிய உருவத்தை என் கண்ணில் ஒன்று மறைத்தது. அது அன்புக் கண்ணீர். ஆசைக் கண்ணீர், பாசக் கண்ணீர், அவ கையைத் தூக்கி ஒரு 'Flying Kiss' எறிந்தார். நானும் பதிலுக்கு Flying Kiss கொடுத்துவிட்டு வீடு திரும்பினேன்.

வீட்டில் சாந்தியை கண்டவுடன் கட்டிப் பிடித்து முத்தம் கொடுத்தேன். அன்று நான் காதலித்தது போல் என்றும் காதலிக்கவில்லை. அன்று படுக்கும்வேளை சாந்தியை அணைத்தபோது உண்மையாக என் மனதுள் சாந்தி.

இது நடந்து சில தினங்களிலேயே எனது அன்னை இறந்துவிட்டார்.

மரணச்சடங்குகள் பின் 31 எல்லாம் நடந்தது. கடைசியில் அன்று சனிக்கிழமை மாலை அம்மாவுடைய சாமான்களை எடுத்து Salvation இற்கு கொடுப்பதற்காக சாந்தி அடுக்கிக் கொண்டிருந்தா. திடீர் என்று வெளியே T.V. பார்த்துக்கொண்டு இருந்த என்னிடம் ஒரு Envelope கொடுத்து மாமியுடைய 'Hand bag'இல் உங்கள் பெயர் போட்டு தபால் இருந்தது' என்று கூறினா. என்னவாக இருக்கும் என வாசித்தேன்.

என் அன்பு மகன் தேவா,

என்னை நீ சாப்பாட்டிற்கு கூட்டிக்கொண்டு போனதற்கு Thanks. என் வாழ்வில் ஆகச்சிறந்த நிகழ்ச்சி என்றால் அதுதான். கடவுள் கேட்டாலும் இதைத்தான் சொல்வேன். தம்பி, நீயும் சாந்தியும் பிள்ளைகளும் என்றைக்கும் சீரும் சிறப்புடன் இருக்க கந்தன் அருள் செய்வார்.

இப்படிக்கு
உன் அன்பு மறவாத
அம்மா

என்னை மறந்து சாந்தியை கட்டிப்பிடித்து... 'Shanthi I can never pay back what you gave me' என்று சொன்னேன்.

kumarpunithavel@thaiveedu.com

www.inayam.net

# திருமணமும் பழமொழிகளும்

- பொன் குலேந்திரன் -

நீண்ட காலமாக புழக்கத்தில் இருந்துவரும் அனுபவ குறிப்புகளே பழமொழிகள். சமுதாயத்தின் அனுபவ முதிர்ச்சியையும் அறிவுக் கூர்மையையும் எடுத்துவிளக்குபவை அவை. ஒரு பொருளை சுருக்கமாகவும், தெளிவாகவும், சுவையுடனும் அவை விளக்குகின்றன. முதியோர்கள் பழமொழிகளை நாட்டுப்புற வாழக்கையில் அடிக்கடி பாவிப்பதுண்டு.

தமிழ் குடும்பங்களிடையே பிள்ளைகளின் திருமணம் என்றவுடன் பல விதமான பிரச்சினைகளை திருமணத்தை முற்றாக்க முன் பெற்றோர் தீர்மானிக்க வேண்டிவரும். ஊரென்ன? குடும்பத்தில் எத்தனை பிள்ளைகள்? திருமணமாகாமல் எத்தனை பேர் இருக்கிறார்கள்? காரணம் என்ன? குடும்பத்தில் மனநோய், சர்க்கரை வியாதி, புற்று நோய், இரத்தக் கொதிப்பு போன்ற வியாதிகளுண்டா? செல்வம் படைத்த குடும்பமா? படித்து பட்டம் பெற்ற குடும்பமா? வாயாடிக் குடும்பமா? ஏதாவது தில்லு முல்லுகளில் சம்பந்தப்பட்ட குடும்பமா? பெற்றோர்கள் விவாகரத்து செய்தவர்களா? தகப்பன், தாய் குடிகாரர்களா? பெற்றோர் அல்லது சகோதரர்கள் சகோதரிகள் ஆகியோரின் ஒழுக்கம் எப்படி? இப்படி ஒரு கேள்விப் பட்டியல் நீண்டு கொண்டே போகும். சில சமயங்களில் இவையெல்லாவற்றையும் நுணுக்கமாக ஆராய்ந்து திருமணம் செய்து வைத்தபின்னரும் பிரிந்த குடும்பங்கள் பல உண்டு. அதனால்தான் "திருமணங்கள் சுவர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன" என்ற ஒரு முதியோர் வாக்கு உச்சரிக்கப்படுகின்றது. "தாரமும் குருவும் தலைவிதிப்படி" என்ற பழமொழியுமுண்டு. இவ்விரண்டு பழமொழிகளை சற்று உண்ணிப்பாக பார்ப்போமாகில் முதலாவது பழமொழியில் "சுவர்க்கம்" என்பது எதைக் குறிக்கிறது? முற்பிறவிக்கும் மறுபிறவிக்கும் இடைப்பட்ட நிலையா? சுவர்க்கத்திற்கும் தலைவிதிக்கும் என்ன தொடர்பு? இங்கு கர்மாவின் விதி செயல்படுகிறது. "அவளுக்கு அவன் புருஷனாக வந்தது அவள் முற்பிறவியில் செய்த கர்மாவின் பலன்" என பலர் சொல்வதை கேட்டிருக்கிறோம்.

இப்படியான பல நிலைகளை விளக்க பொது வாழ்க்கையில் பழமொழிகள் பல உண்டு. ஒவ்வொன்றும் திருமணம் ஆகப்போகிறவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக அமைகிறது. அப்பழமொழிகளில் சிலவற்றை ஆராய்வோம்.

## கன்னி இருக்க காளை மணை ஏறலாமா?

இந்த பழமொழியை பல குடும்பங்கள் பின்பற்றி வருகிறதை நாம் அறிவோம். ஒரு குடும்பத்தில் ஒரு இளைஞனுக்கு இரு சகோதரிகள் இருந்தால் பெற்றோர்கள் முதலில் தம் பெண் குழந்தைகளுக்கு திருமணம் செய்துவைத்தபின்னரே மகனுக்கு திருமணம் செய்வது வழக்கம். காரணம், பெரும்பாலும் குடும்பங்களில் மகன் திருமணம் செய்து பிரிந்து போய்விட்டால் பின் மருமகளாக வருபவள் கணவனை தன் மைத்துனிமார்களுடைய திருமணத்துக்கு தேவையான பண உதவி செய்ய விடாமல் தடுக்கக் கூடும் என்பது ஒரு காரணமாகயிருக்கலாம். சில சமயங்களில் ஒரு குடும்பத்தில் ஆண் பெண் என இரு பிள்ளைகளிருந்தால் குண்டுமாற்றுக்கு கலியாணம் என்று வேறு குடும்பத்தில் உள்ள சகோதரன் சகோதரியை மாறி திருமணம் செய்வதன் மூலம் சீதனப் பிரச்சினையை தீர்ப்பது மட்டுமன்றி இரு திருமணங்களை ஒரே நாளில் வைப்பதினால் கலியாணச் செலவுகளையும் குறைக்கக் கூடியதாக இருக்கும். ஆனால் மாற்றுத்திருமண முறையில் நடந்த கலியாணங்கள் சில சமயங்களில் பிரச்சனையில் முடிவடைந்திருக்கிறது. ஒரு குடும்பத்தில் கணவன் மனைவியை துன்புறுத்தினால் உடனே மற்ற குடும்பத்திலும் சகோதர பாசத்தினால் பிரச்சனை பரவும் நிலை ஏற்படுகிறது. மாற்றுக் கலியாணத்தில் சாதகங்கள் பொருந்துவதும் மிக அருமை.

## கலியாணம் பண்ணின வீட்டில் ஆறு மாதம் கறுப்பு

தம் சொந்தக்காரர்களுடைய பிள்ளைகளின் திருமணத்தை விட தன் பிள்ளையின் திருமணம் பலர் பெருமையாக பேசுமளவுக்கு இருக்க வேண்டும் என்பதற்காக கடன் வாங்கி டாம்பீகமாக செலவு செய்து பின் வாழ்நாள் முழுவதும் கடனாளியாக இருப்பவர்கள் பலர். இந்தப் பழமொழி கலியாணத்துக்கு பின் ஆறு மாதத்துக்கு பணத்துக்கு கஷ்டம் என்பதை எடுத்துச் சொல்கிறது. பல குடும்பங்களில் நடை முறையில் இது நடப்பதை எடுத்துக் காட்டுகிறது. மகளுக்கு சீதனம் கொடுப்பதற்காக கடன் வாங்கி ஒட்டாண்டியாக போனவர்களுமுண்டு.

## கோத்திரமறிந்து பெண்ணைக் கொடு பாத்திரம் அறிந்து பிச்சை போடு

கோத்திரம் என்பது குலம் அல்லது சாதியைக் குறிக்கும். கலியாணத் தரகரிடம் பெற்றோர் கேட்கும் முதற்கேள்வி மணமகன் அல்லது மணமகளின் பெற்றோர் என்ன சாதி? பிராமணர்கள் தம் சாதியை விட்டு திருமணம் செய்வது மிகக் குறைவு. அவ்வாறே ஒவ்வொருசாதியினரும் தம் சாதியில்லாத இடத்தில் சம்பந்தம் வைக்கமாட்டார்கள். ஒரு குடும்பத்தில் யாராவது ஒருவர் இன்னோர் சாதியில் போய் திருமணம் செய்திருந்தால் அது மற்றைய பிள்ளைகளின் திருமணத்துக்கு தடையாக அமையும். பெற்றோர் திருமணத்தை முற்றாக்குமுன் சம்பந்தியின் குடும்பத்தைப் பற்றியும் யார் யார் அவர்களுக்கு சொந்தம் என்பதைப் பற்றி தீர விசாரித்தறிவார்கள்.

சில சாதி மக்களை இன்னோர் சாதி மக்கள் புறக்கணித்து அடக்கி வாழ்ந்தமையால் அவ்வினத்தில் படித்தவர்கள் குறைவு. ஆனால் இந்த நிலை மாறிக்கொண்டு வருகிறது. சில ஊர்களில் அவர்களை கோயிலுக்குள் சென்று வணங்குவதை தடைசெய்துள்ளார்கள். இதனால் அந்த இனத்தில் திருமணமான மற்றய சாதிப் பெண்ணும் கோயிலுக்குச் சென்று வணங்கமுடியாத நிலைக்குத் தள்ளப்படுகிறாள். பெரும்பாலும் காதல் திருமணங்கள் கோத்திரம் பார்த்து நடப்பதில்லை. இரு மனங்கள் ஒத்தால் கோத்திரம் முக்கியமில்லை.

## சும்மா இருந்த பெண்ணுக்கு ஆறுபணத்துக்கு தாலி போதாதா.

ஒரு பெண் திருமணமாகாமலிருப்பதற்கு பல காரணங்களுண்டு. சீதனம் கொடுக்க போதிய பணவசதியில்லாமை, அழகிருந்தும் அங்கத்தில் குறை, வயது கூடியமை, சாதி, சிறுவயதிலேயே விதவையானவள், சாதகத்தில் குற்றம் போன்ற காரணங்களினால் திருமணம் தள்ளிப் போவதுண்டு. சில பெண்களின் திருமணம் நடக்காமலிருப்பதற்கு பெற்றோரும் ஒரு காரணம். நல்ல சம்பளத்துடன் உயர் பதவியிலிருக்கும் பெண்ணின் சம்பாத்தியத்தில் வாழும் பெற்றோர் மகள் திருமணம் செய்து கணவனுடன் சென்று விட்டால் தாம் வாழ வரும்படியில்லாமல் போய்விடுமே என்ற பயம் ஒரு காரணம். வேறு சில பெற்றோர் நுணுக்கமாக பெண்ணுக்கு வர வேண்டிய கணவனை தேடுவதில் பல வருடங்கள் செலவு செய்து விடுவார்கள். பெண்ணின் வயது ஏறிக் கொண்டு போவதினால் முகத்தில் முதுமையின் தோற்றம் தெரியத் தொடங்கும். "பருவத்தே பயிர் செய்" என்பதற்கிணங்க பெண்ணை தகுந்த வயது வந்தவுடன் திருமணம் செய்து வைப்பது அவசியம். அல்லாவிடில் காலம் போகப் போக 'சும்மா இருந்த பெண்ணுக்கு ஆறுபணத்துக்கு தாலி போதாதா' என்ற நிலை ஏற்படும். இங்கு ஆறு பணம் என்ற சொல் மலிவான தரம் குறைந்த மணமகனைக் குறிக்கும்.

## கிழவனுக்கு வாழ்க்கை படுகிறதை விட கிணற்றில் விழுகிறது மேல்.

ஓமான், சவுதி அரேபியா, போன்ற மத்திய கிழக்கு நாடுகளில் கிழவர்கள் இளம் பெண்களை திருமணம் செய்வது வழக்கம். இளம் பெண்ணுடன் உடலுறவு வைத்தால் தமக்கு இளமை திரும்பும் என்பது அவர்கள் நம்பிக்கை. அதுவுமன்றி வயது வந்த காலத்தில் தம்மை பராமரிக்கவும் ஓடியாடி வேலை செய்யவும் ஒருத்தி தேவை அவர்களுக்கு. இதனால் ஹைதராபாத் என்ற ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள நகரத்தில் பெரும்பான்மையான முஸ்லீம்கள் வாழும் பகுதிகளுக்கு போய் ஏழைப் பெற்றோருக்கு பெரும் பணம் கொடுத்து இளவயது பெண்களை கலியாணம் செய்து தம்நாட்டுக்கு அழைத்து செல்வர்.

தேவதாஸ் என்ற கதையில் பார்வதியை ஒரு வயதுவந்த ஜமீன்தார் திருமணம் செய்கிறார். இங்கு பெற்ற கடனை திருப்பிக் கொடுக்க முடியாமல் பார்வதியின் தந்தை திருமணத்துக்கு இணங்குகிறார். முதியவரை மணம் முடிப்பது முற்காலத்தில் ஜமீன்தார், பண்ணையார் குடும்பங்களில் இருந்து வந்த நடைமுறை. கிழவனை மணம் செய்வதிலும் பார்க்க தற்கொலை செய்வது மேல் என்று தம்முயிரை மாய்த்த பெண்கள் பலர். சில பெண்கள் தம் வயதையொத்த பிள்ளைகளுக்கு தந்தையாயிருப்பவர்களை மணந்துள்ளார்கள். இதை அடிப்படையாக வைத்து "சித்தி" என்ற திரைப்படம் பல வருடங்களுக்கு முன் வந்துள்ளது. பிள்ளைகளை கவனிப்பதற்காக முதியவர்கள் மறுமணம் செய்வதுமுண்டு.

## காட்டில் ஆனையைக் காட்டி வீட்டில் பெண்ணை கொடுக்கிறது போல்

தன் மகளுக்கு கலியாணம் எப்படியும் செய்து வைக்க வேண்டும் என்பதற்காக வசதியில்லாவிட்டாலும் பெரும் தொகை சீதனம் தருவதாகச் சொல்லி திருமணம் செய்து வைத்த பெற்றோர்களுமுண்டு. கலியாணத் தரகர்மாரும் இந்த கலியாண தில்லுமுல்லுகளில் பெரும் பங்கு வகிப்பர். "ஆயிரம் பொய் சொல்லி ஒரு திருமணத்தை செய்துவை" என்ற பழமொழியுமுண்டு. இப்படி ஏமாற்றுத் திருமணத்தின் பேச்சு வார்த்தையின்போது நல்ல வசதி படைத்த, உயர் பதவியில் உள்ள தம் இனத்தவர்களுடன் தமக்குள்ள தொடர்பைப் பற்றியும் அவர்கள் மூலம் பல உதவிகளை செய்ய முடியுமென்ற நம்பிக்கையையும் மணமகனின் பெற்றோருக்கு ஊட்டுவார்கள். இவ்வாறே ஒரு காலத்தில் லண்டன் மாப்பிள்ளைமாருக்கு யாழ்ப்பாணத்தில் நல்ல கிராக்கியிருந்தது. தாம் என்ஜினியர் என்றும் தமக்கு லண்டனில் இரண்டு வீடுகள் உண்டென்றும் ஏமாற்றி நடந்த திருமணங்கள் பல. பின் லண்டன் சென்ற மணமகள் அங்கு கணவனுக்கு வேறு வெள்ளைக்கார பெண் ஏற்கனவே மனைவியாக இருப்பதை கண்டு கணவனைவிட்டு பிரிந்த கதைகளுமுண்டு. 47 நாட்கள் என்ற சிவசங்கரியின் திரைப்படக் கதை இந்த ஏமாற்றுத் திருமண அடிப்படையிலான கதையாகும்.

## தாரமும் குருவும் தலைவிதிப் படி

இந்த பழமொழி பிரபல்யமானதொன்று. ஒருவன் தனது அறிவை சரிவர கற்று, பெருக்க வேண்டிய ஒரு நல்ல குருவையும், இனிமையான குடும்ப வாழ்க்கைக்கு அவசியம் தேவையான நல்ல மனைவியும் பெறுவது தலைவிதி என்கிறது இப்பழமொழி. அறிவுக்கு வழிகாட்டுபவர் குரு. அதேபோல் நல் வாழ்க்கைக்கு வழிகாட்டுபவள் மனைவி. நல்ல ஒழுக்கமுள்ள மனைவி அமையாவிட்டால் அது அவன் தலைவிதி என்கிறது சமுதாயம்.

pon.kulendiran@thaiveedu.com

■ ■ ■

ஆயுட்காப்புறுதி

For all your Insurance needs...
Call: 416•522•3314
Sockalingam Prabaharan
Life Insurance Broker

- வயோதிபர்களுக்கான காப்புறுதி
- ஆயுட் காப்புறுதி (Life Insurance)
- கொடிய நோய்களுக்கான காப்புறுதி
- குழந்தைகளுக்கான

உயர் கல்வி சேமிப்புத் திட்டம் RESP
20% - 40% அரச மானியத்துடன்
15% அதிக போனஸ்



- Disability Insurance
- Non Medical Insurance
- RRSP & Investments

$100,000. காப்புறுதிக்கு
$11.97
மாதாந்தக் கட்டணம்

INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES

LILAND INSURANCE INC.
759 Warden Ave. Toronto, ON M1L 4B5



# மருத்துவப் பரிசோதனையற்ற காப்புறுதி

ஒரு கண்ணோட்டம்!

**மருத்துவப் பரிசோதனையற்ற காப்புறுதியின் உத்தரவாதமான சலுகை**

1. உன்னதமான சேமிப்புடன் கூடிய காப்புறுதி
2. உங்கள் பாதுகாப்பு உடனடியாக உறுதிப்படுத்தப்படும்
3. ஒவ்வொரு வருடமும் காப்புறுதித் தொகை 3%ல் அதிகரிக்கும். ஆனால் மாதாந்தக் கட்டுப்பணத்தில் எவ்வித மாற்றமும் இல்லை.
4. விபத்தினால் இழப்பு ஏற்படின் காப்புறுதித் தொகை இரண்டு அல்லது மூன்று மடங்காக அதிகரிக்கும் வாய்ப்பு.
5. கொடிய நோய் *(Terminal Illness)* ஏற்படின் 50% மான காப்புறுதித் தொகை வாழும் போதே பெற்றுக் கொள்ள முடியும்.

**இக் காப்புறுதியை** வயது 40 முதல் 85 வரை **பெற்றுக் கொள்ளலாம்.**

**பல்வேறு நிறுவனங்களிடமிருந்து குறைந்த விலையில் உங்கள் காப்புறுதியை தெரிவு செய்துகொள்ள அழையுங்கள்**



• Life, Critical, Disability, Mortgage Insurance

**Tel: 416•315•8100**

ROYAL BROKERS
Corporation

**Siva Kandiah**
*Managing General Agent,*
*RBC, IA, DFS, Assumption Life*

RBC Insurance · Industrial Alliance · Canada Life

80 Nashdene Ave., Unit B26 Toronto ON. M1V 5E4 Tel: 416•298•4722 Fax: 416•298•4664

**New Agents Welcome. Join hands with Canada's #1 RBC Life Broker (2006-2007)**

# படுவான்கரைப் பயணம்

**தொடர் 05**

- குமார் புனிதவேல் -

பயணங்கள் எப்போதும் மனிதனின் உலகியல் நோக்கின் தொடுவான் தொலைவை நீட்டிக் கொண்டே செல்லும். ஒரு கிணற்றில் உள்ள தவளை "உலகம் கிணற்றளவே" என்று எண்ணுவதில் வியப்பில்லை. கனடாவில் இருபது வருடங்களுக்கு முன் குடிபெயர்ந்து வந்த எங்களுக்கு டொரண்டோதான் கனடா என்றிருந்த நிலையை போக்கி, பரந்துபட்ட இந்த நாட்டின் வியப்பு மிகு காட்சிகள் உள்ளத்தில் எழுச்சியைத் தந்தன. ஆந்த மகிழ்ச்சியை மற்றவரும் அனுபவிக்க வேண்டும் என்னும் பரந்துபட்ட நோக்குடன் பல தகவல்களை இணைத்து இங்கு தருகின்றேன். எங்கே, தொடர்ந்து பார்ப்போம் கனடாவின் மற்றைய சிறப்புகளை.

இப்போது நாங்கள் ஒரு வினோதமான புல் வெளியூடாகப் பயணித்துக்கொண்டிருக்கிறோம். கண்ணுக்கு எட்டிய தூரம்வரை மலைகளோ மேடுகளோ காணவில்லை. தென்னாலிராமன் கதையில் படித்திருப்பீர்கள் தென்னை மரம் ஒன்றைவிட மற்ற எல்லாவற்றையும் வெட்டிவிடு என்ற மன்னன் கட்டளையிட, ஒற்றைத் தென்னையை விட மற்று எல்லாத் தென்னை மரங்களையும் வெட்டியதுபோல் இந்த பரந்துபட்ட நிலப்பிரப்பில் ஒரு மரத்தைவிட்டு மற்ற எல்லா மரத்தையும் வெட்டியுள்ளதுபோல கண்ணுக்கெட்டிய தூரம்வரை பரந்த புல்வெளி மட்டுமே தெரிந்தது (பெருமளவு விவசாயமும் உண்டு). இதுவே உங்கள் பூமிசாஸ்திரத்தில் படித்த "பிரேரஸ்" புல்வெளியாகும். இந்த பிரதேசத்தை "உலகத்தின் உணவுப் பெட்டகம்" (Food Basket of the world) என்று குறிப்பிடுவார்கள்.

இங்கு வடமேற்கு பிரதேசம் எனக் குறிப்பிடப்படும் North west territoriesஇல் இருந்து இரு மாகாணங்கள் பிரிந்தன. அவை சஸ்கெச்சுவான், அல்பேட்டா என்பனவாகும். இதில் சஸ்கச்சுவான், மாகாணத்தை குறிப்பிடும் வேளையில் அந்த மாகாண குடிமக்களுக்கு தமது மாகாணத்தின் spelling தெரியாது என்று நகைச்சுவையாகக் குறிப்பிடுவர். இதன் தலைநகரான ரெஜினா (Regina) விக்டோரியா மகாராணி ஞாபகார்த்தமாக பெயரிடப்பட்டது. இந்த நகரத்தில் ஒரு மரமாவது இயற்கையாக வளர வில்லை. அனைத்துமே மனிதனால் நடப்பட்டவை. இங்கு இருந்த ஒரு சிறு நீர்ச்சுனையை மறித்துக்கட்டி பெரும் ஏரியை ஏற்படுத்தினார்கள். பின்னர் இந்த ஏரிக்குக் குறுக்காக நகர மத்தியில் 840 அடி நீளமுள்ள Albert Street Bridgeஇனைக் கட்டியுள்ளார்கள். இந்த நகரின் அழகை நோக்குபவர் கட்டாயம் வள்ளுவருடைய

"தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சிதன்
மெய்வருந்தக் கூலி தரும்"

என்ற குறளை நினைத்துக்கொள்வார். படைத்தவன் மரம் நடத் தவறிவிட்டாலும் படைத்தவன் ஆறுகள் பாய மறுத்துவிட்டாலும் மக்கள் தமது சுயமுயற்சியால் மரங்களும், பூங்காவனங்களும் அமைத்ததுடன், சுற்றத்தார் மலடி என சொல்லமுடியாத வகையில் ஒரு ஏரி அமைத்து, அழகான நகரத்தை உண்டுபண்ணியுள்ளார்கள். விக்டோரியா மகாராணி ஆட்சிசெய்த காலம் பிரித்தானியாவின் பொற்காலம் எனலாம். தமது சாம்ராச்சியத்தை சூரியன் அஸ்தமிக்காத சாம்ராச்சியம் என்று பெருமையாக தம்பட்டம் அடித்துக்கொண்டார்கள். அந்த அரசியின் ஞாபகார்த்தமாகவே இந்த நகருக்கு ரெஜினா என பெயரிட்டுள்ளார்கள்.

> "தென்னை மரம் ஒன்றைவிட
> மற்ற எல்லாமரங்களையும் வெட்டிவிடு என்று
> மன்னன் கட்டளையிட,
> ஒற்றைத் தென்னையைவிட மற்ற எல்லாத்
> தென்னை மரங்களையும் வெட்டியதுபோல்,
> இந்த பரந்துபட்ட நிலப்பிரப்பில்
> கண்ணுக்கெட்டிய தூரம்வரை
> பரந்த புல்வெளி மட்டுமே தெரிந்தது"

இந்நகரில் விஷேடமாக - மாகாண ஆட்சி மன்றம், ரெஜினா பல்கலைக்கழகம், மாகாண நூதன காட்சிச்சாலை என்பன உள்ளன.



பெருமளவு கமத்தினை நம்பியுள்ள இப்பிரதேசம் 1930களில் ஏற்பட்ட வரட்சியால் பெரிதும் பாதிக்கப்பட்டதை இங்கு குறிப்பிட வேண்டும். வரட்சி நிவாரணமாக இரண்டாயிரத்து நூறு தொழிலாளிகளைக் கொண்டு இயந்திரம் ஏதுமில்லாமல் ஏரியினைத் தூர்த்தி இரண்டு மலைகளை ஏரியின் மத்தியில் ஏற்படுத்தியுள்ளார்கள்.

மேற்கூறிய குறிப்புகளை இங்கு நான் குறிப்பிடுவதன் முக்கிய நோக்கம் ஈழத் தமிழர் வாழும் பிரதேசம் பெருமளவு வரட்சியுடையதாயிருப்பினும் முயற்சியுடையவராய் இருப்பின் இலங்கையின் வடக்கு கிழக்கு பிரதேசத்தை பொன்விளையும் பூமியாக மாற்றலாம் என்பதைச் சுட்டிக்காட்டவே.

இந்த நகரத்திலிருந்து அடுத்து நாம் சென்றது டிரம்எல்லர் (Drumhellar) என்னும் இடமாகும்.

ஆய்வாளர் மத்தியில் இருந்த உயிரியல் பரிணாம வளர்ச்சியில் டிரம்எல்லார் பெருமாற்றத்தை ஏற்படுத்தியது என்றால் மிகையாகாது. மனிதன் தோன்றுவதற்கு பல மில்லியன் வருடங்களுக்கு முன்பே பூமியில் டயனோசரஸ் எனும் பாரிய மிருகம் தோன்றியது என்று நம்பப்பட்டது. அவையே எமது அறிவுக்கு எட்டியவரையில் மிகப் பழமைவாய்ந்ததாக இருந்தது. டயனோசரஸ்இனை கிட்டத்தட்ட இருநூறு மில்லியன் பழமையுடையது என்பர். ஆனால், டிரம்எல்லரில் நாநூறு வருடங்களுக்கு முன்பே சுறா இன உயிரினங்கள் வாழ்ந்ததாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த வகை சுறாக்கள் தரையிலும் வாழக்கூடியன வாக மணல் சிறுத்தை சுறா (Sand tiger shark) இனத்தை ஒத்ததாக இருந்தது.

இங்கு ஒரு பெரிய டயனோசரஸ் நூதன கண்காட்சிச் சாலை உள்ளது. இங்கு பல எலும்புக் கூடுகள் (டயனோசரஸ்) கண்காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளன. இங்குள்ள நகரம் நூதன காட்சிச்சாலையைச் சார்ந்ததாக உள்ளது. இங்கும் உலகிலேயே மிகப் பெரிய டயனோசரஸ் உள்ளது. மன்னிக்கவேண்டும் - உயிருடன் கட்டிப்போட்டில்லை! மனிதனால் செய்யப் பட்டது. இது 86 அடி உயரமுடையது. அதன் உள்ளாக ஏறிச்செல்ல 106 படிகள் உள்ளன. அந்த மிருகத்தின் வாயினூடாக வந்து வெளி உலகத்தைப் பார்க்கலாம். இப்படியான ஒரு பயணம் மேற்கொள்வதால் உலகில் மிகப் பெரிய டயனோசரஸ் சிலையைப் பார்த்ததுடன் மட்டுமல்லாமல் அதில் ஏறிய திருப்தியும் கிடைக்கும்.

இந்த டயனோசரஸ் நகரத்தை நோக்கிய வேளை எமது மனதில் தோன்றிய சில எண்ணங்களைப் பகிர்ந்துகொள்வோம்.

முதலாக படைத்தவன் சுறா இனத்தைப் படைத்து, அதை வலுவடைவதற்காக பெரியதாக்கிக்கொள்ள செய்தான். ஆனால் ஒரு அளவுக்கு மேல் பெரிதாக்க முடியாத நிலையில் சிலேற்றை அழித்துவிட்டு மீண்டும் படம் கீறும் குழந்தைபோல் இரண்டாம் கட்டமாக டயனோசரஸ் இனத்தைத் தோற்றுவித்தான். இதையும் பெருப்பித்து பெருப்பித்துக்கொண்டே செல்கையில் அதன் எடையே அதற்குத் தடையாக அமைந்தது. எலும்புகளினால் தாங்கமுடியாத நிலையில் அவை முறிந்து விழுவதை நோக்கிய பெரும் படைப்பாளி குழந்தை சிலேட்டைக் கழுவுவது போல் எல்லாவற்றையும் அழித்துவிட்டு மீண்டும் "மமல்ஸ்" எனும் இனத்தைப் படைத்து அதில் பரிணாம வளர்ச்சியை ஏற்படுத்த, மூளையை வளர்ச்சியடையச் செய்தான். மூளை விருத்தியடைய விருத்தியடைய இறைவனுக்கு அழிக்கும் வேலையை வைக்காது தானே தன்னை அழிப்பதற்கு வழிவகை செய்துகொள்கிறான். "பாவம் இறைவன்" என்று கூறிக் கொண்டு இக்கட்டுரையை அடுத்த இதழில் தொடர்வேன்.

kumarpunithavel@thaiveedu.com

■ ■ ■

**Tution Classes**

**(McCowan & Dennison சந்திப்பிற்கருகில்)**

**தமிழ், ஆங்கிலம் (English), கணிதம் (Math), ஓவியம் (Art), விஞ்ஞானம் (Science), வீட்டுவேலை உதவி (Homework Help)**
**ஆகிய பாடங்கள் இளமழலை முதல் தரம் 12 வரையான மாணவர்களுக்கு பல வருடகாலம் பட்டறிவுள்ள ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றன. பெறுபேறுகளில் முன்னேற்றம் காணமுடியும்.**

**1 to 1 or Group classes**

**Please call**
**905-554-2496 / 416-522-3314**

from the firm foundations of creative photos

l a p h o t o g r a p h i e e s t u n a r t





d i g i m e d i a c r e a t i o n s

**k a r u n a p h o t o g r a p h y**

- Wedding Photography
- Bridal Portrait Sessions
- Custom Reception Slideshows
- DVD Slideshows
- Custom Designed Albums
- Parent Albums
- Digital Proofs
- Digital Retouching
- Framed Prints & Canvases

elegant memorable real

www.digimediaphoto.com

416.467.4952

வாத்தியார் வீட்டிலிருந்து வன்கூவருக்கு... 05

K.S. பாலச்சந்திரன்

# ஆள் மாறாட்டமும் ஓட்டமும்




ஒருவரிடம் "உங்கள் பெயர் என்ன" என்று கேட்டதிற்கு, அவர் "பெயரில் என்ன இருக்கிறது" என்று சொன்னதாக எங்கோ வாசித்திருக்கிறேன். அவருடைய தத்துவவிளக்கம் அவரைப் பொறுத்தவரையில் சரியாகவிருக்கலாம். ஆனால் என்னை யாராவது கேட்டால் "பெயரில் நிறைய இருக்கிறது" என்று நிச்சயம் சொல்லி முடிப்பேன்.

எந்தத்துறையிலும் தங்கள் பெயருக்காக பாடுபட்டு காரியங்கள் பார்ப்பது வழக்கம்தானே. ஆனால் சந்தர்ப்பவசமாக, நான் கலைத்துறையில் சற்று பிரகாசிக்கத் தொடங்கிய காலத்தில், நாங்கள் இரண்டுபேர் ஒரே பெயருக்கு புகழ்தேட ஆலாய்ப்பறந்து பாடுபட்டுக்கொண்டிருந்தோம். பெயர் கே.எஸ். பாலச்சந்திரன்தான், ஆனால் ஆட்கள் இரண்டு பேர். நான் மேடையில் நகைச்சுவை நிகழ்ச்சிகள் செய்து, வானொலி, திரைப்படங்கள் என்று நடித்துக்கொண்டிருக்க, மற்ற கே.எஸ்.பாலச்சந்திரன், மேடை, வானொலி, திரைப்படங்கள் என்பனவற்றில் பாடிக்கொண்டிருந்தார்.

சமவயதினர் என்பதோடு சமகாலத்தில் கலைத்துறையில் ஈடுபட்டமையினால், அவ்வப்போது மேடைகளில் சந்தித்துக்கொள்வோம். "நாடு போற்ற வாழ்க" என்ற இலங்கைத்தமிழ்ப்படத்தில் நான் முக்கியபாத்திரமொன்றில் நடித்த பொழுது அவர் அந்தத்திரைப்படத்திற்காக ஒரு பாடலைப்பாடியிருந்தார். பெயர்பட்டியல் போட்டபொழுது, சிக்கலைத்தவிர்ப்பதற்காக அவரை "சுண்டிக்குளி பாலச்சந்தர்" ஆக்கிவிட்டார்கள். எனது பெயர் தப்பித்துக்கொண்டது.

கொழும்பில் நான் வேலைபார்த்துக் கொண்டிருந்தபொழுது, வழிதெருவில், என்னை சந்திப்பவர்கள் சிலர், "நேற்று இரவு றேடியோவிலை உங்களுடைய மெல்லிசை பாட்டு அந்தமாதிரி இருந்தது" என்று ஆரம்பிக்கவே, நான் இடைமறித்து, 'ஐயோ.. அது நானில்லை' என்று சொல்ல, அவர்கள் என்னை ஒருமாதிரி பார்த்துக்கொண்டே போவார்கள். "அடக்கம் இருக்கிறதுதான்.. ஆனால் இப்படியா" என்ற பார்வைதான்.

காலப்போக்கில் நான் களைத்துப்போய், "நான் அவரில்லை" சொல்வதையே விட்டுவிட்டேன். ஒருமுறை யாழ்மாவட்டத்தில் மல்லாகத்திற்கு அண்மித்த கிராமம் ஒன்றில் "அண்ணைறைற்" நிகழ்ச்சி செய்வதற்காகப் போயிருந்தேன். எதிர்பார்த்தபடியே "அண்ணைறைற்" நிகழ்ச்சி பலத்தவரவேற்புடன் நடந்து முடிந்தது. உடனேயே புறப்பட்டிருக்கவேண்டும். விதி யாரை விட்டது. மொய்த்துக்கொண்ட ரசிகர்களோடு சற்றுப்பேசிக்கொண்டு நின்று விட்டேன். அப்போது ஒருவர் சற்றுத்தள்ளாடலுடன், என் அருகில் வந்தார். உற்சாகபானம் அருந்தியிருப்பார் போலிருக்கிறது. சொற்கள் தடுமாற என்னை பணிவாகக்கேட்டார். பணிவென்றால் அந்தமாதிரி பணிவு. "அண்ணை.. ஒரு பாட்டு பாடிப்போட்டுப் போங்களன்". நான் "ஐயோ.. எனக்கு பாட்டு பாடவராதே" என்று அசடுவழியச்சொன்னேன்.

"அண்ணை பகிடிவிடாதையுங்கோ.. பாடுங்கோ" என்று சற்று கண்டிப்பாகச்சொன்னவர், நான் பிறகும் "பாடவே வராது" என்று பரிதாபமாக உண்மையைச்சொல்ல, நான் ஏதோ 'லெவல்' காட்டுகிறேன் என்பதாக, "அண்ணை.. உந்த புலுடாவை விட்டிட்டு மேடையிலை ஏறிப் பாடுங்கோ" என்று சண்டித்தனத்தின் சாயலாக அவரது குரல் ஒலித்தது. "என்ரை பெயர் என்னெண்டு தெரியுமே" என்று முறாய்ப்பாகக் கேட்டார். நான் "பெயரில் என்ன இருக்கிறது" என்று சொல்லியிருப்பேன். ஆனால் அப்போது அந்த வசனத்தை நான் வாசித்திருக்கவில்லை.

நேரம் போய்க்கொண்டிருக்க, நானும் கிளிப்பிள்ளைமாதிரி சொன்னதையே சொல்லிக்கொண்டிருக்க, அவரது கண்கள் மேலும் சிவப்பாகியது. "கண்டறியாக கெப்பறொ உமக்கு" என்று தொடங்கி என்னை கட்டாக தூக்கிக்கொண்டுபோய் மேடையில் போட்டு, பி.எஸ்.வீரப்பா வசனம் பேசி என்னை நடுங்கியவாறே பாடவைப்பார் போலிருந்தது. அப்போதுதான் எனது "பெயரனின்" நினைவு வந்தது. "நீங்கள் நினைக்கிற ஆள் நானில்லை. அவர் ராஜன் கோஷ்டியிலை பாடுகிறவர்.. நான் 'அண்ணைறைற்' செய்கிற பாலச்சந்திரன்" என்று ஆதியோடந்தமாக விளக்கம் சொல்லி, அருகில் நின்ற சிலரும் தலையில் (அவரின் தலையில்தான்) அடித்து சொல்லித்தான், நான் பாடாமல் 'அருந்தப்பு' தப்பினேன்.

எனக்கு நீண்டநாளாக ஒரு ஆசையிருந்தது. எனது 'பெயரன்' எங்காவது பாடப்போற இடத்திலை என்னைப்போலை வளமாக அகப்பட்டு, "அண்ணைறைற் செய்கிறீரோ இல்லையோ" என்று யாராவது 'குடிமகன்' அவரை கலக்கியடிக்கவேண்டுமென்பதுதான். ஆனால் அப்படி நடந்ததாக, நான் இலங்கையிலிருந்து புறப்படும் வரை யாரும் சொல்லவில்லை என்பதுதான் உண்மை.

நீண்டகாலத்தின்பின்னர், 1989ல் பிரான்ஸ் நாட்டில் பாரிஸ் நகரில், 'முத்துவாலித்தே' என்ற பழம்பெரும் அரங்கிலே நாங்கள் இருவரும் ஒன்றாக நிகழ்ச்சிகள் செய்தோம். அவர் தனது முத்திரைப்பாடலான "நான் உங்கள் தோழன்" பாடலுடன், டி.எம்.எஸ் பாடிய அக்கால பாடல்களையும் பாடிக்கலக்க, நான் "அண்ணைறைற்", "ஓடலிராசய்யா" என்று பல நகைச்சுவை நிகழ்ச்சிகளை வழங்கி பிரான்ஸ் வாழ் நம்மவர்களை மகிழவைத்ததும் ஞாபகத்தில் இருக்கிறது. மேடையில் எங்களை ஒன்றாக அறிமுகம் செய்து வைத்த அறிவிப்பாளர் எஸ்.கே.ராஜன், எனக்கு மல்லாகத்தில் நடந்ததை அப்போது குறிப்பிடத்தவறவில்லை.

நண்பர் ராஜன் நிகழ்ச்சிக்கு முன்னதாகவே, பாரிஸ் நகரின் பலபகுதிகளின் ஊடாக நான் ஓடுவதாக அவ்வப்போது வீடியோ எடுத்துக் கொண்டார். ஏன், எதற்கு என்று கேட்காமல் நானும் பாரீஸ் வீதிகளில் ஓடினேன். யாராவது தெரிந்தவர்கள் பார்த்திருந்தால், "மனுஷன் இங்கையும் வந்து ஏதோ சிக்கலிலை மாட்டுப்பட்டுட்டுது போலையிருக்குது" என்று நினைத்திருப்பார்கள்.

நிகழ்ச்சி எல்லாம் முடிந்து, பாரிஸை விட்டுப் புறப்படும் நேரத்தில்தான் வீடியோ பிரதி ஒன்றைத்தந்து, அனுப்பிவைத்தார்கள். ஊருக்கு வந்து போட்டுப்பார்த்தபோதுதான் என்னை ஓடவைத்த காரணம் புரிந்தது.

வீடியோவின் ஆரம்ப காட்சியாக, நான் ஈபல் கோபுரத்தின் அருகே சாவதானமாக நின்று கொண்டிருப்பது தெரிகிறது. திடீரென்று ஒரு வெட்டுக்காட்சியாக, முத்துவாலித்தே அரங்கில், ராஜன் தோன்றி அறிவிக்கிறார். "அடுத்ததாக உங்கள் அபிமானக்கலைஞர் கே.எஸ். பாலச்சந்திரன்.. இதோ உங்கள் முன்.." என்று அவர் அறிவித்து முடிக்க, ஈபல் கோபுரத்தின் அருகில் நின்ற நான் சுற்றுமுற்றும் பார்த்து விட்டு ஓடத்தொடங்குகிறேன். ஓட்டமென்றால் அதுவல்லவோ ஓட்டம். பாரிஸ் நகரவீதிகளின் நடைபாதையில் ஓடி, பூங்காக்களின் வழியாக ஓடி, தமிழ்மணம் தவழும் எம்மவர் கடைகளுள்ள பகுதியைத்தாண்டி ஓடி, கடைசி, கடைசியாக நிகழ்ச்சி நடக்கும் அரங்கின் முன்னால், மேல் மூச்சு வாங்கிக்கொண்டு நிற்பது தெரிந்தது. மீண்டும் ராஜன், மேடையின் ஒருபக்கத்தை ஆவலாக பார்த்தவாறே அறிவிக்கிறார். இதோ...

தொடர்ந்து பக்கத்திரையை விலக்கிக்கொண்டு மேடைக்கு நான் வேகமாக வருகின்றேன். ரசிகர்களின் கரவொலி அரங்கை நிறைக்கிறது. என் நிகழ்ச்சி ஆரம்பமாகிறது.

தனித்தனியாக பலநாட்கள் ஓடவைத்து எடுத்த காட்சிகளை, நிகழ்ச்சியோடு இணைத்து தன் திறமை காட்டிவிட்டார், பாரிஸ் வாழ் படத் தொகுப்பாளர் ஒருத்தர்.

இனித்தான் இருக்கிறது முக்கியமான திருப்பம். இந்த வீடியோவை எங்களோடு இருந்து பார்த்த என் மாமா சொன்னார். "இவன் எப்பவும் இப்படித்தான். எதெண்டாலும் கடைசி நேரம் வரை இருந்திட்டு பிறகுதான் ஓடுறது"

இன்னுமொரு சொந்தக்காரர் சொன்னார்.. "அட.. இங்கைதான் அப்பிடியெண்டால்.. கடல் கடந்து போயும் உப்பிடியா?"

அந்தநேரம் அந்தப்படத் தொகுப்பாளர் என்முன்னால் நின்றிருந்தால்...



ksbala@thaiveedu.com

www.inayam.net

- கலை விழாக்கள்
- எழுச்சி நிகழ்வுகள்
- ஊர்ச்சங்க ஒன்றுகூடல்கள்
- திருவிழாக்கள்
- கொண்டாட்டங்கள்
- நடன, நாடக, இசை விழாக்கள்
- குடும்ப நிகழ்வுகள்
- மரணச் சடங்கு நிகழ்வுகள்

எதுவானாலும்.

இணையம் .net மூலமாகத் தெரியப்படுத்துங்கள்.

உங்களுக்கு அனுகூலமான இடம், காலம், நேரங்களில் ஏனைய நிகழ்வுகள் திட்டமிடப்பட்டுள்ளனவா என்பதை முன்கூட்டியே அறிந்துகொண்டு உங்கள் நிகழ்வுகளை நிர்ணயித்துக் கொள்ளுங்கள்.

முன்கூட்டியே inayam.net இல் பதிவு செய்துகொள்வதன் மூலம் ஏனைய நிகழ்வுகளோடு போட்டிகள் உருவாகுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் நிகழ்வுகள் திருப்திகரமாக நடந்தேறுவதற்கு பங்குபெறும் மக்களின் அனுகூலம் முக்கியமானது.

இதைக் கருத்திற் கொண்டு உருவாக்கப்பட்ட ஒருங்கிணைப்புத் தளமே inayam.net

முயற்சி செய்யுங்கள்!

முற்றிலும் இலவசம்

inayam

416•400•6406


Cell tel Mobility
CELL TEL MOBILITY
For all your cellphone and accessory needs...
We sell new & used cellphones, Pagers and accessories for:
ROGERS WIRELESS, FIDO, TELUS MOBILITY, BELL MOBILITY
BLUETOOTH HEADSET
$ 9 .99
Starting From:
-Car charger
-Leather case
-Head sets
-Home charger
-Clear case
-Bluetooth headset
-Bluetooth dongle
-Data cables
-Batteries
-Belt clip/Holder
-Antenna booster
-Flashing antenna
-Flashing light
GSM UNLOCK
Call Toll free:- 1.877.312.5123
SHOP ONLINE @ www.celltelmobility.com
CELL TEL MOBILITY WIRELESS REPAIR CENTER
NOKIA, MOTOROLA, SONY ERICSSON, SAMSUNG, LG
HTC,BLACKBERRY,iPHONE.
Display,Antenna Replacement and all other
Repairs (Software & Hardware).
2637 Eglinton Ave. East,
Eglinton Ave/Midland Rd
416.266.6818
5C - 2950 Birchmount Rd
Birchmount / Finch Ave
416.495.7776
5A - 1162 Morningside Ave
Morningside Ave/ Sheppard Ave
416.281.2355

# கலாபன் கதை 06

# என்னைக் கடிப்பாயா?

தேவகாந்தன்

நள்ளிரவிலும் சூரியன் எறித்திருக்கும் நாடு என்று அறியப்பட்டிருந்த சுவீடன்பற்றி பெரிதாக எதையும் அறிந்திருக்கவில்லை கலாபன்.

அது ஒரு வட அய்ரோப்பிய நாடு, குளிர் கூடிய தேசம், மிக்க பரப்பளவில் அதிகுறைந்த ஜனத் தொகையைக் கொண்டிருந்த பூமி என்பதும், அதன் அரசியலானது முடியின் அதிகாரம் கூடியதாகவும், அவ்வப்போது அதிகாரம்பெற்ற நாடாளுமன்றம் சில ஜனநாயக உரிமைகளை மக்களுக்காகப் பெற்றுக் கொடுத்தது என்பதும், இன்றும் வடஅய்ரோப்பா போல் மானுட ஜனநாயக உரிமைகளை நிகராகப் பெற்றில்லாதது என்பதும், இதுவும் டென்மார்க், நோர்வே போன்ற முக்கியமான வடஅய்ரோப்பிய நாடுகளும் சேர்ந்து ஸ்கந்திநேவியா என அழைக்கப்பட்டன என்பதும் மட்டுமானவை அவன் கல்லூரியிலும் நூலகத்திலும் படித்தும் வாசித்தும் அறிந்திருந்தான். ஸ்கந்திநேவியாவின் பத்தாம் நூற்றாண்டளவிலான வைக்கிங் எனப்பட்ட கடல் மறவக் கொள்ளையர்பற்றி அண்மைய சினிமாக்களில் தான் அறிந்தான்.

இவையெதுவும் அவனது மனத்துக்குள் கிடந்து துடித்துக்கொண்டிருந்த ஆசையின் தவிப்பில், பெரிதாகக் கிளர்ந்தெழாத அம்சங்களாகவே இருந்தன. மேலும் தெரிந்துகொள்வதற்கிருந்த சூழ்நிலைமைகளையும் அந்த ஆசையானது அடித்து அடித்து விலகியோட வைத்துக் கொண்டிருந்தது.

கப்பல் துறைமுக மேடையில் கட்டி ஒரு



மணிநேரத்துள் கபாலியுடன் வெளியே புறப்பட்டான் கலாபன்.

அன்று ஒரு வெள்ளிக் கிழமையாகவிருந்தது.

துறைமுக மேடையில் நான்கைந்து வேலை யாட்களோ அலுவலர்களோ நடந்து திரிந்து கொண்டிருந்தனர். நாலைந்து கார்கள் வந்து மெதுவாகத் திரும்பிக்கொண்டிருந்தன. அவன் கண்டிருந்த எந்தத் துறைமுகமும் போலன்றி வெறித்துக்கிடந்தது சுவீடனின் அந்தத் துறை முகம்.

துறைமுகத்திலிருந்து நடந்துசெல்லும் தூரத்திலேயே டவுன் ரவுண் இருந்ததை கப்பலுக்கு வந்த கொம்பனி முகவரிடம் ஏற்கனவே கேட்டுத் தெரிந்துகொண்டிருந்தான் கபாலி.

வீதியோர நடைபாதைகள் கல் பரவியதாக இருந்தன. வீதிகள் குண்டு குழிகளற்று விசாலமாயும் நீட்டமாயும் கிடந்தன. இருமருங்கும் அதிக உயரமற்ற கட்டிடத் தொகுதிகள். சில

சில தனி வீடுகள். நகரம் நெருங்க நெருங்க வெளிச்சத் தெருக்களாக மாறிக்கொண்டிருந்தது. SEX SHOP என்ற வெளிச்ச எழுத்துக்கள் அதிகமாகவும் தெரிந்தன. ஓரிருவர் அவைகளினுள்ளே போவதும் திரும்புவதுமாயிருந்தனர்.

கலாபன் சோர்வாகிப்போனான். அது நகரமாக அல்ல, ஒரு கிராமமாகக்கூட இருக்கவில்லைப் போல இருந்தது. ஸ்ரொக்கோமுக்கு வடக்கே ஏறக்குறைய மூன்று மணிநேர கப்பல் பயணம். அந்த துறைமுகத்தின் பெயர்கூட வாயில் நுழையவில்லை அவனுக்கு. வடக்கே இன்னும் அய்தான மக்கட் செறிவு இருக்கக்கூடும். அது பகலென நினைத்த ஒரு பதினெட்டு மணி நேரத்துள் வேலைசெய்து அல்லது அலைந்து வம்பளந்துவிட்டு, இரவென நினைத்த ஒரு ஆறு மணித்தியாலத்தில் படுக்கச் சென்று விட்டதா? அங்கே இருக்கக்கூடிய ஜனத்தொகை எங்கே போய்த் தொலைந்தது?

அகன்ற வீதிகளும், வெளிச்சங்கள் நிறைந்த பூட்டிய கடைகளும், நான்கைந்து மனித நடமாட்டமுமா ஒரு நகரம்? அந்த இடத்திலா அவன் இச்சையைத் தணிக்கும்வகையான பெண் வந்து வலிய மாட்டப்போகிறாள்? அதுவும் வார இறுதிநாளில், அந்த நேரத்தில் அப்படியான அடக்கத்தில் கிடக்கும் ஒரு நகரிலா?

குளிராகவே இருந்தது. ஆனாலும் அது Falls என ஏனைய அய்ரோப்பிய, வடஅமெரிக்க நாடுகளில் அழைக்கப்படும் இலையுதிர் காலம் தான். அங்கே கீழ்த் திசையில் மாரி, கோடை-

யென்ற இரு பெரும் பருவங்களைப்போல பனிகாலம், கோடை காலம் என்ற இரண்டு மட்டுமே பெருவாதிக்கம் பெற்றவை என்பதை கலாபன் அங்கே வந்தவுடனேயே அறிந்து கொண்டிருந்தான். அப்படியானால் அந்த இலையுதிர் காலம் சுவீடனைப் பொறுத்தவரை குளிர்காலத்தின் ஆரம்பம்.

ஒரு நகரமென்பது உண்மையிலென்ன? அவன் எங்கோ, எப்போதோ வாசித்த யாரினதோ ஒரு மொழிபெயர்ப்புக் கதை அப்போது ஞாபகமாயிற்று.

அய்ரோப்பிய நகரசபையொன்று அங்கே விலைமாதர் அதிகமாகிவிட்டார்களென அவர்களை ஒரு குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் அங்கிருந்து நீங்கிவிட வேண்டுமென்று சட்டமியற்றுகிறது. விலைமாதர்களும் வேறு வழியின்றி அங்கிருந்து நீங்கிச் சென்று தொலைவிலுள்ள ஓரிடத்தில் தங்கள் குடியிருப்புக்களை மிகுந்த சிரமத்தின் பேரில் அமைத்துத் தங்குகிறார்கள். ஒரு சமூகமாக அது மாறுகிறது. அங்கே

இரண்டொரு கடைகள் தோன்றுகின்றன. அவர்களைத் தேடி ஆண்கள் வரத் தொடங்குகிறார்கள். போக்குவரத்துக்கள் அதிகரிக்கின்றன. இன்னும் சில கடைகளும், மதுபானச் சாலைகளும், நடனசாலைகளும் தோன்றுகின்றன. ஒரு சிறிய நகராகிறது அது. காலப்போக்கில் வர்த்தக நிலையங்கள், கல்லூரிகள், அரசாங்க அலுவலகங்கள் என்று அந்தச் சிறிய நகரே ஒரு பெருநகராகிறது. சில தலைமுறைகளின் பின் ஜனநெரிசல் அதிகமாகிய ஒரு நாளில், அந்த நகரத்துச் சபை ஒரு சட்டமியற்றுகிறது, அங்குள்ள விலைமாதர்கள் அந்த நகரத்தை விட்டு ஒரு குறிப்பிட்ட கால அவகாசத்தில் நீங்கிவிடவேண்டுமென.

ஒரு நகரின் மய்யம் எங்கே தங்கியிருக்கிறதென்று இந்தக் கதை கலாபனுக்கு ஒரு மேலோட்டமான அபிப்பிராயத்தைக் கொடுத்

திருந்தது. இரவுக் கேளிக்கைகளின்றி உறங்கும் ஒரு நகரம் அவனளவில் செத்த நகரமாகவே இருந்தது. அது உணர்வுகள் செத்த நகர்!

அவனது மனநிலையைத் தெரிந்துகொண்ட கபாலி, தனக்குள் சிரித்துக்கொண்டே, அவன் அந்தமாதிரி நகரத்தை அறியமாட்டானென்றும், ஒரு பியர் அருந்திவிட்டு வீதியில் நடந்து திரிந்தால் ஆண்களைத் தேடும் எந்த ஒரு பெண்ணாவது அகப்படுவாள் என்றும் அவனைச் சிறிது நம்பிக்கைப்பட வைத்து கூடவரச் செய்தான்.

போகும்போது கபாலியின் கப்பல் அனுபவம் கலாபனுக்கு நம்பிக்கையேற்ற முயற்சித்துக் கொண்டிருந்தது. ‘கணவனைப் பிரிந்திருக்கும் பெண்கள், அல்லது திருமணமே ஆகாத பெண்கள்கூட, அதுபோன்ற நாடுகளில் உடலுறவுக்கு கப்பல்காரரையே விரும்புவர்கள். ஏனெனில் கப்பல்காரர் கடலிலுள்ள காலத்தில் தன் உணர்ச்சியைத் தணிக்க வகையற்றி-

ருப்பவர்கள். அவர்களோடு திருவிழாபோல ஒரு முழு இரவுக்குமே சுகத்தை அனுபவிக்க முடியும். இன்னுமொன்று, கப்பல்காரனின் தொடர்பு கப்பல் அந்நாட்டுத் துறைமுகத்தில் நிற்கிற காலமளவுக்கானது மட்டுமே. அயலவன், அதே ஊர்க்காரனெனில் அவன் விரும்புகிற பொழுதுக்கும் அவனைச் சேரவேண்டிய நிர்ப்பந்தம் அவளுக்கு உண்டாக வாய்ப்பிருக்கிறது. எந்த ஒரு பெண்ணின் இரகசியமான உறவுக்கும் கப்பல்காரன் நல்ல தெரிவாயிருக்கும், இல்லையா?’

ஒரு நான்கைந்து பேர் கொண்ட மதுபானக் கடையில் ஒரு மணிநேரமாக காம பட்சணிகளுக்காகக் காத்திருந்துவிட்டு கபாலியின் யோசனைப்படி வெளியே இறங்கி குறிப்பற்று நடக்கத் தொடங்கினார்கள் இருவரும்.

ஓர் அதிர்ஷ்டம் எதிர்ப்படுவதுபோல எதிரே வந்த கார் ஒன்று அவர்களருகில் மெல்லென ஊர்ந்து கறுத்திருந்த கண்ணாடியூடாக விரிந்த விழிகளைமட்டும் காட்டிவிட்டு அடுத்த கணத்தில் பிய்த்துக்கொண்டு பறந்துபோய் மறைந்து விட்டது.

‘நேரமாகிறது, வா, கப்பலுக்குப் போகலாம்’ என கலாபன் அழைத்தபோது, ‘The night is still young’ என்றுவிட்டு கபாலி தொடர்ந்து நடந்தான். கபாலிக்கு கொஞ்சம் வெறி.

மறுபடி கலாபனும், கபாலியும் கப்பலுக்குத் திரும்பியபோது விடிகாலை இரண்டு மணி. ஏமாற்றம், களைப்பு, தான் மடத்தனமாக கபாலியின் கூற்றின்மேல் கொண்ட நம்பிக்கைகள் காரணமாய் கலாபன் கொதிநீர்போல் இருந்தான். கபினுக்குச் சென்றவன் ஜொனிவோக்கர் போத்தலை எடுத்து வைத்தான். விறுவிறுவென கிளாஸ் எடுத்து ஊற்றி ஒரே மிடறில் குடித்தான். சிகரெட் எடுத்துப் பற்ற வைத்தான். ஜன்னலூடு வெளியே பார்த்தபோது அவனை ஒரு பெரும் ஏமாற்றத்திலும், அவமானத்திலும் வீழ்த்திய அந்த நகரின் துறைமுகம் சத்தமின்றி இருளில் தோய்ந்து கிடந்திருந்தது. துறைமுக மேடையின் முன்னால் மேல்தள சாமான்களாக கப்பலில் ஏற்றப்படவிருந்த பலகைகள், தீராந்திகள் கட்டுக்கட்டாக அந்த இருளுள் அடுக்கில் கிடந்தன.

மன, உடல் வேகங்கள் மெல்லத் தணியலாயின. குடியும், புகைத்தலும் தொடர இனி அடுத்த துறைமுகம் எதுவாயிருக்கும், எத்தனை நாள் பயணமாயிருக்கும் என எண்ணமிட்டபடி அமர்ந்திருந்தான் அவன். அவனது உறக்கத்தை நினைவுகள் விழுங்கியிருந்தன. அப்போது அறைக் கதவு தட்டப்பட்டது. உடனடியாகத் திறக்கவும் பட்டது. யாரென ஒருவகை எரிச்சலோடு சட்டெனத் திரும்பினான் கலாபன்.

கபாலி சிரித்தபடி உள்ளே வந்துகொண்டிருந்தான். பின்னால் வாசலில் நின்றிருந்தார்கள் இரண்டு வெள்ளைப் பெண்கள்.

அவர்கள் உள்ளே வந்தார்கள். மெதுமெதுவாக அறிமுகங்கள் ஆரம்பமாகின. குடியோடு அவர்கள் உரையாடல் ஆரம்பித்தபோதும், கதை அவர்களது நாடுபற்றியதாகவே திரும்பியது. கபாலிதான் கேள்விகளை அவ்வப்போது கேட்டு விளக்கங்கள் பெற்றுக்கொண்டிருந்தது.

தன்னை அலேன் என்று அறிமுகப்படுத்தியிருந்த பெண்தான் அதிகமாகவும், உற்சாகமாகவும் கதைத்துக்கொண்டிருந்தாள். அவள் இருந்த அணுக்கம் அவள் கபாலியை விரும்புவதாகக் காட்டிற்று. மற்றவள் அவ்வப்போது சிரித்தாள். ஓரொரு பொழுதில் ஒன்றிரண்டு வார்த்தை பேசினாள். மற்றப்பொழுதில் மெல்லவாக ஜொனிவோக்கரை உறிஞ்சிக்கொண்டிருந்தாள்.

கலாபன் தன் நண்பியைக் கவனிப்பதைக்

# கலாபன் கதை 06

கண்ட அலேன், தன் நண்பிக்கு ஆங்கிலம் நன்றாகத் தெரியாதென்றும், தான் சிறிதுகாலம் அமெரிக்காவில் தங்கியிருந்ததாலும், இப்போதும் அங்கே அடிக்கடி போய்வருவதாலும் ஆங்கில மொழி மிகுந்த பரிச்சயமாகியிருப்பதாகக் கூறினாள்.

அங்கே எதற்காக அவள் அடிக்கடி போய் வருகிறாள் என கலாபன் கேட்டதற்கு, தன் கணவனிடம் என்றாள் அலேன்.

'கல்யாணமாகி விட்டதா உனக்கு?' என்று திடுக்கிட்டுக் கேட்டான் கலாபன். 'இது உன் கணவனுக்குச் செய்யும் துரோகமல்லவா?'

'இது எப்படித் துரோகமாகும்? ஒருவரால் தீர்க்கப்படக்கூடிய தவனத்தை அவர் இல்லாத போது வேறொருவர்மூலம் தீர்த்துக்கொள்வதில் என்ன பிழை இருக்கிறது?' என வெடுக்கெனக் கேட்டாள் அலேன். அப்போது தன் நண்பி சுவீடன்மொழியில் சொன்னதையும் மொழிபெயர்த்துக் கேட்டாள்: 'நீ திருமணம் செய்துவிட்டாயா?'

'செய்துவிட்டேன்.'

'அப்படியானால் நீ உன் மனைவிக்குத் துரோகம் செய்கிறாயா?'

'துரோகம்தான். ஆனாலும் தவிர்க்கமுடியாதது. நான் உயிரைப் பயணம்வைத்த கப்பல் தொழிலில் இருக்கிறேன். அடுத்த நிலம் எனக்கு நிச்சயமானதில்லை. அதனால் எந்த நிலத்தை நான் அடைகிறேனோ அந்த நிலத்தில் என் மனித தவனங்களைத் தணித்துக்கொள்வது என்னளவில் தர்மமானது.'

'நீ பேசுவது எந்த விதத்திலும் பொருந்திப் போகவில்லை. ஒன்று நீ ஒரு தொழிலை மரண பயத்தோடு நடத்துவது என்பது எந்தத் தொழிலுக்கும் ஒவ்வாத கருத்துநிலை. மரணத்தை எண்ணிக்கொண்டு சென்றால் தாழ்கின்ற கப்பலிலிருந்து தப்புவதற்கும் உனக்கு உறுதி இருக்காது. கப்பல் தொழிலில் மரணம் சகஜம் என்று நீ மரணத்துக்கு உன்னையே பணயம் கொடுத்துவிடக்கூடியவன். எந்தத் தொழிலில் மரணம் சம்பவிக்க முடியாது? விமானத் தொழிலில்...? கார், பஸ், ரயில், பார வண்டித் தொழிலில்...? மரணம் எங்கேயும் வரும். அடுத்தது, கற்பு என்ற விஷயம். அது மேற்கில் மறைந்து அதிக காலம். ஆனாலும் தன் கணவன்தவிர மாற்றானுடன் புணரமுடியாத பெண்கள் இங்கேயும் இருக்கிறார்கள். அது அவரவர் மனநிலை சார்ந்தது. அறம் சார்ந்ததல்ல.'

அந்த வெள்ளைக்காரி தன்னை மடக்கிவிட்டதான உறுத்தல் பிறந்தது கலாபனிடம். ஆனாலும் எதுவும் பேசாமல் கேட்டுக்கொண்டிருக்கவே முடிந்தது.

வெறுங்கிளாஸில் மறுபடி விஸ்கியை ஊற்றிக்கொண்டு அலேன் தொடர்ந்து சொன்னாள்: 'நான் ஒரு அழகிய தேசத்தின் பிரஜை. அய்ரோப்பாவில் பெரும்பாலும் ஜனத்தொகை பெருத்துவிட்டது. ஆசியாவைப்போல இல்லாவிடினும், பெருத்துவிட்டதுதான். ஆனால் சுவீடனில் அளவுக்கும் குறைவாகவேதான் அது. அது இந்த நாட்டின் அழகை, அதன் வளத்தினை மேலும் மேலும் தக்கவைப்பதற்கான சாத்தியத்தைக் கொண்டிருக்கிறதாகத் தெரிகிறது எனக்கு.

'ஆயிரம் நதிகள், லட்சம் தீவுகள், வடக்கே நாட்டின் சுமார் பாதிப் பரப்பில் பரந்து கிடக்கும் மலைகளும், வனங்களும். இந்த வனங்களில் பாதிக்குமேல் கன்னித் தன்மையே அழியாதவை. அவற்றின் வசீகரம் அல்லது பயங்கரம் யாராலும்தான் இன்னும் அறியப்படாமல் இருக்கிறது. இந்த நாட்டை 'கண்ணாடிகளின் நாடு' என்பார்கள். 'Kingdom of Crystal'. நான் இங்கே வாழ்கிறேன் என் உடல் மன சுதந்திரங்களுடன். நீ கீழ்த் திசையான். ஆசியாக்காரன். உனக்கு உன் கீழ்த்திசையின் கலாச்சார அழுத்தம் இருக்கிறது. அதனால்தான் நீ காதலையும் காமத்தையும் ஒன்றாகப் போட்டுக் குழப்பிவிட்டாய்.'

சிறிதுநேரம் வெள்ளைக்காரிகள் இரண்டுபேருக்குமே தமது மொழியில் உரையாடல் நடந்தது. கபாலி இரவு முடியப்போகிறது என ஞாபகமாக்கினான். 'அதனாலென்ன? என்னால் நாளைக்கும், நாளை மறுநாளுக்கும்கூட உன்னோடு நிற்கமுடியும்' என்றாள் அலேன்.

'நாளை மறுநாள் காலை கப்பல் புறப்படுகிறது' என்றான் கலாபன்.



**இந்த வனங்களில் பாதிக்குமேல்**
**கன்னித்தன்மையே அழியாதவை.**
**நான் இங்கே வாழ்கிறேன்**
**என் உடல் மன சுதந்திரங்களுடன்.**
**நீ கீழ்த்திசையான்.**
**ஆசியாக்காரன்.**
**உனக்கு உன் கீழ்த்திசையின்**
**கலாச்சார அழுத்தம் இருக்கிறது.**
**அதனால்தான்**
**நீ காதலையும் காமத்தையும்**
**ஒன்றாகப் போட்டுக் குழப்பிவிட்டாய்.**



கபாலி தன் பெண்ணை அழைத்துக்கொண்டு தன் கபின் செல்ல, மற்றப் பெண்ணுடன் விடப்பட்டான் கலாபன்.

இன்னும் ஒரு கையில் சிகரெட் புகைந்துகொண்டிருக்க ஒரு கையால் மேசையிலிருந்த விஸ்கிக் கிளாஸைப் பற்றியபடி அமர்ந்திருந்தாள் அவள்.

கலாபனுக்கு இன்னும்தான் தன் தோல்வியின் வலி நீங்காதிருந்தது. அதனாலேயே அவன் குடித்ததும் அதிகமாயிருந்தது. போதை மெல்ல மெல்ல அவனை ஆட்கொண்டுகொண்டிருந்தது. மேலும் மௌனமாயிருக்க முடியாமல், ஏதாவது சாப்பிட விரும்புகிறாளா என்று கேட்டான். அவள் வேண்டாமென, படுப்பதற்குத் தயாராக கட்டிலில் எழுந்து வந்து அமர்ந்தான்.

வெள்ளைக்காரி இன்னும் அந்தப்படியே இருந்தாள். இன்னும் குடிக்கப்போகிறாளோ என நினைத்தான் கலாபன். அவனுக்கு தலை மெல்ல தொங்க ஆரம்பித்திருந்தது. சுதாரித்து அமர்ந்திருந்தான்.

அவள் என்ன செய்யப்போகிறாள்? படுக்க வருவாளா? விடியும்வரை அந்தப்படியே அமர்ந்திருப்பாளா? கலாபன் யோசித்து முடிப்பதற்குள் அவள், 'என்னை நீ கடிப்பாயா? (You bite me?)' என்று நிமிர்ந்து அவனை கண்களுக்குள் ஊடுருவியபடி கேட்டாள்.

கலாபன் திடுக்கிட்டான். 'என்னை என்ன நரமாமிச பட்சணியென்று நினைத்தாளா? ஏன், ஒரு ஆசியாக்காரன் இவளுக்கு நரமாமிச பட்சணியாகவா தெரிவான்? என் நிறம் இவளை இந்த மாதிரியாகவா எண்ணவைக்கிறது?' என்று ஒரு சினமெழுந்து சீறப்பார்த்தது. இருந்தும் காரியம் ஆகட்டும் என்று வலிந்து ஒரு சிரிப்பை வரவழைத்தபடி, 'இல்லையில்லை' யென்று தலையசைத்தான்.

'கடிக்கவே மாட்டாயா?' என்றாள் அவள் மீண்டும்.

'நிச்சயமாகக் கடிக்கமாட்டேன்.'

அவள் கிளாஸிலிருந்த விஸ்கியை மடக்கென்று குடித்து முடித்தாள். சிகரெட்டை ஒரு இழுவை இழுத்து சாம்பல் கிண்ணத்தில் நசுக்கினாள். 'ஓகே. உன்னுடைய உபசாரத்துக்கு நன்றி. நான் வருகிறேன்' என்றுவிட்டு எழுந்து கதவைத் திறந்து விறுவிறுவென வெளியேறினாள்.

சிறிதுநேரத்தில் கதவு சத்தமின்றிச் சாத்தியது.

அந்த அதிர்வு தீர கலாபனுக்கு வெகுநேரமாயிற்று.

நிலைகுத்தியிருந்தவன் நான்கு மணியாக வேலைக்கு இறங்கினான். வேலை பளுவில்லை. ஒரேயொரு ஜெனரேட்டர் மட்டும் ஓடிக்கொண்டிருந்தது. கதிரையில் அமர்ந்து தூங்கினான். பின் எழுந்து அதன் அமுக்க, வெப்ப நிலைகளைக் கவனித்துவிட்டு வந்து மறுபடி தூங்கினான். ஒரு தோல்வி அடைந்ததான, ஓர் ஏமாற்றம் அடைந்ததான உணர்வு கொந்தளித்துக்கொண்டிருந்தும் அவனால் போதை காரணமாக யோசனையின்றி, உறங்கத்தான் முடிந்தது.

வேலை முடிந்து அறையினுள் படுக்கையில் கிடந்திருந்தபோதுதான் ஏன் அந்த வெள்ளைக்காரி அவ்வாறு நடந்துகொண்டாள் என அவனால் யோசிக்க இயன்றது. ஆனாலும் எந்தவகையில் யோசித்தும் ஒரு பதில் அவனுக்குக் கிடைக்கவில்லை.

காலையில் கபாலியும், அலேனும் வந்து கதவைத் தட்டியபோதுதான் கலாபனுக்கு தூக்கம் கலைந்தது. மேசை மணிக்கூட்டில் நேரத்தைப் பார்த்தான். பன்னிரண்டு.

கபாலி உள்ளே வந்து, 'எங்கே அந்தப் பெண்?' என்று கேட்டான்.

'போய்விட்டாள்' என்றான் கலாபன்.

'எப்போது?'

'நீங்கள் சென்ற பின்னாடியே.'

கபாலி திரும்பி அலேனிடம் விஷயத்தைச் சொன்னான்.

அலேன் உள்ளே வந்தாள். என்ன நடந்ததென கலாபனிடம் விசாரித்தாள். எதுவும் வித்தியாசமாக இல்லையென்றுவிட்டு நடந்ததைச் சொன்னான்.


அலேனுக்கும் காரணம் புரியாமலே இருந்தது. பின் சிறிதுநேரத்தில் வெடித்துச் சிரிக்க ஆரம்பித்தாள். 'என்ன, என்ன, ஏன் சிரிக்கிறாய்? சொல்லிவிட்டுச் சிரி'யென இருவரும் வற்புறுத்த சிரிப்புக்கிடையிலேயே பதிலைச் சொன்னாள் அலேன்: 'உன் கலாச்சாரப் பின்னணிபற்றி அவள் சந்தேகித்ததுதான் இதற்கெல்லாம் காரணம். ஆனால் அதைக் கேட்க அவள் பாவித்த மொழிதான் பிரச்னையைக் கிளப்பியிருக்கிறது. bite என்ற சொல்லுக்குப் பதிலாக kiss என்ற வார்த்தையை அல்லது Oral sex என்ற பதத்தை அவள் பாவித்திருந்தால் இந்தக் குழப்பமே வந்திருக்காது.'

அலேனும், அலேனை விட்டுவருவதாக கபாலியும் சொல்லிச் சென்றனர். கலாபனால் சிரிக்க முடியவில்லை. ஆனாலும் மேலே அவனுக்கு எரிச்சலோ கோபமோ வரவில்லை. 'வாத்ஸாயனன் நூற்றாண்டுகளுக்கு முன்னரே காமக் கலையின் நுட்பங்கள் சார்ந்த சாத்திரத்தை எழுதிவிட்டான். அது ஒரு திசையின் மக்கள் கூட்டத்தினது இன்ப நுகர்ச்சியின் வெளிப்பாடாகவே இருக்க முடியும். அந்தத் திசையையா காமத்தில் அந்த வெள்ளைக்காரி சந்தேகித்தாள்?'

கலாபன் யோசித்துக்கொண்டே இருந்தான். வெகுநேரத்தின் பின் எழுந்துசென்று மெஸ்ஸிலே சாப்பிட்டுவிட்டு வந்தான். வேலைக்குச் செல்ல இன்னும் நேரமிருந்தது. நண்பனுக்குக் கடிதமெழுதினால் கப்பல் கொம்பனி முகவர் வரும்போது கட்டில் சேர்க்க கொடுத்தனுப்பலாம். கலாபன் கடிதமெழுதத் தொடங்கினான்.

Kiss / Oral sex =Bite

எழுதுகிறபோதுதான் அவனுக்கும் சிரிப்பு வந்தது.



devakanthan@thaiveedu.com


# SP Electronics

**TV, VCR, DVD, Players-Telephone-Computers**

**உங்களுக்குத்தேவையான அனைத்துத் தமிழ் வானொலிகளுக்கும், திருத்த வேலைகளுக்கும்**

**416 264 6400**

**2641 Eglinton Avenue East**
**( Brimley & Eglinton)**

# அந்தக் கிணற்றடிக் கமுகம்

பொ.கனகசபாபதி

எனது கிராமம் சண்டிலிப்பாயில் உள்ள ஆலங்குளாய். நெல்வயல்களுக்குப் பிரபலமாகப் பேசப்பட்ட ஊர். அக்காலத்தில் பெரும்பாலான ஊர்வாசிகளுக்கு சணல் (Jute) கூட பெருவாரியான வருவாய் தந்த ஊர். சணல் நார் பலமானது. கடல் நீரினது உப்பினைத் தாக்குப் பிடிக்கும் திறனுடையது. மீன்பிடி வலை நெய்வதற்கு மிக உகந்தது. வைகாசி ஆனிமாதங்களிலே எமது வீடு அனலைதீவு, மண்டைதீவு, எழுவை தீவு போன்ற தீவுப் பகுதி மீனவர்களால் நிரம்பிக் காணப்படும். எனக்கும் அது மிக்ககுசியான காலம். அவர்கள் நல்லவர்கள் ஒருபோதுமே வெறும் கையோடு வருவதில்லை. நல்ல பெரிய மீனுடன் வருவார்கள். அது மாத்திரமல்லாமல் எனக்குக் எட்டு மூல மற்றும் பருந்து கடுதாசிக் கொடி ஏற்றுதற்கான சணல் நூல் பந்து பந்தாகக் கொண்டு வந்தும் தருவார்கள். இதன் மூலம் நான் எனது சகபாடிகளின் பெரும் மதிப்புக்கும் பொறாமைக்கும் காரணாரயினேன். இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம். எனது தந்தையார் ஒரு பிரபலமான விவசாயி. என்பதே. அவர்தான் இந்த மீனவர்களுக்கு பேரம் பேசி வயலில் உள்ள சணலினை விலைக்கு வாங்கிக் கொடுப்பார். இது எல்லாம் அந்த நைலோன் வலைகள் அயல் நாட்டிலிருந்து ஆர்ப்பாட்டத்துடன் வந்து குதிப்பதற்கு முந்தியகாலத்துக் கதை.

எனது நல்ல காலம். அந்தக் காலம் வருவதற்கு முன்னர் நான் பெரியவனாகிவிட்டேன். பட்டம் பறக்கவிட்டகாலமும் பறந்து விட்டது. சணல் நூலும் எனக்குத் தேவையில்லாது போய்விட்டது. ஆகவே அவர்களின் வருகை குறைந்ததையிட்டு நான் பெரிதும் கவலை கொள்ளவில்லை. சணலை வெறும் மாட்டுத் தீவனத்திற்காகப் பயிரிட்ட காலம் வந்து விட்டது.

எமது வாசஸ்தலம் ஓலையால் வேயப் பட்டது. ஆனால் விசாலமானது. ஒரு பெரிய அறையுடன் முன் மற்றும் பக்கத்து விறாந்தையுடனான வீடு, நாலபுறமும் அரைத் திண்ணை, தென்னோலைத் தட்டிகளால் மறைக்கப் பட்ட தலைவாசல், மற்றும் ஒரு அறையும் முன் விறாந்தையும் விறகு மற்றும் தட்டு முட்டுச் சாமான்கள் வைக்கக் கூடிய பெரிய தாழ்வாரமுமாக அடுப்படி. அடுப்படியின் ஈசானு மூலையில் கிணறு. கிணறு அத்தனை ஆளமானதாக இல்லை. ஒரு 20 அடிவரையில் தான் ஆளம் ஆனால் கோடை காலத்திலும் 6 அடிக்குக் குறையாமல் தண்ணீர் இருக்கும். தென்னை மரத்தினால் ஆன துலா அதில் கட்டடித் தொங்கவிடப்பட்ட துலாக்கயிற்றின் நுனியில் வாளி. பொதுவாகவே கிணற்றில் தண்ணீர் அள்ளினால் அது அடுப்படியில் உள்ளவர்களுக்குக் கேட்குமாம். இதில் உள்ள அனுகூலத்தினை நான் அனுபவபூர்வமாக உணர்ந்துள்ளேன்.

நீண்டகாலமாக அம்மா தான் நீர் இறைத்து என்னைக் குளிக்க வைப்பது உண்டு. நான் கொஞ்சம் வளர்ந்து விட்டேன். ஆகவே நானே அள்ளிக் குளிக்கலாம் தானே என அம்மாவிடம் மனுச் செய்தேன். முதலில் அது நிராகரிக்கப் பட்டாலும் சிறிது கால முயற்சி யின் பின்னர் தனது கண்காணிப்பில் எனக்கு நீர் அள்ளுதற்குப் பயிற்சிக்குப் பின்னர் இறுதியில் நம்பிக்கை வந்தமையால் நான் சுதந்திரமாக இயங்கலாம் என்ற அங்கீகாரம் கிடைத்தது. செயற்பட்டேன். நிலைப் படிக்கல்லில் நின்ற படியே தான் துலாக் கொடியினை இழுத்து நீரைக் கோலி எடுப்பார்கள். ஆனால் இளம் வயது. துள்ளித் துள்ளித்தான் கொடியினை இழுத்தேன். ஒரு நாள் துள்ளிய போது எனது கால்கள் நிலைப்படியில் மீண்டும் தங்காமல் கிணற்றினை எட்டிப் பார்த்தன. எட்டி ஏன் பார்க்கிறாய் உள்ளே வந்துதான் பாரேன் எனக் கிணறு அழைத்தமையால் நான் உள்ளே கிணற்றுள். படாரென கொண்டைத்துலா கிணற்றுக் கட்டில் மேதிய சத்தம் அடுப்படியில் சமையல் வேலையில் மும்முரமாக இருந்த அம்மாவின் காதில் ஒலித்தது. இங்கே என்றால் அந்த விசிறி என்ற அறியாயாப்பட்ட சாதனத்தினைக் குசினியில் போட்டால் எத்தனை சத்தம் போட்டாலும் அது பிள்ளைகளுக்கு எட்டுவதில்லை(?)

ஐயோ பிள்ளை! என அலறி அடித்துக் கொண்டு அம்மா கிணற்று மிதிகல்லடிக்கு வரவும் நான் கொடிக்கயிற்றில் இறுக்கிப் பிடித்தபடி ஒருக்கால் நீரில் மூழ்கி, கொஞ்சம் நீரினையும் ருசி பார்த்தபின் நீரின் பரப்பினை அடைவதற்கும் சரியாக இருந்தது. அம்மா துரிதமாக இயங்கினர். உடனடியாக துலாக் கொடியில் பிடித்து என்னைத் தூக்கிவிட்டமையால் நான் இரண்டாவது முறை நீரில் மூழ்க வேண்டிய அவசியமோ அவகாசமோ ஏற்பட வில்லை. நான் எதனையும் கெட்டியாகப் பிடிப்பேன் என்பதும் உறுதியானது என்பதிலும் பார்க்க கிணறு குசினிக்கு அண்மையில் இருப்பதன் பலாபலனை உணரவும் முடிந்தது. அதன் பின்னர் நான் சொஞ்சம் கவனம்.



தோங்கலுக்கு விடை கொடுத்தேன். ஆனால் நானே வீட்டுத் தேவைக்குத் தண்ணீர் மெண்டுதரும் பணி எனக்கு அதிகரித்தது. எமது கிராமத்தின் எல்லையில் வாழ்கின்ற அடிமட்டத் தொழிலாளர் வர்க்கத்தினரும் நீருக்காக எமது வீட்டிற்குக் குடத்துடன் வருவார் கள். அவர்கள் குடங்களை நிரம்பும் மேலதிக பணியும் என் தலைமேல் விழுந்தது.

சரி! இப்போ விசயத்துக்கு வருவோம். கிணற்றடியில் நின்று குளிப்பதற்காக மிதிகல்லடியைச் சூழ ஒரு பானா இருக்கும், அதன் ஒரு புறத்திலே உள்ள துளை மூலமே நாம் உடலில் ஊற்றுகின்ற நீர் வெளியேறும். அந்த நீர் ஒரு வாய்க்கால் வழியே சென்று தாவரங்களுக்குப் போகும். அந்த வாய்க்காலின் முதற்பாத்தி கிணற்றடியில் காணப்படும் கமுகு மரத்தினதாகவே பெரும்பாலும் எல்லா வீடு களிலும் இருக்கும். எனது வீட்டில் அப்படித் தான்.

பொதுவாகவே குளிக்கும் பொழுது ஊற்றும் நீர்முன்னுரிமை எல்லா வீடுகளிலும் கமுகு மரத்திற்கே. எமது வீட்டிலும் ஒரு கமுகு மரம் கினற்றடியில் உண்டு. கமுகு, தென்னை, பனை, புல்லு, நெல்லு எல்லாமே ஒரு வித்திலைத் தாவரங்கள் (Monocotyledonous Plants). அதில் கமுகு, தென்னை, பனை மற்றும் ஈஞ்சு ஆகியன ஒற்றைத் தடி மரம் (Palms) எனப்படுகின்றன. எமது தாயகத்தைப் பொறுத்த மட்டிலே இந்த நான்கு மரங்களும் தான் ஒற்றைத் தடி மரங்கள். அதாவது அவை கிளைகள் அற்றவை என்ற கருத்திலே உள்ளது. ஆனால் நைஜீரியாவிலே கிளைகள் உள்ள பனை மரங்களைக் கண்டுள்ளேன்.

கவிஞர்கள் வாயிலே பனை, தென்னை, கமுகு ஆகிய மூன்று ஒற்றைத் தடி மரங்களும் நிறையவே அடிபட்டுள்ளன. ஆனால் இந்த மூன்றில் கொஞ்சம் இளக்காரமாக யாவரும் பார்ப்பது கமுகு மரத்தினையே தான்.

> கடையாயர் நட்பிற் கமுகனையர் ஏனை
> இடையாயர் தெங்கி னனையர் -
> தலையாயார்
> எண்ணரும் பெண்ணைபோன் றிட்டஞான்
> றிட்டதே
> தொன்மை யுடையார் தொடர்பு.
> (நாலடியார் - 216)

(கீழோர் கமுகு மரத்தினை ஒத்தவர்கள். இடைத்தரமானவர்கள் தென்னை மரத்தினை ஒத்தவர்கள். தொன்மையுடையார் தொடர்பு மதிப்பு மிக்க பனைமரத்தின் இயல்பினை ஒத்துள்ளது.)

பனையைத் தான் கற்பகதரு என உயர்த்தி வைப்பார்கள் கமுகுவுக்கும் தென்னை மரத்திற்கும் ஒரு விதத்திலே ஒற்றுமை. இரண்டுமே ஓரில்ல மரங்கள் (Monoecious) எனப் படுகின்றன. அதாவது ஆண்பூக்களும் பெண் பூக்களும் ஒரே தவரத்திலே காணப்படுகின்றன. பனைமரத்திரத்தினை ஈரில்ல மரங்கள் (Dioecious) என்போம் அங்கு ஆண்பூக்களையுடைய ஆண்பனைகள் வேறாகவும் பெண் பூக்களைக் கொண்ட பெண்பனைகள் வேறாகவும் காணப்படுகின்றன. இன்னும் ஒன்று கூறலாம். கமுகு தென்னை ஆகிய இரண்டினையும் நாற்றுப் போட்டு முளைக்க வைத்தே பின்னர் தேவையான இடங்களில் நடுவார்கள். ஆச்சரியம் என்னவென்றால் உலகிலே வேறு எந்தத் தாவரத்துக்கும் இல்லாத சிறப்பு தென்னம் நாற்றுக்கும் கமுகு நாற்றுக்கும் உள்ளது. அவற்றினைப் பிள்ளை என்றே அழைக்கிறார்கள் அன்பொழுக. கமுகம் பிள்ளை என்பார்கள், தென்னம் பிள்ளை என்பார்கள்.

சரி போகட்டும் விடுங்கள். எனது கிணற்றடிக் கமுகம் பிள்ளை நான் சிறுவயதில் இருக்கும் பொழுதே நடப்பட்டு விட்டதாம். ஆகவே எனக்கு விபரம் தெரிகையில் அது ஏறக்குறைய 8 அடி வரை வளர்ந்து விட்டது. இன்னும் காய்க்கத் தொடங்கவில்லை. உண்மையிலேயே இது தான் அதன் குமரிப் பருவம் எனலாம். கொள்ளை அழகு கிறங்கடிப்பது அதன் கோலம். மடலுடன் கூடிய இலை பச்சைப் பசேல் என. இந்தப் பச்சை வேறெந்தத் தாவரத்திலும் காண முடியாத கரும் பச்சை. இன்னும் செல்வதானால் மயில் பச்சை எனலாம். அந்த அழகில் மயங்கிய நான் பின்னர் காங்கேசந்துறையில் எனது இல்லத்தில் கிணற்றடியிலிருந்து மலகூடம் வரை எனி 20 யார் நீளப் பாதையின் இரு மருங்கிலும் கமுகு மரத்தினை நெருக்கமாக நட்டு அழகு பார்த்தேன்.

எமது கிணற்றடிக் கமுகு வளர்ந்தது. உயர்ந்தது. நேரே விழித்துப் பார்த்த நிலை மாறி உயரே சாய்வாக உற்றுப் பார்க்க வேண்டி வந்தது. முன்னைய கவர்ச்சி சிறிது குன்றினாலும் இன்னொருவித அழகு பரிணமித்தது. அது காய்க்கத் தொடங்கியமையால் அங்கே வேறு அழகு. சூலுற்ற பெண்போன்ற அழகு. பொன்னால் ஆன குமிழிகள் போன்று பழப் பாக்குகள் அடர்தியாகக் வைரக்கல் பதித்த அட்டிகை கழுத்தினைச் சூழந்து இருப்பது போல கீழே தொங்க, மேலே பச்சைப் பசேலெனப் பிஞ்சுப் பாக்குகள் மரகதப் பேழைகள் போலத் தொங்கி அழகு காட்ட சற்று மேலே அடியில் பெண்பூக்களையும் அதற்கு மேலே சாரை சரையாக மலர்ந்த ஆண்பூக்களையும் கொண்ட மஞ்சரிகள் முத்துப் பற்கள் போல் நகை காட்ட தரையிலே அணிற் பிள்ளைகள் சற்று கூரியபற்களால் வாரியதும் கீழே வீழந்திருக்கும் பழப்பாக்குகளைக் காண்பது கண் கொள்ளாக் காட்சி. மேலே பழுத்த இலையின் மடல் மரத்தில் இருந்து பிரிந்த நிலையில் இன்று விழுவதா நாளை விழுவதா எனத் தீர்மானம் எடுக்க முடியாது திண்டாடும் காட்சி இன்னொரு மேலதிக கவர்ச்சி, பெண்ணின் மாராப்புத்துணி தோளில் இருப்பதா அல்லது நழுவி விழுவதா எனத் தெரியாது தத்தளிக்கும் காட்சி. புடைத்த பொத்திகள் மரகதப்பச்சை மடல்களை வெளியே தள்ளி நிற்பது புடைத்த நெஞ்சகங்களை கண்முன்னே நிறத்துவது அல்லவோ கொள்ளை அழகு. இந்த மடல்கள்தான் சங்ககாலப்புலவர் சொன்ன மடலேறுதலுக்கு உதவியவை என இது நாள் வரை எண்ணியிருந்தேன் ஆனால் பேராசிரியர் சுப்பிரமணிய ஐயர் அந்த மடல் கருக்குடைய பனை மடல் என்கிறார். ஆனால் நாங்கள் சிறுவர்களாக இருக்கையில் இந்த மடலேறுதல் விளையாடியுள்ளோம். ஒருவரை ஒருவர் மடலில் வைத்து ஓலையில் பிடித்து இழுத்துக் கொண்டு ஓடித் திரிவோம்.

ஆனால் நம்மைப் பெறுத்தவரை உணவு உட்கொள்வதற்கான தட்டுக்களாக மடல் பாவித்தமை மறக்க முடியாத நினைவுகள். சில ஏழைகள் மழை காலங்களிலே மடலை மடித்து மூலைகளைத் தைத்து தொப்பியாகவும் பாவித்ததைக் பலர் கண்டுமிருப்பீர்கள்

எமது வீட்டைப் பொறுத்த மட்டிலே இந்தக் கமுகு மரம் அம்மாவின் வெற்றிலை பாக்குத் தேவையை ஈடு செய்வதற்கு மாத்திரமல்லாமல் அருகு வீட்டுக்காரரின் தேவையை ஈடுசெய்யப் போதுமான நாறல் பாக்கு, கொட்டைப் பாக்கு மற்றும் பிஞ்சுப் பாக்குகளையும் தந்து உதவியது

இனிவருவது தான் முக்கியம் எனது அப்பரது கமுகுத் தேவை தான் பிரதானமானது. அப்பு

தொடர்தல் 83ம் பக்கம்

இசை, நடனம் பயில விரும்புபவர்களுக்கு அரிய வாய்ப்பு!!!

**VARNAM ACADEMY OF FINE ARTS & TECHNOLOGY**

**வர்ணம் நுண்கலைப் பயிலகத்தின் புதிய இசை, நடன வகுப்புகள்**

தமிழர் பாரம்பரிய முறைகளிலும், மேற்கத்தேய இசை முறைகளிலும், பல்கலைவித்தகர், இசைக்கலைமணி வர்ண-ராமேஸ்வரன் அவர்களுடன் இணைந்து, பல முன்னணி ஆசிரியர்கள் இசை, மற்றும் வாத்திய கருவிகளையும் கற்றுத் தருகிறார்கள்.

* Vocal Carnatic
* Pann isai
* Violin
* Veena
* Mirudhangam
* Tabla
* Piano
* Keyboad
* Guitar
* Drums
* Music Theory
* Dance

வாய்ப்பாட்டு, சங்கீதம் பயிலும் மாணவர்களுக்கு விசேட குரல் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன, இத்துடன் பிரதானங்களையில் எமது மாணவர்களுக்கான பல இலவச சிறப்பு பயிற்சி வகுப்புகளும் நடைபெறுகின்றன

திரை இசைப்பாடல்கள் பாடவிரும்புபவர்களுக்கும் வாத்தியங்களில் இசைக்க விரும்புபவர்களுக்கும் தனித்தனி வகுப்புகள் ஒழுங்கு செய்து தரப்படும்

பின்வரும் இடங்களில் வகுப்புகள் நடைபெறுகின்றன

* Midland & Ellesmere
* McCowan & Denison
* Nellson & Finch
* Dundas & Hwy 10
* Dixie & Meyer side
* Dixe & Bovaird Drive

( Contact -: VarnaRameswaran ) 647-893-4010 / 416-265-8884

www.varnam.ca / www.varnamonline.com

மேலுள்ள எமது இணையத்தளத்தில் மேலதிக விபரங்களை பார்வையிடலாம்

# அந்தக் கிணற்றடி கமுகு...

ஒரு மிகத் தீவிரமான விவசாயி. காலை களனிக்குச் சென்றால் அனேகமாக மாலை-தான் வீடு திரும்புவார். மேல் முழுதும் வயல் மண், வியர்வையுடன் இரண்டறக் கலந்தி-ருக்கும். நேரே கிற்றடிக்குத் தான் போவார் அம்மா மாற்றுடையுடன் தயாராய் நிற்பார். கடகட என வாளிவாளியாக கிணற்று நீர் உடலெல்லாம் நனைக்கும். பொதுவாகச் சவர்க்காரம் பாவிக்கும் பழக்கம் இல்லை. ஒருசில வாளிகள் தண்ணீர் ஊற்றியவுடன் கமுகு கை கொடுக்கும் கமுகின் மேல் முதுகினைச் சாய்த்து பக்க வாட்டிலும், மேலும் கீழுமாக உரோஞ்சுவார். அதன் மெழுகு போன்ற மழுமழுப்பான பரப்பு உடலின் முதுகுப்புறத்து அழுக்கு அத்தனையையும் அகற்றிவிட, முற்புறத்தினைக் கைகளால் உரேஞ்சி எடுப்பார். பின்னர் மேலும் ஒரு சில வாளிகள் உடலைக் கழுவ அப்பு பளிச்சென புத்துணவர்வுடன் வெளியேறுவார்.

> **“ ஒருசில வாளிகள் தண்ணீர் ஊற்றியவுடன் கமுகு கை கொடுக்கும் கமுகின் மேல் முதுகினைச் சாய்த்து பக்கவாட்டிலும், மேலும்கீழுமாக உரோஞ்சுவார். ”**

இந்தச்சகவாசம் தொடர்ந்தது. நேய்வாய்ப் பட்டிருந்த அப்பு ஒரு நாள் எம் எல்லோருக்கும் துயரத்தையும், ஏக்கத்தையும் கொடுத்து அப்பு காலமாகிவிட்டார். உறவினர்கள் இறுதிக் கிரி-கைகள் செய்வதில் மும்முரமாக இருந்தனர். அவர்களின் அழைப்பின்பேரில் வந்த இருவர் வீட்டுக் கோடரியை எடுத்தனர். என்ன நடக்கப் போகிறது என்பதை நான் உணருமுன்னரே எமது வீட்டின் கிணற்றடிக் கமுகு தரையில் கிடந்தது. அப்புவைக் கிடத்தி மயானத்துக்கு எடுத்துச் செல்வதற்கான பாடை அந்தக் கமுகு மரத்திலிருந்தே செய்வார்களாம் கமுகுவின் இலைகளையும் பூம் பொத்திகளையும் அதனை அழகு செய்வதற்கும் உபயோகித்தார்கள்.

அப்புவுடன் சேர்த்து எமது கிணற்றடிக் கமுகு-வின் கதையும் முடிந்தது.

அம்மாவின் பாக்குத் தேவையை ஈடுசெய்ய இன்னொரு கமுகு கைகொடுத்தது. ஆனால் முதுகு உரோஞ்ச? இப்போ அவர்தான் இல்லையே!



kanagasabapathy.p@thaiveedu.com

**TAMILS' FOCUS**

Tamils' Business Cards Directory

**இதுக்கு மேலேயும் இன்னுமொண்டா?**

*கொஞ்சம் பொறுங்கோ*

**இது......**

- தன்னறிமுக அட்டையின் கோர்வை
- சுயகுறிப்பேடு
- கையில் எடுத்துச் செல்லக்கூடியது
- குறித்த நேரத்தில் உங்களை வந்தடைந்து விடும்
- தரமானதும் பாவனைக்குரியதும்
- மற்றவையுடன் ஒப்பிடுகையில் முற்றிலும் மாறுபட்டது



**Tel : 416.548.7235**

Email : tamilsfocus@gmail.com

# நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் கனடா

## எழுச்சிக் கலை நிகழ்ச்சி 2009

## உயிர்காப்போம் நிகழ்வு

வன்னிப்பேரவலத்தில் பாதிக்கப்பட்டு
தாய்வீடு நெடுந்தீவிற்கு வந்திருக்கும் உறவுகளின் உயிர்காப்போம்





இடம் **EVERST BANQUET AND CONVENTION CENTER**
1199, Kennedy Road, Scarborough, ON

காலம் **27 December 2009 (Sunday)**

நேரம் **4:00 pm**


தொடர்புகளுக்கு **416.835.1700 | 416.297.7420 | 905.201.7592**

"நம் மக்கள் வாழ நல்வழி செய்வோம்"

நெடுந்தீவு மக்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"எம்மக்களின் துயரை நாமே துடைப்போம்"

# *Canada Sri Ayyapan Hindu Temple*



2009

*To Honour the Faithful*

**Consult Ranjan**

Project Management & Construction Services

**At Consult Ranjan,**
**IMPOSSIBLE is just a word,**
**with a welcome challenge!**

Tel.: 416.627.5664 E-mail: ranjan@consultranjan.com
www.consultranjan.com

**KNOWLEDGE THAT GETS RESULTS**


கனடா காரை கலாச்சார மன்றம்
பெருமையுடன் வழங்கும்
காரை விழுதுகள் 2009
KARAI VIZHUTHUGAL
(உறவுக்கு கரம் கொடுக்கும் கலையரங்கம்)
அன்பளிப்பு
பெரியவர் $ 10.00
சிறுவர் $ 5.00
காரை மணிவண்ணன் வழங்கும்
தர்மராஜா MBBS
(நகைச்சுவை நாடகம்)
DEC
12
Saturday
6.00 p.m
இளங் கலைஞர்கள் வழங்கும்
நாட்டிய நடனங்கள்
காரை புண்ணியமூர்த்தி வழங்கும்
தமிழிசைப் பாடல்கள்
பிரபல கலைஞர்கள் வழங்கும்
TALK SHOW
இன்னும் பல
இசை, நடன நிகழ்ச்சிகள்
Everest Banquet Hall
1199 Kennedy Road
(Kennedy & Lawrence)
அனைவரும் வருக !
தொடர்புகளுக்கு: www.karainagar.com

# தமிழ் எழுத்து வரிவடிவத் தோற்றம்



முருகேசு
பாக்கியநாதன்


அமுதே தமிழே அழகிய மொழியே
எனதுயிரே

தமிழின் தற்போதைய வரிவடிவம் கி.மு 500ஆம் ஆண்டளவினதாகும். கி.மு 200ஆம் ஆண்டில் தமிழ் இலக்கண நூலாகிய தொல்பாப்பியம் எழுதப்பட்டது. முன்பே தோன்றி வளர்ச்சியடைந்த ஒரு மொழிக்கே இலக்கணம் வகுக்க முடியும். இலக்கணத்திற்கு மொழியினைப் படைக்கமுடியாது என சென்ற "தாய்வீட்டு" இதழ் கட்டுரையில் பார்த்திருந்தோம். இம்முறை தமிழ் எழுத்து வரிவடிவம் எப்படித் தோன்றியது, அது ஏனைய மொழிகள் தோன்றுவதற்கு ஊற்றுக்காலக எவ்வாறு அமைந்தது எனப் பார்ப்போம்.

தமிழின் மூல வரிவடிவம் பிராமி வரிவடிவத்தின் ஒரு பரிணாம வளர்ச்சியே. தமிழ் வரிவடிவம் பிராமி வரிவடிவம் என்பது ஆசிய மனித நாகரீக வளர்ச்சியின் ஓர் அங்கமாகும். திராவிடர்களின் ஆதி நாகரீகமாகிய சிந்துவெளி (மொகஞ்சதாரோ மற்றும் ஹறப்பா) நாகரீக காலத்தின்போது பாவிக்கப்பட்ட சித்திர வடிவிலான எழுத்துக்களாகும். இவ்வெழுத்து வரி வடிவினதாகவும் வட்டவடிவினதாகவும் கலந்து இருந்தது. இவ்வெழுத்துக்கள் ஆரம்ப காலங்களில் கல்லிலேயே செதுக்கப்பட்டு வந்தது. கி மு 5ம் நூற்றாண்டில் தமிழில் வட்டெழுத்து வடிவம் பெற்று புழக்கத்தில் வந்தது. பிராமியிருந்து பிறந்த தேவநகரி என்றழைக்கப்பட்ட சமஸ்கிருதம் நேர் கோட்டு வடிவத்திலும் எழுதப்பட்டு பாவனையில் இருந்தது. தமிழ் வட்டெழுத்தில் இருந்தது.

கீழே காணப்படுபவை மொஹஞ்சதாரோ ஹறப்பா நாகரீகத்தின் போது பாவிக்கப்பட்ட பிராமி சித்திர வடிவான எழுத்துக்கள் ஆகும்.









கீழே காணப்படும் வரிவடிவங்கள் ஆரம்பகால பிராமி எழுத்துக்களின் பின் தோன்றிய அசோகன் பிராமி எழுத்து வரிவடிவங்களாகும். அதன் ஆங்கில எழுத்து வடிவமும் தமிழ் எழுத்து வடிவங்களையும் கீழே காணலாம்.

பிராமி உயிர் எழுத்தும், அதற்கு ஒத்த ஆங்கில எழுத்தும், தமிழ் உயிர் எழுத்தினையும் காணலாம்.



பிராமி உயிர் மெய்யெழுத்தும், அதற்கு ஒத்த ஆங்கில எழுத்துக்களும், தமிழ் உயிர் மெய் எழுத்துக்களும்.



இவை பிராமியின் அடுத்த வரிவடிவ பரிணாம வளர்ச்சித் தோற்றங்கள்



— அசோகன் பிராமி எழுத்து

— ஆரம்பகால தமிழ் பிராமி எழுத்து

— பிற்கால தமிழ் பிராமி எழுத்து

அ ம் ம மா — தற்கால நவீன தமிழ் எழுத்து

முதலாவதாக உள்ள பிராமி எழுத்து கி.மு 5ம் நூற்றாண்டின் அசோகச் சக்கரவர்த்தி கால அசோகன் பிரமி (Asohan Brahmi) எழுத்து என அழைப்பர். இதுவே தமிழ் வட்டெழுத்தின் ஆரம்பத் தோற்றம். இரண்டாவதாக உள்ளது பரிணாம வளர்ச்சியடைந்து வந்து வளர்ந்த ஆரம்ப கால தமிழ் பிராமி (Early Tamil Brahmi) எழுத்து. மூன்றாவதாக உள்ளது பரிணாம வளர்ச்சியடைந்த பிற்கால தமிழ் பிராமி (Later Tamil Brahmi) எழுத்து. நான்காவதாக உள்ளது தற்கால முதிர்ச்சியடைந்த நவீன தமிழ் (Modern Tamil) வட்டெழுத்து எழுத்து.


பிராமி எழுத்துக்களில் இருந்து வந்த பரிணாம வளர்ச்சியே பல இந்திய மொழிகள் பிற்காலத்தில் எழுதப்பட்டு புழக்கத்திற்கு வந்ததாக ஆராச்சியாளர்கள் கூறுவர். தமிழ் எழுத்தின் தோற்றம் கி மு 5ம் நூற்றாண்டில் அசோகச் சக்கரவர்த்தி காலத்தில் தோன்றியதாக குறிப்பிடுகின்றார்கள். ஆகவே தமிழ் - பிராமி எழுத்துக்களே ஏனைய திராவிடக் குடும்ப மொழிகளுக்குத் தோற்றுவாயாக இருந்தது. ஆரிய மொழியாகிய தேவநகரி (சமஸகிருதம்) பிராமி எழுத்தினையொற்றி பிறந்த மொழியாகும். ஹிந்தி மற்றும் பாளி ஆகிய இரண்டு மொழிகளுமே தேவநகரியிலிருந்து நேரடியாகப் பிறந்த மொழிகளாகும். வங்களம், குஜராத்தி, குர்முகி, ஒரிசா, திபெத்தியன் மற்றும் மியன்மார் ஆகிய மொழிகள் தேவநகரியின் அதாவது ஆரியரின் விஸதரிப்பு வாதத்திற்காகவும் மொழி ஆதிக்க மேலாண்மைக்காகவும் மிகவும் பிற்பட்ட காலத்தில் அதாவது கி.பி 5ம் நூற்றாண்டளவில் உருவாக்கப்பட்ட கிரந்தத்திலிருந்தும் தோன்றின. கிரந்தத்தினையும் பிற் காலத்தில் வடவெழுத்தாகவே அமைத்தனர். ஆனால் மேற்குறிப்பிட்ட மொழிகளின் வல்லுனர்கள்கூட மேன்மையினைப் பெறும்பொருட்டு தமது மொழிகளும் பிராமியிருந்து தோன்றியதாகவே குறிப்பிடுவர். ஏன் கிபி 900 ஆண்டுகளில் தோன்றிய சிங்களம் கூட தாங்களும் பிராமியிலிருந்து தோன்றியதாகவும் பாளியில் எழுதப்பெற்ற மாகாவம்ச கனவினால் தமது மொழியும் ஆரிய மெரிழியிலிருந்து பிறந்ததாக எழுதி வருகின்றனர். ஆனால் கிரந்த எழுத்துக்களின் தோற்றத்தில் தமிழ் வரிவடிவத்தின் எழுத்து வரிவடிவமும் செல்வாக்கு செலுத்தியுள்ளதனை நோக்க முடியும். ஆரம்ப காலத்தே திராவிடர்களின் பேச்சு வழக்கும் எழுத்து வழக்கும் முழுக்க முழுக்க தமிழாகவேயிருந்தது. தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம் மற்றும் துளு ஆகியன என்ற வேறுபாடு இல்லாமல் யாவும் தமிழாகவேயிருந்தது. தென்நாட்டில் ஒரு திராவிட தமிழ் இனமேயிருந்தது அது எனைய திராவிட இனங்களை உள்ளடக்கிய இனமாகும். ஆரம்ப காலத்தே பாவனையில் இருந்த இனக்குழுமங்களின் பேச்சு வழக்கு பிற்காலத்தே தனித்தனி மொழிகள் தோன்ற காரணமாயமைந்தது. இன்றுகூட தமிழ்நாட்டின் மதுரை, திருநெல்வேலி, தூத்துக்குடி போன்ற இடங்களின் பேச்சுவழக்குக்கள்கூட மிகவும் வேறுபட்டதாகவே காணப்படுகின்றது. இதுமாதிரியே பேச்சுவழக்குக்கள் நீண்ட காலத்தில் மொழியாக மாற ஏதுவாகவிருந்தது.

வடவெழுத்து அல்லது சமஸ்கிருதம் எனும் போது தேவநகரி மற்றும் கிரந்தம் ஆகிய இரணட்டையுமே உள்ளடக்கியது. தேவநகரியாகிய வரி எழுத்திற்கு ஏன் வடவெழுத்து வடிவமான மாற்றெழுத்து ஒன்று தேவைப்பட்டது அதாவது ஏறத்தாள 1000 வருடங்களின் பின்பு. ஆரியச் செல்வாக்கினாலும் ஆரிய மாயையினாலும் தென்னகம் மிகவும் கவரப்பட்டிருந்தது. பேச்சுவழக்கு, எழுத்துவழக்கு, வாழ்கை முறை, கோவில் வழிபாடு சடங்குகள் போன்றவற்றில் சமஸ்கிருதமும் அதன் ஆரியச் செலவாக்கும் மிகுந்த அளவில் செல்வாக்குச் செலுத்திய காலமது. இக்காலத்தேதான் தமிழிலே சமஸகிருதத்தினை இலகுபட எழுதி அதனை திராவிட இனத்தில் புகுத்தி தமது மொழியாதிக்கத்தினை மேம்படுத்தும் நோக்கிலேயே ஆரியர்களால் தமிழையொத்த வரிவடிவமாக கிரந்தம் அமைக்கப்படுகின்றது. இதானாலேதான் தமிழ் வரிவடிவத்தின் சாயலோடொத்த வட்டெழுத்துக்கள் கிரந்த எழுத்துக்களுக்காக உருவாக்கப்பட்டன. இதில் தமிழிலே உள்ள அகர வரிசைகளும் உயிர்மெய் எழுத்துக்களும் சில வரி வடிவமாற்றங்களுடன் வடவெழுத்து என்னும் பெயருடன், அத்தோடு தமிழில் இல்லாத சமஸ்கிருதத்திற்கே உரியதான பல ஒலிவடிவங்கள் இங்குதான் எழுத்துருப் பெறு கின்றன. உதாரணமாக ஹ, ஸ, ஷ, ஜ போன்ற எழுத்துக்கள் கிரந்தமாக உருவாக்கப் பெற்றன.


தமிழ் சமஸ்கிருத மற்றும் கிரந்த வரிவடிவ ஒப்பீடுகளை கீழே நோக்கலாம்.

தேவநகரி வரிவடிவம் சமஸகிருதத்திற்கான எழுத்துக்கள். (தோன்றிய காலம்- கிமு500)


**உயிர் எழுத்துக்களும் உயிர்மெய் எழுத்துக்களும்.**




**உயிர்மெய்யெழுத்துக்கள்.**




**சமஸ்கிருத எண்கள்**



**தமிழ் உயிர் எழுத்துக்களும் உயிர்மெய் எழுத்துக்களும். (தோன்றிய காலம் கிமு500)**




**தமிழ் உயிர்மெய் எழுத்துக்கள்**



மேலே தமிழுடன் ஒன்றாகச் சேர்ந்துவிட்ட ஜ,ஷ,ஸ,ஹ போன்றன வடவெழுத்தினை தமிழாகவே அறிய முடியும்.


**தமிழ் எண்கள்**




**தமிழின் விசேட குறியீடுகள்**




**கிரந்த எழுத்து - உயிர் எழுத்து (தோன்றிய காலம் கிபி500)**



**கிரந்த - உயிர்மெய் எழுத்து**



**கிரந்த எண்கள்**



கிரந்த வரிவடிவம் கிபி500ஆம் ஆண்டளவிலே தென்னாட்டின் தேவைகருதி தமிழ் எழுத்துக்களின் வரிவடிவத்தோடும் சமஸ்கிருதத்திற்கேயுரிய பல உச்சரிப்புக்குரிய எழுத்துக்களோடும் உருவாக்கப்பட்டது. தமிழில் இருந்து பெறப்பட்ட வடவெழுத்தாக கிரந்தம் உருவாகினது வரலாறு. இதனை மேலே ஒப்பீட்டுடன் பார்த்தோம்.

பிற்காலத்தில் தமிழிலே கிரந்த எழுத்துக்களும் கலக்கத் தொடங்கின. கிரந்த எழுத்துக்களையும் சமஸ்கிருதத்தையும் வடசொல் என்றே அழைப்பர். ஆரியச் செலவாக்கிற்கு இந்திய உபகண்டம் உட்படுத்தப்பட்ட பின்பு ஆரிய பிராமணீயத்தின் செல்வாக்கும் தமிழில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியது. தமிழில் இருந்து கிரந்தம் பெற்ற ஜ,ஸ,ஷ,ஹ எழுத்துக்களை மேலே உள்ள கிரந்த எழுத்துக்களை நோக்கி அறிந்தோம். அதில் உள்ள தமிழ் செல்வாக்கினையும் அறிய முடிகிறது. இது உண்மையில் வடமொழியின் பல சொற்கள், சொற்றொடர்களும் தமிழில் அக்காலத்தே அது தமிழ்தான் என்று எண்ணுமளவிற்கு பாவனையிலிருந்தன. இன்று கூட எண், நாள், மாதம் போன்றனவற்றை தமிழில் எழுதத் தெரிந்த அவன் வருடங்களின் பெயர்களை அப்படியே வடசொல்லிலிலேயே இன்றும் பாவிக்கின்றான். இது இந்து சமய பிராமணிய ஆரிய ஆதிக்கத்தினால் இன்னும் வழங்கி வருகின்றது. ஆரிய பூசை முறைகள் ஆரிய மந்திரங்களின் ஆதிக்கத்தினாலும் தமிழன் அதிலிருந்து விடுபட முடியவில்லை.

தமிழ்நாடு இப்போது எப்படியாக ஆங்கல மொழியினால் கவரப்பட்டு அதன்பால் சென்று தமிழினை இழக்கும் நிலையில் இன்று இருக்கின்றதே அதைவிட மிக பன்மடங்காக கிபி 5ம் நூற்றாண்டிலும் அதன்பின்னும் ஆரிய மாயைக்குட்பட்டிருந்தது. அதனாலே மொழியில் ஆரியம், சமயத்தில் ஆரியம், வாழ்க்கை முறையில் ஆரியம் என வாழத்தலைப்பட்டான். இது சார்ந்தே தமிழனுக்குக் கொடுக்கப்பட்ட சாபக்கேடான வருணாச்சிரமத்தின் பரிணாம வளர்ச்சியான சாதியமைப்பும் ஆரியன் எமக்குத் தந்ததே. எமது சங்ககால அதற்கு முந்தைய தமிழ்பண்பாட்டில் சாதியம் இருந்ததற்கான எதுவித சான்றுகளும் எந்த சங்க இலக்கியத்திலும் காணப்படவில்லை. எமது மொழியின் எழுத்துக்களைப் பெற்று அதன் மூலமே ஆரியன் எம்மீது செல்வாக்குச் செலுத்தினான் எமது மொழியை அழிக்கப்பார்த்தான் ஆனால் அது அவனால் முடியவில்லை.


அடுத்த இதழில் எவ்வாறாக தமிழ் ஏனைய திராவிடமொரிகளின் தோற்றத்திலும் ஆரிய மொழிகள் என்று கூறப்படும் மொழிகளின் தோற்றத்திலும் செலவாக்கு செலுத்தியதென்பதனைப் பார்ப்போம்.

packiyanathan.m@thaiveedu.com

■ ■ ■

அ. முத்துலிங்கம்

# அண்ணனின் புகைப்படம்




அமைதியாக இருந்த எங்கள் கிராமத்தைக் கெடுக்கும் விதமாக ஒரு நாள் புகைப்படக் காரர் ஒருவர் அங்கே நுழைந்தார். எதோ தும்பு மிட்டாய் விற்க வந்தவரைப் போல சிறுவர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டார்கள். மூன்று கால்கள் வைத்த பெட்டியைத் தூக்கிக்கொண்டு, தலையோடு ஒட்டிய ஒரு தொப்பியை அணிந்த அந்த புகைப்படக்காரர், ஒரு பறவை நடப்பது போல மெதுவாக வழி விசாரித்துக்கொண்டு எங்கள் பக்கத்து வீட்டிற்குள் புகுந்தார். எல்லோரும் அவர் பின்னால் போனார்கள். எனக்கு அப்போது மூன்று வயதுகூட நிரம்பவில்லை. ஆனாலும் நான் நுழையவில்லை, ஏனென்றால் அந்தச் சிறுவயதிலேயே அந்த வீட்டுக்காரர் எங்கள் எதிரி என்ற விஷயம் எனக்கு எப்படியோ அறிவுறுத்தப்பட்டிருந்தது.

நான் அவர்கள் வீட்டுப் படலைக்கு வெளியே நின்று ஏக்கத்துடன் பார்த்தேன். எனக்கு ஒரு அண்ணன் இருந்தான். ஒரு கம்பு எழுந்து நடப்பதுபோல நடப்பான். முழங்காலில் இருந்து பாதம்வரை ஒரு இடம் மிச்சமில்லாமல் சிரங்கு போட்டிருக்கும். அதன் காரணமாக கொஞ்சம் நொண்டுவான். என்னிலும் ஐந்து வயது மூத்தவன். ஆர்வமும் ஐந்து மடங்கு அதிகம். ஆசையைக் கட்டுப்படுத்தி அவனும் எனக்குத் துணையாக வெளியே நின்றுவிட்டான்.

எங்கள் கிராமத்துக்கு வந்த முதல் புகைப்படக்காரர் அவர்தான். பக்கத்து வீட்டு கிட்னனைப் படம் பிடிப்பதற்காக வந்திருந்தார். கிட்னனுக்கும் என்னளவு வயதுதான். இந்தப் படம் எடுக்கும் வைபவத்தைப் பார்ப்பதற்காக சிறு வர்கள் மட்டுமல்லாமல் பெரியவர்களும் அந்த வீட்டில் குழுமிவிட்டார்கள்.

சமயங்களில் என் அண்ணனின் மூளை அசத்தலாக வேலை செய்யும். எங்கள் வீட்டு வேலியிலே பெரிய ஓட்டை போட்டு கிட்னன் படம் பிடிக்கப்படுவதை பார்ப்பதற்கு வசதி செய்து தந்தான். கிட்னன் மேல் சூரியனின் சதுரமான கட்டங்கள் விழுந்தன. ஒரு கொலர் வைத்த மேல் சட்டையும், வார் வைத்த கால் சட்டையும் அணிந்திருந்தான். அவன் தலை எண்ணெய் வைத்து இழுத்து கறுப்பு ஒளி வீசியது. புகைப்படக்காரர் வெகு நேரம் காமிரா ஓட்டை வழியாகப் பார்த்தார். பிறகு சூரியனை அதிருப்தியாக நிமிர்ந்து நோக்கினார். இன்னும் பல நிமிடங்கள் அப்படி வளைந்தபடியே இருந்தார். படம் எடுப்பது எவ்வளவு சிரமமான காரியம் என்பது எல்லோருக்கும் உறைக்கும்வரை அவர் நிமிரவில்லை. கடைசியில் பெரும் ஆரவாரம் கிளம்பியபோது படம் எடுத்து முடிந்துவிட்டது என்று தெரிந்தது.

நானும் அண்ணனும் புகைப்படச் சம்பவத்தை வீட்டிலே வந்து வர்ணித்தபோது அதே கதை இன்னும் பல ரூபங்களில் எங்கள் வீட்டை ஏற்கனவே அடைந்துவிட்டது. அப்பாவுக்கும், அம்மாவுக்கும் அதைத் தாங்க முடியவில்லை என்பது பள்ளிக்கூடம் போகும் வயதை எட்டாத எனக்குக்கூட அப்பட்டமாகத் தெரிந்தது. ஆனால் அதிர்ஷ்டம் கிட்னனுடைய வயதில் நான் வீட்டில் இருந்ததுதான். எப்படியும் என்னை நிற்க வைத்து அதேமாதிரி ஒரு படம் எடுத்து ஊரிலே சரிந்திருந்த மதிப்பை திரும்பவும் நிறுத்திவிட வேண்டும் என்று அப்பா தீர்மானித்தார்.

எங்கள் வீட்டுக்கும், அயல் வீட்டுக்கும் சண்டை ஒரு சாதாரணமான விவகாரத்தில் தான் ஆரம்பித்தது. காரணம் ஒரு புளியமரம். எங்கள் வீட்டிலே மரம் நின்றாலும் அதன் பெரிய கொப்புகள் பக்கத்து வீட்டிலே போய் காய்த்துக் கொட்டின. எங்கள் பக்கமிருந்த கொப்புகளோ காய்க்க மறுத்தன. அப்பாவுக்கு கிரமமாக புத்திமதி வழங்கும் சொந்தக்காரர்கள் அடுத்த வீட்டுக் கொப்புகளை வெட்டிவிட்டால் எங்கள் பக்கம் காய்க்கும் என்று கூறினார்கள். அப்பா மனதிலே ஏற்கனவே சிந்தித்து வைத்திருந்ததைத்தான் அவர்கள் சொல்லியிருக்க வேண்டும். அன்றே அப்பா கோபம் மிகுதியாகி இரண்டு கொப்புகளை வெட்டிவிட்டார். தீராத பகையும் அன்றுதான் ஆரம்பித்தது. மூன்று கால் காமிராவினால் கிட்னனைப் படம் பிடித்த போது ஊர் முழுக்க அதை ஒரு விழாபோல கண்டு களித்தது. அந்தக் காட்சி எங்களுக்கு மறுக்கப்பட்டதும் அதனால்தான்.

அப்பாவுக்கு இந்த புகைப்படச் சம்பவம் பொறுக்க முடியாமல் போனதில் ஆச்சரியமில்லை. அம்மாவுக்கும் முதன்முதலாக ஒரு புகைப் படக்காரரை எங்கள் வீட்டுக்கு வரவழைத்து படம் எடுக்கும் சந்தர்ப்பம் தவறிப் போனதில் நிரம்பவும் துயரம் இருந்தது. என் எஞ்சிய வாழ்நாள் முழுக்க நான் மறக்க முடியாத ஒரு காட்சி எனக்கு அப்போது தான் கிடைத்தது. அம்மாவின் மூக்கு நுனியில் ஒரு துளி கண்ணீர் தொங்கியது. ஆனால் அது எப்படி அங்கே உண்டாகியது என்பது ஒருவருக்கும் தெரியவில்லை.

ஒரு சனிக்கிழமை பின்மதியம் மூன்று மணிக்கு புகைப்படக்காரர் வருவதாக ஏற்பாடு. அப்பா போய் சொல்லிவைத்து அச்சாரமும் கொடுத்திருந்தார். எங்களுக்கு நேர்ந்த அவமானத்தை நேராக்குவதற்கு நான் தயாராக இருந்தேன். என்னுடைய புகைப்படம் பக்கத்து வீட்டில் எடுத்ததிலும் பார்க்க ஏதோ ஒரு விதத்தில் உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்பதில் முடிவாக இருந்தார்கள்.

எங்களுடைய இந்த தீவிரமான ஏற்பாடுகளுக்கு எதிர்பாராத இடத்திலிருந்து இடைஞ்சல் ஒன்று வந்தது. என்னுடைய அண்ணனுக்கு எட்டு வயது. வழக்கமாக பத்து மணிவரை தூங்குபவன் அந்தப் பிரதானமான சனிக்கிழமை அதிகாலையிலேயே எழும்பிவிட்டான். தனக்கு என்ன சட்டை அணிவது என்று அம்மாவைத் தொந்திரவு பண்ணத் தொடங்கினான். போட்டி எனக்கும் கிட்னனுக்கும் இடையில்தான். அது அண்ணனுக்கு நல்லாகத் தெரியும். ஆனால் அவனும் படத்தில் இருக்கவேண்டும் என்று அடம் பிடித்தான்.

அம்மா அவனை சட்டை செய்யவில்லை. என்னை குளிக்க வார்ப்பதிலேயே கவனமாக இருந்தாள். பிறகு தலையை அழுத்தி வாரி இழுத்து பொட்டு வைத்தாள். ஏதோ மரம் நடுவதுபோல இரண்டு கைகளாலும் என்னைத் தூக்கி வெளிக்குந்திலே இருத்தினாள். அண்ணன் விடுவதாயில்லை. அம்மாவையே சுற்றிச் சுற்றி வந்து தனக்கும் தலையை இழுத்துவிடச் சொல்லிக் கெஞ்சினான். அம்மாவின் முந்தானையை விரல்களால் இறுக்கப் பிடித்தபடியே இழுபட்டான். இந்த விவகாரத்தில் யாருக்கு வெற்றி கிடைக்கும் என்பதை என் இடத்தில் இருந்தபடியே நான் அசையாமல் அவதானித்தேன்.

ஒரு சமயத்தில் பொறுக்காமல் போய் அம்மா முந்தானையைப் பறித்துக்கொண்டு 'என்ன இளவுக்கு அழுறாய். உன்ரை தம்பியைதான் போட்டோக்காரன் படம் எடுக்க வாறான். நீ ஏன் அவதிப்படுகிறாய்' என்றாள். அண்ணன் அப்படியே நின்றான். அவன் வாய் திறந்து கிடந்தது. நான் ஏதோ பாடப்போகிறான் என்று முதலில் நினைத்தேன். அவன் ஒவென்று அழத்தொடங்கினான். அவனுடைய திறந்த வாயால் குடத்தில் நீர் நிறைவது போல கண்ணீர் நிறைந்து கொண்டு வந்தது.

திடீரென்று அண்ணன் தன் யுக்தியை மாற்றினான். குருடர்கள் செய்வது போல தன் இரண்டு கைகளையும் நீட்டிப்பிடித்து அதற்கு மேலே சலவை செய்து வந்த தன் வெள்ளை சேர்ட்டையும் நீலக் கால்சட்டையையும் வைத்துக் கொண்டான். அம்மா போகும் இடமெல்லாம் அவனுக்கும் ஏதோ வேலை அங்கே இருப்பது போல போனான். அம்மா திரும்பியும் பார்க்கவில்லை.

அப்பா வந்தபோது அவர் ஏதாவது செய்வார் என்று எதிர்பார்த்தால் அவன் தன் பங்குக்கு அவன் வயிற்றுடன் சேர்த்து சட்டையைப் பிடித்துக் கொண்டு ஒரு அடி கொடுத்தார். அண்ணன் நிலத்திலே விழுந்து கழுத்தை முறிப்பதுபோல உருளத் தொடங்கினான். புழுதியை எல்லாம் பூசிக் கொண்டு பெரிதாகக் கத்தினான். அப்படி அலறியபோதெல்லாம் தன்னையும் படம் எடுக்க வேண்டும் என்பதை ஞாபகமாக சொல்லிச் சொல்லி வந்தான். அப்பா என்ன நினைத்தாரோ 'சரி சரி நிறுத்து, உன்னையும் சேர்த்து எடுப்பம்' என்று கடைசியில் சொல்லிவிட்டார். ஒரு சுவிட்ச் போட்டது போல அவன் அழுகை நின்றது. சிரித்துக்கொண்டே எழும்பினான். சேர்ட் கொலரை கைகளால் இழுத்து கண்ணைக் துடைத்துக் கொண்டான். அப்படியும் கண் இமைகள் நனைந்து கிடந்தன. நிமிடத்திலே அழவும், அழுகையை நிற்பாட்டவும், உடனேயே சிரிக்கவும் அவன் தன்னுடைய முகத்துத் தசைகளைப் பழக்கியிருந்தான்.

அண்ணனுடைய சந்தோசம் சொல்லமுடியாது. வதவதவென்று குளித்தான். அம்மா, அவன் சொக்கையை அமத்திப் பிடித்தபடி தலையை வாரி விட்டாள். குட்டிக்கூரா பவுடரை கையிலே கொட்டி கன்னத்தில் நிறையப்பூசினான். அவ்வளவு நேரமும் காவித்திரிந்த பொத்தான் வைத்த நீலக் கால்சட்டையை ஒருவர் உதவியில்லாமல் தானாகவே அணிந்து கொண்டான். சலவைசெய்த வெள்ளை சேர்ட்டைவிரித்து இரண்டு பெருவிரல்களாலும் தூக்கிப் பிடித்தான். அது கஞ்சிபோட்டு மொரமொரவென்று,

தொடர்தல் 89ம் பக்கம்

# JRS COLLEGE

OUR COMMITMENT IS QUALITY TRAINING

Cashier Training
Starts on Dec 6th 2009
@ 9.00 AM (Sunday)

| Diploma Courses | Job Opportunities |
|---|---|
| Accounting & Payroll Adiministration | Payroll Administrator<br>Accounts Manager<br>Accounting Supervisor |
| Computerized Accounting | Accounting Assistant<br>Accounting Clerk<br>Accounts Payable<br>Accounts Receivable<br>Book Keeper |
| Office Assistant | Administrative Assistant<br>Office Assistant<br>Receptionist<br>Data Entry Clerk |

| Other Training | Job Opportunities |
|---|---|
| Bank Teller | Bank Teller<br>Banker |
| Cashier | Cashier<br>Cash register |
| Food Handling | Food Handler |

Payroll - MS Office - Quick Books
Accpac - Simply Accounting

★ Currently offering only computer basic class in Etobicoke Campus

| SCARBOROUGH CAMPUS | ETOBICOKE CAMPUS |
|---|---|
| (Midland & Finch) | (Kipling & Dundas) |
| PH16 - 4168 Finch Ave E | 300 - 5359 Dundas Street West |
| Scarborough ON M1S 5H6 | Etobicoke ON M9B 1B1 |
| Tel : 416 - 292 2455 | Tel : 416 - 207 9975 |


# அண்ணனின்...

88ம் பக்கத் தொடர்ச்சி...

சிரட்டைக் கரியால் நெருப்பு மூட்டி சூடாக்கிய பெட்டியால் இஸ்திரி செய்யப்பட்டிருந்தது. சேர்ட்டின் முன்பக்கமும் பின்பக்கமும் ஒட்டிப் போயிருந்தது. அதைப் பிரித்தபோது நல்ல வாசனையும், ஒரு பேப்பரைக் கிழிக்கும் ஓசையும் எழுந்தது. அப்படியும் அதன் மடிப்புகள் முழுவதும் குலையாமல் கவனமாக அதை அணிந்தான். சேர்ட்டின் கைகளை வேண்டிய அளவுக்கு மட்டுமே பிரித்து தன் கைகளை உள்ளே நுழைத்தான். கையிலே செட்டைமுளைத்தது போல மீதி மடிப்பு ஒட்டுப் பட்டுப்போய் விறைப்பாகவே நின்றது. இந்த சேர்ட்டின் அடிப்பாகத்தை கால்சட்டைக்குள் சுருக்கிவிட்டுக் கொண்டான். அத்துடன் முடியவில்லை, அரைத்த சந்தனத்தை உருட்டி எடுத்து நடு நெற்றியில் அமத்தினான். இப்பொழுது அலங்காரம் பூர்த்தியாகிவிட்டது. ஏதோ தான்தான் பிரதானமான ஆள் என்பது போன்ற பாவளையுடன் எனக்குப் பக்கத்தில் தூணைப் பிடித்துக்கொண்டு ஆடாமல் அசையாமல் புகைப்படக்காரருக்கு காத்திருக்கத் தொடங்கினான்.

சொன்ன நேரத்துக்கு புகைப்படக்காரர் வரவில்லை. ஒரு மணிநேரம் தாமதமாகிவிட்டது. அவரோடு சேர்த்து முன்னும் பின்னுமாக சிறுவர்களும் வந்தார்கள். சூரியனுடைய வெளிச்சம் நல்லாகப் படும் விதமாக ஒரு சுவருக்கு முன்னால் என்னை நிற்பாட்டினார் கள். ஒரு பக்கத்தில் செம்பருத்தி மரமும் மறுபக்கத்தில் அண்ணனுமாக நான் சரி நடுவில் அசைவில்லாமல் நின்றேன். நாலு மணித்தியாலமாக வெளிக்குந்தில், எவ்வளவு முடியுமோ அவ்வளவு அமைதியாக காத்திருந்த அண்ணன், காமிரா முன்னாலும் அதைத் தொடர்ந்தான். அசைவின்மை அவனுக்கு என்னிலும் பார்க்க நல்லாக வந்தது.

புகைப்படக்காரர் காமிராவை மூன்று காலில் நிற்பாட்டினார். பிறகு முன்னுக்கு பின்னுக்கு என்று அதை நகர்த்தி ஓர் இடத்தைத் தேர்வு செய்தார். ஒரு பெரும் கறுப்பு போர்வையால் தன்னையும் காமிராவையும் சேர்த்து மூடிக்கொண்டார். துணிக் கூடாரத்திற்குள் தலையை நுழைத்து வெகு நேரம் பார்த்தார். நாங்கள் எல்லாம் முடிந்துவிட்டது என்று எங்களைத் தளர்த்திய நேரம் கறுப்புத்துணியை விலக்கிக் கொண்டு வெளியே வந்தார். ஒரு வார்த்தை பேசாமல் காமிராவுக்குள் பிலிம்மை போட்டு, மரச்சட்டத்தை ஓசையுடன் மூடினார். சட்டையின் மடிப்பு கலையாமல் இருப்பதற்காக கைகளை அகலித்து விறைப்பாக வைத்திருந்த எங்களுக்கு நோவு எடுத்தது.

புகைப்படக்காரர் இறுதிச் சரி பார்த்தலில் அண்ணனை சற்று விலகி நிற்கச் சொன்னார். அவனும் எங்கள் இடைவெளியை அதிகமாக்கினான். காமிராக்காரர் இன்னும் கொஞ்சம் என்றார். மீண்டும் தள்ளி நின்றான். சரி ரெடி என்றார். நாங்கள் வயிறுகளை எங்களால் முடிந்தமட்டும் எக்கிக் கொண்டு, மூச்சு விடாமல் என்ன நடக்கப்போகிறது என்ற ஊகம் சிறிதும் இல்லாமல் நின்றோம். கறுப்பு போர்வைக்குள் இருந்து மெதுவாக ஒரு கை பாம்பு போல வெளியே வந்தது. அந்தக் கையையே பார்த்தோம். அது சடக்கென்று காமிரா மூடியை அகற்றி அதே வேகத்தில் திரும்பவும் மூடியது. படம் எடுத்து முடிந்தது என்றார்கள்.

என்னுடைய அண்ணனுக்கு சின்ன மூளை, அப்பாவுக்குப் பெரிய மூளை. அந்தப் பெரிய மூளை பெரிய வேலை செய்யும் என்பது புகைப்படம் வந்தபோதுதான் தெரிந்தது. அதில் நான் நடுவில் கண்களைச் சற்று கூசிக்கொண்டு காமிராவுக்கு பக்கத்தில் இருந்த ஏதோ ஒன்றை கொஞ்சம் பீதியுடன் பார்த்தபடி நின்றேன். என் மூக்கிலே இருந்து விழுந்த நிழல் என் சொண்டுக்கு மேலே சிறு கறுப்பாகத் தெரிந்தது. சற்று பழுதுபட்ட பின் சுவர் தெரிந்தது. செம்பருத்தி தெரிந்தது. கால்சட்டை பொத்தான்கூட தெரிந்தது. அண்ணனைக் காணவில்லை, பதிலாக அண்ணனின் இடது முழங்கையும், விறைப்பாக நின்ற சேர்ட் விளிம்பும் மட்டுமே படத்தில் பதிந்திருந்தது.

இரண்டு மணி நேரம் புழுதியில் புரண்டு, நாலு மணிநேரம் வெளித் திண்ணையில் காத்திருந்து எடுத்த படம் இப்படி வந்ததில் அவனுக்கிருந்த மனவருத்தத்தை விவரிக்க முடியாது. ஒரு வாரம் கழித்து அப்பா அந்தப் படத்தை பிரேம் போடுவதற்காக தேடினார். எவ்வளவு தேடியும் படம் கிடைக்கவில்லை. எப்படியோ இந்தச் சம்பவத்தை நாளடைவில் வீட்டில் எல்லோரும் மறந்துவிட்டனர்.

எஸ்.எஸ்.சி சோதனைக்கு நான் படித்துக் கொண்டிருந்த காலத்தில், சில வருடங்களுக்கு முன் வீட்டை விட்டு ஓடிப்போன அண்ணன் பாவித்த தைலாப் பெட்டி என் சொத்தாக மாறியிருந்தது. ஒரு நாள் அதைக் குடைந்து கொண்டிருந்த போது, கள்ளறை ஒன்றில் பாதுகாப்பாக மறைத்து வைத்த ஒரு பழைய காலத்து அப்பியாசக் கொப்பி அகப்பட்டது. அதை இழுத்து எடுத்து திறந்து பார்த்தேன். சந்திரகுப்த மன்னனைப் பற்றிய சரித்திரக் குறிப்புகள் அண்ணனுடைய சதுரமான கையெழுத்தில் இருந்தன.



**“ அம்மாவின் மூக்கு நுனியில் ஒரு துளி கண்ணீர் தொங்கியது. ஆனால், அது எப்படி அங்கே உண்டாகியது என்பது ஒருவருக்கும் தெரியவில்லை. ”**


‘சந்திரகுப்தன் மௌரிய வம்சத்தை சேர்ந்தவன். அவனுடைய மதி மந்திரியின் பெயர் கௌடில்யன். பல எதிரிகளைப் போரிலே தோற்கடித்து, பரந்த இந்திய தேசத்தை ஒரு குடைக்கீழ் கொண்டு வந்த முதல் அரசன் இவன். போரில் தோற்ற எதிரிக்கு 500 யானைகளைப் பரிசாக அளித்தான். தான் பாடுபட்டு கட்டி எழுப்பிய ராச்சியத்தை தன் மகன் பிந்துசாரனுக்கு தந்துவிட்டு நாட்டை விட்டு வெளியேறினான். அப்படியே பட்டினி கிடந்து செத்துப்போனான்.’

ஒவ்வொரு பக்கமாகப் புரட்டிக்கொண்டு வந்தால் பல வருடங்களுக்கு முன் தொலைந்து போன எங்களுடைய புகைப்படம் கடைசி அட்டையில் ஒட்டப்பட்டிருந்தது. ஒரு வித்தியாசம், என்னுடைய உருவம் அதிலே இல்லை, சரி பாதியாக அது வெட்டப்பட்டுவிட்டது. எஞ்சிய படத்தில் ஒரு சிறுவனின் முழங்கையும், விறைப்பாக நிற்கும் அரைக்கை சேர்ட்டும் மட்டுமே தெரிந்தன வேறு ஒன்றுமே இல்லை.

அதைப் பார்த்ததும் எனக்கு பல வருடங்களுக்கு முந்திய அந்த சனிக்கிழமை மாலை ஞாபகம் வந்தது. சிரங்குக் காலும், பொத்தான் போட்ட கால்சட்டையும், நெற்றியிலே உருட்டி வைத்த சந்தனமும், கஞ்சிபோட்டு விறைப்பாக நிற்கும் அரைக்கை வெள்ளை சேர்ட்டுமாக வயிற்றை எக்கிக்கொண்டு நின்ற என் அண்ணனின் பயந்த முகம் உயிர் உள்ளவரை என் மனத்தில் நிற்கும்.

இந்த முகத்தை ஞாபகத்துக்கு கொண்டுவர எனக்கு மூன்றுகால் வைத்த காமிராப் பெட்டியோ, அதை மூடும் கறுப்பு போர்வையோ, கறுப்பு துணிக்கு உள்ளே இருந்து பாம்பு போல புறப்பட்டு வரும் கையோ தேவையாக இருக்காது..

muththulingam.a@thaiveedu.com



# நூற்றாண்டு காணும் மகாஜனக் கல்லூரி

## (1910 - 2010)



குரு அரவிந்தன்

காங்கேயன்துறைக் கடற்கரையில் ஒரு கலங்கரை விளக்கம் எப்படிக் கம்பீரமாக நிமிர்ந்து நின்று, கடலிலே வழிதவறிய படகுகளுக்கு வழிகாட்டிக் கொண்டிருந்ததோ, அதேபோல அறிவுப்பசி தீர்க்க எங்கே செல்வது என்று தெரியாமல் திண்டாடிக் கொண்டிருந்த அந்தச் சுற்று வட்டாரத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு கலங்கரை விளக்கமாகத் தெல்லிப்பழையில் எழுந்து நின்று அன்று வழிகாட்டிய கல்லூரிதான் இன்று நூறாவது அகவையில் காலடி எடுத்து வைத்திருக்கும் மகாஜனக் கல்லூரி யாகும். சுற்று வட்டாரத்தில் உள்ளவர்களுக்காக அன்று ஆரம்பிக்கப்பட்ட அந்தப் பாடசாலை இன்று பெரு விருட்சமாக வளர்ந்து இலங்கையின் எல்லாத் திசைகளிலும் உள்ள மாணவர்களையும் தன்பக்கம் ஈர்த்து நிற்கின்றது. எத்தனையோ இன்னல்களையும் இடர்களையும் கடந்து மகாஜனக் கல்லூரி வெற்றிகரமாக இந்தச் சாதனையை இன்று படைத்திருக்கிறது என்று நினைக்கும்போது உலகெல்லாம் பரந்திருக்கும் அதன் பழைய மாணவர்களுக்குத் தாம் படித்த கல்லூரிக்கு அகவை நூறு என்பதில் மிகவும் பெருமையாக இருக்கின்றது.

20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எல்லோருக்கும் கல்விச் செல்வம் கிடைக்க வேண்டும் என்ற பரந்த மனப்பான்மையோடு பாவலர் துரையப்பாபிள்ளையினால் தனிமனித முயற்சியாக 1910ல் ஆரம்பிக்கப்பட்ட மகாஜன ஆங்கில உயர் பாடசாலை நாளடைவில் பெருவிருட்சமாக வளர்ந்து மகாஜனன்களின் கல்லூரியாக மாறி இன்று உலகெல்லாம் புகழ்பரப்பி நிற்கின்றது.

ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் உள்ள சில பாடசாலைகள் நூற்றாண்டு நிறைவைக் கொண்டாடியிருப்பது போல, அந்த வரிசையிலே இன்று மகாஜனக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி போன்ற கல்லூரிகளும் நூற்றாண்டு நினைவைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றன.




1910ல் ஆரம்பிக்கப்பட்ட மகாஜன ஆங்கில உயர் பாடசாலை 1918ல் ஏற்பட்ட பெருவெள்ளம் காரணமாக அதன் கட்டிடத்தை இழந்தபோது, அங்கே கல்வி கற்ற மாணவர்கள் தொடர்ந்து படிப்பதற்கு இடமின்றித் தவித்தனர். மனம் தளர்ந்து போகாத தாபகர் பாவலர் துரையப்பாபிள்ளை அவர்கள் மீண்டும் 1919ல் கட்டிடத்தைக் கட்டி எழுப்பி மாணவர்களின் கல்வியைத் தொடர்வதற்கு வழி வகுத்துக் கொடுத்தார். 1926ல் அதே வளாகத்தில் பெண்களுக்கான சரஸ்வதி வித்தியாலயம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டது. 1929ல் தாபகர் திரு. தெ.அ. துரையப்பாபிள்ளை அவர்கள் காலமாகவே, அவரைத் தொடர்ந்து திரு. கே. சின்னப்பாபிள்ளை பாடசாலையின் தலைமை ஆசிரியரானார். 1935ம் ஆண்டு மகாஜனா தனது வெள்ளி விழாவைப் பெருமையோடு கொண்டாடியது. 1936ல் மக்களுக்குத் தொண்டு செய்யும் நல்ல நோக்கத்தோடு மகாஜனாவின் சாரணர் இயக்கம் ஆரம்பமானது. 1943ல் சரஸ்வதி வித்தியாலயம் மகாஜனாவோடு இணைக்கப்பட்டது. 1945ல் பாவலரின் மகன் திரு. தெ.து. ஜெயரத்தினம் தலைமை ஆசிரியராகப்பதவி ஏற்றபோது, கல்லூரியின் பெயர் மகாஜனக் கல்லூரி என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 1946ல் கல்லூரிச் சின்னம் அறிமுகம் செய்யப்பட்டு, 'உனை நீ அறி' என்ற வாசகம் அங்கே கல்வி கற்கும் மாணவர்களின் தாரக மந்திரமாக்கப்பட்டது. அதே வருடம் யாழ்மாவட்ட உதை பந்தாட்டப் போட்டிகளிலும் கல்லூரியின் உதைபந்தாட்டக் குழு முதன்முறையாகப் பங்கு பற்றியது. 1947ல் மகாஜனா இரண்டாம் தர பாடசாலையாக உயர்வு பெற்று, 1948ல் உயர்தரவகுப்பு அறிவியல் பாடங்கள் ஆரம்பிக்கப்பட்டன. 1949ல் அதிபரின் விடா முயற்சியாலும், ஆசிரியர்களின் கற்பித்தல் திறனாலும், மாணவர்களின் ஆர்வத்தினாலும் முதலாம்தர பாடசாலையாக உயர்வு பெற்றது. 1951ம் ஆண்டு முதன்முதலாக 'ஜயஜய மாஜன ஜயசுப மாதா' என்ற கல்லூரிக் கீதமும், கொடிவணக்கப் பாடலும் வித்துவான் நா.சிவபாதசுந்தரனாரால் இயற்றப்பட்டு இசையோடு பாடப் பெற்றன. 1954ல் கல்லூரியின் புகழ் திக்கெட்டும் பரவவே, வெளியூர்களில் இருந்து கல்லூரியில் படிப்பதற்காக வந்த மாணவர்களுக்காக கல்லூரி விடுதி ஒன்றும் ஆறு மாணவர்களோடு ஆரம்பமானது.

1960ல் 1800க்கும் மேற்பட்ட மாணவர்களோடு மகாஜனக் கல்லூரி தனது பொன்விழாக் கொண்டாடியது. பொன்விழா நினைவாக பாவலர் துரையப்பாபிள்ளை ஞாபகார்த்த மண்டபம் திறந்து வைக்கப்பட்டது. 1961ல் மீண்டும் மகாஜனக் கல்லூரி உதைபந்தாட்டக் குழு முதலிடத்திற்கு வந்தது மட்டுமல்ல, பாடசாலையின் தரமும் அதி உயர் தரத்திற்கு உயர்த்தப்பட்டது. 1962ல் மீண்டும் உதை பந்தாட்டத்தில் முதலிடம் பெற்றது. இதே ஆண்டில் மகாஜனக் கல்லூரி அரசாங்கப் பாடசாலையாகப் பொறுப்பேற்கப்பட்டது. 1963ல் மகாஜனக் கல்லூரியில் இருந்து 38 மாணவர்கள் பல்கலைக் கழகத்திற்கு அனுமதி பெற்றனர், இதில் பத்து மாணவர்கள் மருத்துவ பீடத்திற்குத் தெரிவு செய்யப்பட்டனர். யாழ் மாவட்டத்திலேயே அதி கூடிய எண்ணிக்கையான மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெற்ற கல்லூரியாக மகாஜனக் கல்லூரி பெருமைப்பட்டது. 1964ல் முதலாவது உதைபந்தாட்டக் குழு யாழ் மாவட்டப் போட்டியில் முதலிடம் பெற்றது. இதைத் தொடர்ந்து பல வருடங்களாக விளையாட்டுத்துறைகளிலும், முத்தமிழ் போட்டிகளிலும் யாழ் மாவட்டத்தில் முன்னணிப் பாடசாலையாகத் திகழ்ந்தது. குறிப்பாக உடற்பயிற்சிப் போட்டி, உதைபந்தாட்டம், துடுப்பாட்டம், ஹொக்கி, நாடகப் போட்டி, அறிவியல் போட்டி, பேச்சுப்போட்டி என்று சகல துறைகளிலும் வியப்புறும் வகையில் தடம் பதித்தது. 1970ல் மகாஜனாவின் வைரவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அகில இலங்கைக்கான உதைபந்தாட்டப் போட்டியிலும், அறிவியல் போட்டியிலும் முதலிடம் பெற்றது. இந்த வருடத்தில் மகாஜன சிற்பி என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்பட்ட மதிப்புக்குரிய அதிபர் தெ. து. ஜெயரத்தினம் அவர்கள் ஓய்வு பெற்றுக் கொண்டார்.

உள்நாட்டு போர்ச் சூழ்நிலை காரணமாக 1990ல் தற்காலிகமாக அளவெட்டி அருனோதயா பாடசாலைக்கும், 1991ல் மீண்டும் பண்டைத்தருப்பு மகளிர் பாடசாலைக்கும் மகாஜனக் கல்லூரி புலம் பெயர்ந்தது. 1994ல் அங்கிருந்து மீண்டும் மருதனாமடத்திற்குப் புலம் பெயர்ந்தது. 1999ல் பல்லாயிரக் கணக்கான பழைய மாணவர்களின் ஆதரவுடன் மகாஜனா தனது சொந்த மண்ணிற்கே திரும்பி வந்து, இன்று நூற்றாண்டு நினைவை மகிழ்ச்சியோடு கொண்டாடிக் கொண்டிருக்கின்றது. பாடசாலை நாட்களில் தினமும் பாடசாலை வளாகத்தில் குடிகொண்டிருக்கும் சிவகாமி சமேத ஆனந்த நடராசப்பெருமானைப் பிரார்த்தித்த பின்தான் வகுப்புகளில் பாடங்கள் ஆரம்பமாவது மகாஜனாவின் தனிச் சிறப்பு அம்சமாகும்.

மகாஜனாவின் பழைய மாணவர் சங்கங்கள் இன்று கொழும்பு, கனடா, லண்டன், பாரிஸ், விக்ரோறியா, சிட்னி, நோர்வே, நியுசிலாந்து என்று பலவேறு நாடுகளிலும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. உலகெங்கும் பரந்திருக்கும் மகாஜனன்களின் உதவியோடு பாடசாலைக் கட்டிடங்களைப் புனருத்தாணம் செய்வது மட்டுமல்ல, புதிய கட்டிடங்களும் கட்டி எழுப்பப்படுகின்றன. மகாஜனா இன்று கல்வியில் மட்டுமல்ல, விளையாட்டுத்துறையில், இணைப்பாடவிதானத்தில் தேசியமட்டத்திலும் பல பரிசில்களை பெற்றுக் கொண்டிருக்கிறது.

நூற்றாண்டை முன்னிட்டு ஆய்வரங்குகள், கண்காட்சிகள், கலை விழாக்கள், வைத்திய முகாங்கள், புத்தக வெளியீடுகள், விளையாட்டுப் போட்டிகள், இடம் பெயர் மாணவர்களுக்கான உதவிகள், நூற்றாண்டு நினைவு மலர் வெளியீடுகள், நூற்றாண்டு நினைவு தபாற்தலை வெளியீடுகள், பழைய மாணவர்களின் நூற்றாண்டு நினைவுச் சமர்ப்பணங்கள், ஒன்றுகூடல்கள் போன்ற பல செயற்திட்டங்கள் மகாஜனக் கல்லூரியாலும், பழைய மாணவர் சங்கங்களாலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. நூற்றாண்டு நிறைவைமுன்னிட்டு, பழைய மாணவர் சங்க கனடா கிளையினரும் அனைத்து மாணவர்களுக்கான கணித, பொது அறிவுப் போட்டிகள் நடத்த முன்வந்திருக்கின்றார்கள். ஏற்கனவே இராப்போசன விருந்துடன்கூடிய ஒன்றுகூடலோடு, மகாஜனன் நூற்றாண்டு நினைவு மலரும், நூற்றாண்டு நினைவு தபால் தலையும் வெளியிட்டிருக்கிறார்கள். தனிப்பட்ட முறையில் பல பழைய மாணவர்கள், குறிப்பாக எழுத்தாளர்கள் தமது நூல்களை மகாஜன மாதாவிற்குச் சமர்ப்பணம் செய்திருக்கிறார்கள் என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

kuruaravindan@thaiveedu.com

■ ■ ■

N.K.S
Drapery & Blinds Fabric LTD



திறமையான சேவையால் பல விருதுகளை பெற்ற நிறுவனம்

உங்கள் வீட்டுக்குனுத் தேவையான சகலவித யன்னல் திரை வகைகளையும், கேட்டின் துணி வகைகளையும் மிகவும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ள அழையுங்கள்.

கேதா நடராஜா
416.321.6420

Ketha Nadarajah
(President)
Tel: 416.321.6420, 905.944.0218
Fax: 416.321.2217
www.nksdrapery.ca


Drapery & Blinds Fabric Ltd., 210 Silver Star Blvd., Unit #825, Scarborough, ON M1V 5J9



# மனம் விரும்பியது போல் வீடு வாங்க, விற்க அழையுங்கள்

**Great Deals For Buyers**

**Eglinton/Bathurst**




**$34,300**
Sale Of Business, Demand Location!! Newly Renovated,Opportunity To Own Style Restaurant.

**Torbram/Sandalwood**




**$269,900**
Att/Row/Twnhouse 2-Storey, 3 Bedrooms, 3 Washrooms

**Morningside/Hwy 401**



**$349,900**
Detached 2-Storey, 3+3 Bedrooms, 4 Washrooms

**Gore Rd/Tyler**



**$374,800**
Detached 2-Storey, 3 Bedrooms, 3 Washrooms

**Cottrelle And The Gore Road**



**$429,900**
Detached 2-Storey, 3 Bedrooms, 3 Washrooms

**Taunton/Salem**




**$449,000**
Detached 2-Storey, 4 Bedrooms, 4 Washrooms

**The Gore/Ebenezer**



**$729,000**
Detached 2 Storey, 4 Washrooms, 4 Bedrooms, Lots Of Upgrades

**Sale of Business - Brampton**



**$39,000**+ Stock
Sandalwood / Vankirk
Price Reduced!!!!
3 Years New

**Warden / Lawrence**




Sold for 102% of asking Price
**I Need More Listings!!!!**

**For Sale - Toronto**




Sold for 109% of asking Price
Yonge/Finch

**For Sale - Brampton**





**$289,900**
North Park/Nuffield
3+1 Bdrm, 3 Wrm, Great Location, Basement Fin.

**For Sale - Brampton**





Sold for 100% of asking Price
Willms Pkwy/Royal Orchard

**Keele/Finch**





**$179,000**
Condo Apt.

**Kennedy/Eglinton**





**$179,000**
Condo Apt.

**Hwy 10/Bovaird**




**$279,000**
Semi-Detached 2-Storey

**Centennial/Lawrence**




**$403,200**
Detached 2-Storey

**Bovaird/Worthington**




**$439,000**
Detached 2-Storey

**The Gore/Ebenezer**




**$548,000**
Detached Bungalow

**Markham Rd/Bur Oak**




**$564,000**
Detached 2-Storey

-digi Media-

## Call before you list, See the Difference!!!




**Sathy Sivasubramaniam**
Sales Representative
Dir: **416-624-5044**
homelifesathy@gmail.com
www.homelifesathy.com

HomeLife Higher Standards

**Ruby Thambiah**
Sales Representative
Dir: **416-999-5337**
rubysri@hotmail.com
www.buyandsellwithruby.com




**HomeLife**/Future Realty Inc. Brokerage | Independently Owned and Operated | 205-7 Eastvale Drive, Markham, ON L3S 4N8 | Tel: 905-201-9977 Fax: 905-201-9229



## ONE STOP SOLUTION FOR ALL YOUR **MORTGAGE** NEEDS


**Nithy Sathyakumar**, AMP
Mortgage consultant, Lic #M08008999
**BonaFide Mortgage Solutions**
Direct: **416 728 2454**
E-mail: nithy.s@bmsic.com
Fax: 416 548 7496


BonaFide Mortgage Solutions Inc.

## காதல் வாழ்க்கை - 11

# மனைவியை விட்டுப் பிரியாத கணவன்

வி. கந்தவனம்

இக்காலத்தைப் போலவே அக்காலத்திலும் இல்லற வாழ்வில் தலைவனும் தலைவியும் எப்பொழுதும் ஒன்றாக இருக்கும் வாய்ப்புக்கள் இருப்பதில்லை. பொருள், காவல், கல்வி காரணமாகத் தலைவன் தலைவியைப் பிரிந்து செல்லவேண்டிய நிலைமைகள் ஏற்படுவதுண்டு. பொருள் ஈட்டும்பொருட்டுப் பிரிதலே பெருவழக்காக இருந்தது.

'பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை'. இல்லறத்துக்குப் பொருள் வேண்டும். இல்லறத்தில் இருப்பவரே துறவிகளுக்கும் ஏழைகளுக்கும் முதியோர்க்கும் துணையானவர். இவ்வித அறங்களைச் செய்வதற்கும் குடும்பத்தைப் பேணுவதற்கும் வேண்டிய பொருளைத் தேடுதல் சங்க காலத்தில் தலைவனின் முழுப் பொறுப்பாக இருந்தது.



ஒரு தலைவன். அவனுக்குப் பொருள் தேடுவதற்கு வேண்டிய தகைமைகள் யாவும் இருந்தன. ஆனால், அதற்குரிய நாட்டம் இருக்கவில்லை. காரணம், அவனுக்குச் சில காலத்துக்கு முன்னரே திருமணம் நடந்திருக்கின்றது. மனைவியை விட்டு இதுவரை அவன் பிரிந்தது கிடையாது. இனியும் பிரிவதாக இல்லை.

அவளின் அழகும் அன்பும் அவனை அவ்வளவுக்குக் கட்டிப்போட்டிருந்தன. அவனும் அவளைக் காதலித்தே மணம் முடித்திருக்கின்றான். அவளுக்குப் பக்கத்திலேயே எப்பொழுதும் இருக்கவேண்டும் என்று அவனது காதல் நெஞ்சம் அங்கலாய்த்துக் கொண்டிருந்தது.

ஆனால், அவன் நடத்துவதோ தனிக்குடித்தனம். திருமணத்தோடு வந்து குவிந்த பொருள்களெல்லாம் தீர்ந்துவிட்டன. எத்தனை நாட்களுக்குத்தான் பெற்றோர் வளத்தில் வாழ்வது? 'போ, பொருள் தேடப் போ' என்று தூண்டியது அவனது உள் மனம்.

கடமைப் படவும் கருத்தில்லை. கட்டியவளை விட்டுப் பிரியவும் விருப்பில்லை. சில நாட்களாக அவனது மனம் அவனுடன் போராடிக்கொண்டிருந்தது. கடைசியிலே ஒரு முடிவுக்கு வந்தவனாகத் தனது நெஞ்சுக்கு இப்படிச் சொன்னான் தலைவன்:

'நெஞ்சே, நீ நெடுங்காலம் வாழ்வாயாக! தலைவியுடன் கூடி மனையிலே இருப்பேனாயின் தலைவியைத் தழுவும் இன்பத்தைப் பெறலாமேயன்றிப் பொருளைப் பெற முடியாது. தலைவியைப் பிரிந்து பொருள் தேடிக் செல்வேனாயின் பொருளை ஈட்டலாமேயொழியத் தலைவியைக் கூடிப் பெறும் இன்பத்தை அடைய முடியாது. ஆதலால், இவ்விரண்டினையும் சீர்தூக்கிப் பார்க்கின்றபொழுது, தலைவியைப் பிரிந்தாலென்ன பிரியாது போனாலென்ன நீ நல்லதையே செய்ய நினைக்கின்றாய்.

'ஆயினும், எனக்குத் தெரிந்த அளவில் தலைவியைப் பிரிந்து திரட்டும் பொருளோ வாடாத மலரையுடைய பொய்கையிலே ஓடுகின்ற மீன் செல்லும் வழியைப் போல இருந்த இடம் தெரியாமல் அழிந்துபோகும் தன்மையுடையது. ஆகவே, கடல் சூழ்ந்த அகன்ற உலகையே அளக்கும் மரக்காலாகக் கொண்டு, ஏழு மரக்கால்வரையில் அளக்கத்தக்க பெரும் செல்வத்தையே பெறுவேனாயினும் அதை நான் விரும்பேன். தலைவியின் செவ்வரி படர்ந்த குளிர்ச்சியுடைய கண்கள் இனிதாக நோக்கும் நோக்கால் என் ஆற்றல் அனைத்தையும் அழித்துவிட்டன. நான் அவளை விட்டுப் பிரியேன். பிரிந்து செல்வதால் வரும் பொருள் எத்துணைச் சிறப்புடையது ஆயினும் ஆகுக. அது எங்கு இருந்தாலும் வாழ்க!

நற்றிணையில் உள்ள இந்த அரிய பாடல் பின்வருமாறு:

புணரில் புணராது பொருளே பொருள்வயிற்
பிரியில் புணராது புணர்வே ஆயிடைச்
சேர்பினும் செல்லாய் ஆயினும் நல்லதற்(கு)
உரியை வாழி என் நெஞ்சே பொருளே
வாடாப் பூவின் பொய்கை நாப்பண்
ஓடுமீன் வழியின் கெடுவ யானே
விழுநீர் வியலகம் துணி யாக
எழுமாண் அளக்கும் விழுநிதி பெறினும்
கனங்குழைக்கு அமர்த்த சேயரி மழைக்கண்
அமர்ந்தினிது நோக்கமொடு செகுத்தனன்
எனைய ஆகுக வாழிய பொருளே.

(நற்றிணை 16)

சிறந்த கருத்துள்ள பாடல் இது. வித்தியாசமானதுங்கூட. காதலா பொருளா என்று தலைவனின் உள்ளம் ஒரு பட்டிமன்றமே நடத்தி விடுகின்றது. முடிவில் நிலையற்ற பொருளிலும் காதலே மேலானது என்று அவனே தீர்ப்பளிக்கின்றான்.

தான் பிரிந்து சென்றால் மனைவி வாடுவாள் என்று தலைவன் கவலை கொள்கின்றான். 'பொருள் வயிற் பிரியில் புணராது புணர்வே' என்னும் அவனது கூற்றில், பொருளின் பொருட்டுப் பிரிந்தால், பிரிவை ஆற்றாது தலைவி உயிர் துறப்பாள் என்னும் கருத்தும் தொனிக்கிறது. அவ்விதம் நடந்தால், அவளை புணரும் புணர்ச்சி அதன் பின் தனக்குக் கிடையாது எனத் தலைவன் அஞ்சுவது தெரிகிறது.

இல்லானை இல்லாளும் வேண்டாள் என்பார்கள். இவளோ வித்தியாசமானவள். இல்லாது போனாலும் பரவாயில்லை என்னுடனேயே இரு. இல்லையென்றாள் உயிரை விடுவேன் என்பதுபோல நோக்குகிறாள்!

எந்நாளும் மனைவி பக்கத்திலேயே கணவன் இருந்தால் பொருளை எவ்விதம் தேடுவது? ஒரேயொரு வழிதான் உண்டு. பொருள் தேடும்படி மனைவி தூண்டும் வரை அவளைவிட்டுப் பிரியாது இருத்தல்.

> **"இல்லறச் சிறப்புக்கு, கணவன் மனைவியின் எண்ணத்தையும், மனைவி கணவனின் உள்ளத்தையும் குறிப்பால் அறிந்து அதற்கேற்ப நடப்பாராயின், தவறான எண்ணங்களுக்கும், சந்தேகங்களுக்கும், வாக்கு வாதங்களுக்கும் இடம் ஏது?"**

தலைவி கொடுத்து வைத்தவள். அவளுக்குக் கிடைத்திருப்பவன் குறிப்பு அறிந்து நடப்பதில் வல்லவன். இல்லறச் சிறப்புக்குக் கணவன் மனைவியின் எண்ணத்தையும், மனைவி கணவனின் உள்ளத்தையும் குறிப்பால் அறிந்து அதற்கேற்ப நடப்பாராயின், தவறான எண்ணங்களுக்கும்
சந்தேகங்களுக்கும்
வாக்கு வாதங்களுக்கும்
இடம் ஏது?



kandavanam.v@thaiveedu.com

VIN
KITCHEN & BATH
Design & Install



Custom & Refacing kitchens
Bath Vanities & Bars
Countertops

15 years experience
100% satisfaction guaranteed

For
free estimates and design
Call: Jey Kumar
647 388 3225
vinkitchen@gmail.com

இல்லறத்திற்கு அழகு அன்பான மனைவி & குழந்தைகள்
இல்லத்திற்கு அழகு அழகிய சமையலறை & குளியலறை


வீடு, வியாபாரம், காணி
வாங்க விற்க அழையுங்கள்!
Call Pat to Sell Your Home...for TOP DOLLARS
NEED MORE HOMES FOR BUYERS....
SOLD
SOLD
SOLD
SOLD
EXPERIENCE!
COMMITMENT!
RESULTS!
Top Producer
7 Years*
East scarborough
BRAND NEW HOME
3BM 3 WSRM
Stoufville
Detached 4 bm/3 wsrm
newer home 429 000/-
Markham/ buroak
Executive home
4 bm/ 4wsrm
Markham/ Bur oak
4 bm/ 3wsrm
$499 900/-
Pat Pushpakanthan
Real Estate BROKER
CENTURION AWARDS 6 yrs
Top producer 7 years
Masters Hall of Fame 07
Markham Rd/ Bur oak
3 bm 3 wsrm home
389 000/-
Stoufville
Detached home
4 bm/ 3 wsrm 439 000/-
Mccowan/ steeles
3 bm/ 4 wsrm bsmnt
apt Sep entrance
399000/-
KENNEDY/ ELLESMERE
3 BM CONDO APT FR SALE
$139 900
Century 21
AFFILIATE REALTY INC.
80 CORPORATE DR. TORONTO, ONT. M1H 3G5
416-290-1200
416-894-1187
416 490 7653 (SOLD)
email: rpushpakanthan@trebnet.com
Scarborough Central
Detached home
3 bm, sep entrance
Bsmnt apt
Scarborough
Det home
210 000/-
Kennedy/ Ellesmere
2 bm condo
apt
129 000/-
Ellesmer/b'mount
Luxurious Tridel Condo
2 bm/ 2 wsrm
Retail location for
sale or Lease
Markham/ steeles
Business
Successful Textile
southasian for sale in
Scarrborough
Scarborough Det
home 3bm
3 wsrm bsmnt fin-
ished 295000/-
Scarborough east
3 bm/ 3wsrm
260000/-
Mccowan/ Highglen
4 bm 7 wsrm
3 kitchen Luxuary
home
Kennedy/ Steeles
3 bm 4 wsrm
Bsmnt apt
Business
Bar fr sale
Excellent in-
come
Markham/Denison
Retail Location for Sale
or Lease close to
cotsco canadian tire and
Home depot
Mortgage 2.25% Refinance also..
Your SOLE Agent
This certificate entitles you to a complementary
market analysis of your home's current value

### இது ஓர் ஈழத்துக் கலைஞர்களின் பதிவுத் தொடர் - 5

# ஆழத்து முத்துக்கள்

நாங்கள் எங்கள் வரலாற்றை எழுதவில்லை. பாரம்பரியம் என்பது பேச்சோடு நின்று விடுகிறது. நாங்கள் எதையுமே பேணிப்பாதுகாப்பதில்லை. மன்னன் சாஜஹான் காலையில் என்ன உணவு அருந்தினான் என்று தொடங்கி அத்தனையும் பதிவு செய்யப்பட்டன என்று ஒரு பத்திரிகையாளரான நண்பர் சொன்னார். அந்தளவு இல்லையென்றாலும் எங்கள் வாழ்வு, எங்கள் மக்கள், எங்கள் கலைஞர்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்படவேண்டும். பதிவு செய்யப்படவேண்டும்.

இந்த நோக்குடன் "தாய்வீடு" பத்திரிகை எங்கள் ஈழத்து மண்ணின் கிராமங்களில், ஊர்களில் வாழ்ந்த பிரபலமடைந்தவர்களுடன், தெரியப்படாமல் போய்விட்ட எங்கள் கலைஞர்களைப் பற்றியும் எழுதும்படி வேண்டுகோள் விடுக்கிறது. கட்டுரைகளை சுருக்கமாக, எழுதி அனுப்புங்கள். களம், 'தாய்வீடு' தரக்காத்திருக்கிறது. கருத்து உங்களுடையது. கட்டுரைகளை செதுக்கி சொற்சித்திரங்களாக்கும் பொறுப்பு எங்களுடையது.

*K.S.* பாலச்சந்திரன்

## இசை நாடகக் கலைஞன் அரியாலையூர் செல்வம்



ப.ஸ்ரீஸ்கந்தன்

நான் இன்னும் பாதுகாப்பாக வைத்திருக்கும் ஒலி நாடாக்களில் ஞானம்ஸ் ஒலிக்கூடத்தில் பதிவு செய்யப்பட்ட காங்கேசந்துறை வசந்த கான சபாவினரின் 'மயான காண்டம்', இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தால் தயாரிக்கப்பட்ட வி.வி. வைரமுத்துவின் மணிவிழா சிறப்பு நிகழ்ச்சி மற்றும் அரியாலையூர் செல்வம் என்ற செல்வரத்தினம் அவர்களின் நாடக மேடைப் பாடல்கள் என்பன குறிப்பிடத்தக்கவை.

'பாலன் இறந்த இடம் இதுதானோ –<br>
எந்தன்<br>
சீலன் மடிந்த இடம் இதுதானனோ<br>
ஆலமரம் என்பதும்....."

ஏன்ற பாடலுடன் சந்திரமதியாக பாம்பு கடித்து இறந்த தன் மகனைத் தேடியவாறு அவர் கானகம் செல்கின்ற அந்தக் காட்சி இன்றும் கண்ணுக்குள் நிற்கிறது.


'அப்பா மகளே நான் பாவி<br>
அரசே உனது மகள் - நொந்து<br>
அழுவதும் கேட்கவில்லையோ..."

என்று கையிழந்த ஞான சௌந்தரியாக அவர் அழுது புலம்புகின்ற காட்சி கல்லையும் கரையவைக்கும்.

அவர் தான் செல்வம் என்று இசை நாடக உலகில் அறியப்பட்ட அரியாலையூர் செல்வரத்தினம் அவர்கள் இசை நாடகத்தில் பெண் வேடம் என்றால் செல்வம் என்று பேசப்படும் அளவுக்கு மனப் பதிவைத் தந்தவர்.

தற்போது 62 வயதைத் தாண்டிய செல்வம் அவர்கள் தனது 12 ஆவது வயதில் வி.வி. வைரமுத்துவின் நாடகங்களில் தோழிப் பாத்திரங்களை ஏற்று வந்தார். இதற்கு முக்கிய காரணம், அந்நாளில் வைரமுத்து அவர்களுடன் சந்திரமதியாக வேடமேற்று வந்த சோக சோபித சொர்ணம் கவிக்குயில் ரத்தினம் அவர்கள் செல்வம் அவர்களின் அண்ணன் என்பதாகும்.

இவரது வயதை நோக்கின் ஒரு 50 வருடகாலத்தை இசை நாடக உலகிற்கு இவர் அர்ப்பணித்திருக்கிறார். அரியாலை கலைமகள் நாடக சபாவினரால் மேடையேற்றப்பட்ட கன்னிக்கோட்டை, பதவி மோகம், வள்ளித் திருமணம் போன்ற நாடகங்களை மூலம் பிரதான பாகம் ஏற்று நடித்த செல்வம் அவர்கள்



அரியாலை சுதேசிய விழா நாடகங்களிலும் முக்கிய வேடம் ஏற்று நடித்துள்ளார். ஆயினும், நடிகமணி வி.வி. வைரமுத்து அவர்களுடன் இணைந்து ஏற்றுக்கொண்ட பாத்திரங்களே செல்வம் அவர்களுக்கு பெருமை சேர்த்தன. பெண்ணுக்கான குரல் வளமும் பாடும் திறனும் இசை நாடகங்கள் பற்றிய அறிவும் இதற்கு முக்கிய காரணிகளாக அமைந்தன. பின்நாட்களில் வி.என்.செல்வராசா, வி.டி.செல்வராசா நற்குணம், அரியாலையூர் பொ. சண்முகலிங்கம் ஆகியோருடன் இணைந்து நடித்த இசை நாடகங்கள் இவரது புகழுக்கு மேலும் மெருகூட்டின.

கலைஞர் செல்வம் ஏற்ற பாத்திரங்களில் சந்திரமதியே மிகப் பெரிய அளவில் பேசப்பட்டது. கொழும்பு, கண்டி, பதுளை என்று இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் மொத்தமாக ஆயிரம் தடவைகளுக்கு மேல் இவர்' சந்திரமதியாகத் தோன்றிய மயான காண்டம் மேடையேறியது. ஈழத்து நாடக உலகில் ஒரு சரித்திரம். அந்நாடகத்தில் பொன்னிற மேனியுடன் அரையில் ஒரு கரிய துண்டுடன் 'பிறந்ததும் மண்மேல்...' என்று தொடங்கும் நடிகமணியின் அபார பாடும் திறனும் நடிப்பும் பிறிதொரு சரித்திரம்.

செல்வம் அவர்கள் சந்திரமதியாகத் தோன்றிய மயான காண்டம் நாடகமே அதிகளவில் மேடையேறியது. எனினும் அவர் வேறு பல நாடகங்களில் பெண் பாத்திரங்கள் ஏற்று நடித்துள்ளார். அவற்றில் சாவித்திரி, ஞானசவுந்தரி, மூளி அலங்காரி, ஊர்வசி, அல்லி, பவளக்கொடி, நல்லதங்காள், கண்ணகி என்பன குறிப்பிடத்தக்கவை.

பேராசிரியர் வித்தியானந்தன் மூலமாகவே இலங்கையின் பல பாகங்களிலும் தனது நாடகங்கள் மேடையேறியதாக குறிப்பிடும் இவர் கண்டியில் வட்டக்களரி அரங்கிலும் நாடகம் செய்துள்ளார். இலங்கை வானொலியில் பல நிகழ்ச்சிகளை அளித்துள்ள இவர் நடித்த மயான காண்டம் இலங்கையில் தயாரிக்கப்பட்ட நிர்மலா என்ற திரைப்படத்தில் ஒரு காட்சியாக ஒளிபரப்பானது.

செல்வம் அவர்களுடன் பேசுவது ஒரு அலாதியான அனுபவத்தைத் தரும். பெண்பாத்திரத்திற்காக தன் வாழ்நாள் முழுவதும் அரிதாரம் பூசிய அவர் பெண்ணின் நளினத்துடனும், மென்மையான குரலிலும் நிஜ வாழ்விலும் பேசுவார். நடிகமணி பற்றி அண்ணன் நவரத்தினம் பற்றி, மேடையில் நடந்த சுவாரஸ்யங்கள் பற்றி, நாடகத்துக்குச் செல்லும் வழியில் இடம்பெற்ற சம்பவங்கள் பற்றி நிறைய நிறைவான விடயங்கள் இவரிடம் உள்ளன.

தொலைபேசி போன்ற தெலைத்தொடர்பு சாதன வசதிகள் குறைந்த அந்தக்காலத்தில் யாழ் மாவட்டத்தில் வெவ்வேறு திக்குகளில் (காங்கேசன்துறை, அரியாலை) இருந்த இந்த இசை நாடகக் கலைஞர்கள் ஆயிரத்துக்கும் அதிகமான நாடகங்களை மேடையேற்றினார்கள் என்பது அபூர்வமான சங்கதியாகும். அதிலும் செல்வம் அவர்கள் பகலெல்லாம் தன் தொழில் செய்துவிட்டு இரவில் நடிப்பது என்பது சுலபமானது அல்ல. அவர் இசை நாடகம் மீது கொண்ட பக்தியை ஏப்ரல் 20 2004 காலம் சஞ்சிகைக்கு அளித்த பேட்டி சிறப்பாக விளக்கும்.

"எனக்கு அப்ப வறுமை இருந்தது. ஒரு உடுப்பை மட்டும் உடுக்கின்ற நிலைமை இருந்தது. இந்த நிலைமையில் அங்க மேடையில் நிற்கும் போது சனம் ஏற்படுத்துகின்ற உற்சாகத்தைப் பார்க்கும் போது ஒரு இலட்சம், இரண்டு இலட்சம் வீட்டில் இருக்கின்ற மாதிரி நினைப்பேன்."

"தற்போது உடல் வருத்தம். எனினும் கடைசி மட்டும் நாடகம் செய்ய வேண்டும். களைத்து விழுந்தாலும் மேடையில் தான் என் உயிர் போகவேண்டும் என்பதுதான் எனது ஆசை"

இந்த மாபெரும் இசைக் கலைஞனை இதுவரை யாரும் கௌரவித்தார்களா என்பது எனக்குத் தெரியாது. ஆனால், செல்வம் அவர்களைப் போல் ஒரு 50 வருடகாலமாக பெண்ணாக அரிதாரம் பூசி மேடையேறி, பல்வேறு இசைப் பாடல்களைப் பாடி பார்ப்போரை உருக வைக்கும்படி நடித்து தற்போது எம்மண்ணில் அருகி வரும் இசை நாடகத்திற்கு உயிர் கொடுத்து வந்த இவர் போல இனி ஒரு கலைஞன் பிறப்பாரா என்பது சந்தேகமே.

sriskanthan.p@thaiveedu.com

■ ■ ■

## இலங்கைத் தமிழ்த்திரைப்பட முதல் கதாநாயகி ஜெயகௌரி

இலங்கைத் தமிழ்த்திரைப்பட முதல் கதாநாயகி ஜெயகௌரி.

இலங்கையில் முதல் முதலில் தயாரிக்கப்பட்ட தமிழ்ப் படத்தின் பெயர் 'சமுதாயம்' என்பதாகும். இத்திரைப்படம் 16 எம்.எம். படச் சுருளில் எடுக்கப்பட்ட திரைப்படம். இத்திரைப் படம் திரையரங்குகளில் திரையிடப்படவில்லை! பாடசாலைகளிலும் மண்டபங்களிலுமே திரையிடப்பட்டது. நடிப்புத் துறைக்கு பெண்கள் வருவது கௌரவக் குறைவாக கருதப்பட்ட அன்றைய நாட்களில் இலங்கையில் தயாரிக்கப்பட்ட முதல் தமிழ் திரைப்படத்தில் நடித்த நடிகை என்னும் பெருமைக்குரியவர் திருமதி ஜெயகௌரி அவர்கள்.

ஐநூறுக்கும் மேற்பட்ட மேடை நாடகங்களிலும், மற்றும் தொலைக்காட்சி நாடகங்களிலும் பல தரப்பட்ட வேடங்களில் நடித்து நடிப்பில் தனக்கென்று ஒரு தனியிடம் பெற்ற ஜெயகௌரியின் கலைப் பயணம் தொடர்ந்து பயணித்துக் கொண்டிருக்கிறது.

இவருடைய கலைப் பயணத்தின் ஆரம்பம் 1957ம் ஆண்டு 'கவின் கலை மன்றம்'' தயாரித்த



பொம்மலாட்டம் நாடகமே. இவரை மேடைக்கு கொண்டு வந்தவர்கள் ஜே.பி.றொபர்ட், ஜோன்-சாமிநாதன் ஆகிய நாடகக் கலைஞர்களாவர்கள். தொடர்ந்து புகழ் பெற்ற கலைஞர்களான ''நடிகவேள்'' லடீஸ் -வீரமணி, வரணியூரான் கணேசபிள்ளை, நடிகர் என்.தாலிப், கெலயன் பேர்னாண்டோ, வேல் முருகன், நாகராஜன் போன்றவர்களும் தங்கள் நாடகங்களில் இவரை நடிக்கவைத்தார்கள்.

இவர் நடித்த மேடைநாடகப்பட்டியல் மிக நீண்டது. கவின் கலை மன்றத்தின் 'எழுத்தாளன் காதலி'' கவிஞர் நுவனின் 'நூதன லஞ்சம்' நாடக திரைப்படக் கலைஞர் பி.எஸ். கிருஸ்ணகுமாரின் 'மார்த்தாண்டபுரி மகாராணி' கே.எஸ் துரைசிங்கத்தின் 'அன்புச்சுடர்', வரணியூரான் கணேசபிள்ளையின் 'சங்கிலியன்' (இந்த நாடகத்தில் சங்கிலியனாக நடித்தவர் தினக்குரல் பத்திரிகையின் நிர்வாகப் பொறுப்பாளரான திரு.எஸ்.பி.சாமி அவர்கள்) கலை வாணர் மன்றத்தின் 'தீச்சுடர்' மனோரஞ்சித கலா மன்றத்தின் 'கலிங்கத்துக் கைதி' லடீஸ் வீரமணியின் 'தாய் நாட்டின் எல்லையிலே' 'மானம் காத்த மறவன்' ஆகிய நாடகங்களெல்லாம் இவருக்கு பெரும் புகழைத் தேடிக்கொடுத்தவையாகும். இவை தவிர வானொலி திரைப்படங்களில் புகழ் பெற்ற கலைஞரான ரொசாரியோ-பீரிஸின் 'ஒரு மின்னல்' திரையுலகில் புகழ் பெற்ற கமெராக் கலைஞராகவும் இயக்குனராகவும் இருந்த லெனின்-மொறாயசின் 'நீ இல்லையேல்' 'வாழாதே'' நாடக நெறியாளர் சுகைர் - கமீட்டின் 'பொம்மலாட்டம்' 'நகரத்துக் கோமாளிகள்' போன்ற நாடகங்களிலும் நடித்த இவர், பல்லாயிரக் கணக்கான நேயர்களின் இதயங்களில் இடம்பிடித்த 'தணியாத தாகம்' வானொலி நாடகத்தின் இயக்குநர் கே.எம். வாசகருடன் இணைந்து 'வாழாதே' என்னும் நாடகத்தில் கதாநாயகியாகவும் நடித்திருக்கின்றார்.

இவர் மனோரஞ்சித கான சபாவின் நாடகங்களில் நடித்துக் கொண்டிருந்த காலகட்டத்தில் இன்று நாடறிந்த நாடக நெறியாளரான கலைச்செல்வன், இவருடன் சிறுவனாக நடித்திருக்கின்றார். பின்னாளில் கலைச்செல்வன் இயக்கிய 'எதிர்நீச்சல்' நாடகத்தில் இவர் முக்கிய பாத்திரத்தில் நடித்திருக்கின்றார்.

97ம் பக்கம் பார்க்க...


Thinking of
Buying or Selling
$320,000
B/R 3, W/R 3
Sandalwood/Edenbrook
Brampton
$399,999
B/R 3+2, W/R 4, Kitch 2
Apt-Sep Entrance
Markham/14th Ave
$259,000
B/R 2+1, W/R 3
Markham/16th Ave
$147,800
B/R 2+1, W/R 1
Neilson/Mclevin
Scarborough
$155,100
B/R 2, W/R 1
Kennedy/Hwy 401
Scarborough
$34,300 For Sale
Restaurant
Eglinton/Bathurst
Toronto
$79,900 For Sale
Automotive Related
Rutherford/Glidden
Brampton
* Complimentary Evaluation of Your Home
* Written cancellation guarantee
* Professional Home Staging
* Guarantee advertising
* Public Open House
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife/Future Realty Inc.,
Brokerage*
205-7 Eastvala Drive, Markham Road, Ontario L3S 4N8
B: 905.201.9977 F: 905.201.9229
Raja
V.S. Rajagopal
Sales Representative
Dir : 416.727.8647
Email : sinnahrajagopal@gmail.com
www.sinnarajagopal.com
*Independently Owned and Operated, REALTOR
MLS
printed in apex-416-297-0707
Also Contact in Regards to Investing in Newly Built
HOMES - CONDOS - COMMERICAL

**வீடு, காணி** (Residential Properties and Land)

**வர்த்தகவியல்** (Commercial, Corporate and Business)

**சகல வங்கிகளுடைய பலவிதமான ஈடு** (Mortgages) **மற்றும்**

**சமரசத் தீர்வுகள்** (Dispute Resolution)

**சம்பந்தப்பட்ட துல்லியமான சட்ட தேவைகளுக்கு நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய சட்ட நிலையம்.**

# யசோ சின்னத்துரை

கனடிய சட்டத்தரணி

**மூன்று சகாப்தத்திற்கு மேலான சட்ட அனுபவம்**

**கனடாவில் 16 வருடங்கள் ஆழ்ந்த அனுபவம் நிறைந்த சேவை.**

**The Law Offices of:**

# Yaso Sinnadurai

Barrister and Solicitor, Notary Public

**OVER 16 YEARS OF CANADIAN EXPERIENCE**

in the areas of Residential and Commercial Real Estate Law and Business and Corporate Law.

❖ **Real Estate Law Residential and Commercial**
- Purchase and Sale of Properties • Title Transfers
- Mortgages, Refinancing and Mortgage Enforcements Issues

❖ **Business and Corporate Law**
- Purchase, Sale, Transfer of Business Assets/Shares
- Lease Review and Representation
- Incorporation, Partnership and Shareholders Agreements

❖ **Alternative Dispute Resolution (ADR)**
- Conflict resolution by ADR on all civil matters

Please call for appointments:

**416.265.3456**

**2100 Ellesmere Road, Suite 202, Scarborough**

**POSITIONS AVAILABLE:**

**For Junior Secretary, Senior Legal Secretary and/or Law Clerk positions, experienced in Real Estate Law.** Interested applicants are invited to mail or fax your resume with handwritten cover letter to 416.265.-2770. (We thank all applicants and shall contact

**OUR MISSISSAUGA CONSULTATION OFFICE IS NOW RELOCATED TO**

**3024 HURONTARIO ST., SUITE 216**

**Consultation always by appointment; call 416-265-3456. If late for appt. pl. call 905-306-1100**

எமது மிசிசாகா அலுவலகம் முன்பு இருந்த நிலையத்திற்கு
அருகாமையில் உள்ள கட்டிடத்திற்கு
மாற்றப்பட்டு உள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

# ஆழத்து முத்துக்கள்...

94ம் பக்கத் தொடர்ச்சி...

இன்று இவரது மகள் பிரியங்கா அவர்கள் கலைச்செல்வனின் நாடகங்களில் நடித்து-வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவரைப்பற்றி இவரே சொல்வது...

'மனம் விட்டு பேச எவ்வளவோ இருக்குங்க' அப்பா பெயர் அப்புக்குட்டி. அம்மா கல்யாணி. நான் பிறந்தது வளர்ந்தது எல்லாமே கொழும்பு தெமட்டகொடை தான்.

தெமட்டகொடை மாளிகாகந்த கலவன் பாட சாலையில்தான் நான் ஆரம்ப கல்வியை கற்றேன். அந்த நாட்கள் எனக்கு அவ்வளவாக ஞாபகத்தில் இல்லை. அதன்பிறகு எனது படிப்பை கப்பிகாவத்தை தொண்டர் வித்தி-யாலயத்தில் தொடர்ந்தேன். அந்த பாடசாலை-தான் எனது நடிப்புக்கு முதல் மேடை போட்டது.

பாடசாலையில் அண்ணாவியார் மாஸ்டர் தான் எங்களுக்கு நாடகம் பயிற்றுவிப்பார். எனக்கு அப்போது எட்டு வயதிருக்கும். ராமா-யணம் நாடகத்தில் எனக்கு ராமர் வேடம் கிடைத்தது. அதில் சிறப்பாக நடித்ததால் எல்லோரும் என்னை பாராட்டினார்கள்.

அதன் பிறகு 1957ல் பஞ்சிகாவத்தையில் முகம்மது நபியவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கவின்கலை மன்றத்தின் வெளியீ டாக ஜே. பி. ரொபட், ஜோன் சாமிநாதன் ஆகியோரின் 'நூதன லஞ்சம்' நாடகத்தின் மூலம் கதாநாயகியாக அறிமுகமானேன். அந்த நாடகத்தைத் தொடர்ந்து எனது நடிப்பாற்ற-லுக்கு நிறையவே வளர்ப்புக்கள் கிடைத்தன. தினக்குரல் அதிபர் எஸ். பி. சாமியோடு சங்கிலியன் நாடகத்தில் நடித்தேன். அந்த நாடகத்தை வரணியூரான் எழுதியிருந்தார். அதில் சாமி, சங்கிலியனாகவும், நான் சங்கிலி தேவியாகவும் நடித்திருந்தோம்.

எனது அப்பா அப்புக்குட்டியும் ஒரு நாடக நடிகர்தான். நாடகங்களில் அவர் பெண் வேடம்தான் அதிகமாக போட்டாராம்.

ஒருமுறை பத்திரிகையில் வெளிவந்த சமு-தாயம் படத்தில் நடிக்க நடிகைகள் தேவை என்ற விளம்பரத்தை பார்த்து விட்டுதான் நானும் அப்பாவும் ஹென்றி சந்திரவன்சவின் அலுவலகத்திற்குச் சென்றோம். அவர் அப்பா-வின் உறவுக்காரராம்.

பிறகென்ன சமுதாயம் படத்தில் நான் நாயகி. எஸ்.என். தனரெத்தினம் கதாநாயகன். பாட-சாலை விடுமுறை நாட்களில் படப்பிடிப்புக்கு செல்வேன். அந்த நேரத்தில் தோட்டக்காரி படத்தின் படப்பிடிப்பும் நடைபெற்று வந்தது. ஆனாலும் சமுதாயம் தான் முதலில் வெளி யாகியது.

சமுதாயம் படத்தின் சிறப்புக் காட்சிக்காக எனது குடும்பத்தினருடன் சென்றேன். திரை-யில் எனது முகம் வந்ததும் வார்த்தையால் விபரிக்க முடியாத ஒரு மகிழ்ச்சி! எனது வாழ்க்கையில் நான் ரொம்பவும் மகிழ்ச்சியாக இருந்தது அந்த சந்தர்ப்பத்தில்தான்.

தமிழகத்தில் இன்று பிரபலமாக விளங்கும் பலருடன் நான் நாடகங்களில் நடித்திருக்கி-றேன். இன்று சென்னையில் மதுரா டிரவல்ஸ் நடத்திவரும் வீ. கே. டீ. பாலனுடன் 'பேசும் விழிகள்', எஸ்.எஸ். சந்திரனுடன் 'தீச்சுடர்' என்று ஒரு பெரிய பட்டியலே போடலாம். என்று தமது கலைப் பிரவேசம் பற்றி சொல்லி முடித்தார் ஜெயகௌரி.

"சமுதாயம் படத்தில் நடித்து படம் வெளி-யாகியதும் எனக்கு பாடசாலையில் செல்வாக்கு எகிறிவிட்டது. என்னை சுற்றி ஒரு கூட்டமே இருக்கும். நான் நடித்த காட்சிகளை நடிக்கச் சொல்லி கேட்பார்கள். பாடசாலையில் நானும் நடித்து காட்டுவேன்.

ஆனால் நான் சினிமாவில் நடிப்பதை எனது குடும்பத்தினரும் விரும்பவில்லை. நாடகங்கள் என்றால் பரவாயில்லை. ஒரே நாளில் முடிந்து விடும் என்று நாடகத்தில் நடிக்கச் சொன்-னார்கள்.

ஒரு நாடகத்தில் நடிக்க ஐநூறு ரூபாய் வரை கொடுப்பார்கள். சில தயாரிப்பாளர்கள் அட்வான்ஸ் பணத்தோடு நிறுத்திக் கொள்-வார்கள். பாக்கிப் பணத்தை அப்புறம் தருகி றேன் என்பார்கள். அத்தோடு அந்த கதை முடிந்து விடும்...

ஒரு முறை ஜிந்துப்பிட்டி மோடிஹோலில் லடிஸ் வீரமணியின் 'வண்டரித்த மலர்' நாடகம் அதில் கதாநாயகனாக ஹிலேரியன் நடித்தார். நான் நாயகி. மேக்அப் செய்து கொள்ளும் அறை, மேடைக்குக் கீழே அமைந்-திருந்தது. அதற்கு செல்ல ஏணி வழியாக இறங்க வேண்டும். நான் மேக்கப் போடுவதற்-காக ஏணியால் இறங்கினேன். அவ்வளவு தான்! அடுத்த செக்கனில் ஏணியோடு மறு பக்கம் போய் விழுந்தேன். எல்லோரும் என்னை வந்து தூக்கினார்கள் உயிர் போகிற வலி. நாடகத்தை நிறுத்தலாம் என்று தயாரிப்பாளர் கூற நான் வேண்டாம் நடிக்கிறேன் என்று சொல்லி நடித்தேன். பார்வையாளர்கள் யாருக்கும் எனக்கு கால் முறித்த சம்பவம் தெரியாது. கொஞ்ச நேரத்தில் கால் வீங்கி விட நாடகம் முடிந்து விட்டது.

பிறகுதான் விடயம் பார்வையாளர்களுக்கு தெரியவர பாராட்டும் ஆறுதலும் எனக்குக் குவியத் தொடங்கியது. இந்த சம்பவத்தால் ஒருவருடம் நடக்கமுடியாமல் வீட்டிலேயே இருந்தேன்.

நல்லா படிச்சிருக்கலாம், தவறவிட்டுட்டேன். அப்புறம் இந்திய சினிமாவில் கிடைத்த வாய்ப்பு எமது குடும்பத்தாரின் பயத்தின் காரணமாக கை நழுவிப் போனது. இந்த இரண்டு விடயங்-களையும் இன்று நினைத்தாலுப் துக்கம் தொண்டையை அடைக்கிறது என்றுதான் சொல்வேன்."

அரை நூற்றாண்டு காலமாக கலைத்துறை-யில் ஈடுபட்டுவரும் இந்த நடிகையின் ஆற்ற லையும் ஆழுமையையும் கௌரவிக்கும் விதமாக 2002ம் ஆண்டு இலங்கை அரசின் தமிழ் நாடக விழாவின் பரிசளிப்பின்போது கௌரவம் வழங்க நாடக ஆலோசனைக்குழு முடிவு செய்திருந்தது. அந்த நேரத்தில் அந்த ஆலோசனைக் குழுவின் தலைவர் தனது பதவியை ராஜினாமா செய்த காரணத்தால் அந்த விழாவும் நடைபெறவில்லை ஜெய-கௌரிக்கு கௌரவமும் கிடைக்கவில்லை. தனது தங்கையான ப்ரியா ஜெயந்தியுடன் வாடகை வீட்டில் கஷ்டப்படுகிறார்.

**தகவல்: தமிழ்விசை (இணையம்), தினகரன் வாரமஞ்சரி.**

■ ■ ■

ஒவ்வொரு கிராமத்திலும் பல கலைஞர்கள் வாழ்ந்திருக்கின்றார்கள். அந்தந்தக் கிராமத்தின் வளற்சிப் பணிகளிலும் முன்னேற்றத்திலும் இவர்களின் பங்கு அழப்பரியது. ஆனால் சந்தர்ப்பம் சூழ்நிலை அவர்களை உலக-றியத் தவறிவிட்டது. கலைஞர்கள் நாட்டின் விடியலுக்காய் உழைப்பவர்கள். எங்கள் கிராமத்தின் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாய் வாழ்ந்தவர்கள். எம் ஈழத்துக் கலைஞர்களை நாம் கௌரவிப்போம், நினைவுகூர்வோம், உலகறியச் செய்வோம்.

உங்கள் கிராமத்தின் ஒவ்வொரு கலைஞர் பற்றிய விபரங்களையும் அவர்களுடைய புகைப்படங்களுடன் உங்களுடைய பெயர், தொலைபேசி இலக்கம், புகைப்படம் மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டிற்கு அனுப்பிவையுங்கள்.

**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**

■ ■ ■




# உங்கள் அடுத்த தலைமுறையை செல்வந்தராக்குவதற்கு...



சிறீதரன் துரைராஜா
- ஆயுட் காப்புறுதி முகவர் -

நீங்கள் ஆயுட்காப்புறுதி (Life Insurance) பெறுவதற்கு முன்பு உங்கள் வாழ்க்கையின் நான்கு நிலைகளை அடிப்படையாக வைத்து ஆராய்வதன் மூலம் ஒரு தகுந்த ஆயுட்காப்புறுதித் திட்டத்தைத் தெரிவு செய்ய முடியும். அவையாவன

- ஆரம்ப காலவருடங்கள்,
- இளம் வயது குடும்ப அமைப்பு வருடங்கள்,
- நீங்கள் சொத்துச் சேர்த்து சம்பாதிக்கும் வருடங்கள்,
- வேலையில் ஓய்வுபெறும் வருடங்கள்,

என்பனவாகும்.

இந்த வருடங்கள் முழுவதிலும் எம்மில் அனேகமானோர் செல்வம் சம்பாதித்து குவிப்பதிலேயே குறியாக இருப்பார்கள். அது எம் வாழ்நாள் பணியாகவே மாறிவிடும்.

எல்லா விடயங்களிலும் உள்ளதைப் போன்று நாங்கள், எங்கள் வாழ்க்கையில் ஏதாவது ஒன்றை எவ்வளவு விரைவாக ஆரம்பிக்கிறோமோ அந்த அளவுக்கு முன்னணியில் நாங்கள், எங்கள் வாழ்க்கையின் பிற்காலத்தில் நிற்போம். ஆகையால் நாங்கள் ஆரம்பத்திலேயே அனைத்தையும் சரியாக தொடங்கிவிட வேண்டும். ஒரு தலைமுறையிலேயே நீங்கள் எப்படி செல்வந்தர் வகுப்பிற்கு தாண்டிச் செல்கிறீர்கள் என்பதை நீங்களே உங்கள் கண்கூடாகக் காண்பீர்கள்.

## மிக பெரிய ஆபத்து ஆயுட் காப்புறுதி பெறமுடியாமை (UNINSURABILITY)

மிக பெரிய ஆபத்து எனும் போது நீங்கள் உங்கள் மனதில் கொள்ளவேண்டியது ஆயுட் காப்புறுதி பெறமுடியாமையாகும். அடுத்த வாரமோ அல்லது அடுத்த வருடமோ அல்லது ஏதாவதொரு நேரத்திலோ, உங்களுக்கு ஏதாவது நிகழலாம். அதற்கு பிறகு உங்களுக்கு எந்தக் காப்புறுதி நிறுவனத்தினாலும், எந்த வகையான ஆயுட்காப்புறுதியினையும் வழங்கமுடியாமல் போகலாம்.

இப்படி நிகழ்வுகள் நிகழ்ந்தமைக்கான இரண்டு உதாரணங்களைப் பார்ப்போம்.

- மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகள் உள்ள, தன்னுடைய 30வது வயதுகளில் உள்ள ஒரு மனிதன் ஒரு 600,000 டொலர் விலையுள்ள ஆயுட்காப்புறுதியைப் (Policy) பெற விரும்பினார். அவரைப் பரிசோதித்த மருத்துவக் குழுவினர், அவருடைய இரத்தத்தில் அதிக அளவில் சர்க்கரை உள்ளது அதனால் இன்னும் ஆறு மாதங்கள் சிகிச்சை முடியும் வரை அவருடைய ஆயுட்காப்புறுதியினைத் (Insurance) தள்ளிப்போட வேண்டும் என்று அறிவுரை வழங்கியது. துரதிருஷ்டவசமாக அவருடைய நிறுவன முதலாளி வேறு காரணங்களுக்காக அவருடைய group insuranceஐ ரத்து செய்துவிட்டார்.
- பத்து லட்சம் டொலர் பெறுமதியான ஆயுட்காப்புறுதியில் சேர்ந்த ஒரு பெண் மாதம் எளிதாக 300 டொலர் பெறுமதியான மாதாந்த கட்டுப்பணத்தைச் (premium) செலுத்தும் வசதியில் இருந்தார். ஆனால் அவர் திருமணம் செய்தவுடன் அவருடைய கணவர் அவ்வளவு பெரிய தொகையை கட்ட வேண்டியதில்லை என்று கூறிவிட்டார். பின்பு சிலகால இடைவெளியில் அவருடைய கணவர் அவரைக் கைவிட்டு சென்று விட்டதால், அவரிடம் பணம் கொஞ்சம்தான் இருந்தது. அதனால் 250,000 டொலர் பெறுமதியான ஆயுட்காப்புறுதியை அவர் வாங்க முயற்சி செய்தார். அவரைப் பரிசோதனை செய்த மருத்துவக் குழுவினர், அவருக்கு இதயத்தில் ஒரு கோளாறு இருக்கிறது. அதற்கு உடனே ஒரு by-pass அறுவை சிகிச்சை செய்யவேண்டும் என்று கூறியது. மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு அவர் மேலும் ஐந்து வருடங்கள் உயிர் வாழ்ந்தார். ஆனால் அவர் ஆயுட்காப்புறுதி (Life Insurance) எதுவும் இல்லாமல் இறந்துவிட்டார். அதனால் அவர் பிள்ளைகளுக்கு பெரிய நட்ட ஈட்டுத்தொகை எதுவும் கிடைக்காமலேயே போய்விட்டது.

> “ உங்களுக்குப் பிறகும் உங்கள் குடும்ப தேவைகளை எவ்வித குறையுமின்றி நிறைவேற்றும் என்ற நிலையில், உங்களிடம் நிறையப் பணம் இருக்கிறது என்றால், நீங்கள் எந்த Life Insurance policyகளையும் வாங்க வேண்டியதில்லை. ”

## உங்கள் உயர்ந்த இலட்சியம் (High horse), மற்றும் ஆயுட்காப்புறுதியின் (Insurance) அவசியம்

எங்களுடைய சொந்த நாட்டிலும் மற்றும் உலகில் உள்ள பல நாடுகளிலும் குடும்பம் தான் எப்போதும் மிகவும் முக்கியமான விஷயமாக இருந்து வருகின்றது. ஒரு குடும்பத்தின் தலைவர் அவருடைய மனைவி மற்றும் பிள்ளைகளுக்கு மிகுந்த வசதியைச் செய்து தருவது தான் மிகவும் முதன்மையான பொறுப்பாகக் கருதப்படுகின்றது.

எனவே எங்களுடைய குடும்பத்தின் நலன்களைக் காப்பதில் எங்களுடைய பங்கு மிகவும் முக்கியமானதாகும். நீங்கள் உங்கள் பிள்ளைகளின் பாடப்புத்தகங்களுக்கும், கல்வி கற்பதற்கும் பொழுது போக்கிற்கும், சாப்பிடுவதற்கும், பிரயாணச் செலவுகளுக்கும், மற்றும் பல்வெறு தேவைகளுக்காகவும் என ஒவ்வொரு வருடமும் நீங்கள் ஆயிரக்கணக்கிலான டொலர்களைச் செலவிடுகிறீர்கள். உங்களுக்குப்பின் உங்கள்பிள்ளைகளின் எதிர் காலத்திற்காகவும் ஒரு சில நூறு டொலர்களை நீங்கள் செலவிட ஏன் ஒதுக்கிவைக்க கூடாது? அவர்களுடைய பள்ளிப் பாடங்கள், கல்வி, மற்றும் பிரயாணங்கள் போன்று அதுவும் ஒரு முக்கியமான விடையம் இல்லையா?

உங்கள் பிள்ளைகள் வளர்ந்ததும் ஒரு நல்ல வாழ்க்கை வாழவேண்டும் என்ற எண்ணத்தில் அவர்களை நீங்கள் நன்கு கல்வி கற்பிற்கிறீர்கள். ஆனால் அவர்களில் ஒருவர் நிறைய பணம் சம்பாதிப்பதை இலட்சியமாக கொண்டிராது ஒரு கலைஞனாகவோ அல்லது ஒரு சமூகத் தொண்டனாகவோ உருவாக விரும்பலாம். நீங்கள் உங்கள் பிள்ளைகளின் உணர்ச்சிகளுக்கு மதிப்பளிக்க விரும்பினால் அவர்களின் வாழ்க்கைக்கு தேவையான அளவு பணத்தை நீங்கள் கொடுப்பதனால், அவர்கள் தங்கள் வாழ்க்கையில் தாங்கள் விரும்பிய மனநிறைவை அடைய முடியும். ஆனால் அந்த பணத்தை எப்படி கொடுப்பீர்கள்? ஆயுட்காப்புறுதியில் (Life Insurance) சேர்வது ஒரு வழிமுறை, சிறந்த பாதுகாப்பான முதலீடு.

உங்களிடம் நிறைய பணம் இருக்கிறது, உங்களுக்குப் பிறகும் அது உங்கள் குடும்ப தேவைகளை நிறைவேற்றும் என்ற நிலையில் நீங்கள் இருந்தால், நீங்கள் எந்த Life Insurance policyகளையும் வாங்க வேண்டியதில்லை.

உங்கள் மனைவி, பிள்ளைகள் மற்றும் அன்பிற்குரியவர்களுக்குப் பாதுகாப்பானதும் மற்றும் சுலபமான முறையிலும் ஆயுட்காப்புறுதி (Life Insurance) செய்வதன் மூலம் உங்கள் பிள்ளைகள் மற்றும் அன்பிற்குரியவர்கள் எளிதாக செல்வம் சம்பாதிக்க முடியும். இது போன்ற இலகுவான வழிமுறைகளை மேற்கொண்டால் லட்சக்கணக்கிலானோர் செல்வந்தர்களாக நிச்சயமாக ஆகமுடியும். கனடாவின் மக்கள் தொகையில் 1.2 சதவீதத்தினர் தான் கோடீஸ்வரர்களாக இருக்கிறார்கள். நாமும் தரமானதோர் ஆயுட்காப்புறுதி (Life Insurance)யைப் பெறுவதன் மூலம் எம் குழந்தைகளையும் மற்றும் பேரக்குழந்தைகளையும் இந்த செல்வந்தர்களின் வரிசைலில் நிச்சயம் சேர்க்கமுடியும்.

ஆனால் நீங்கள் ஆயுட்காப்புறுதி (Life Insurance) செய்யும் போது உங்கள் காப்புறுதி (Life Insurance) விண்ணப்ப படிவத்தில் நீங்கள் உண்மைக்கு மாறான தகவல்களைக் கொடுத்தால் அது மிகவும் கெடுதியாக அமைந்துவிடும். ஆயுட்காப்புறுதி (Life Insurance) நிறுவனம் அதை கண்டுபிடித்துவிட்டால், உங்களுக்கு கிடைக்க வேண்டிய அனைத்து நலன்கள், சலுகைகள் ஆகியவற்றை அது ரத்துச் செய்துவிடும்.

sritharan.t@thaiveedu.com

■ ■ ■

தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.

*E-mail:thaiveedu@gmail.com*
*Fax: 416-849-0594*
*Tel: 416-646-3422*

இறுக்கமான சூழலில் இலகுவான தீர்வு

- நிரந்தர ஆயுட் காப்புறுதி
- கொடிய நோய்களுக்கான காப்புறுதி
- ஈட்டுக்கடன் காப்புறுதி
- வைத்திய பரிசோதனை இல்லாத காப்புறுதி
- RRSP • RESP

சிறீதரன் துரைராஜா
காப்புறுதி முகவர்
Member of Million Dollar Round Table | MDRT The Premier Association of Financial Professionals®

416.918.9771

759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407
info@life100.ca



RBC Insurance · INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. · Unity Life of Canada · Canada Life™

# அனைவருக்கும் ஆயுட்காப்புறுதி

- 50,000 வரை மருத்துவப் பரிசோதனை வேண்டியதில்லை
- ஆயுட்காலம் வரை மாதாந்தக் கட்டணத்தில் மாற்றமில்லை
- உடனடியாக காப்புறுதித் திட்டம் அமலாகும்
- வேறு நிறுவனங்களால் நிராகரிக்கப்பட்டவர்களும் இணைந்துகொள்ளலாம்

| | Age 30 Male | Age 30 Female | Age 40 Male | Age 40 Female | Age 50 Male | Age 50 Female |
|---|---|---|---|---|---|---|
| Term 10 (R & C) $100,000 | $11.25 | $9.00 | $13.77 | $12.33 | $24.48 | $19.77 |
| Whole Life $100,000 | $38.17 | $33.63 | $57.16 | $47.36 | $106.64 | $81.75 |

**Critical Illness Insurance**

25விதமான கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டால்
2மில்லியன் வரை பெறக்கூடிய காப்புறுதித் திட்டம்

•

**Universal Life Insurance**

ஆயுட்காலம் வரை நீடிக்கும் நிரந்தர ஆயுட்காப்புறுதி

•

**Term Insurance**

குறைந்த கட்டணத்தில் அதிகூடிய தவணைக் காப்புறுதி

## RESP

குழந்தைகளின் உயர்கல்விக்கான சேமிப்புத்திட்டம்
20-40 வீதமான அரச மானியத்துடன்
15 வீத போனஸ்

Canada Learning Bond upto $500.00
Government Grant upto $40%
Industrial Alliance Education Bonus 15%

## சிறீதரன் துரைராஜா

MDRT Member of Million Dollar Round Table

**416.918.9771**

759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407



Assumption Life · INDUSTRIAL ALLIANCE Insurance and Financial Services Inc. · Unity Life of Canada · Canada Life · RBC Financial Group · LiLand Insurance Inc.

இறுக்கமான சூழலில் ஓர் இலகுவான தீர்வு


NEW CREDIT - BAD CREDIT - NO CREDIT
BANKRUPT - NO PROBLEM
On Line - Credit Approvel, All kind of Credit Repairs
உங்கள் வியாபார முதலீடு வீட்டு முதலீடு ஆகியவற்றுக்கான
பணத்தேவைகள் உடன் ஒழுங்கு செய்து தரப்படும்
Shan Kanapathipillai
416.890.2300
e-mail: shankana@juno.com
LIC: M08002487
CENTUM
Looking out for your best interest

• Real Estate Law
• Business Law
YASO SINNADURAI
BARRISTER & SOLICITOR, NOTARY PUBLIC
THE LAW OFFICES OF YASO SINNADURAI
2100 Ellesmere Rd., Suite 202
Scarborough, Ont. M1H3b7
Tel: 416•265•3456
Fax: 416•265•2770

ACCESS LEGAL SERVICES
PROFESSIONAL CORPORATION
INJURED?
Car Accident (MVA) Claims
Work Accident (WSIB) Claims
Bankruptcy
416-733-8880

வீடு வாங்கவும், விற்கவும்.......
Ramanan Ramachandran
Real Estate Broker
Office: 416.298.3200
Cell: 416.670.6467
I ♥ Referrals
HomeLife Today Realty Ltd., Brokerage
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 456
HOMELIFE
HIGHER STANDARDS
*INDEPENDENTLY OWNED AND OPERATED







இம்மாதப் புகைப்படக் கலைஞர்

**உமாகாந் திருஞானம்**

கனடா ஒட்டாவாவில் பொறியியலாளராகக் கடமையாற்றும் இவர் பகுதிநேர புகைப்படக் கலைஞராவார்.

**உங்களிடம் (நீங்கள் எடுத்த) அழகான புகைப்படங்கள் இருக்கின்றனவா? அவற்றை நாங்கள் பிரசுரிக்க விரும்புகிறோம்.**

புகைப்படம் எடுத்தவரின் பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல், புகைப்படம், எடுக்கப்பட்ட காட்சி அல்லது எடுக்கப்பட்டவருடைய விபரங்கள் என்பவற்றுடன் நீங்கள் எடுத்த புகைப்படத்தையும் அனுப்பிவையுங்கள். அவை இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.

• சுமார் 10 வருடங்கள் Scotia வங்கியில் மோட்கேஜ் அனுபவம்
• 7 நாட்களும்... 24 மணி நேரமும் நட்பான சேவை
• குறைந்த வட்டி வீதம் • 0% Down Payment
Scotiabank
Ragavan Ramanathan
Mortgage Development Manager
• New • Switch • Refinance
Tel: 416•579•7533
Fax: 416•579•9433
ragavan.ramanathan@scotiabank.com

PROTECT YOURSELF AND YOUR LOVED ONES!
Insurance Ocean
Product we serve:
• Accident Death Insurance • Affordable Life Insurance • Critical Illness Insurance
• Disability Income Insurance • Mortgage Insurance • Permanent Life Insurance
• Pet Insurance • Term Life Insurance • Travel Insurance • No Medical Exam Insurance
We provide free training and prepare you for the certification
Now hiring at Ocean Mortgage Include: Marketing Specialist, Sales Reps.
Call today 416-321-2300
Get the best rate online @
www.insuranceocean.com
digi